# மறைந்த மா நகர்

விஜய நகர வீழ்ச்சியினை விளக்கும்
- ஒரு துன்பியல் நாடகம்

ஆசிரியர் :
கவிராஜ பண்டித
நா. கனகராஜையர், B. O. L.,
தமிழாசிரியர், அரசர் கல்லூரி, புதுக்கோட்டை.

[illegible]. த. திருநாவுக்கரசு,
M. A. (தமிழ்) M. A. (வரலாறு)
M. LITT. DIP. IN LINGS.

பதிப்பாளர் :
M. R. அப்பாதுரை, B. A.,
13, முத்தியாலு செட்டித் தெரு,
புரசை :: சென்னை

திப்புரிமை] 1945 [விலை ரூ. 1-12-

Edition, 1942
ond Edition, 1945

THE PREMIER ART PRESS,
*Vepery P. O.,* :: *Madras.*

(2)

894.8112
KAN

# முகவுரை

31,2N98,M H6

நனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிழ்சிரிப்பும்
னித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
னித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப் பெற்ருல்
ரித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.''

'முத்தமிழ்' என்னும் முதுதமிழ்ப் பாகுபாடு இன்று நேற்று
ந்ததன்று. தொன்மையும் பெருமையும் படைத்த இயற்றமிழ்
கள் பல உளவாகவும், வடமொழியிற்போலக் கற்றவர் உள்ளம்
நம் நாடகச் செய்யுட்கள் தமிழ் மொழியில் மிகுதியாய் இல்லை.
ச நாடக இலக்கண இலக்கியங்கள் பல, ஒரு காலத்து இருந்
க்கலாம் என்று நினைப்பார்க்கு உற்ற துணையாய் நிற்கும்
பதிகாரம் 'நாடகக் காப்பியம்' என்னும் பெயர் பூணுமே
னும், நாடக வகுப்பினுள் இடம் பெறுவதன்ரும்.

மேனுட்டு மொழிகளில் உரை நடையானும் செய்யுள் நடை
லும் பல நாடகங்கள் இயன்றிருப்பதையும், நாடகப்புலவராகிய
க்ஸ்பியர் உலகப் பெரும்புலவருள் ஒருவராய் விளங்குவதையும்
ஞர் உணர்வர். 'கீதே' என்னும் செருமானியப் புலவராற்
ழப்பெற்ற சாகுந்தலம் போன்ற நாடகங்கள் எம்மொழியிலும்
தியாய் இருத்தல் இயலாது. வடமொழி வாணர் அலங்கார
திரத்திலே நாடகவிலக்கணமும் அமைத்து வைப்பதுண்டு.
தாப ருத்திரீயம்' என்னும் அலங்கார சாத்திரத்தில் நாடகம்
று உள்ளுறையாய் உள்ளது. இங்ஙனம் தமிழ் மொழியில்
ந்த பழைமையான இலக்கணங்கள் இன்று நம் தவக்குறையால்
பெற்றில. நாடகம் இயற்றப் புகுந்தார் பலரும் வடமொழி
யும் ஆங்கில முறையும் தழுவியே இயற்றுவாராயினர்.

மேனுட்டார் நாடக வகுப்பினுள் இன்பியல் நாடகங்கள்
வகை; துன்பியல் நாடகங்கள் மற்றொரு வகை. ஆங்கிலப்
ர்கள் இத்துறைகளைப் பயிலத் தொடங்குவதற்குப் பன்னூற்
டுகட்கு முன்னே பண்டை நாகரிகமும் வளமும் படைத்த
க்கம் இலத்தீன் முதலிய மொழிகளைக் கையாண்டவர்கள்
பியல் நாடகங்களிற் பழுத்த அனுபவம் படை...

அவர்கள் வகுத்த நெறிகளைப் பின்பற்றியே பின்னுட்புலவர் எ
லாரும் இவ்வகை நாடகங்களில் தம் திறமையை விளக்க
வந்தனர்.

நம் நாட்டு இலக்கியங்கள் எல்லாம் இன்பியலையே சொல்
நோக்கும் உடையன. துன்பியலை அமைத்து, மரணந்தக் கதை
எழுதவும் சொல்லவும் கேட்கவும் நம் நாட்டு மக்கள் விரு
கொள்வதில்லை. புலவர், மக்கள் மனப்பான்மையறிந்தே கா
இயற்றுவர். ஆகவே, இன்பத்திற்றொடங்கித் துன்பத்திற்
படியாக இட்டுச் சென்று மரணந்தத்தோடு முடிவு பெறும் நா
தமிழில் ஒன்றேனும் இல்லை என்று கூறுவது பொய்யாகாது.

சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தோடு முடிந்திருக்குமா
இவ்வகுப்பில் ஒருவாறு சேரலாம். வஞ்சிக்காண்டம்
அமைத்து, அதன் போக்கை மாற்றிய இளங்கோவடிகள்,
பிறந்த நாட்டுக்கும் தம் மொழிக்கும் பண்டையோர் செ
வழியே தமது பணியை நிறைவேற்ற முயன்றவரேயாவர்.
மொழியிலும் பிற பாரதீய மொழிகளிலும் இன்பியல் நாடக
சாகுந்தலம் போல நின்ற புகழ் படைத்த ஒரு துன்பியல் நா
இல்லை என்பதே உண்மையாம். ஷேக்ஸ்பியர் மகா கவிஞ
முறைகளிலும் தம் புலமையை விளக்கியுளராயினும், அவர் பெ
புகழ் எல்லாம், ஹாம்லெத்து, ஒதெல்லோ, மக்பெத்து முத
துன்பியல் நாடகங்களால் வந்ததே. தமிழ் மொழியில் இவ்வ
ஒரு நாடகம் இல்லாக் குறையை எவரும் அறிவர்.

இக்குறையை ஒருவாறு நிரப்பும் நோக்கத்தால், இந்நாட
சொற்சுவை பொருட்சுவை தெளியும் எஃகுச்செவி படைத்த
மறிஞர் திருக்கூட்டத்து நுழைய முயல்கின்றது. பிறர் செல்
நெறியிற் செல்வதால் உள்ள அச்சமும் நடுக்கமும் இந்நா
ஆசிரியனுக்கும் உண்டு. 'நாடகம் உரை நடையில் இருப்ப
நயம்,' என்பது நல்லறிஞர் கருத்தாமாயினும், செய்யுள் நடை
நாடகத்துக்குத் தகுதியுடையதே என்பதை மனோன்மண
மான விஜயம், விசுவ நாதம் முதலிய நாடகங்கள் இயற்றிய
யர்கள் விளக்கியுள்ளார்களாதலால், அவர்கள் அடிச்சுவடு ப
இஃது இயற்றப்பெற்றுளது.

விஜய நகர ஸாம்ராஜ்யம் வாழ்ந்த வாழ்வும் அது வீ
வீழ்வும் நம் நாட்டு மக்கள் நன்குணர்ந்து உள்ளமுருகத்தக்க ச
திரமாதலால், அதுவே இந்நாடகப் பொருளாக எடுத்துக்கொ
வாழ்வின் உயர்ச்சி கிருஷ்ணதேவ ராயர் கால

லும், வீழ்ச்சி இராமராயர் நாளிலும் அமைந்தன என்பது சரித்தி ரம் வல்லார் நன்கு உணர்ந்ததே. விஜய நகர அரச வமிசம் பின் னும் சில்லாண்டு வாழ்ந்திருப்பினும், நகரத்தின் அழிவோடு இந் நாடகம் முடிகின்றது. அதன் பொருத்தம் நாடகத்தைப் பார்த்து ஆய்ந்து கொள்ளற்குரியது. இந்நாடகம் நடித்தற்குரிய நடையில் இயலவில்லை.

தமிழ் மொழியிற் செய்யுள் நடை, உரை நடைபோல எளிய தன்று. உரை நடையில் நாடகத்திடையே கிராமியச் சொற்களைக் லக்கலாம். செய்யுள் நடையில் அங்ஙனம் கலத்தல் எளிதெனத் தான்றவில்லை. அதனால், இந்நாடகத்தின் நடை பாத்திரங்களுக்கு ற்ற வேறுபாடுகளின்றி எங்கும் ஒரே போக்காகச் செல்கின்றது. து குற்றமேயாயினும், அறிஞர் பொறுக்கத்தக்கதேயாம்.

ஐந்து அங்கங்களானியன்ற இந்நாடகத்தில் ஆராய்ச்சியாளர் ிருகுறையும் காணலாம்: "ஓர் அங்கத்தில் நிகழும் வரலாறு இடத்தில் நிகழ்வதாக இருக்க வேண்டும். நாடகத்தின் ச்சி முழுவதுமே ஒரு குறிப்பிட்ட சுருங்கிய காலத்தில் நிகழ்வ இருக்க வேண்டும்," என்னும் கொள்கைகள் இந்நாடகத்தில் ப்பெருமை வெளிப்படை. ஐம்பதாண்டுகளுக்கு மேல் ந்த சரித்திர நிகழ்ச்சிகளை நாடகவுருவத்தில் ஒரு குறிப்பிட்ட வுக்குள் அமைக்கும்போது இக்குறை நேர்வது இயல்பேயென் நல்லறிஞர்க்குத் தோன்றுதிராது. இராமாயணம் நாடகமாய் மயின், அதன்கண் என்ன குறை காணலாகுமோ, அக்குறை ன்கண்ணும் இருக்க நேர்த்திருப்பது சரித்திரத்தின் போக்கால் ந்ததே. இந்நாடக பாத்திரர்கள் எல்லாம் (ஒருவர் இருவர் ப) சரித்திரத்தொடர்பு உள்ளவர்களே. ஆதலால், அவர்கள் த்தை அமைக்கும் பொறுப்பு ஆசிரியனுக்கு இல்லை.

ம்)ந்நாடகம் இயலுதற்குரிய வரலாறுகளை முதல் முதல் உலகம் ர் வெளியிட்ட '**மறந்த பேரரசு விஜய நகரம்**' என்னும் ன் ஆசிரியர்க்கும், அவர் சென்ற நெறி பின் பற்றிப் பின்பு திர ஆராய்ச்சி செய்த விஜயநகர சரித்திர ஆதார நூலும், டு வமிச சரித்திரமும், விஜயநகர வரலாறும், மைசூர்ச் திரமும் இயற்றியுலகிற்குதவிய பெரும்புலமைப் பெருமக் கும் இந்நாடக ஆசிரியன் நன்றி கூறும் கடப்பாடுடையன். திரப்போக்கில் அப்பெரியார்கள் துணியாது விடுத்த சில திகளை ஒருதலை துணிந்து நாடகப்போக்கில் அமைத்தது ஆசிரி மேற்கொண்ட உரிமையேயாகும்.

அறிவுடைப் பெருமக்கள் அன்பால் ஒன்றைப் போற்றலும் செய்யார்; வெறுப்பால் ஒன்றை இழித்தலும் செய்யார். 'காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணதே.' ஆதலின், அப்பெருமக்கள், இந்நாடகத்தில் நற்பொருள் இரண்டொன்றேனுமிருப்பின், அவற்றைத் தமிழ் மகள் திருக் கழலில் அருச்சனைக்கு உதவும் மலர்களாக ஏற்றுக்கொள்வார்கள்; குற்றங்களை மலரொடு கலந்த இலைகள் என ஒதுக்கி, ஆசிரியனுக்கு ஆசியருள்வார்கள்.

இந்நாடகத்தை அச்சிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பதிப்பாளர் திரு M. R. அப்பாதுரைப் பிள்ளை, B. A., அவர்களுக்கும், அச்சாகுங்காலை ஒப்புநோக்குதல் முதலிய அரும்பணியை ஏற்றுக்கொண்ட அன்பின் செல்வர் வித்துவான் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளையவர்களுக்கும் இந்நூலாசிரியன் மனமார நன்றி உரைக்கின்றான்.

நலம் பொலிக! புலமை வாழ்க! நாடு வாழ்க!

1—10—'42
புதுக்கோட்டை

ஆசிரியன்

# கதைச் சுருக்கம்

## முதல் அங்கம்

### முதற்களம்

விஜய நகரத்தில் அரசப்பொறுப்பைத் தாங்கியிருந்த நரச நாயகர் குமாரராகிய வீர நரசிம்ம தேவராயர் தம் மைந்தருக்கு மகுடாபிஷேகம் செய்து வைக்கும் வண்ணம் அமைச்சராகிய சாளுவ திம்மரசுக்கு ஆணையிட்டார்; அன்றியும், தம் இளவலாகிய கிருஷ்ண தேவ ராயரைக் கொல்லவும் வேண்டினார். திம்மரசு, கிருஷ்ணதேவ ராயரைக் காப்பாற்றி அரசப் பொறுப்பை அளிக்கிறார். வித்தியாரணியர் திருவருள் பெற்ற அரச மரபு ஆதலால், அக்குரு வரர் பரம்பரையில் வந்த சிருங்ககிரிக் குருவரரும் பிற பெரியார் களும் திம்மரசின் வேண்டுகோளால் முன் வந்தும் தம் பிரதிநிதிகளை அனுப்பியும் மகுடாபிடேகம் நிறைவேற்றுகின்றனர். அரசு பூண்ட கிருஷ்ணதேவர் குடிகளுக்குத் தக்க நன்மொழி கூறுகின்றார்.

### இரண்டாம் களம்

அரசர் இளமையிலிருந்தே காதலித்த நாகாம்பிகை (நாகலா தேவி) என்னும் பெண்மணி சில நாட்களாக அவர் வாராமையால் மனம் கவல்கின்றாள். இவ்விருவர்க்கிடையில் மறைவாய் நிகழ்ந்த காதற்கதையைத் திம்மரசு அறிந்ததே இவர்தம் இன்ப வாழ்வுக்கு ஒரு சிறிய இடையூறாயிற்று. அரசர் வந்ததும் இப்பெண்மணி தன்னை மணந்துகொள்ளும்படி வேண்டுகிறாள். அவர் முதலில் இசையாமலிருந்து, பின்பு இவள் கூறிய நியாயங்களைக் கேட்டு ஒருவாறு இசைகின்றார். இருவரும் தம்மை மறந்திருக்கின்றனர்.

### மூன்றாம் களம்

அரசர் விஜய நகரத்தில் ஓராண்டு அமைதியாய் இருக்கிறார்; அக்காலத்திற்குள் விருபாக்ஷர் ஆலயத்துக்கருகில் ஒரு விஷ்ணு ஆலயம் நிருமிக்கிறார்; அங்கு அரங்கநாதனைப் பிரதிட்டை செய்து, திருவிழாக் கொண்டாடுகிறார். அங்கு வந்த பெரியாருள் ஒருவர் இம்மரபினர் முன்னாளிற் சிவமுத்திரை உடையவராய் இருந்ததையும் இந்நாளில் திருமால் இலச்சினை உடையராய் இருத்தலையும் தக்க

ஆதாரங்களோடு விளக்கிக் காட்டுகிறார். அரசரும் பிறரும் அது கேட்டு மகிழ்கின்றனர்.

### நான்காம் களம்

'பரங்கியர்' என்று நம் நாட்டார் கூறும் போர்த்துகேசியர் அயல் நாடுகளிலிருந்து இங்கு வந்து, நம் நாட்டு மக்களைப் பலவாறு துன்புறுத்தி நாடு கவர்வதை அரசர் அறிகின்றார்; கோவை (Goa) நகரில் அவர்கள் நிலையாக வாழும்பொருட்டுச் செய்த கொடுமைகளையெல்லாம் அறிகின்றார்; ஆயினும், அவர்களால் நாட்டுக்கு வேண்டிய பரிப்படை திரட்ட விரும்பி அந்நாட்டிலிருந்து வந்த தூதர் சொல்லிய சொற்களைக்கேட்டுக் குதிரைகள் வாங்கும் வியாபாரத்துறைக்கு உடன்படிக்கை செய்கின்றார்.

### ஐந்தாம் களம்

சிவ சமுத்திரத்தில் அரசு பூண்டிருந்த கங்க ராயர் என்பவர் விஜயநகரத்து முன்னைய மரபின் வழித்தோன்றல் என்னும் முறையால், சில நாடுகளைக் கைப்பற்றினர். கிருஷ்ணதேவர் அவரை அடக்கப் புறப்பட்டார். கங்க ராயர் போரில் இறந்தார். அவர் மைந்தர், கிருஷ்ணதேவரை வணங்கித் தம் சோதரியை அவர்க்கு மணம் புரிவித்து, அவர் ஆணைக்கு அடங்கினர்.

### ஆறாம் களம்

திருமலாதேவி என்னும் பெண்ணணங்கைப் பட்டத்துக்குரிய அரசியாக ஏற்ற கிருஷ்ண தேவர், ஸ்ரீரங்கப்பட்டினம் வருகிறார்; அங்கு அரங்கநாதனை வாழ்த்தி வணங்கி நிற்கிறார். நாகலா தேவி அங்குவந்து தன்னையும் மணந்துகொள்ள வேண்டுகிறாள். திம்மரசு சம்மதித்ததால், அவள் சின்னதேவி என்னும் பெயர் பெற்றுத் திருமணம் புரிகின்றாள். கங்காதரர் என்னும் பெரும்புலவர் சிறப்புப் பெறுகின்றார்.

## இரண்டாம் அங்கம்

### முதற்களம்

உதயகிரியை முற்றுகையிடச் சென்ற அரசர், ஒன்றல யாண்டு ஆகியும் வெற்றி விளையாமை கண்டு, முன் அரசு புரிந் நரசிம்ம தேவ ராயர் சாசனம் ஒன்றில் அவர் வெளியிட்டுள்ள விரு பத்தை நிறைவேற்றக் கடவுள் துணையை வேண்டுகின்றார். உதயகி

முட்கல், இராய்ச்சூர் என்னும் மூன்று அரணும் முன் விஜயநகரத் தார் வசம் இருந்தன; இந்நாளில் அந்நியர் வசமாய் உள்ளன. இவற்றை மீட்கவே இவ்வழி வருவார் முயல வேண்டும் என்பது நரசிம்மர் கருத்தாம். மிக்க முயற்சியின் பின் உதயகிரி அரண் கைவசமாகிறது. இன்னும் வடக்கே போகும் கருத்தோடு அரசர் புறப்படுகின்றார்.

## இரண்டாம் களம்

கலிங்க மன்னர் பிரதாபருத்திர கஜபதி என்பார், கிருஷ்ணதேவ ராயர் மேன்மேலும் தம் நாடுகளை அடிப்படுத்தி வருவது கண்டு பொறாது, பெரும்படை திரட்டுகின்றார்; வடக்கேயுள்ள சில மகமதிய அரசர் துணையும் பெற்றுக்கொள்கின்றார். விஜயபுரி, அமுத நகரம், கோலகொண்டம் என்னும் நாடாளும் மகமதிய மன்னர் அவருக்குத் துணையாக வருகின்றனர்.

## மூன்றாம் களம்

கிருஷ்ணதேவ ராயர் கலிங்க நாட்டிற் பல பகுதிகளையும் கைப் பற்றிச் சிம்மாத்திரிப் போத்தனூர்க்கு வருகின்றார். அங்கு நெடுநாள் முற்றுகை நிகழ்கிறது. இறுதியில் வெற்றி அவர்க்கு வாய்க்கிறது, கஜபதி மன்னர் திம்மரசு செய்த சூழ்ச்சியொன்றால் துணையை இழந்து தோல்வியுறுகிறார்: தம் மகள் ஜகன்மோகினியை அரச ருக்குக் கொடுத்து அமைதி தேடுகின்றார்.

## நான்காம் களம்

விஜய நகரத்து விஜயாலய மண்டபத்தில் நவராத்திரித் திரு விழா நிகழ்கிறது. புலவர் பலர் சூழ அரசர் வீற்றிருக்கிறார். அல்ல சானி பெத்தன்னு என்னும் மகா கவிஞர் கனகாபிஷேகம் செய்யப் பெறுகிறார். திம்மரசும் இரத்தினபிஷேகம் செய்யப் பெறுகிறார். அன்றுவரை நிகழ்ந்துள தரும கைங்கரியங்கள் தருமாதிகாரியால் தெரிவிக்கப் பெறுகின்றன. புலவரும் பிறரும் அரசர் தரும குணம் அறிந்து புகழ்கின்றனர்.

## ஐந்தாம் களம்

நாகலாபுரம் என்னும் புது நகரின் பிரவேசம் நிகழ்கின்றது. அரசர் தம் இரண்டு பெண்களையும் இராம ராயர்க்கும் திருமலை ராயர்க்கும் திருமணம் செய்விக்கின்றார். பாமினி இளவரசர் தமது அரசுரிமையை மீட்டுத் தருமாறு அரசரை வேண்டிக்கொள்கிறார். தக்க உதவி செய்து அரசு பெற்றுத் தருவதாக அரசர் வாக்களிக்கின் றார். கிறிஸ்தபோ-டி-பிகரிடோ என்னும் போர்த்துகேசியர் அரச ரைக் காண வருகின்றார்.

# மூன்றும் அங்கம்

## முதற்களம்

இராய்ச்சூர்ப் போர்க்களத்தில் அடில்ஷாவின் படைஞர் முதலில் வெற்றி பெறுகின்றனர். விஜய நகரப்படை புறங்கொடுத்தோடுகின்றது. அரசர் தக்க சொற்களால் வீரரைத் தூண்டி முன் செலுத்திப் போர் செய்து வெற்றி பெறுகின்ஞர்; நகர்க்குட் சென்று வெற்றி முழக்கம் செய்கின்ருர்.

## இரண்டாம் களம்

குல்பர்க்கா நகரம், மிக்க முயற்சியின் பின் விஜய நகரத்தார் வசம் ஆகின்றது. பாமினி அரசர் குலத்திற் பிறந்த மூத்தவர்க்கு இங்கு அரசுரிமை அளிக்கப்பெறுகிறது. அடில்ஷா தம் நாட்டிற் பெரும்பகுதியை இழந்து, நகர்கள் அழிக்கப்பெற்று, மிகவும் பகைமை பூண்டிருக்கின்ருர்.

## மூன்றும் களம்

விஜயநகரத்தில் அரசர் மந்திராலோசனையில் இருக்கிருர். பட்டாபிஷேகம் செய்யப்பெற்ற அவர் மைந்தர், ஏழு வயது நிரம்பாச் சிறுவர், இறந்த செய்தி அந்தப்புரத்திலிருந்து வருகிறது. அரசர் சிலர் சொல்லிய கோள்களை நம்பித் திம்மரசே தம் மைந்தரைக் கொலை செய்திருப்பர் என நினைத்து, அவரைக் கடுமையாகத் தண்டிக்கின்ருர். திம்மரசும் அவர் மக்களும் கண் இழக்கின்றனர். திம்மரசு சிறைக்குப்போகும் வழியில் இறக்கிருர். அரசர் அது கேட்டு அரியணையில் இறந்து வீழ்கின்ருர்.

## நான்காம் களம்

போஜ திருமலை என்பவர் கிருஷ்ணதேவ ராயர் இளங்குழவியை அரசனுக்கி, அரசப் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்ருர். அடிமையாய் வந்து இராம ராயர் உதவியால் உயர்நிலை பெற்ற ஒருவன், அவருக்குத் துணையாய் நிற்கிருன். இபுரகிம் அடில்ஷா, அரசைக் கைப்பற்ற வருகிருர். அசாத்கானும் உடன் வந்து பெரும்பொருள் திறை தரச் சொல்லிப் பெற்றுக்கொள்கிருன். அடில்ஷா அவ்விளங் குழவியை அரசென ஏற்றுக்கொள்கிருர். இராம ராயர் முதலியவர் இளவரசை ஏற்றுக்கொள்வதாகக்கூறி, அடில்ஷாவை அனுப்புமாறு போஜ திருமலையை வேண்டுகின்றனர். அவர் அதற்கு இணங்குகின்ருர்.

### ஐந்தாம் களம்

போஜ திருமலை, மது மயக்கத்தால் நகர காவலனையும் அரசச் சிசுவையும் கொன்று, தாமே அரசு பெற முயற்சி செய்கிறார்; இராம ராயர் முதலியவர் தம்மை எதிர்ப்பது அறிந்து அரண்மனைச் செல்வத்தையெல்லாம் பாழாக்கித் தாமும் வாளிற் பாய்ந்து இறக்கின்றார். அச்சுத ராயர் அரண்மனை புகுந்து முடி சூடுகின்றார்.

## நான்காம் அங்கம்

### முதற்களம்

தென்னாட்டில் நிகழ்ந்த குழப்பங்களை அடக்கக்கருதிய அச்சுத ராயர், ஸ்ரீரங்கம்வரை வருகிறார்; அங்குப் புலவர் பலரோடு அளவளாவியிருக்கின்றார். தென்னாட்டுப் போர்களை நிகழ்த்திய விட்டல தேவரும் விசுவநாதரும் நிகழ்ந்தன தெரிவிக்கின்றனர். பாண்டிய மன்னர் தம் மகளை அரசருக்கு அளித்துத் தம் நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

### இரண்டாம் களம்

போரின்பொருட்டு விஜய வாடி வரையிற்சென்ற அச்சுதர், அங்கு மகமதிய அரசர்களோடு சமாதானம் செய்துகொள்கிறார்.

### மூன்றாம் களம்

அச்சுத தேவ ராயர் இறந்தார். சலகம் திருமலை சகோதரர் அச்சுதர் மைந்தரை அரசராக்க முயல்கின்றனர்.

### நான்காம் களம்

அச்சுதர் தேவியாகிய வரதாம்பிகை, தன் மகனுக்கு அரசுரிமை வரவேண்டுமென்று அடில்ஷா துணையை நாடுகின்றாள். அடில்ஷா திம்மையாவிடம் பெரும்பொருள் பெற்று ஊருக்குத் திரும்புகிறார். திம்மையா போர்க்களம்போய் மீண்டு வந்து அரண்மனையில் அரசராகிய சிறுவரையும் அவர் தாயையும் நெருங்கிய உறவின் முறையார்களையும் கொல்கிறான். இராம ராயர் இஃதறிந்து, அரண்மனையை வளைத்து, அவனைச் சிறை செய்கிறார்.

### ஐந்தாம் களம்

சதாசிவ தேவ ராயர் திரு முடி சூடுகிறார். இராமராயர் அவர்க்கு உற்ற துணையாய் இருப்பதாக நாடறிய வாக்களிக்கின்றார்.

## ஐந்தாம் அங்கம்

### முதற்களம்

இராம ராயர் அரசரைச் சிறையிட்டு அரசப் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்ருர். அது கண்டு அவர் சகோதரர் அவரை எதிர்க்கின்றனர். அவர் ஒருவாறு சமாதானம் செய்கின்றனர். விட்டல தேவர் கேரள நாட்டிற் பெற்ற வெற்றிகளைப் பற்றித் தெரிவிக்கின்ருர்.

### இரண்டாம் களம்

போர்த்துகேசியர் வாழும் பரங்கிமலை இராம ராயரால் முற்றுகையிடப் பெறுகிறது. அவர்கள் இராம ராயர் கேட்ட திறை அளந்து, வணங்கி, வாழ்வு பெறுகின்ருர்கள்.

### மூன்ரும் களம்

கலியாண புரத்தை வளைத்து இராம ராயர் பற்றிக்கொள்கிருர். அடில்ஷா இராம ராயர் தூதர்களைக் கொல்லத் துணிந்ததால், இராம ராயர் அவர்மீது சினங்கொண்டு, அவர் நாட்டை அழிக்கத் துணிகின்ருர்.

### நான்காம் களம்

ஆலி அடில்ஷா, இராம ராயரிடம் சரண் புகுந்து, நிஜாம்ஷாவும் தம்மைப் பகைத்தது கூறித் தம்மைக் காக்க வேண்டுகிருர். இராம ராயர் விஜய புரியைப் பாழாக்கி, மற்ற மன்னரை அடிப்படுத்தி, அடில்ஷாவை ஆதரிக்கின்ருர்.

### ஐந்தாம் களம்

அடில்ஷா, குடுப்ஷா, நிஜாம்ஷா, பரீத்ஷா என்னும் நால்வரும் விஜயநகர அரசை அழிக்கச் சூழ்ச்சி செய்கின்றனர். அச்சூழ்ச்சிக்கு உதவியாக நிஜாம் ஷாவும் அடில் ஷாவும் சம்பந்தம் செய்துகொள்கின்றனர்.

### ஆரும் களம்

தலைக்கோட்டைப் போர்க்களத்தில் இராம ராயர் நிஜாம்ஷாவாளால் இறக்கின்ருர். மற்றவர் எல்லாரும் ஓடுகின்றனர்.

### ஏழாம் களம்

விஜய நகரம் அழிந்து பாழாகின்றது.

# நாடக பாத்திரங்கள்

கிருஷ்ணதேவ ராயர் — விஜய நகர வேந்தர்

அச்சுதர் — அவர்க்கு இளையவர்

திருமலை ராயர் — கிருஷ்ணதேவர் குமாரர்

வேங்கட தேவ ராயர் — அச்சுதர் மைந்தர்

திம்மரசு — பேரமைச்சர்

| | |
|---|---|
| கோவிந்தன்<br>திம்மன்னு | திம்மரசு மக்கள் |
| சோமரசு<br>அனுமப்ப நாயகர் | அமைச்சர்,<br>படைத் தலைவர் |

ஆதியப்பர் — படைத் தலைவர் (மாகாண அதிபர்)

| | |
|---|---|
| சதாசிவ தண்ட நாயகர்<br>இக்கேரிச் சதாசிவ ராய நாயகர் | படைத் தலைவர்<br>(மாகாண அதிபர்) |

கங்க ராயர் — சிவசமுத்திரத்தரசர்

வீரப்ப உடையார் — கங்க ராயர் மகனார்

கோவிந்தர் — திம்மரசின் தம்பியார்

கொண்டமரசையா — மாகாணத் தலைவர்

தேவமரசையா — கொண்டமரசின் மைந்தர்

பெம்மசானி இராமலிங்கர் — தண்ட நாயகர்

திருமலை ராவுத்த ராயர் — உதயகிரித் தலைவர்

பிரதாபருத்திர கஜபதி — கலிங்க மன்னர்

வீரபத்திரன் — பிரதாபருத்திரர் மைந்தன்

| | |
|---|---|
| கேசவ பாத்திரர்<br>நரகரி பாத்திரர்<br>பாலசந்திர மகாபாத்திரர் | கஜபதி அமைச்சர் |
| மல்லுகான்<br>உத்தண்டகான் | மகமதியப் படைத்தலைவர் |

வெங்கோஜி — மகமதிய தூதர்

தாதோஜி — மன்னரின் தூதர்

| | |
|---|---|
| அல்லசானி பெத்தன்னா<br>சபாபதி கவிஞர்<br>நந்தி திம்மையா<br>நதீண்ட்ல கோபன்னா<br>மல்லன்னா<br>இலட்சுமிதரர்<br>தெனாலி ராமகிருஷ்ணர்<br>பட்டு மூர்த்தி<br>அப்பளாசாரியார்<br>இராதா மாதவ கவிஞர்<br>திருமலாம்பிகை<br>திம்மன்ன கவிஞர்<br>ராஜநாத கவிஞர் | புலவர்கள் |
| சடகோப யதீந்திரர் | வைஷ்ணவ மடாதிபர் |
| வியாச தீர்த்தர் | மத்துவ மடாதிபர் |
| விசுவேசுரர் | வீர சைவ மடாதிபர் |
| ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் | சிருங்ககிரிப் பிரதிநிதி |
| ஸ்ரீபாத ராயர் | அரசர் வித்தியா குரு |
| இராம ராயர்<br>திருமலை ராயர்<br>வேங்கடாத்திரி ராயர் | அறவீடுடையார் |
| பயகர ராமப்பையர்<br>இராமைய அமைச்சர் | இராம ராயர் அமைச்சர் |
| பாமினி இளவரசர் | பாமினி குலத்தவர் |
| கிரிஸ்தபோ-டி-பிகரிடோ | போர்த்துகேசியர் |
| அரங்கநாத தீக்ஷிதர் | புரோகிதர் |
| காம நாயக்கர்<br>திரியம்பக அரசு | சேனைத் தலைவர்கள் |
| குமார அரசு | கொண்டமரசின் மைந்தர் |
| விசுவநாதர்<br>அரியநாதர் | கிருஷ்ணதேவ ராயர் மெய் காவலர் |

இசுமேல் அடில்ஷா — விஜயபுரி அரசர்

சலாபத்கான் — சேனைத் தலைவர்

சலாபி ரூமிகான் — அயல் நாட்டுப் படைத் தலைவன்

மஹமதுகான்
அஹமதுகான் } மகமதியப் படைத் தலைவர்
முஸ்தபாகான்

அசாத்கான்
கிஷ்வர்கான் } மகமதிய அமைச்சர்

கலியாண ராயர்—அரசப் பிரதிநிதி

அடில்கான்—மகமதிய வீரர்

மௌலானு இனுயத்துல்லா—மகமதியப் படைத்தலைவர்

ஆலி பரீத்ஷா
ஆலி அடில்ஷா } மகமதிய மன்னர்கள்

இபுரகீம் அடில்ஷா—விஜய்புரி அரசர்

ஹுசேன் நிஜாம்ஷா
குலி குடுப்ஷா } மகமதிய மன்னர்கள்
இபுரகீம் குடுப்ஷா

போஜ திருமலை ராயர்—அரசரின் மைத்துனர்

சலாகம் திருமலை ராயர்-I
சலாகம் திருமலை ராயர்-II } அச்சுதர் மைத்துனர் இருவர்

ஐயப்ப அரசு—கொண்டமரசின் மைந்தர்

விட்டல ராயர்—தென்னுட்டு அரசப் பிரதிநிதி

பொன்னம்பலனுர்—தமிழர் பிரதிநிதி

திருவடியரசு—திருவாங்கூர் மன்னர்

ஸ்ரீவல்லப தேவர்—பாண்டிய மன்னர்

அரங்க ராயர்—சதாசிவ தேவர் தந்தையார்

லூயி பாதிரியார்—கிறிஸ்தவ சாமியார்

வீரர், ஒற்றர், குடிகள் முதலியவர்கள்

திருமலா தேவி
நாகாம்பிகை
ஜகன்மோகினி } கிருஷ்ணதேவ ராயர் தேவியர்
அன்னபூரணு தேவி
வெங்கலாம்பிகை

வரதாம்பிகை—அச்சுதர் தேவி

தோழியர், பணிப்பெண்கள் முதலியவர்கள்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முகவுரை | ... | ... iii |
| கதைச் சுருக்கம் | ... | ... vii |
| நாடக பாத்திரங்கள் | ... | ... xiii |
| முதல் அங்கம் : | | |
| களம்—1 | ... | ... 1 |
| களம்—2 | ... | ... 10 |
| களம்—3 | ... | ... 19 |
| களம்—4 | ... | ... 27 |
| களம்—5 | ... | ... 36 |
| களம்—6 | ... | ... 46 |
| இரண்டாம் அங்கம் : | | |
| களம்—1 | ... | ... 56 |
| களம்—2 | ... | ... 65 |
| களம்—3 | ... | ... 74 |
| களம்—4 | ... | ... 85 |
| களம்—5 | ... | ... 99 |
| மூன்றும் அங்கம் : | | |
| களம்—1 | ... | ... 105 |
| களம்—2 | ... | ... 113 |
| களம்—3 | ... | ... 117 |
| களம்—4 | ... | ... 125 |
| களம்—5 | ... | ... 133 |
| நான்காம் அங்கம் : | | |
| களம்—1 | ... | ... 140 |
| களம்—2 | ... | ... 148 |
| களம்—3 | ... | ... 151 |
| களம்—4 | ... | ... 155 |
| களம்—5 | ... | ... 160 |
| ஐந்தாம் அங்கம் : | | |
| களம்—1 | ... | ... 163 |
| களம்—2 | ... | ... 167 |
| களம்—3 | ... | ... 173 |
| களம்—4 | ... | ... 176 |
| களம்—5 | ... | ... 180 |
| களம்—6 | ... | ... 183 |
| களம்—7 | ... | ... 190 |
| விளக்கக் குறிப்பு | ... | ... 193 |
| அரும்பதம் முதலியவற்றின் அகராதி | ... | ... 201 |

ஸ்ரீ:

# மறைந்த மாநகர்

## முதல் அங்கம்

### முதற்களம்

இடம்: விசய நகரத்தில் உள்ள விருபாட்சர் ஆலயம்
காலம்: முற்பகல்
பாத்திரங்கள்: கிருஷ்ணதேவ ராயர், அச்சுதர், திம்மரசு, சோமரசு, சபாபதி கவிஞர், பெத்தன்னு, சடகோபயதீந்திரர், வியாச தீர்த்தர், விசுவேசுரர், ஸ்ரீபாதராயர், ஸ்ரீகண்ட சாஸ்திரிகள், பொன்னம்பலனர், பொது மக்கள்.

[ஏமகூடம் என்னும் மலைச்சிகரத்தில் முடிசூட்டு மங்கல விழா நடைபெறுகின்றது. பல வகை வாத்தியங்கள் முழங்குகின்றன. சிங்காதனம் பொது மக்கள் காணும் உயர் நிலையில் இருக்கிறது. அதன் அருகில் உள்ள பொன்னுதனத்தில் அரசர் வீற்றிருக்கிறார். அபிடேகம் நடைபெறுகிறது.]

நிலைமண்டில ஆசிரியப்பா

ஸ்ரீகண்டர்: வாழிய எங்கோ மன்னவர் பெருந்தகை!
ஊழி யூழியிவ் வுலகம் காக்க!
புண்ணியக் கங்கையின் புனித நீரும்
யமுனைப் புனலும் இணையில்கோ தாவரி
பெருகுநன் னீரும் நருமதை வெள்ளமும்
தென்கடல் நீரும் தென்னவர் பொருநை
பொன்னி பெண்ணைப் புனலும் போந்தன.
மறைமுறை மந்திரம் வகையா னோதி
அரசர் பெருமான் அணிமுடி சூடுமுன்
ஆசி மொழிபுகன் றூட்டுதற் குரியார்
வருக வருக! வந்துதம் பணியைப்
பூணுக! வாழ்த்துக பொருந்திய வாறே!

திம்மரசு : ஆரியர் நீவிர் அமைந்தீர் தலைமைக்
காதலின் முதற்கண் அரசர் முடியினிற்
புனிதநீ ராட்டுதல் பொருத்த மாகும்.
சபாபதி : ஆரிய மணியே ! அமைச்ச ரேறே !
மகுடாபி டேக மங்கல வினையில்
தலைமைக் குரியார் சங்கர மடத்தார் ;
சிருங்க கிரியினில் திகழுவ ரவரே.
அம்முனி வரரீண் டடைந்தன ராயின்
மன்னரை வாழ்த்தி மகுடஞ் சூட்டலாம்.
திம்மரசு : சிருங்க கிரியின் திருமடத் தலைவர்
வார ணாசியில் வளர்தவ மியற்றுவர்.
ஆதலி னருங்கலைக் காகர மாகிய
சீகண்ட தேவரைச் செலவிடுத் தனரால்,
குருவரர் திருமுகம் கொண்டவர் வந்துளர்.
மகுடாபி டேக மங்கள விழவினில்
முதற்கண் வருமொரு முறையுளா ரவரே.
ஈங்குள பெரியருள் இணையறு தவத்தாற்
சிறந்த சீரியர் சேருவர் பிறகே.
அச்சுதர் : தக்கது மதுவே ; மிக்கது மதுவே.
வித்தியா ரணியரா மேதகு முனிவரர்
அருள்பொலி மரபினி லரசுபூண் மன்னர்
அம்முனி மரபினர் அபிடே கஞ்செய
அரசினை யேற்றலே யமைவுடைத் தாகும்.
திம்மரசு : சீகண்ட தேவரே ! செப்புவ கேண்மின் :
முடிநீ ராட்டு முறையிற் றொடங்குக !
'நரபதி வாழிய ! நாடுவா ழிய !' என
மனமுற வாழ்த்தி மலிநீர் பொழிக !
ஸ்ரீகண்டர் : அமைச்சர் தலைவீர் ! அறிவுடைப் பெரியீர் !
சங்கர குருவரர் தவமடத் தலைவர்
ஆணையா னுங்கள் ஆதர வதனால்
அரசரைப் புனிதநீர் ஆட்டுவல் யானே.
[அரசருக்கு அபிடேகம் செய்கின்றார்.]
திம்மரசு : தவம்பொலி பெரியீர் ! தராபதி முடிமிசை
இனிநன் னீரினை யினிதுநீர் பொழியலாம்.

வியாச: அங்ஙனே யாகுக அரசே! உலகெலாம்
புகழே வளர்க்கும் பூபதி யாகுக!

[நீராட்டுகின்றார்.]

சடகோபர்: நாடும் மக்களும் நரபதி நலத்தால்
நலமுற வாழ்வதாப் புலவர் நவிலுதல்
உண்மையா மாதலின், உலகெலா மகிழ
அரியணை யேறு மரசர் முடிமிசைக்
கங்கை நறும்புனல் காவிரி நீரொடும்
அகமிக மகிழ்வுற ஆட்டுதும் யாமே.

[அபிடேகம் செய்கின்றார்.]

விசுவேசுரர்: தாமிர வருணித் தண்ணீ ரிதுவே;
கோதா வரியின் குளிர்புன லிதுவே;
திருப்பா லாற்றின் தீர்த்தம் இதுவே;
நருமதை நீரிது; நளிர்கடல் நீரிது;
துங்கபத் திரையின் தூய்புன லிதுவே;
கிருட்டிண வேணிக் கெழுபுன லிதுவே;
எம்முடை யரசர் இனிதுவா ழியரென
ஆட்டுவம் யாமே அவனி குளிரவே.

ஸ்ரீபாத: இப்பெரும் பேற்றினை யெமக்குமிங் களித்த
இறைவன் திருவருள் இனிதே! இனிதே!
மண்மகள் பேற்றினை வாழ்த்திப் புகழ்வமோ!
குடிகள் பெருநலம் குறித்து மகிழ்வமோ!
விசய நகர வேந்தர்மா மரபுதான்
இன்றுள வெய்தா விசையும் பெருமையும்
இவரர சாட்சியி லெய்துவ வாகுக!

[நீராட்டுகின்றார்.]

திம்மரசு: யானுமெம் மிறைவரை யினிநீ ராட்டுவல்:
எனதுநன் முயற்சி யெளிதிற் பலிக்க
அருளிய திருவருட் காகர மாம்பொருள்
இனியுநம் மன்னர்க் கியாவகை நலமும்
கால முகிலெனக் கருணையாற் பொழிக!

[நீராட்டுகின்றார்.]

அச்சுதர்: குமரிமுத லிமயக் கோட்டினளவும்
மன்னர் பலரையும் வணங்கப் புரிந்து

காசிமா நகரிற் றேசுறு முடிபுனை
நரசிங்க மன்னன் நல்லமைச் சாகி
அவனுள முவப்ப அரசின் பொறையினை
இனிதிற் றாங்கிய ஈசுர தேவர்
மகனெனப் பிறந்திம் மன்னர் பெருங்குலம்
புகழொடு பொருந்தப் புரிவன புரிந்த
நரச நாயகர் நற்றவக் கொழுந்தே!
கற்பின் கொழுந்து பொற்பின் செல்வி
பொன்னின் கொடியென மன்னிய வரசி
நாகலா தேவி நல்கிய செம்மால்!
முடிபுனை பேற்றினை முறையின் எய்திய
நினக்கே யென்றுமிந் நீள்குடைச் செல்வம்
நிறைக! வளருக! நிலவுக! பொலிக!

[நீராட்டுகின்றார்.]

**பொன்னம்பலனார்:** ஐய! அடியேன் அமுதத் தமிழ்மொழி
பிறந்த நாட்டின் பிரதி நிதியென
மன்னர் பெருமான் மணிமுடி புனைநாள்
நன்னீர் சொரியும் நற்செயல் புரிவனே.

[நீராட்டுகின்றார்.]

**திம்மரசு:** புலவர்கள் போந்தினிப் புதுநீ ராட்டுக!

**சபாபதி:** பாடுதும், புகழ்தும், பணிகுதும், வாழ்த்துதும்.
அரசர் பெருமான் அணிமுடி மீது
கேடில் வளந்தரு கிருட்டிணை நதியின்
புனலினை யாட்டும் புகழும் பூண்டனம்;
கிருட்டிண பூபதி கிளர்ந்தா டுகவே.

[நீராட்டுகின்றார்.]

**அ. பெத்தன்னா:**
தேனினு மினியவெந் தெலுங்கு மொழியினில்
மாபெருங் கவியாய் மன்னவர் மன்னராய்
விளங்குமெங் காவலர் வேண்டிய வேண்டியாங்
கெய்துக வெனவே யானுநீ ராட்டுவன்.

**திம்மரசு:** அரசர் பெருமான் ஆடக வாடை
புனைந்தனர் வருவர் புலவீர்! பாடுமின்.
இசையின் புலவீர்! இனிதுநீர் இசைத்திர்.

[அரசர் உள்ளே போய் வருகின்றார்.]

அரியணை யேறுக அரசர்க் கரசே!
புலவரு முனிவரும் புகழ்வா னிறைந்தனர்;
எண்ணறு மறவரும் யாங்கணும் குழுமினர்;
முடிபுனை மங்கல முயலுது மினியே.
சங்கர குருவரர் பொங்கருள் தாங்கிய
சிகண்ட வாரியர் திருமுடி புனைகுவர்.
யாமெலா மிதனை இனிதுகாண் குவமே.

**ஸ்ரீகண்டர்:** வேத விழுப்பொருள் விளக்கி யருளிய
வித்தியா ரணிய வியன்பெரு முனிவர்
மரபினி னிலைக்கு மாதவ குரவர்
அருளிய வாணையா ரைசர் பெருமான்
துங்க பத்திரைப் பொங்கு புனற்கரை
ஏம கூடத் தெழுந்தரு ளிறைவன்
விரூப பாக்கன் மெய்யருள் புனைந்து
நெடிதுநாள் வாழ்ந்திந் நிலத்தினைப் புரக்கென
முடிப்புனை திருப்பணி முறையிற் புரிவனே.

**குடி மக்கள்:** மன்னர் பெருமான் வாழிய வாழிய!
துளுவர் மரபின் சுடர்மணி வாழிய!
வடமொழி வடுகுணா மாகவி வாழிய!
புடவி புரக்கும் பூட்சியோன் வாழிய!
நெடியோ னிவனென நிமிர்வோன் வாழிய!
எம்முயி ராகிய இறைமகன் வாழிய!
வாழிய வாழிய வூழிவா ழியவே!

**திம்மரசு:** அரசே! குடிகள் அகமகிழ் வுறநீர்
இனிச்சில மொழித லியைபா மீங்கே.

**கிருஷ்ண:** அமைச்சர் தலைவீர்! 'அப்பா' என்வே
உமையா மழைக்கு முரிமை வேண்டும்.
தந்தையின் பெருமை சதமடங் குள்ள
நும்போற் றுணைவரை யெம்போ லரசர்
எவரே பெற்றுளர்! இன்றெமக் கியற்றிய
உதவி யிதனை யுயிருள வளவும்
மறவே மென்னும் வாய்மொழி வழங்குவம்.
பலநூற் றாண்டுகள் பாரகம் புரந்த
சங்கம மரபினர் தந்தபே ரரசினைத்

தகுநெறி பெருத சாளுவ மரபோர்
சில்லாண் டளவே செழிப்புற வாண்டனர்.
எந்தையார்க் கவரு ளிறுதி மன்னவர்
இட்ட வாணையை யினிதுநீ ரறிதிர் :
இளஞ்சிறு குழவியர் இருவரை நிறுத்தி,
'இவரு ளெவர்க்கிங் கிறைமை தகுமோ
அவர்க்கது தரு'கென அவர்புகன் றனராம்.
குழவியர் பருவம் குறுகு மளவும்
எந்தையார் பொறுப்பெலா மேற்றன ராயினும்
முடிபுனை யுரிமையை முறைமையா லவர்தம்
தலைவர் மகார்க்கே தகுதியி னமைத்தனர் ;
பல்லாண் டிருந்து பழமைநன் னெறியே
அரசு தாங்கியும் அரசரைப் போற்றியும்
வந்தன ரெனினும் மாமுடி புனைந்திலர்.
அவ்விரு குமரரும் ஆண்டுகள் கழியவே
அரசத் தகுதி யடையா நிலையினை
அறிந்து வருந்திய வகத்துய ரதனேடே
இறைகழல் புகுந்தனர் இறைமையை விட்டே.
பின்னர் வந்தவெம் முன்னவர் முறையால்
அரசுக் குரிய அவரைச் சிறைசெய்
தியற்றத் தகாதன வினும்பல வியற்றி
அரசு புரந்த தனைவரு மறிவீர்.
எந்தையார் விழையா வேற்றமும் பொருளும்
விரும்பிய தாலவர் வேந்தரு மாயினர் :
முடியும் புனைந்து முறையும் புரிந்தனர்.
சின்னாள் முனமவர் சிவனுல கடையும்
நோயிடை விழ்ந்தனர் நும்மையே யழைத்துத்
தமது மதலையைத் தகுதியாற் காட்டி
அவற்கே முடிதர ஆணையிட் டனரே.
அப்பொழு தெம்முடை யன்பினைப் பணிவினை
நன்கறிந் திருந்தும் நஞ்சினை யூட்டியோ
வாளுறை கழித்தோ வனவிலங் கழைத்தோ
எமைக்கொன் றிடுகென வேவின ருமையே;
நீயிரு மதனை நேர்ந்தனிர் வந்தே

இந்நா டினிப்பெறு மேற்றங் கருதி
எம்முயிர் காக்கும் எண்ணம் பூண்டே
ஆட்டின் விழியினை யவர்கண் காணக்
காட்டியெம் முயிர்கழி கதையினை யளந்தீர்;
அவரது கேட்டுள மமைந்துதம் மகனே
அரசு பெறுமெனு மானந்த நினைவொடே
தென்றிசை யுலகு சென்றனர். பிறகே
எமைநீ ரழைத்தே யிவ்வர சளித்தீர்;
ஆதலி னுமையா மவனியோ ரறிய
'அப்பா' எனவே அழைப்பே மைய!
இந்திர குருவென இமையவ ரியம்பும்
வியாழனிற் சிறந்த விஞ்சையிர் நீரே:
சுக்கிர குருவினும் சூழ்ச்சி மிகுந்தீர்;
சாணக் கியனூர் தாமே யாயினீர்.
உம்மை யமைச்சரென் றுடையே மாதலின்
எமக்கினிக் குறையிலை; எம்முட லாகிய
குடிகளு நும்மால் நெடிது நலம்பெற
வாழ்வுறு பேறே மலியப் பெறுவர்.
ஆதலி னவர்க்கியாங் காதலி னுரைப்ப
திதுவே யாகும்: 'இறைவனெம் பெருமான்
காலமறிந்து கனமழை யருளுவன்;
நெல்லினை விளைத்து நிறைவயற் பயனை
உலகெலாம் பெறுகென வுழைத்து வாழுதிர்;
பலவகைத் தொழிலும் பயின்றுநன் கியற்றி
நாட்டின் செல்வம் நன்குற வளர்ப்பீர்;
கடற்றுறை வணிகமும் கால்வரு வணிகமும்
நெறிநெறி நிகழ்த்தி நிறைதிருப் பெறுதிர்;
அரசினு லுதவி யனைத்தும் பெறுவீர்;
போர்த்தொழில் பயிலும் பொறுப்பினைப் பூண்டோர்
அகப்பகை புறப்பகை அணுகா வாறு
நாடு புரக்கும் நற்பணிக் குதவுக;
வில்லும் வாளும் வேலும் பிறவும்
செய்யும் பணியினர் செய்தனர் தருக;
மரக்கலம் தோணி வங்கம் படகு
வகைவகை யமைத்து வழங்குவோர் வழங்குக;

உழைப்பினு லன்றே யுயருவ துலகம்?
தந்தை தரும்பொருள் தனதெனக் கொண்டு
தான்முயன் றீட்டாத் தனயனோர் விலங்கே;
அதனையும் வறிதே யழிப்பவன் பேயே;
கல்வித் துறையிலும் செல்வத் துறையிலும்
முன்னவர் தேடிய தென்ன இருப்பினும்
பின்னவர் வளர்த்துப் பேணு தொழிவரேல்
நம்பெரு நாடு தன்பெய ரிழக்கும்;
நிலக்குறை யிலையே; நீர்க்குறை யிலையே;
உளக்குறை யொன்றால் உழவா திருப்பமேல்
மேதினிப் பெருந்தாய் வெம்பி வருந்துமே;
'உழைப்பின் வாரா வுறுதிகள் உளவோ?
கழப்பின் வாராக் கையற வுளவோ?'
கடலிடை யெண்ணறு காதங் கடந்து
கலத்தான் வந்த கணக்கறு பரங்கியர்
கோவையிற் கூடிக் குலவுதல் காணீர்;
பரிமா மிகுதியாத் தருவா ரவரே.
படைக்குத் தகுவது பரிமா வன்றோ?
நண்பினு லவரிடை நாமது பெறுவம்.
எல்லாத் துறையினு மேற்றம் பொலிய
நாட்டினுக் குழைத்தலே நமது பணியெனத்
துணிவோர் பெருகுக; துணிவிலார் அருகுக;
மக்காள்! நுங்கள் மனக்குறை யெவையும்
நேரே வந்திவண் நிகழ்த்துதல் செயலாம்.
ஓராண் டினியாம் உறைகுவ மீங்கே.
அதன்பினர்ப் பகைப்புலத் தரசர்தம் வலியை
அறியப் போகுவம்; அறிந்தே மீளுவம்.
நமது முயற்சிகள் நன்கு நிறைவுற
அரனூர் அருளுக! அரியார் அருளுக!
முடிபொரு ளுணர்ந்த முனிவர ரருளுக!
எவர்க்கும் பொதுவினி லிருந்தவோர் பரம்பொருள்
தனதருள் விளக்கித் தனித்துணை புரிகவே!

[எங்கும் வாத்திய முழக்கமும், 'அரசர் வாழ்க!'
என்னும் முழக்கமும் எழுகின்றன.]

**திம்மரசு :** அரசர் பிரானே! அறிவுசால் பெரியீர்!
உலகம் புகழு மொருபே ரரசென
ஈங்கிது நிலைக்க வியன்றன புரிகுவம்.
கோமக னுயிரெனக் குடிகளே யுடலென
இணங்கிவாழ் நாட்டினில் எக்குறை யிருக்கும்?
அரியரர் புக்க ராகிய புரவலர்
வித்தியா ரணியர் வியன்மொழி தாங்கி
நாய்களை முயலது நன்கனம் எதிர்த்த
நன்னில மதனிடை நாட்டுமிந் நகரம்
பலப்பல காதம் பரந்து வளர்வுறீஇ
அவனியிற் பெருநக ராகவும் வேண்டும்;
பாரத பூமியின் பலப்பல மன்னரும்
திறைதரும் பெருமையும் சிறப்பும் வேண்டும்;
நவமணிக் குப்பையும் நாவலம் பொன்னும்
வெள்ளியும் பிறவும் மிகுதியா வேண்டும்;
வீரமே யெவற்றினு மேதக வேண்டும்;
ஒற்றுமை யுணர்ச்சி யோங்குதல் வேண்டும்;
காலினிற் கலத்தினிற் கடுகி வரும்பொருள்
யாவுமிந் நகருற வினிவழி வேண்டும்;
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறைய
உறையுளும் பலப்பல நிறைவுற வேண்டும்;
பாண்டவர் இயற்றிய பழம்பெரு நகரினும்
பெரிதென நந்நகர் பிறங்குதல் வேண்டும்.
இவையெலா மியலுதல் இறைவ னருளினே
ஆதலி னவனையா மன்பொடு பணிகுதும்:
'திரிபுர மெரித்த விரிசடைப் பெரும!
பாற்கட லரவப் பாயல்கொள் பரம!
மயிற்பரி யுகைக்கும் வள்ளற் குருவர!
பிரணவப் பொருளாப் பிறங்கிய மூர்த்தி!
நான்மறை முழங்கிய நான்முகப் பகவ!
திருநிறை வருளும் செம்மலர்ச் செல்வீ!
கலையினை யருளும் கலையுருச் செல்வீ!
உளத்துர னுடலுர னுதவுஞ் செல்வீ!
எல்லா மாகிய விறையே!' எனயாம்

போற்றுவம் புகழுவம் பூபதி வாழ்வுற;
தீபா ராதனை செய்குவ மினியே.
உண்மை யொன்றே; உள்ளது மொன்றே.
அதனருள் நாட்டுக் கமைவதா குகவே!

[வாத்தியம் முழங்குகிறது. சபை மெல்லக் கலைகிறது. குடிகள் அரசனை வாழ்த்திப்போகின்றார்கள்.]

## இரண்டாம் களம்

**இடம்:** நாகாம்பிகை மாளிகைத் தோட்டம்
**காலம்:** மாலை
**பாத்திரங்கள்:** கிருஷ்ணதேவ ராயர், நாகாம்பிகை, தோழிகள், ஒற்றர் முதலியவர்கள்.

[நாகாம்பிகை தோட்டத்தில் மலர்கள் பறித்து மெல்ல நடந்து வருகின்றாள்; ஒரு மாமரத்தில் மல்லிகைக் கொடி படர்ந்திருக்கும் அழகைப் பார்த்து நிற்கின்றாள்.]

### நிலைமண்டில ஆசிரியப்பா

**நாகாம்:** மல்லிகைக் கொடியே! மாந்தரு மணந்தனை.
நீபெறும் இன்பம் நின்னுளம் உணரும்;
நின்னுடல் நிறைந்து மன்னிய அரும்புகள்
முகைகள் மலர்கள் தகையுற விளங்குதல்
தலைவனைத் தழுவிய நிலைமையா லன்றோ?
என்னுள முணரு மியல்புனக் குளதோ?
முல்லைமெல் லரும்பு மொழியற நகைக்கும்;
மகிழ மலர்களும் மவுனம் பூணும்;
நீயும்நின் மகிழ்ச்சியில் வாயினைத் திறவாய்;
எவரிட மினியான் என்குறை யுணர்த்துவன்?
இளஞ்சிறு காற்றுல் இனிதுற அசையும்
நினைநின தன்பன் நெருங்கித் தழுவுவன்
கிளைக்கை பரப்பி வளைத்தனன் காணுய்.
இந்நா ளளவும் என்னுயி ரென்றே
பயின்றவென் தலைவர் பத்துநா ளாக
என்மனை நெருங்கவும் ஏனோ நடுங்குவர்!

அரசர் இவர்தம தமைச்சருக் கஞ்சுவர்.
இன்றெனைக் கைவிடுத் தென்னிறை யகலின்
உயிரினை நிறுத்த வொருவழி யறியேன்!
இளமையின் உள்ளத் தெழுந்தமெய்க் காதல்
அரசப் பொறையா லடக்கப் பெறுமோ?
யாது மறியேன் எவரிடம் புகல்வேன்?
கொள்கொம் பிழந்த கொடியா குவனே!
கலங்கரை விளக்கம் காணு மரக்கலம்
எனத்துயர்க் கடலிடை யிழிந்துமாழ் குவனே!
உளமே! நின்னிலை யுணருதி நீயே.
நின்னைத் தேற்றும் நேயரை யறிதியோ?

[தோழியர் பூக்கொய்து வருகின்றனர்.]

**கமலினி :** மல்லிகை மலர்கள் மாலை தொடுக்க
யானே பறிக்கவோ வெமதருந் தலைவி!
நீயே பறித்தியோ நிகழ்த்துதி யின்னே.
குமுதினி முல்லை கொய்து வருகிருள்;
மகிழ மலரும் மருவும் எடுத்தனள்.
வேண்டுவ தென்னென விளம்புதி அன்பே!

**நாகாம் :** யாது விளம்புவன் என்னுயிர்த் தோழி!
என்னை யறிந்தவர் எனதுளங் கவர்ந்தனர்;
பத்து நாளெனைப் பாரா திருந்தனர்;
ஒவ்வொரு நாளும் உகம்பல வாகும்;
இளமை கழிந்திடும்; எய்திடும் முதுமை;
எனவே யுள்ளம் இளைந்திடும் கமலினி!

**கமலினி :** என்னுயி ரனையாய்! நின்னுயிர் நிகர்ப்பவர்
நினைமறப் பாரென நினையேன் யானே.
அரசப் பொறையினை யவர்தோள் பரிப்பர்.
அமைச்சியல் பூண்டோர் அசகாய சூரர்.
அவரறி யாவணம் அல்லிவண் வந்தே
நின்னெடு மளவளாய் நிருபர் மகிழ்வர்.
இம்மறை வெளிப்படா தெனவே யெண்ணுவம்.
மதிகள் பலவாய் மதிமா ணமைச்சர்
அறியா வண்ணம் அமைகுவ திதுவே.
குமுதினி நேற்றிராக் கூறினள் ஒருமொழி.
அதுகேட் டென்னுள மஞ்சுவ துளதே!

நாகாம் : யாதவள் கூறினள்? இயம்புதி கமலினி!
அவளு மீதோ வடைந்தனள் காணுய்!
குமுதினி யென்னுளங் கொண்டநற் ருேழி!
நின்மன மறிய வென்மன மறியா
மறையு முளதுகொல்? வழங்குதி யின்னே.

குமுதினி : அமைச்சர் திறமை யறியார் யாரே?
அவர்பல நாளா யறிந்திலா வுண்மை
நேற்றறிந் தனரென நிகழ்த்தினர் சிலரே.

நாகாம் : அன்ன தியாதோ? அன்புடைத் தோழி!

குமுதினி : நின்னுள மறியும்; மன்னுள மறியும்;
யானஃ தெங்ஙனம் இயம்புவ லன்னுய்!
நாடெலா மறியுமுன் நராதிபர் தம்மை
மணந்திடல் நலமென வழங்கின முன்னே.
அன்றது மதித்திலை யின்றெது புரிதியோ!

நாகாம் : எனையவர் மணங்கொளல் எளிதென நினைதியோ?
'இராசமா தேவி' எனும்பெயர் புனையத்
தக்கவள் யானோ? தராபதி யவருளத்
துள்ளுற மறைந்த வுண்மைக் காதலே
யான்பெறும் பெரும்பே றெனக்கரு துவனே.
காதல ரவரெனக் கருதுறு முரிமையே
பிறர்பலர் தவத்தாற் பெறுப்பே ருகும்.
பன்னிரண் டாண்டினிற் பற்றின னவருளம்;
பதினு ருண்டு படைத்தன னின்றே.
அவர்க்கு மெனக்கு மகப்பொருள் நூலோர்
விதித்த களவினில் வெற்றியே விளைந்தது.
இருபத் திரண்டாண் டெய்திய வின்நாள்
அரசரா யிருந்தும் அவரென துயிரே.
அமுதினு மினிதென அன்பின் செல்வம்
துய்க்கு மவருளஞ் சொல்லுவ தறிவேன்.
கற்பி னெழுக்கம் கடைப்பிடித் திடுதற்
கெனக்கு மவாவிலை; எமர்க்கு மவாவிலை.
சாளுவ திம்மர சாளுவர் நாட்டினை;
யானென திறையுள மினிதினு ளுவனே.

கமலினி : அன்னை நீ நினைப்பன அனைத்து முண்மையே;
என்னினு மொருமொழி யானியம் புவல்கேள் :
அரசர்க் கமைந்தவர் அரசபத் தினியரே;
கற்பி னெறியாற் காதலர்ப் பெறுமவர்
தம்மிளஞ் சிறுர்க்குச் செம்மையி னுரிமையா
அரசினைப் பெறுதலு மளித்தலு முளவே.
இன்று காறுநீ இன்பச் செவ்வியில்
அழுந்தி மயங்கி யதனை மறந்தனை.
நாளை நினக்கொரு காளை பிறப்பனேல்,
அவற்குள வுரிமையிவ் வரசிடை யாதே?
ஒன்று மிலதென வுணருதி நங்காய்!
நாகாம் : மகவெனுஞ் செல்வ முகவேன் யானே.
உடல்வே றுயிரொன் ருென்றிய காதலே
என்னுளம் விழைகுவ தினியமெய்த் தோழி!
குமுதினி : நன்று புகன்றனை நாகாம் பிகையே!
'மங்கல மென்பது மனைவாழ் மாட்சியே;
அன்னதன் நன்கல னன்மகப் பேறே,'
எனவுயர் புலவர் இசைத்த தறிந்திலை;
'காதல் காதல் காதல்' என்றனை.
காத லின்றெனிற் சாதல்நா டுதியோ?
அரசர் காதலின் ஆழ மறிந்திலை:
தேவிய ரெனவவர் மேவுவர் பலரை;
காதற் கிழத்தியர் கணக்கிலார் வருவர்;
காமப் பரத்தையர் கணக்கடங் கிலரே;
சேரிப் பரத்தையர் சேர்வது முளதே;
எண்ணறு பெண்டிரொ டிணங்குமோர் மன்னரை
நின்னுளத் தன்பினுல் நிலையுறப் பிணித்தல்
இயலுமென் றெண்ணி மயலுகின் றனையே!
ஆதலி னினக்கியா னன்பினுற் புகலுவ
திம்மொழி கேட்டி : இன்றிவண் வருவரேல்
விரைவினில் மணங்கொள வேண்டுதல் புரிதி.
மணங்கொளு மங்கையர் வாழ்விடை யுயருவர்.
நினக்கு நலம்வரி னெமக்குநன் றன்ரு?
நாகாம் : நன்று புகன்றனை! இன்றவர் வருவரோ,
நாளையே வருவரோ, நாள்பல செல்லுமோ!

யானு மறியேன் ; என்னுள நடுங்கும்.
வந்தபின் பன்றே மணவினை பேசலாம்?
என்னுயிர்த் தலைவரை நன்னர்நீ ரறியீர்.
என்னுளத் தவருள ரென்பது போன்றே
அவருளத் தியானே யகமுற நிறைந்துளேன்.
மணப்ப ராயினும், மணவா ராயினும்,
காதலா லெனையவர் சேர்த லுறுதியே.

**கமலினி :** திம்மர சாரியர் செயலைநீ யறியாய்.
அரசர் குலத்தினின் றுயிர மங்கையர்
மணஞ்செய வருவதை மனமுற வறிந்தும்
நின்னொடு மிணங்க மன்னரை விடுவரோ?

**நாகாம் :** என்னுயிர்க் காதலர் என்பால் வருதற்
கந்தண ரனுமதி யமைய வேண்டுமோ?

**குமுதினி :** இந்நெடு நாளாய் ஈங்குநின் காதலர்
வாராமை யந்தணர் வலிமை விளக்குமே?

**நாகாம் ;** அந்தணர் வலிய ராயினு மாகுக!
என்னுயிர்த் தலைவர் எளிய ரல்லரே?
அவர்க்கியான் வைத்த அன்புமெளி தன்றே?

[கிருஷ்ணதேவ ராயர் வருகின்றார்.]

**கிருஷ்ண :** எளிதென வெவ்வரே யியம்பத் துணிவர்?
அன்புக் கடல்நீ ; அமுத வூற்றுநீ ;
இன்பத் தருநீ ; இனிமை யெலாநீ.
நினையகன் றொருநாள் நிலைக்கவு மறியேன்.

[தோழியர் விலகுகின்றனர்.]

**நாகாம் :** யாது புகலுவல் என்னுயிர்க் கரசே!
'நின்னிற் பிரியேன் ; பிரியிற் றரியேன்,'
எனவே மொழிந்து மித்துணை யுகங்கள்
எவ்வுல கத்தே யிருந்தனி ரறியேன்!

**கிருஷ்ண :** அரசியற் பெரும்பொறை யறிதியெ னன்பே!
பற்பல கோடி மக்களைக் காக்கும்
நிலைமையை யடைந்தனன் ; நீயுநன் கறிவாய்.

**நாகாம் :** அதனு லென்னை யயர்த்தீர் போலும்!
அன்பினை யிழந்தா லாவியும் விழையேன் ;
இன்பமே யுயிரே யாவுமெய்க் காதலே.

கிருஷ்ண : உண்மை யுண்மை! உணர்வேன் யானும்.
பிறர்பலர் நலம்பெறப் பெற்ற பிறப்பினோர்
தந்நல மறத்தல் தகுதியே யன்றோ?

நாகாம் : என்னல நுந்நலம்; நுந்நல மென்னலம்.
பிறரெவர் நலம்பெற அறவிது துறப்பல்?
பெண்பிறப் புற்ற பேதையே னுதலின்
ஒன்றையு முணரேன்; உணர்த்தி யருளுக!

கிருஷ்ண : எவ்வகை வாழ்வில் யான்புகுந் திடினும்
என்னுள நின்னதே யென்னுமீ துறுதி!
எனக்கு நினக்கு மிருக்குமிவ் விணக்கம்
பிறர்பலர் அறிவரேல் மறையா காதே.
ஆதலி னப்பா அமைச்சர் பெருமான்
நந்நலம் கருதி நவின்றன ரொருமொழி.
அதனை மொழியவே யடைந்தன னங்காய்!

நாகாம் : என்னை நாடி யென்னரு கடைந்திலிர்,
அவர்மொழி புகல வடைந்திர் போலும்!

கிருஷ்ண : பெண்ணே! இங்ஙனம் பேசுதல் தகுமோ?
அந்தணர் குணத்தைநன் கறிந்தனை யாயினீ
நொந்தனை யிம்மொழி நுவன்றிரா யன்றோ?
நாட்டின் நலமும் நரபதி நலமும்
பிறபல நலமும் பேணுமப் பெரியார்
நின்னலம் மறப்பரோ? நிகழ்த்துதி சிறிதே.

நாகாம் : என்னல மெனவவ ரியம்புவ தியாதே?
அரசருள் பெரியீர்! அடியா ளறிந்து
கடைப்பிடித் துய்யக் கழறுதல் புரிதிரோ?
காதற் பெருங்கனி கனிவொடு பேணிய
இருவரைப் பிரிக்கும் எண்ணமோ, யாதோ!

கிருஷ்ண : அரசெனக் காக்கிய வமைச்சருள் பெரியார்,
நினது மனநிலை நெறியுற வறிந்துளார்.
அமைகுவ ததுவோ வதனையே புரிவர்;
எவர்க்குந் தீமை யியற்று ரவரே.

நாகாம் : நாட்டி னலமே நயப்பா ராயின்
எனைப்பிரித் தொழிக்க வெண்ணுத லியல்பே.

கிருஷ்ண : நாடு நலம்பெற நமதுமெய்க் காதலால்
தடையும் விளையுமோ நடைதெளி யன்னமே!

நாகாம் : நெறிதெளி யமைச்சர் நினைப்பினி லுள்ளது
யாதெனை வறியேன்!

கிருஷ்ண : இயம்புவல் கேட்டி :
நினக்கொரு மாளிகை நிருமித் துதவுதற்
கெண்ணினர்; இன்னும் எவையெவை தகுமோ
அவையெலாம் புரிவர்.

நாகாம் : அரசே! தகுவன
எவையென வறியேன்! எனக்கொரு விருப்பம்
உள்ளத் தெழுந்துள துரைத்திட லாமோ?

கிருஷ்ண : கூசுவ தேனோ? கூறுதி விரைவில்!
ஒளியா துரைத்தி; உறுவன புரிவன்.

நாகாம் : நாவா லுரைக்கவும் நடுங்குவ னரசே!
'அஞ்சலை யுரைக்'கென வாணை யருளினல்
ஒருவா றுரைப்பன்.

கிருஷ்ண : உயர்வொப் பில்லாக்
குணங்கள் பொலிந்தமை கோமள வல்லி!
நினதின் மொழிபெற நிலப்பொறை மறப்பன்;
பதவி மறந்துநின் பக்கலே வருவன்.
என்னுள மறிந்தநீ யிங்ஙன மொழிதல்
தகுமோ? வேண்டுவ சாற்றுக விளக்கி.
அச்சம் வேண்டா.

நாகாம் : அரசர்க் கரசே!
அடியாள் வேண்டுவ தன்பின் செல்வமே.
'என்னுயி ரனையாய்!' எனவின் றிசைப்பீர்.
நாளை வருவது நானறிந் திலனே!
ஆதலி னெனைநீ ரன்புறு மரசியாச்
செய்யத் தக்க திருமண நிகழ்த்தி
ஏற்றுக் கொள்கென விறைஞ்சுவல் யானே.

[வணங்குகின்ருள்.]

கிருஷ்ண : அமுதினு மினிய வருமைக் காதலி!
யாது கூறினை! யான்மணம் புரிதல்

குடிகள் விரும்பும் குலங்களி லன்றோ?
மணவினை பெற்று வருமர சியரெலாம்
பெருத பேறுகள் பெறுதிநீ; உண்மை.
அரசி யாதற் கவாவுதல் முறையிலை.
அமைச்சரும் குலத்தின் அமைதிநன் குணர்ந்த
உறவின் முறையரும் உறுமுறை யதற்கு
வேண்டுவ வியற்றுவர். ஈண்டியா னவர்மொழி
கொள்ளல் கடனும்; தள்ளல் முறையோ?
எனக்கென வுரிமை யில்லை. குலத்தின்
மானந் தாங்குதல் மன்னர் கடனும்.
இன்றியான் குலக்கே டியற்றுவே னுகில்,
நாளை நாடெலாம் நலங்கெட் டழியுமே!
உண்மைக் காதல் உன்னுளத் துளதேல்,
இங்ஙனம் கூறேல்.

நாகாம்:　　என்குல மறியீர்:
பூபதி கேட்டிர்:யான் பொதுமக ளல்லேன்.
முன்னைநாள் நுங்குல முன்னோர் எந்தம்
தந்தைய ரரசினைத் தாமழித் தெனையும்
பிறரையு மடிமையாப் பிடித்துக் கொணர்ந்தனர்;
எமது குலச்சிறப் பிழந்தியாம் வருந்தப்
பொதுமகள் போலப் பொரும விடுத்தனர்;
ஓராண் டரசிய லுண்மைக ளாய்ந்தநீர்
எங்குலப் பெருமை எய்யீ ராயினஃ
தென்குறை யன்றே?

கிருஷ்ண:　　நின்குறை யாமென
யானும் நிகழ்த்திலேன். இந்நா டுடைய
மக்கள்நம் மணத்தினை மனமுற விணங்கார்.
என்னுளங் கொண்ட பொன்னே! அணங்கே!
உண்மைக் காதல் உனக்கே யுரிமை.
வேறினி யாதே வேண்டுதி? விளம்பாய்.

நாகாம்: ஐய!யான் வேண்டுவ தரசியி னுரிமையே.
அதற்கெது தகுமோ வதனைநீர் புரிவதா
வாக்களித் திடுதிரேல் வரலா மீங்கே.
இல்லையே லின்றிரா வென்னுயிர் மாயும்.

நாளையே வேறு நங்கையை நாடிநீர்
இன்ப விளையாட் டியற்றி மகிழலாம்.

கிருஷ்ண : மாதே! நினையான் மணப்பது தகுமோ
தகாதோ வெனவே சாத்திரம் பேச
இன்றியான் வந்திலன் எனதுள மறிந்தும்நீ
இங்ஙனம் பேசுதல் எவர்தம் சூழ்ச்சியோ!
குலப்பிறப் பொன்றே குறுக்கே நிற்பது.
அரசரு மதனை யழித்தல் நெறியோ?

நாகரம் : மன்னர் பிரானே! வணக்கம் வணக்கம்!
சினத்தால் மொழிந்திலன்; சிறுமொழி கேட்டிர்:
மண்ணினுட் பிறந்த மங்கையைச் சனகன்
எடுத்து வளர்த்தே யீந்ததும் இராமன்
கொண்டதும் முறையோ? குலத்தி னெறியோ?
செடியிடைக் கிடந்த சிறுமியை யந்தணர்
பேணினர் கோதைப் பெயரிட் டரங்கற்
களித்தது குலப்பிறப் பமைதி யறிந்தோ?
நெருப்பிடைத் தோன்றி நிமிர்ந்த வணங்கினை
ஐயர் அரசர் அடைந்தது முறையோ?
மலையிடைப் பிறந்த மங்கையை யரனுர்
எக்குலங் கருதி யேற்றனர்? இறைவீர்!
கடலிடைப் பிறந்த கன்னியைத் திருமால்
மணந்ததும் மார்பிடை வைத்ததும் முறையோ?
இவரெலா முலகின ரேத்திப் போற்றும்
பெண்டிர் தெய்வமாப் பிறங்குத லறிந்தனிர்
என்குலக் குறையினை யெடுத்தெனக் கிசைப்பீர்.
குலத்தா லிழிந்தார் குணத்தினு மிழிவரோ?
குணத்தின் பெருமை குலத்தினை யுயர்த்துமே!
அன்பின் பெருங்கட லாழ மளந்தறி
மன்னரே! என்குறை மறந்தனிர் மணக்க
இசைவீ ராயின் இனிதினி தென்பன்;
இசையீ ராயினும், எனை நுமக் களித்தயான்
பிறருளம் புகாது பெறுவன்விண் ணுலகே;
விண்ணகம் புகுத விடைவேண் டுவலே.
கருத்தினி யாதோ?

கிருஷ்ண : காதற் கனியே!
வருக வருக! மணப்ப துறுதியே!
அரசினை யிழப்பினு மகலேன் நினையே.
அமைச்சர் ஈதறிந் தாவன புரிவர்.
இனியா மாளிகை யேகுதும் வருதியே.

[இருவரும் உள்ளே போகின்றனர்.]

## மூன்றும் களம்

இடம்: அரங்கநாதர் ஆலயம்
காலம்: காலை
பாத்திரங்கள்: கிருஷ்ணதேவ ராயர், திம்மரசு, சடகோப யதீந்திரர், வியாச தீர்த்தர், சபாபதி கவிஞர், அர்ச்சகர்கள்.

[சடகோப யதீந்திரர் ஆலயத்தைச் சுற்றிப் பார்க்கின்றார். வியாச தீர்த்தரும் அரசரும் கருப்பக் கிருகத்தின் முன்னே நிற்கின்றனர். திம்மரசு அர்ச்சகர்களை ஏவிப் பூசைகளை நடத்தியிருக்கின்றார்.]

நேரிசை ஆசிரியப்பா

வியாச : ஒன்றே பரம்பொருள்; ஒருவனே தெய்வம்.
நலந்தரு மவன்பெயர் நாரண னாகும்.
உலக உயிரெலாம் உடையோன் அவனே.
உயிர்களி னகத்தே யுறைவோன் அவனே.
அவற்கோர் கோயில் அமைந்ததன் பெருமை
அவனே யறிவன். அவனைத் தாங்கும்
சேடனே யதனியல் செப்பத் தக்கவன்.
சிற்பச் சிறப்பினைச் செப்புதல் எளிதோ?
சித்திர வமைதித் திறம்புக லுவலோ?
ஏககா லத்தில் எண்ணறு மக்கள்
அவனையே காண வழகுற வமையும்
சிறப்பினைப் புகழ்கோ! தெளியேன். உருத்திரற்
கமைந்தவோ ராலயம் ஆண்டு பலவாய்
ஏம கூடத் திலங்குவ துளதே.

நான்முகன் றந்தை நயம்பெற விருக்க
ஆலய மொன்றீங் கமையாக் குறையினை
அரசு பூண்டதும் அறிந்தனை தீர்த்த
கிருஷ்ண தேவ ! கிளர்செம் மலர்த்திரு
நினக்கே யுரிமையா நிலைப்பள்
அரசெலாம் வந்தன வடிபணிந் துயவே.

நிலைமண்டில ஆசிரியப்பா

திம்மரசு : அசரர் மனக்கருத் தழகுற வமைந்தது !
திக்கு விசயம் செயப்புறப் படுமுன்
காத்தற் கடவுள் கருணையே பொழிய
ஆலய மொன்றீங் கமைக்க நினைந்தனர்.
அன்னது மோராண் டளவில் நிகழ்ந்ததே.
இனியவ ரெண்ணம் யாதோ வறியேன்!
எத்திசை போருக் கெழுவரோ!

அரசர் : திருமால்
அருள்புனைந் தெழுவேம்; அமர்க்களம் புகுவேம்;
வெற்றித் திருமகள் விருப்பொடு தோளினில்
வீற்றிருந் தருள விழைவு பூண்டனம்.
அரசுவீற் றிருப்போன் அரசர் பலரையும்
வென்று நிலத்தினை விரித்தலே கடனாக்
கொள்ளத் தக்கவன்; கோமுறை யதுவே.

[சடகோபர் வருகின்றார்.]

சடகோபர் : குடதிசை நோக்கி முடியினை வைத்துக்
குணதிசை கழன்மலர் குலவிட நீட்டி
வடதிசை புறமுற வாய்ப்புறக் காட்டித்
தென்திசை யிலங்கை சிறப்புற நோக்கிக்
கடல்நிறக் கடவுள் காவிரி யிடையே
அரங்கத் திருப்பதி யமரரும் முனிவரும்
மனித்தருங் காண வளர்ந்த வாறே
ஈங்குந் தனதருள் இனிதுற விளக்க
அமைந்தனன் காணாய் அரசர் பெரும!
யாவும் நின்செயல்.

கிருஷ்ண : இறைவன் செயலே.
என்செயல் என்பன எவையுமீங் கில்லை.
மண்ணினைப் படைத்த வள்ளல் அவனே.

விண்ணினை யளந்த விமலனும் அவனே.
எண்ணறு கோடியி னெழுந்த வுயிர்களை
ஆலய மெனக்கொளு மதிகனு மவனே.
அழகிய மணவாள் ளுகி யரங்கத்
தடியவர் காண அவனிருந் தனனே.
அரங்க பட்டினத் தங்ஙனே வளர்வன்;
திருமெயப் பதியினும் உருவுற வளருவன்;
வேங்கட கிரிமிசை வேத வுருவொடு
நின்றரு ளுவனே; நன்றருள் நாரணன்
அவனீங் கடைந்தன னருள விழைந்தே.
விருப்பு வெறுப்பிலா மெய்ப்பொரு ளாயினும்,
நச்சினுர்க் கினியன் நமைமறந் திடுவனே?
நம்பணி விழைந்து நங்நா டடைந்தனன்;
எங்கு முளனவன்; இங்குமிவ் வுருவில்
இருப்பது பொருத்தமே.

வியாச: யார் இலை என்பார்?
அரசே! நின்னினை வனைத்தும் நிறைவுற
அருள வல்லா னவனே. ஆதலின்,
அறத்தினை மறப்பினு மவன்கழல் மறவேல்.
நினக்கவ னருளிய நிறைகவிப் புலமையை
அவன்புகழ் புகலவே யர்ப்பணம் செய்க!
புலவ ரனைவரும் பொருந்திய தியற்றப்
புரவல னீயே யொருவழி காட்டுக!
அருச்சகர் அருச்சனை ஆயது காணுய்.
கருப்புரங் கொள்வன் கடவுள் காணுய்.
எம்பெரு மானே! எல்லா நலமும்
விசய நகர வேந்தனுக் கருளுக!

திம்மரசு: அவனரு ளின்றி யமைவது முளதோ?
அவனரு ளேதுணை யவன்றுள் வணங்க;
அவனரு ளேதுணை யவனுரு வறிய;
அவனரு ளேதுணை யருமறை தெளிய;
அவனருள் துணைநம் அரசர் குடிக்கே.

சடகோபர்: அரசே! ஒருமொழி யறைகுவல் கேட்டி:
ஆதியில் நுங்குடிக் கரனே தெய்வம்.

அரச முத்திரைக் கரனெழுத் திருந்தது.
பின்னாள் மாற்றம் பிறங்குவ தின்றே.
அரிதிரு வக்கரம் அழகுறு முத்திரை
இலச்சினை யாக இலங்குவ தின்நாள்.
இன்னதன் காரணம் யாதென வறிதியோ?

கிருஷ்ண: முன்னைய மன்னவர் முக்கணற் போற்றினர்.
பின்வரு புரவலர் பின்னை கொழுநனை
மனமுற நினைந்து வணங்கப் புகுந்தனர்.
இலச்சினை மாறிய தேனோ வறியேன்!

[அர்ச்சகர் பிரசாதம் கொடுக்கின்றார்.]

அர்ச்சகர்: அருமறை தெளியா அரிதிரு வருளால்
எம்முடை மன்னர் எல்லா நலமும்
அடைக! இனிவரு மமர்களி லெல்லாம்
வெற்றியே புனைந்து மீளுக நன்றே!

சபாபதி: விசய நகர வேந்தர் குடிக்கு
வெற்றி யன்றி விளைவ தியாதே?
புலமையாற் புலவரைப் புறங்காண் புரவலர்,
போரினாற் பொருநரைப் புறக்கொடை காண்டல்
அரிதே யாமோ? ஆரியப் புலவீர்!
பொன்னினைப் பொழிந்து புலவரை யழுத்தும்
வேந்தர் பெருமான் வில்லெழு மம்புகள்
மழையெனப் பகைப்புல மன்னரை யாழ்த்துமே!

வியாச: சடகோப முனிவரர் சாற்றக் கருதிய
தியாதென மன்ன! இனிவின வுதும்யாம்.

கிருஷ்ண: பெரியீர்! அம்மொழி பேசி யருளுக!

சடகோபர்: அரிதிரு வடிமலர்க் கன்புபூண் பெரியர்
வரலா றுரைக்கு மொருநூ லுளது:
பிரபன்ன வமுதமாம் பெயரின ததுவே;
அனந்த மாகவி யாக்கிய ததுவே.

திம்மரசு: அங்ஙன மொருநூ லமைகுவ தறிவேன்;
வைணவப் பெரியார் வாழ்வுநன் குரைப்பது.

சடகோபர்: மற்றத னகத்தொரு வரலா றுளதே;
இயம்புவல் யானஃ திறைவ கேட்டி:
எட்டூர் என்னும் எழில்நகர் வாழ்ந்த

நாரண னன்பர் நரசிங்க வாரியர்
சீரங்க வாரியர் செழுந்திரு நிலைபெறும
விசய நகரினில் மேவித் தமக்குள
வறுமையை யொழிக்க மனத்தக நினைந்தனர்.
அந்நாள் இவ்வர சாண்ட கோமகன்
விருபாக்க னென்ன விளம்புமச் செய்யுள்.
அவன்றன தரசினுக் ககப்பகை யாகிய
ஞாதியர் பலரையும் ஞாட்பினு லன்றி
வஞ்சனை முறையால் வதைபுரிந் தனனும்.
அவரனை வருமவ னரண்மனை யகத்தே
பேயுடல் தாங்கி மேயின ரென்ப.
மன்னவன் வேறொரு மாளிகை வகுத்துப்
புராதன மாளிகைப் புறத்தே போயினன்.
இச்செய லொன்றையும் எய்யா ராகிய
சோதர ரிருவரும் ஆதர வடையும்
நோக்கினுல் இரவிடை நுழைந்தன ராங்கே;
பேய்வாழ் மாளிகை பிறங்கிய பிறக்கம்
மனத்தினைக் கவர மகிழ்வொடு புகுந்தனர்.
இவ்விரு புலவரை யெதிர்கொளும் பேய்கள்
மனித்தரைப் போன்று மன்னவ ரேவல்
புரியு முறையே போந்தக மழைத்தன.
அரச பீடத் தமர்ந்தவோ ரரசன்
அருகினில் அமைச்சா யமர்ந்தவர் பற்பலர்;
வீரராய்த் தளபதி வேடம் பூண்டவர்
எண்ணறு தலைவராய் எங்கும் விளங்க
இருந்த காட்சியை இருவரும் கண்டனர்.
அரச னவர்தமை யன்பொடு வரவேற்
றமருக வெனப்பொன் னுதனம் காட்டினன்,
'அந்தணப் புலவீர்! அயலூர் போலும்!
புதியீர் போலும்! புகுந்தனிர் ஈங்கே.
யாது கருதிநீர் இந்நகர் வந்தீர்?'
எனவே வினவினன். இருவரும் தமது
வறுமையை விளக்கி, 'வான்மிகர் அருளிய
இராமா யணக்கதை யினியநன் முறையாற்
பேசுதும் யாம்,' எனப் பேசினர் இனிதே.

அரச னதுகேட் டகமிக மகிழ்ந்து;
'புலவீர் ! எமக்குப் புகலுக அக்கதை;
ஈங்குள யாவரும் இனிது கேட்குவம்;
பட்டாபி டேகப் படன நாளினில்
கனகாபி டேகம் களிப்பொடு புரிவேம்;
ஈங்குநீர் வருவதை யெவரும் அறியா
வகையினே போக்கு வரவு நிகழுதல்
நன்றாம்,' என்றனன். 'நாரண னருளால்
அங்ஙனே யாகுக வாகுக!' என்ற
நரசிங்க வாரியர் நாள்பல வாக
இளையோர் படிக்க வினிது விளக்கி
இராம பிரான்புகழ் இசைத்தனர் அன்பால்.
பன்னிரு மதியிற் படனமு முறையே
நிறைவுற லாயது. நீள்புக ழிராகவன்
பட்டாபி டேகம் படிக்குநாள் வந்தது.
அன்றம் மாளிகை யகத்திருந் தோரெலாம்
நவமணிக் குவியலும் தமனியப் பணிகளும்
நாணய வகைகளும் பேணுபல் பொருள்களும்
மகிழ்வொடு குவித்தனர். வாய்மொழிப் புலவரை
அழகிய வரியணை யமர்த்தி முறையே
கனகாபி டேகம் காவலன் செய்தனன்.
பிறகவ னவ்விரு பெரியரை நோக்கி,
'எங்கதை கேட்டிர்,' எனப்புகன் றனனிவை :
'யாமெலா மின்றிவ் விருநக ராளும்
நரபதி யுறவினர்; ஞாதிய ராவேம்.
அவனெமை யொருநாள் அரண்மனை யிதன்கண்
அழைத்து விருந்தினி லிழைத்த கொடுமையாற்
பிரேத வுருவினைப் பெற்றனம் யாமே.
இம்மனை விட்டவ னேகினன் புறத்தே.
யாமிவ ணிருத்தலா லிந்நகர் மக்கள்
படுதுயர் பலவே. பையுளீ தொழிக்க
மந்திர வாதியர் வந்தனர் பலரே.
அவரா லெல்லாம் அகல்கிலே மாயினேம்.
இராம கதையிதை யினிதுநீ ரிசைத்தலால்
எங்குறை யொழிந்த தினியிந் நகரத்

தொருகுறை யிலையென உணர்த்துதிர் நீரே,'
என்றனன், உடனே யெழுந்தனன் குழுவொடு
வினைவலி கழிய விண்ணகம் புகுந்தனன்.
சோதர ரிருவரும் ஆதர வாற்பெறும்
பொன்னினால் மகிழ்ந்து பூபதி யருகணைந்
தியாவையும் புகன்றனர். இவைகேட் டவனும்
உளமுற மகிழ்ந்தே பளகறு மரண்மனை
முன்போற் புகுந்து முதுமொழிப் புலவர்க்
கியற்றினன் சிறப்பெலா மெனவருங் கதையே.
அந்நாள் முதலா விந்தமன் குலத்தோர்
அரியிலச் சினையினை யமைத்தன ரென்ப.
விருபாக்க நாமம் விளங்கிய முத்திரை
இராம நாமம் இயைந்ததென் றுரைப்பர்.

சபாபதி : முத்திரை மாறிய முறையிது, வேயோ?
ஆயினிங் கிதுநம தரசினுக் கழகே!

திம்மரசு : காவிய நெறியாற் கட்டுரைச் சுவைபட
அமைத்தது கதையென வறைவார் சிலருளர்.
எங்ஙன மாயினும், இறைமகன் இங்கிது
கேட்டது நன்றே. கேசவ னருளால்
இனியித் திருநா டியாவகை நன்மையும்
எய்துவ தாகுக!

கிருஷ்ண : இனிதே இனிதே!
இராம பிரான்கதை எவற்றினு மினிதே!
முறையுற வதனை மொழியக் கேட்டலால்
எவ்வகை வினைகளு மிடமிலா தொழிவதும்
உண்மையே! பெரியீர்! வண்மையா லிதனை
எங்குல முன்னோர் இயற்றிய நெறியினில்
இயம்பிய நுமக்கியான் யாது புரிவலோ!
இனியா மிறையருள் எய்துந் துணிவினால்
திக்கு விசயம் செய்யத் துணிவம்.
எருமை நாட்டிடை யுரிமையி னரசு
பூண்டுள மன்னரு மாண்டுள பிறரும்
நங்குடிக் கிறைதரு நலத்தினை மறந்தனர்;
சுதந்திர வரசெனச் சொல்லவுந் துணிந்தனர்.

ஆதலின், விரைவினில் அந்நாட் டகத்துப்
புகுந்து போர்தரு புகழினைப் பூண்டு
மீளலா மென்னுமோர் விருப்பம் உளதே.

திம்மரசு: இறைவன் றிருமுன் இக்கருத் துரைத்ததும்
அவனருள் பெறுவதற் கமைவதே யாகும்.
அமர்க்களம் புகுவது மரிதன் றங்குப்
போர்வினை புரிதலும் புதுமை யன்றே.
வெற்றி விளைவதும் வியப்பா காதே.
'முயற்சியும் பயனும் முற்றிலும் அவன்செயல்,
என்னவே யுளமுணர் இயல்புதா னரிதே.

சபாபதி: விசய நகர வேந்து மரபினர்
நன்னாள் குறித்து ஞாட்பினுக் கெழுகையில்
எதிர்வது வல்லார் எக்குடி மன்னரே?

சடகோபர்: மன்ன! நீ யரசு வகித்தநாள் முதலா
நின்குல முன்னோர் நீள்பெருஞ் சரிதம்
ஆய்ந்துணர் முயற்சியில் அதிகநாள் கழித்தனை.
அவருளொவ் வொருவரும் அறமற வாதவர்,
இராச நாத டிண்டிம மாகவி
புகழும் பெருமை புனைந்த புரவலன்
அகோபில மமர்ந்த வரிதிரு வருளாற்
பிறந்தன னென்பதும், பின்னை காதலன்
திருப்பெயர் பூண்டு சிறந்தன னென்பதும்,
நல்லோர் புகழுமந் நரசிங்க மன்னன்
தண்டமிழ் வளரும் தொண்டைநன் னாடும்
ஓரியருக் குரிய பெரியநன் னாடும்
உதய கிரியும் உயர்வினு கொண்டமும்
பிறவும் வென்ற பெருமையோ னென்பதும்,
கேட்டினி தறிந்தனை. கிருஷ்ண தேவ!
நின்குல முன்னையோர் நீள்புகழ் மதியம்
நின்புகழ்க் கதிர்முனம் நில்லா தாகுக!
இறப்பினு மெதிர்வினும் இசையினால் நின்னை
வெல்வோ ரிலாத வியனிலை யடைக!
அரிதிருக் கழல்நினைந் தமரகம் புகுக!
வென்றி புனைந்தனை மீள்வா யாகுக!

**கிருஷ்ண:** திருவருள் பெற்றனன்; குருவருள் பெற்றனன்.

**அர்ச்சகர்:** பின்னை கேள்வன் பிரசாதம் அரசே!

**திம்மரசு:** நன்று நன்று! சென்றுமீ ளுவமே.

(புறப்படுகின்றனர்.)

## நான்காம் களம்

| | |
|---|---|
| **இடம்:** | விசய நகர அரண்மனையில் மந்திராலோசனை மண்டபம். |
| **காலம்:** | பிற்பகல் |
| **பாத்திரங்கள்:** | அரசர், திம்மரசு, ஆதியப்பர், சதாசிவ தண்ட நாயகர், பரங்கித்தூதர், லூயி பாதிரியார். |

### நிலைமண்டில ஆசிரியப்பா

**அரசர்:** என்னே கொடுமை! என்னே கொடுமை!
புரவல ராயவர் போர்க்கள நின்று
நாட்டக மக்களை வாட்டி வதைப்பது
மாபெருங் கொடுமை! மாபெருங் கொடுமை!

**திம்மரசு:** போருங் கொடுமையே! போர்க்களத் தகத்தே
தாக்குவார் சிலரே; தாங்குவார் சிலரே.
அரச னொருவன் ஆசையே தூண்ட
வாழ்வினைத் துறந்து மடிவோர் எண்ணிலார்.

**ஆதியப்பர்:** போரிலா திருப்பிற் புரவலர் பெருமை
விளங்குத லெவ்வணம் வித்தக வமைச்சரே!

**திம்மரசு:** அசோக மன்னரிவ் வவனியை யாண்டனர்.
அவர்புக ழின்றள வகன்றுபரந் துள்ளது
ஆங்காங் கவர்முன் பமைத்துள சாசனம்
தரும நெறிகளைச் சாற்றுவ தாலோ,
அவர்புரி போர்களின் அடைவுக ளாலோ?

**சதாசிவ:** அமர்க்களம் புகுந்தே அரசர் பலரையும்
வென்று படைகளைக் கொன்று குவித்துப்
பிணப்பெருங் காடும் நிணப்பெரு மலையும்
உதிர வெள்ளமும் உவப்பொடு கண்ட
அசோகரே போர்களுக் கதிப ராகுவர்.

இக்கு விசயம் செயுநிலை வமைவதும்
அசோகர் வரலா றறிவதாலன்றோ ?
இம்மரசு : கலிங்கப் போரிடைக் கலங்கிய வுளத்தால்
அவர்மொழி சூளுரை யறிவீ ரைய!
மன்னவர் போர்செயல் மனுநெறி யாயினும்,
பிறர்நா டடைதல் பெருமையே யாயினும்,
அமைதியு மன்பும் அருளும் பிறங்க
அவனிவாழ் நெறியே அமலவாழ் வாகும்.
இங்ஙனம் கூறலா னெழுபடை நடத்திப்
போர்க்களம் புகுதரும் புண்ணியப் பணிக்கு
மன்மிலே னென்ன மயங்குதல் வேண்டா.
அரசர் : அந்தண ராயினும் அமர்க்களம் புகுந்து
படைகளை நடத்திப் பகைவரை வென்று
புகழ்புனை தலைமையிற் புண்ணியர் நும்மை
நிகர்ப்போ ரிலரென நிகழ்த்துவல் யானே.
புலவ ரினத்தினும் தலைமைக் குரியீர் ;
வீரர் குழுவினும் வியப்பினுக் குரியீர் ;
அமைச்சருள் ஒப்புயர் வற்றவர் நீரே.
ஒன்று கேட்குவன் உரைத்தருள் வீரே :
கோவை நாட்டிலிக் கொடுமை நிகழ்வதேன் ?
இம்மரசு : மன்னரே! கோவையின் வரலா றுரைப்பன் ;
விசய நகர வேந்தர் மரபினுட்
சங்கம மரபின் தழைபுகழ் சுருங்க
இறைமக னெனவே யிறுதியி லிருந்த
மல்லி கார்ச்சுனர் வலிமைக் குறைவால்
நம்மர சுரிமை நகராம் கோவை
விசய புரத்து வேந்தர்கைப் போயது.
நெடுநா ளவரே நிலைபெற வாண்டனர்.
சாளுவ குலத்தின் தலைவரே யாகிய
நரசிங்க மன்னரும் நன்கன முயன்று
மீண்டு மதுபெற வேண்டின ராயினும்,
வெற்றி பெறுகிலர் விட்டனர் ; இழந்தேம் ;
நமக்கே யுரித்தென நலம்பல பொலிந்த
கோவைமா நகரினைக் கொடுத்து மறந்தேம் ;

கடல்பல கடந்து கலங்களான் வந்த
போர்த்து கேசியர் போர்த்தொழில் வன்மையால்
அதனைக் கைக்கொண் டாளுவ ரின்றே.
பரங்கியர் எனயாம் பகருவம் அவரை.

அரசர்: முன்ன மொருமுறை மொழிவல தூதர்
ஒருவர் அவர்பொருட் டுற்றதுண் டன்றே?

திம்மரசு: அரசே! விளக்கி யனைத்து முரைப்பன்:
போர்த்து கேசியர் பொருபடைத் தலைவன்
ஆல்புகர்க் கென்பவன் அறிவுடைத் தூதரை
நம்பால் அனுப்பி நலம்பெற விழைந்தனன்:
கோழிக் கோட்டினிற் * கொடுமையாற் புகுத
விழைந்தன னவனே; வேண்டினன் நந்துணை.
கடல்வழி யாலவன் கலக்குங் காலை
தரைவழி நம்மைச் சமர்செயத் தூண்டினன்;
மறுமொழி சொலாதுநாம் மவுனமாய் இருந்தனம்.

அரசர்: இயைபே யன்றே? எனக்கது நினைவே.
உலகம் புகழும் உயர்குல சேகரர்
முகுந்த மாலை மொழிந்த நாவினர்,
வழிவரு மன்னவர், பழிபுரி யயலவர்
இனத்தா லழிவுற யாந்துணை புரிவது
நீதியு மன்று; நெறியுமா காதே.
பின்னர் நிகழ்ந்தன பேசுதிர் கேட்க.

திம்மரசு: கோழிக் கோடு கொள்ளப் பெருமையால்
அளவிலாச் சூழ்ச்சி ஆல்புகர்க் கவனே
கோவையைக் கவர்ந்து கொடியினை யேற்றினன்;
ஆங்குவாழ் மக்களை அறநெறி நினையான்
வதைத்தனன் வாட்டினன் மனங்கொளு மாறே.
விசய புரத்தின் வேந்தன் அடில்ஷா
இன்னது கேட்டனன் எழுந்தனன் படையொடு
கோவை வந்தனன்; கூடிய அயலவர்
வாட்சுவை யறிய வாட்டி வதைத்தனன்;

* கள்ளிக்கோட்டை; இந்நகரை மலையாள நாட்டினர் கோழிக் கோடென்பர்.

அவ்வரனை வரையும் அகற்றினன் புறத்தே.
பரங்கியர் நம்மைப் படைத்துணை வேண்டினர்.
நாமது கொடாது நன்னெறி நின்றேம்.
ஆலி அடில்ஷா அமர்க்கள வெற்றியால்
மகிழ்ந்துள நிலையில் வடக்குள நாட்டிற்
குழப்ப நிகழ்வது கூறக் கேட்டுத்
துணையென வந்த சோம்பலில் வீரன்
இரசூல்கான் தலைமையில் இராச்சியம் விட்டு
விசய புரிக்கு மீண்டனன் அவனே.
போர்த்திற மிகுந்த புரவலன் போயதும்
பரங்கியர் மறுமுறை படையெடுத் தனரே.
அப்பெரும் போரில் அவர்களை யெதிர்த்த
இனிமைக் குணமுடை யிரசூல்கான் தோற்றனன்.
கோவை பரங்கியர் கொடிக்கீழ் ஆயது.
அன்று நிகழ்ந்ததே அளவறு கொடுமை.
முசல்மான் மக்களை முறைகே டுறவே
ஆடவர் பெண்டிர்- அன்புருக் குழவியர்
என்பது கருதா தெண்ணு யிரவரை
வதைத்தனர் பாவியர் மண்மகள் கலங்கவே.
இவ்வர லாறெலாம் இந்நா டடைந்தன.

அரசர் : இப்பொழு துளநிலை யாதோ? இயம்புதிர்;
இனிச்செயத் தகுவ தியாதென வோதுதிர்.

திம்மரசு : ஆதி யப்பர் அயலவர் வாழுநா
டடைந்தன ராய்ந்துள ரறிவ ரிவற்றை.
அவரினி நிகழ்வன அடைவுற மொழியலாம்.

அரசர் : ஆதியப்ப! அறிந்தன விளம்புக!

ஆதியப்பர் : அரசர் பிரானே! ஆணையின் மொழிவேன்:
கோவை யயலவர் கொடிக்கீழ்ப் போயது
போயதே; இனிநாம் புராதன வுரிமை
பேசிப் பயனிலை; பிறவர சினரெலாம்
இந்நா ளியற்று மின்னல்கள் நம்மை
அணுகா திருக்கநாம் ஆய்ந்தியற் றுரியன
சிலவுள; முறையே செப்புவன் வணங்கி.

அரசர் : எவையவை? இயம்புக. இயலுமேல் இயற்றுவம்,

**ஆதியப்பர் :** போர்த்து கேசியர் போர்த்தொழிற் புலிகள்.
அவரைநாம் துணைவ ராக்குதல் நன்றே.
அவர்பகை நாடின் அடைகிலம் நன்மை.
கடல்வழி யெண்ணறு கலிமா வருவன.
அவரே யவற்றை யயலவர் பலர்க்கும்
விலைக்குக் கொடுப்பர்; மிகுபொருள் தேடுவர்.
பொன்னும் பொருளும் பொருந்தவே கொடுத்துநாம்
அவரிட முள்ள வச்சுவ வகைகளைப்
பெறுதல் நலமே. பிறரவை பெறுவரேல்
நம்படை வலியிலா மென்படை யாகும்.
விரைவது வேண்டுமிவ் வியன்பெரு முயற்சியில்.
அமைச்சரு மறிவர் ஆகுவ தெதுவென.

**அரசர் :** பரங்கியர் தூதர் பலமுறை வந்தனர்.
நாமு மொருமுறை நந்து தனுப்பினேம்.
இன்னும் பரிமா விசையா தென்னையோ?

**திம்மரசு :** இன்றுமோர் தூதர் எய்தி யுளரே.

**அரசர் :** ஆரவர்? அவரையீண் டழைமின், நோக்குவம்.

**திம்மரசு :** வாய்மொழி யினிய லூயிபா திரியும்
தூதரும் வருகெனச் சொல்லி விடுத்தனன்.
ஈதோ விருவரும் எய்தினர் அகத்தே.

[பாதிரியாரும் தூதரும் வந்து வணங்குகின்றனர்.]

**திம்மரசு :** வருக வருக! அருள்நெறி தெளிந்த
பெரியீர்! அவர்யார்? பேசுக இனிதே.

**பாதிரியார் :** அரசே! இவரெம் மரசின் தூதர்.
இவரையீங் கறிமுக மாக்குதல் என்பணி.
இவர்புகல் மொழிகளை யினிக்கேட் டருளுக!

**அரசர் :** ஐய! வருக! அருகினில் வந்துநும்
தலைவர் மொழிகளைத் தகவே மொழிக!
ஆல்புகர்க் கினிதே யமல னருளால்
வாழ்குவ ரென்றே மனமுற நினைவேம்.

**தூதர் :** இறையே! குணமெலாம் இயைந்து பொருந்திய
விசய நகர வேந்தர் பெரும!
எம்மவர் தலைவர் இனிதே வாழ்வர்.

நுமக்கவர் நலமே நுவன்றெமை விடுத்தார்.
தெரிய விருப்பமேற் செப்புவல் யானே.

அரசர்: அங்கொரு தூதரை யனுப்பினம் யாமே.
எம்மொடு நும்மவர் இனியநட் பாட
விருப்பம் உளரென மேதக வறிந்தனம்.
இன்றவர் மொழிவ தியாதென வியம்புதிர்.

தூதர்: மன்னவர் வணங்கும் மன்னர் மன்னரே!
குணகடல் தென்கடல் குடகடல் மூன்றையும்
அடக்கி யரசுபூண் ஆண்டகை யரசே!
எம்பெருந் தலைவர் இயம்புவ கேட்க:
'முன்னுநும் நட்பே முயன்று வேண்டினம்;
இன்றுமெம் பகைவரை யெதிர்த்து வெற்றி
புனைந்துள நாளினும் புரவலர் நுமது
நட்பையே விழைகுவம்; நாடுபல கடந்து
கடல்பல கடந்து மிடலின துதவியாற்
புதுமையிற் புகுந்த புதியேம் யாமே.
ஆயினும், நும்மிட மன்பொடு பயின்றே
எந்தம் நாடும் நுந்தம் நாடும்
நலம்பெறு நெறியே நாடுது மைய!'

அரசர்: அரபிய நாட்டிருந் தடையும் பரிகள்
அனைத்து மெமக்கே யாக்குக வெனவும்
தகுவிலை முறையுறத் தருவே மெனவும்
யாமுனம் புகன்மொழி யாதா யினதோ!

தூதர்: அதைமொழி வதற்கே யடைந்தன மரசே!
நீயிர் தருவதா நிகழ்த்திய தொகையினும்
மிகுதியா வயலுள் பகைவரே தருவதாச்
செய்தி போக்கினர். தெளிவுற விதனை
உரைக்கவே வந்தனம். உவப்பொடு கேட்க:
அவர்க்கு மெமக்கு மன்புநெறி யில்லை.
படைவலி யவர்பாற் பல்குமே யாகில்
எமக்குந் தீங்கே; நுமக்குந் தீங்கே.
கடல்வழி வரும்பரி கணக்கில வாயினும்
நெறியிடைப் பலபரி நிலைபெறு தழியும்.
ஆதலின், எஞ்சியீங் கடைவன விலையால்

மதிப்பு மிகப்பெறல் வாய்ப்பே யன்றோ?
எம்மா லியன்றன யாவையும் புரிவம்;
வரும்பரி யெல்லாம் வகுத்தனம் தருவம்;
எந்நாட் டகம்புகுந் தேற்றலும் வேண்டும்.
தகுவிலை யெமக்குத் தருதலும் வேண்டும்.

**அரசர்:** இருப தாயிரம் இயம்பினம் யாமே.
அயலார் மதித்த வளவுதான் யாதோ?
நும்மவர்க் கின்றுள நோக்கமும் யாதோ?

**தூதர்:** பிறரெவர் தமக்கும் பெறுபரி கொடாது
விசய நகர வேந்தர் தமக்கே
விற்கு முரிமை வேண்டுமே யென்னின்
பொன்மிகை கேட்டல் பொருத்தந் தானே?

**திம்மரசு:** பரிகளை வாங்கும் உரிமை யெமதே.
ஒருபரி யாயினும் உமதுநாட் டிருந்தே
அயலவர் நாட்டக மடைவதா யறியின்
அன்றே பகையெழும்; அமரும் பிறக்கும்:
முன்னர்யா முரைத்த சொன்னமே மிகுதி.
இன்னு மதிக மெமையே கேட்டல்
தகுதி யென்னநும் தலைவர் நினைவரோ?
அடில்ஷா குடிகளை அமரகத் தின்றி
வதைபுரி கொடுமைகள் மறந்திலேம் யாமே.
அயலக மிருந்துநீ ரடைந்தீ ரிங்கே.
நுழையு நாட்டிடை விழைவொடு வாழும்
மக்களை வதைத்தல் வன்மையோ புன்மையோ?
நும்மொடு வணிகம்யாம் செம்மையிற் புரிய
எண்ணுதல் நும்நலம் எனவே யெண்ணுக!
எம்மைப் பகைப்போர் யாரென வறிவேம்.
அவர்க்குநீர் துணைவரென் றுரகவு மாட்டீர்.
நுமையவர் நம்பவும் நோக்கம் கொள்ளார்.
ஆதலின், விரைவில் அசுவ மதிப்பைத்
தகுந்த வழியாற் சாற்றுக நீரே.

**னூயி:** அமைச்சர் தலைவரே! ஆயந்தனர் கூறுதல்
நன்றும்; ஏனெனில், இன்றீங் கடைந்த
அயலவர் நாளை அகத்தவ ராகலாம்.

இன்று பகைவராய் இருப்போர் நாளையே
நண்பரு மாகலாம். நம்செய லலவிவை.

**அரசர்:** அருள்நெறிப் பெரியீர்! அவையெலா முண்மையே
ஆயினும், நும்மவர் அளவறி யாது
பொன்னினைக் கேட்டல் பொருத்த மாகுமோ?
தகுந்த விலையாம் தருவதில் தடையிலை.

**தூதர்:** விலைப்படு பொருட்கு விலைமதிப் பமைவது
வாங்குவோர் விருப்பம் வளர்வதா லன்றோ?
விலையே றுவதும் விலையிறங் குவதும்
பொருளின் செயலல; புகுந்தவை பெறுவோர்
மனத்தின் செயலே; மன்னர் பிரானீர்!
ஆதலின், இந்நாட் டரசர் பலர்க்கும்
அரிதா யமைந்த பரிமா விலைப்பொருள்
நுமக்குள் விருப்பின் அமைப்பின் படியே
ஏறலாம் இறங்கலாம். எம்செயல் அன்றே.

**திம்மரசு:** வணிகர் குழுவல மன்னர் அவைக்களம்!
ஈங்குநீர் தக்கதே யியம்புதல் வேண்டும்.
உம்பெருந் தலைவர் உரைத்த தென்னையோ?

**தூதர்:** எம்பெருந் தலைவர், 'யாந்தரும் பரிகள்
அனைத்தையும் எந்நா டடைந்துநீர் பெறுக!
பிறரெவர் கேட்பினும் பெறாரவை,' எனவே
மொழிந்தனர்; 'தருபொருள் முப்ப தாயிரம்
பொன்னெனக் கொள்ளுக. புறத்தார் புகாவணம்
இதுநுமக் கியையுமேல் இணங்குக,' என்றனர்.
இன்றெனில் விடையெனக் கீதல் நன்றே.

**ஞாயி:** உண்மையு மதுவே; நன்மையு மதுவே.
நாடு வாழப் பீடுசால் குதிரை
வேண்டுவ தன்றோ வேந்தர் பெரும!
தகும்விடை யிவர்க்குத் தந்தரு ளுகவே.

**அரசர்:** அப்பா கருத்தினை யறிய விரும்புவல்.

**திம்மரசு:** அங்ஙனே யாகுகென் றறைவது நன்றே.

**அரசர்:** ஆதி யப்பரே!

**ஆதியப்பர்:** அங்ஙனே முடிக்கலாம்.

**அரசர் :** தண்ட நாயக சதாசிவ!

**சதாசிவ :**

அடியேன்
இதுவே தகுமென் றெண்ணுவன். இன்னும்
முடியா திருப்பின், நெடியபல் படைகளைத்
திரட்டிய பகைஞர்கள் செழித்து நெருங்குவர்.
போர்ப்படை தனக்குப் போர்ப்பரி யுயிராம்.
ஆதலி னரசே! அங்ஙனே முடிக்கலாம்.

**அரசர் :** அயலக மிருந்தீங் கடைந்து பெரும்போர்
இயற்றி வென்றநா டிருக்குநுந் தலைவர்க்
கெமதன் புளதென வியம்புக; அவரால்
வேண்டிய வுதவிகள் விழைவொடு கொள்வேம்;
யாமு மவர்க்குள வியற்றுதல் புரிவேம்.
பரிகளை யெமக்கே யுரிமையால் விற்க
முப்ப தாயிரம் முழுப்பொன் ஸிசைந்தனம்.
இம்மொழி யவரிடம் இயம்புக நீரே.
பொன்புனை கோடி யன்பொடு தருதும்;
இதனை யேற்றே இனிதுபோய் வருதிர்
பாதிரிப் பெரியீர்! பரமன தருளால்
நீயிர் வருபணி நிறைவே றியதே.
தெய்வப் பணியெனச் செய்யும் பணிக்குநீர்
ஏவையெவை கருதினும் எம்மிடம் கொளலாம்.
இன்றுநுந் திருப்பணிக் கிதனை யேற்க!

[இருவருக்கும் சிறப்புச் செய்கின்றார்.]

**லூயி :** வாழிய மன்னர் மன்னரே! வாழிய!
எமக்கு நுமக்கும் இடையுறு நட்பே
வளருக! எம்மவர் வந்தவ ராயினும்
வாழ்பவர் தம்மொடு மனமுற விணங்குக!
தேவன் செயலால் யாவரும் நலமே
பெறுக வெனயாம் பிரார்த்தனை செய்வமே.

**திம்மரசு :** நினைத்த வண்ணம் நிறைவுறப் புரிந்த
தூதர் தலைவீர்! தூயநன் முனிவீர்!
இனியெம் மரசர் எண்டிசா முகத்தும்
வெற்றியே பூணும் விழைவுள ராதலால்

அதற்கு வேண்டிய அமலனு ரருளினை
அவரே பெறுகென அமலனை நுந்தம்
ஆலயந் தன்னினு மன்பொடு வேண்டுதிர்.
'எங்கும் இருப்பவன் இறைவனே,' என்னும்
உண்மையை நாடெலாம் திண்மையி னறிய
நும்முடை நாவளம் செம்மையி னுதவுக!
உலகெலா நலமுற ஒருபே ரரசன்
நந்தம் நாட்டினில் நன்கனம் வாழ்வது
சிறப்பா மன்றோ? தெளிந்தநன் ஞானியே!

அரசர்: இனியாம் அகத்தே யேகுதும்.

திம்மரசு: நன்றே!

[சபை கலைகின்றது.]

## ஐந்தாம் களம்

இடம்: சிவ சமுத்திரப் பாசறை
காலம்: இரவு
பாத்திரங்கள்: அரசர், திம்மரசு, கொண்டமரசையா, ஆதியப்பர், கங்கராயர், வீரப்ப உடையார், கோவிந்தர், அல்லசானி பெத்தன்ன, திருமலா தேவி, தோழியர் முதலியவர்.

நிலைமண்டில ஆசிரியப்பா

அரசர்: (தமக்குள்) கன்னிப் போர் இது கடும்போர் அன்றல்.
அரசரைப் போர்செய அமைத்தவர் யாரோ?
அரசருள் ஒருவரோ டொருவர் பகைக்க
மாந்தரெத் துணையர் மடிந்து மாளுவர்!
வெற்றி முடிவு விரைவினில் வரலாம்.
இந்நாட் டரசர் ஏனிது செய்தார்?
அமர்க்கு வருகென அழைத்தலேன் துணிந்தார்?
வீரம் மிகுந்தவர் மேன்மைக் குணம்பல
பொருந்திய சீலர் புண்ணிய சீலர்
எனவே பலரீங் கிசைத்தலும் உளதே.

[ஆதியப்பர் வருகின்றார்.]

**ஆதியப்பர் :** வெற்றி வெற்றி வேந்தர் பிரானே!
பகைவர் தோற்றனர், படுபா ழாயினர்;
இரண்டுநா ளளவில் எம்வலி யறிந்தனர்;
கங்க ராயர் கடும்பெரும் போர்பல
புரிந்துநம் படைஞரைப் பொன்றச் செய்தனர்.
மாலை வேளையில் வன்மையைக் கேட்டார்
ஒருவரே வாளால் ஒருநூறு படைஞரைக்
கொன்றனர், வீறுடன் நின்றனர் அரசே!

**அரசர் :** ஆதி யப்ப! அடைந்தேம் வெற்றி!
மாலை யின்னது வாங்கி யணிக!
பெரும்போர் விளைவன பின்னே யுள்ளன.
நாங்களம் புகுந்த நாள்நன் றுளே.
காலாழ் களரிடை வேலாழ் முகத்த
களிறும் நரியினைக் காணக் கலங்குமென்
றறிவுடைப் பெரியோர் அருளிய தறிவேம்.
கங்க ராயர் காவல் நலமமை
தம்முடை நாட்டிடைத் தாமே யிருந்தார்.
அயலக மிருந்தியா மடைந்தன மீங்கே.
வெற்றி விளைத்தது வீரர்நும் முதவியே.
அமைச்ச ரெங்குளர் அறிதியோ ஐய!

**ஆதியப்பர் :** எம்மு ளவரே எவரையு மூக்கி
முன்முன் னடந்தனர்; முறையே படைகளை
நடத்தினர் முதிய நான்மறை நாவினர்;
பகைப்படை யிடைந்தது பார்த்தவ ரவரே;
கங்க ராயராற் கலங்கிய காலை
நம்படைக் கூக்கம் நல்கியோர் அவரே.

[கொண்டமரசையா வருகின்றார்.]

**அரசர் :** வருக! வருக! வாள்வலி வீரரே!
படைப்பெருந் தலைமை பரித்த பெரியீர்!
திம்மர சியாண்டுளர்? தெரியுமோ நுமக்கே?

**கொண்ட :** அரசர் தலைவீர்! அடைந்தனம் வெற்றி!
மன்னவர் மன்னரை மதியா தெதிர்த்த
கங்க ராயர் கவிழ்ந்து விழுந்தார்.
அமர்க்களத் திருந்தார் அமைச்சர் பெருமான்.
விரைவினி லவரும் வருகுவ ரீங்கே.

**அரசர்:** போர்க்களம் நேற்றுப் புகுந்தோம் யாமே.
இன்றெமைப் பாசறை யிருக்கச் சொற்றூர்;
அமைச்சர் கருத்தினை யறியேம் எளிதில்.
நேருற வெதிர்ந்து போரிடை யாமக்
கங்க ராயரைக் கண்டு மகிழ்ந்தேம்.
அவரென் னுயினர்? அறிதிரோ நீரே?

**கொண்ட:** கங்க ராயர் கவிழ்ந்தது கவிழ்ந்ததே.
இனியவர் நிமிருதல் என்றும் இல்லை.
மாலை வேளையில் மங்கிய வொளியில்
அவரெம் விழிப்படா தகன்றனர் போலும்!
இறந்தன ரென்னயான் எண்ண வில்லை.

**ஆதியப்பர்:** வாடா மனத்தவர் ஓடார் ஒளியார்.
அமர்க்கள நடுவே அவர்நின் றதனை
யானே கண்டேன். எங்ஙனம் மறைவர்?

**கொண்ட:** அங்கவர் நின்றதை அந்தணர் தலைவர்
அமைச்சர் பெருமான் அப்பாஜி அறிவர்.
இன்னும் அவரீங் கெய்தா திருத்தலால்
அவர்முடி வறிந்தே படைதலுஞ் செய்யலாம்.

[சில படைஞர் வருகின்றனர்.]

**படைஞன் 1:** அரசர்க் கரசே! அடைந்தனம் வெற்றி!
சிவசமுத் திரத்துத் தேயமும் பிறவும்
ஆண்ட மன்னவர் மாண்டொழிந் தனரே.
உமட்டூர் அரசர் ஒழிந்தனர் இன்றே.
கண்கொண் டவருடல் கவிழ்ந்தது கண்டேன்.
வீரம் மிக்கவர் வீர சுவர்க்கமே
தேடிக் கொண்டனர், சென்றூர் மகிழ்வொடே.

**அரசர்:** உண்மை இதுவோ? உனக்கியார் உரைத்தார்?

**படைஞன் 2:** யானே நேரிருந் திதனையென் கண்ணுற்
கண்டேன்; ஆதலாற் கழறவே வந்தேன்.

**படைஞன் 3:** முற்றிலு முண்மை! முடிந்தார் அவரே.

**அரசர்:** அப்பாஜி யாங்குளர்? அறிதியோ நீயே?

**படைஞன் 3:** ஒருவரை யுடன்கொடு வருகுவர் அவரே.
உடன்வரு பவருக் குடலெலாம் செந்நீர்.

இளமையும் எழிலும் இனிது விளங்குமவ்
வீரரும் வணங்கி விரைவிலே வருகிறார்.

அரசர்: அன்னவர் யாவர்? அறிதிரோ நீரே?

படைஞர்: போர்க்களத் தருமைப் போர்பல புரிந்த
ஒருவரே யெனயாம் உணருவம்; வேறொன்
றவரைப் பற்றி யறிகிலம் யாமே.

[திம்மரசும் மற்றொருவரும் வருகின்றனர்.]

அரசர்: வருக வருக! மறைதெளி பெரியீர்!
அன்பி னுருவாம் அப்பாஜி வருக!
வன்புகொள் பகைவரை வாட்டிய வீரருள்
தலைவரே வருக! சாற்றுக நிகழ்வன!
அமருக விப்பொன் னாதனத் தைய!

திம்மரசு: அரசே! வெற்றி யடைந்தனம்; உண்மை.
இவர்யார் எனயான் இயம்புதல் வேண்டும்:
புகழுடல் பொருந்திப் புண்ணிய வுலகம்
புகுந்த கங்கர் புதல்வர் இவரே.
போரினில் இவரும் பொருவில ரறிவேன்.
பகையினை மறந்திப் பண்புள விளைஞரை
இந்நா டாள்கென வேவுதல் நலமே.

[வீரப்ப உடையார் வணங்குகின்றார்.]

அரசர்: எழுகவீ ரப்ப! எழுகவீ ரப்ப!
இருக்க வாதனத் தினியாம் பகைவினை
மறந்தேம்; நண்பு வளரவே முயலுவேம்.
இப்போர் நிகழ்ந்த தியார்குறை யாயினும்
நட்பிணை லினியாம் நலம்படைத் திடுவேம்.

திம்மரசு: தந்தையார் வீரர்; தனயரும் வீரர்.
விழுப்புண் விளங்கு மெய்களத் துருள
அப்பெரு வீரர் அமருல கடைந்தனர்.
உடலெலாஞ் செந்நீர் ஒழுகுமிவ் வீரர்
இனியிந் நாட்டினை இனிதி னாள்க!

[அல்லசானி பெத்தன்னா வருகின்றார்.]

அ. பெத்தன்னா: அரசர் முடிகளா லழகுறுங் கழலாய்!
விசய நகர வேந்தர் பெரும!
தேரக னும்பித் திருநக ரதனொடு

சிவசமுத் திரமும் சீரங்க பட்டினம்
வினுகொண்ட நாடும் விருப்பி னுண்ட
வேந்தனி யாரென விளம்புவல் கேட்க:
வெற்றி நகரென வித்தை நகரென
உலகம் புகழு மொருபெரு நகரை
வித்தியா ரணியர் மேதகு திருவருள்
வாய்ப்பினுல் அமைத்த மன்னவர் இருவர்
அரியர புக்கர் அரும்பெருங் குலமாம்
சங்கம மரபினிற் றருமநன் குணரும்
மல்லி கார்ச்சுன மன்னர் பெருமான்
ஆற்றலின் குறைவா லரசினை யிழக்க
அவர்வழி வந்தோ ரரசின துரிமையைச்
சாளுவ மரபினர் தாங்கொள விட்டே
தேரக னும்பித் திருநக ரடைந்தனர்.
அவ்வழி வருமிவ் வரசன் முறைமையால்
வினுகொண்ட நாடும் விழைந்தனன் கவர்ந்தான்.
அதுவே நம்பகைக் கடிப்படை யாயது.
பெருங்குலப் பிறப்பின் பெருமை யெலாமுள
தந்தையைப் போன்றே தனயனும் ஈங்கு
வணங்குதல் விரும்பா மனமுள னேனும்
போரினில் உயிரைப் போக்கவே விழைந்தும்
அமைச்சர் பெருமான் அன்பினுல் வயப்பட்
டடைந்தனன். ஆதலி னவற்குத் தகுவ
தெதுவோ வதனை யியற்றுதல் நலமே.

திம்மரசு : யானு மிதனை யியம்ப நினைத்தேன்.
புலவரே! புகன்றது பொருத்த மிகவே.
வினுகொண்ட நகரம் விசய நகர
வேந்தருக் குரிய வியனக ராயது.
வேறினி யாதே விளம்புதல் வேண்டும்?

அரசர் : வீரப்ப பூபதி வேந்தென வாழ்க!
வினுகொண்ட நகரினை விடவிணங் குதியோ?
தேரக னும்பியாந் திருநக ரதுவும்
எமதாட் சியின்கீ ழிருப்பது நலமாம்.
மற்றவை யெலாநீ வைத்துக் கொள்ளலாம்.

[கோவிந்தர் வருகிறுர்.]

**கோவிந்தர் :** அரசர் பெரும! அமைதி ஆயது.
இருபடை வீரரும் இனிப்போர் புரியார்.
நாடு நலம்பெற நாடுது மினியே.

**அரசர் :** ஆரிய வீரரே! அந்தணர் மணியே!
போர்த்தொழில் புரிந்து புகழினை நாட்டினீர்.
நாட்டினை யாளும் நலநுமக் குள்ளதென்
றப்பாஜி மொழிய வறிந்துளே மாதலால்
நாட்டின் தலைமை நல்க விரும்புவம்.

**கோவிந்தர் :** அரசர் விருப்பே அமைவ தெமக்கே.

**திம்மரசு :** வீரப்பர் கருத்து விளம்ப வில்லையே!

**வீரப்பர் :** நாட்டினை யிழந்து வீட்டினை யிழந்து
தந்தையை யிழந்து தலைமையை யிழந்து
வாழு நெறியினை மனத்தறி யாது
மயங்குவே னெனையொரு மன்னனென் றுரைத்த
அரசர் பெருமான் அவாவிய வாறே
எதனையு மியற்றலாம். இணங்குவன் யானே.

**அரசர் :** அந்தணர் பெரும! அரசரென் றிவருக்
கிங்கே முடிசூட் டியற்றுக வினிதே.
உமட்டூர் அரசின துரிமை யிவரதே.
சிவசமுத் திரநா டிவ்வரே யாளுக!
தேரக ணம்பித் திருநக ரதனை
இயல்புநன் கறிந்தநும் மிளையோ ராளுக!
இவ்விரு தலைவரும் எமக்குள நலமெலாம்
புரிவோ ராகுக பரிவொடு மினிதே.

**திம்மரசு :** தலைமை தகுமெனத் தந்தனை யரசே!
பெற்றவர் மனமுறப் பெட்பொடு நன்றியை
உரைப்ப ரவற்றினை யுவப்புட னேற்பரே.

[திம்மரசு கோவிந்தருக்கும், வீரப்பருக்கும்
தேரகணம்பிநகர், சிவசமுத்திர நகரம்
ஆளும் அதிகாரம் கொடுக்கின்றார்.]

**திம்மரசு :** ஐய! நீர் இருவிரும் அன்போ டிணங்கி
நாட்டுக் குரியன நலங்கொள முயலுதிர்.

**கோவிந்தர் :** அரசர்க் கரசரே! அமைச்சர் தலைவீர்!
ஏவிய தியற்றலே என்கட னாகும்.

போர்த்தொழில் விருப்பம் பொருந்திய வெனையித்
தேரக ஞம்பித் திருநகர்த் தலைமை
பூணுக வெனவே புகன்ற தறிந்தனன்;
இயன்றள விப்பொறுப் பேற்கத் துணிவனே.

திம்மரசு: அரசர் பணியினை யந்தணர் தாங்குதல்
தொன்று தொட்டதே: துரோணருங் கிருபரும்
இந்நெறி காட்டினர் எனநன் குணருதி.
உயிரினைக் கொடுத்தும் உயரிய மன்னர்
பணியினைப் பரிக்கப் பாடு படுதலே
தகுவதா மெனுநெறி தம்பிநீ யறிதி.

கோவிந்தர்: அறிகுவன் நன்றே.

அரசர்: அறிந்தாங் கியற்றுக!

வீரப்பர்: யானிங் கியம்புவ தியாதென வறிகிலேன்.
எங்குல முன்னோர் ஏற்றமும் புகழும்
நன்கன மறியும் நாவலர் பெருமான்
தெளிவுற வீங்கவை தெரிவித் தருளினர்.

அரசர்: மைந்த! நீயினி மனத்தளர் வொழிக!
என்னினு மெனக்குநீ யினியனென் றறிவன்.
நுந்தை யமர்க்களம் நுழைந்ததும் திறத்தால்
வீரர் பலரினை வெட்டிக் குவித்ததும்
உத்தம வீரர்க் குரியவிண் புகுந்ததும்
யானறி குவலென வியம்புதல் வேண்டுமோ?

வீரப்பர்: என்னினு மினிய னெனக்கென வியம்பிய
அருள்மொழிக் கேற்ப வமைந்தகைம் மாறென
இயையா தாயினும் இதனையான் மொழிவன்:
எந்தையார் நுங்குணம் முந்தை யறிவரேல்
இதுபுகன் றிருப்பர்; இயற்றியு மிருப்பர்.
அவரிலாக் குறையால் அடியேன் பகலுவன்:
எனக்கொரு தங்கை இருக்கின் றனள். அவள்
கலைநல மனைத்தும் கவின்ற கலைமகள்;
திருநல மனைத்துஞ் சிறந்த திருமகள்;
அமர்க்களம் புகுந்துபோர் ஆற்றநன் குணரும்
குமரியு மாகுவள்; குணநலஞ் சிறந்தாள்.
அவளையெம் மரசர் அருளினு லேற்றெம்

குடியினை யாள்கெனக் கூறுவன். இனியாம்
அன்பினு லிணங்க வமைந்த முறையிது.

அரசர்: மணவினை யென்பது மனநன் கிணங்கிய
காதலர் கனிவிற் காண்பதே யன்ருே?
யானு மறியேன்; எனையவள் அறியாள்.
எங்ஙன மணவினை எமக்கு எியலலாம்?

திம்மரசு: வில்லை வளைக்குமுன் வில்வல விராமன்
சானகி குணமெலாம் தானறி குவனே?
எடுத்த தனுவினை யிறுத்த வளவிலே
மாலையைச் சூட்டிய மங்கையு மவனைக்
காதலி னளவு கண்டுணர்ந் தனளோ?
அரசர் மணங்களுக் கமைதியாங் கதுவே.
பெருங்குலப் பிறப்பும் பெண்டிருக் குரிய
நலங்களும் பொருந்திய நங்கையை மணக்க
அரசர் உளத்திலேன் ஐயம் பிறக்கும்?

அரசர்: என்னுளம் விரும்பா தெங்ஙனம் துணிவேன்?

திம்மரசு: அன்பினு லொருவர் அளிப்பதை யேற்பது
குணநல மறிந்தோர் கொள்கையா மரசே!
சிவசமுத் திரத்துச் செல்வமாய் வளர்ந்த
மங்கையை மணத்தல் மங்கள மாகும்.

வீரப்பர்: சம்மதந் தானே?

அரசர்: சம்மதம் சம்மதம்!
இன்றே மணவினை யியற்றுதல் வேண்டுமோ,
சின்னுள் பொறுத்து நன்னு ளொன்றிலே
இயற்ற லாகுமோ?

திம்மரசு: இதுவே நன்னுள்.
இதுநல் லோரை. இதுநல் லிலக்கினம்
திருமகள் கொழுநன் திருவடி நினைவுகூர்
நல்லோர் தமக்கு நன்னு ளாகா
நாட்களு முளவோ நராதிபர் சிகாமணி!

வீரப்பர்: இளையவள் தன்னை யினியான் அழைப்பன்.
தோழியர் குழுவொடு சூழ்வுற வருவளே.

[வீரப்பர் போகின்ருர்.]

அ. பெத்தன்னு: நன்றே நிகழ்வது நன்றே முடிவது.
கன்னிப் போரிற் கன்னியே கிடைத்தாள்.

ஒவ்வொரு ஞாட்பினு மொவ்வொரு கன்னி
வாய்ப்பளே யாயினிம் மன்னர் பெருமான்
தயரத வேந்து தனையே பொருவுவன்.

அரசர்: அறுப தாயிரம் அரசியர் இருப்பின்
அரசினை யாளுவ தரசரா லியலுமோ?

திம்மரசு: மன்னரே! இனியான் வழங்குவ லொருமொழி:
இளமையில் உளமுற வினிதுகா தலித்த
மங்கையை யினிநீர் மணம்புரிந் திடலாம்.
மூத்தபே ரரசியாம் முறைமைக் குரியாள்
பெருங்குலப் பிறப்புள பெண்ணர சாகும்.

அரசர்: அன்புள பெரியீர்! ஆவியி னினிய
நாகலா தேவியை நாளை மணஞ்செய
அனுமதி தருதிரேல், அன்பினொ டுங்கியான்
இக்குல மகளினை யின்றே மணப்பன்.

திம்மரசு: அங்ஙனே செய்க! அதுவும் நலமே!

[வீரப்பவுடையார் உரிய சிறப்புக்களோடு
தங்கையை அழைத்து வருகின்றார்.]

வீரப்பர்: அரசே! நுமக்கியல் அரசி யடைந்தனள்.
அன்பினு லேற்றனிர் அருள்புரிந் திடுதிர்.

திம்மரசு: மகளே வருக! வருக வீங்கு!
விசய நகர வேந்தர் குடிப்புகும்
திருமகள் நீயே; செயமகள் நீயே;
நின்னால் எந்தம் நிருபர் பெருங்குலம்
நலம்பல சிறந்து நன்று வாழ்வுறும்.
தந்தையை நினைந்துநின் சிந்தை தளரேல்.
எனைநின் றந்தையென் றெண்ணுக குழந்தாய்!
யானே நினையெம் மேந்தலுக் களிப்பன்.
பல்லாண் டிருந்துநீர் பண்புற வாழ்க!

[அரசி கர்த்தை அரசர் கரத்தில் வைக்கின்றார்.]

வீரப்பர்: அரசினிற் சிறந்தவிவ் வரசினைக் காக்கும்
அமைச்சரிற் சிறந்த அந்தணர் பெரும!
தேவியர் பலர்பலர் சேரலா மேனும்
இராசமா தேவியர் இனத்துளென் றங்கையே
தலைமை பூணுதல் தகுமென வுணருதிர்.

**அரசர் :** தலைமை யிவட்கே தருகுவன்; உண்மை.
இனிவரு மனைவி யிளையவ ளாகுக!

**திம்மரசு :** தேவி சம்மதம் தெரிதல் நலமே.
திருமலை யரசி! பொருவிலா நலஞ்சால்
குடிப்பெருஞ் செல்வமே! குணப்பெரும் பிழம்பே!
இனிவரு மரசியர் எத்துணை யோரே
ஆயினு மவரொடு மன்புற வாழுதி!

**அரசி :** அன்புறு தந்தையார் ஆணையீ தன்றோ!
[தோழியரோடு உள்ளே போகின்ருள்.]

**அரசர் :** மைத்துன முறைமை வாய்க்கப் பெற்ற
வீரப்ப! இனியாம் விமலன் வளரும்
சீரங்க பட்டினம் செல்ல விரும்புதும்.
ஆங்குநம் தேவியோ டடைந்து கடவுளை
வாழ்த்தி வணங்கி வருதல் வேண்டும்.
அந்நக ரருகுள அரணெலா நன்றே
அமைந்துள வாவென வாயவும் வேண்டும்.

**வீரப்பர் :** அரசர் பிரானே! அங்ஙனே செயலாம்.

**திம்மரசு :** அரவணைப் பள்ளிகொள் அமலனைக் காவிரி
அரங்கத் தமர்ந்த ஆதியைத் திருமகள்
தலைவனை முறையுறத் தரிசித் தேத்த
உள்ளத் தெழுந்த வுணர்ச்சியா னன்றோ
விசய நகரினில் விருபாக்க ராலயத்
திருகிலே யரங்க னாலயம் அமைத்தது?
பண்டுநம் முன்னையோர் பண்புற வமைத்த
சிற்ப நலமெலாஞ் சிறந்தவிவ் வாலயம்
காணத் தகுவதே கருதத் தகுவதே!

**வீரப்பர் :** சீரங்க பட்டினம் செல்லத் தகுந்த
நெறியினை யொழுங்குற முறைமுறை யமைத்துப்
பணிசெயத் தகுந்தோர் பலரையும் ஏவி
வேண்டுவ வனைத்தும் விரைவினில் நிகழ
இயன்றன புரிவல்யான் எம்பெரு வேந்தே!

**அரசர் :** இறைவனை வணங்கி மறைமுறை பழிச்சிப்
பூசனை புரிந்து போதும்இக் கேரி,

ஆங்கிருந் தினியா மடையு மூர்களை
வகுப்பது கொண்டமர் வகித்துள பணியே.

கொண்ட: வேந்தர் பிரானே! விரைவினி லினியாம்
விசய நகரம் மேவுதல் வேண்டும்.
மற்றொரு திருமணம் மங்கள முறையே
நிகழுதல் வேண்டும். நிகழ்த்திய பிறகியாம்
கரிகளுக் கரசெனப் பெருமிதம் பூண்டுள
கயபதி வேந்தனைக் கலிங்க நாட்டிடை
எதிர்க்கவும் வெல்லவும் ஏகுதல் வேண்டும்.

அரசர்: என்மனம் விழைவுறும் பொன்மண விழவினை
யான்மற வேனெனல் இனிதுநீ ரறிதிர்.

திம்மரசு: சிரங்க பட்டினம் செல்லுது மினியே.
அவன்விழிக் கருணையால் அமைவன யாவுமே.

## ஆறும் களம்

இடம்: சிரங்க பட்டினம்

காலம்: காலை.

பாத்திரங்கள்: அரசர், திம்மரசு, வீரப்பர், கோவிந்தர், கொண்டமரசையா, ஆலய அதிகாரி, கங்காதரர், தேவமரசையா, திருமலா தேவி, சின்ன தேவி, சேவகர், தோழியர்.

[வீரப்பர் அரணைக் காட்டி வருகின்றார். அரசரும் அமைச்சரும் பார்த்து வருகின்றனர்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

வீரப்பர்: அரணி னமைதி அழகிதே யன்றோ?
அகழியு முறையுற அமைந்துள் ளதுவே.
இதுவே யரணுள் ஏகுறும் வாயில்.
ஈங்குநங் காவலர் இரவிலும் பகலிலும
இருப்ப துளதே எம்பெரு வேந்தே!

அரசர்: ஒருவர் இருவர் உள்ளுற நுழையலாம்.
அகத்திருப் பவரை அறியார் புறத்தார்.
புறத்தார் அகத்தார்க் குறத்தெரி குவரே.
படைக்கல மீங்குப் படைஞர்பால் உள்ளது.
அன்பவீ ரப்ப! நன்கிதை நோக்குக!

அயலவர் அணுகற் கஞ்சும் வண்ணம்
இவ்வரண் போற்றுதல் இனிநின் பொறுப்பே.

**வீரப்பர் :** அரசர் ஆணை அடியேன் முடிமேல்.

**திம்மரசு :** இனிநாம் ஆலயம் ஏகுதும், வருக!
அரசே! ஒருமொழி அறிந்தனன் இன்று:
'நாகாம் பிகைதன் நாதனை நாடி
ஈங்கு வந்தனள், இறைதிரு வாலயத்
துள்ளாள்,' எனவே உணர்த்துவர் சிலரே.

**அரசர் :** ஈங்கு வருவதென் றெண்ண மிருப்பின்
முன்னரே நம்படைப் பின்னர்வந் திருக்கலாம்.
இன்றிவண் வந்துள தென்ன கருத்தோ?

**திம்மரசு :** முதன்மணம் நிகழ்ந்தது; முறையுற இனிநும்
இரண்டா மணமும் ஈங்கே நிகழலாம்.
யானே தூதரை யிளந்தே வியர்பால்
அனுப்பி யவரையிங் கழைத்தே னைய!

**அரசர் :** அங்ஙனம் நிகழ்ந்ததோ? அதுவும் நன்றே!
ஆலயம் புகுந்தே யமலனை வணங்குதும்.
அவனருள் துணையால் ஆவன ஆகுக!
வடக்கு நாட்டினர் மதத்தால் விஞ்சினர்.
விரைவினி லவரையாம் வெல்லுதல் வேண்டும்.

[ஆலயத்துள் வருகின்றனர். மற்றவர் எல்லோரும் அங்கு இருக்கின்றனர். அர்ச்சகர் பூசை செய்கின்றார்.]

**ஆலய அதிகாரி :** அரசருள் பெரியீர்! ஆந்திரப் புலவீர்!
அரங்க னடியிணைக் கன்புசால் புரவலீர்!
வருக வருக! பெருகுக நலமெலாம்!

**அரசர் :** அந்தணப் பெரியீர்! அமலனுக் கெனவே
அமைத்த வறங்கள் அமைதியின் வழாது
நிகழ்ந்து வருமென நினைப்பேன் யானே.

**திம்மரசு :** ஒழுங்குற நிகழுவ துணர்ந்தனன் யானே.

**அரசர் :** நன்றே யினிநம் நாரண மூர்த்திக்
காயிர நாம வருச்சனை தொடங்கலாம்.

**அர்ச்சகர் .** பழம்பெரும் புகழ்பூண் பாரத தேயத்
தருமம் புரக்குந் தலைவர் வாழிய!

[அர்ச்சனை செய்கின்றார்.]

M. A. (தமிழ்) M. LITT., DIP. IN LING.

திம்மரசு : அரசியார் வந்துளர். அவர்வர லாமோ?

அரசர் : இறைவ னாலயத் தெவருமோர் நிகரே.
அரண்மனை யகத்தே யந்தப் புரமெலாம்;
ஈங்கு வருவதற் கியாதுந் தடையிலை.

[குறிப்பறிந்து சேவகன் ஒருவன் போகின்றான்.
தோழியர் சூழத் திருமலா தேவி வருகின்றாள்.]

வீரப்பர் : அரசர் பிரானே! அரசியார் வந்தனர்.

அரசர் : இவ்வுழி நின்றே யிறைவனை வணங்கலாம்.

[எல்லாரும் கைகூப்பி வணங்குகின்றனர்.]

திம்மரசு : ஒளிகள் யாவும் உன்னொளிக் கிணையிலை.
இருணிற மெனநினை யியம்புவ துளதே.
உறங்குதி யெனயாம் உணருவ மிறையே!
உண்மையி னுருவமே! உருவிலா வொன்றே!
பெண்மையும் ஆண்மையும் பிறங்க விளங்கிய
அருளின துறையுளே! ஆற்றலி னகமே!
சிறைக்களம் புகுந்தும் சிறைத்துய ரறியா
மக்க ளினத்தினர் மயக்கந் தெளிக்கவே
புகுந்தனை சிறையிடைப் பொருந்திய பணிக்கே.
நின்னை நிகர்ப்பவர் நின்னல தியாருளர்?
அரியர னயனென அருமறை பாடிய
அன்ன வுருவினை அமலமா தவத்தால்
முனிவரர் தெளியும் தனிமைத் தெய்வமே!
அருள்கவெம் மரசினில் அறமெலாம் வளரவே.

அரசர் : நாமம் உரைப்பவர் நாவமு தாறும்!
நினைப்பவர் நெஞ்சின் நிலையெவ ரறிவர்!
நின்பணி பூண்பவர்க் கென்பணி பெரிதோ?
அரியன வெவற்றுளு மரியை நீயே.
எளியன வெவற்றுளு மெளியையு நீயே.
சேய்மையில் விளங்கும் தேவனு நீயே.
அண்மையி லடையு மருள்வெள நீயே.
எங்ஙன நினையா மேத்துது மைய!
நாவா யிரமிலேம் நாமம் ஓத;
கண்ணா யிரமிலேம் கனிந்துருக் காண;
செவியா யிரமிலேம் திருப்புகழ் கேட்க;
மனமா யிரமிலேம் வழுத்தி நினையவே.

அரசி : அமலவெம் பெரும! அடியேம் நினதருள்
உலகெலாம் உணர வுணர்த்த வருளுதி!

[அர்ச்சகர் கருப்பூரம் காட்டுகின்றார்.]

அர்ச்சகர் : ஞாயிறும் அங்கே நல்லொளி செயாது.
சந்திர னுடுவிவை தாமொளி விளங்கா.
மின்னுமிம் மின்னலும் விரியொளி தாரா.
அக்கினி தேவன் அணுகவும் அஞ்சுமே.

[நாகலாதேவி தோழிகளுடன் வருகின்றாள்.]

நாக : எவையுமாய் விளங்கு மெம்பெரு மானே!
நினைத்தன வெமக்கு நிறைவேற் றுவதில்
நின்னினும் வலாரெவர்? நீயே புகலுதி.

திம்மரசு : பெண்ணருங் கலமே! பேணி நினைந்தன
இறைவ னருளா லெய்தப் பெறுதியே.

[அர்ச்சகர் பிரசாதம் கொடுக்கின்றார்.]

அரசர் : உலகெலா முடைய வுவமையில் தலைவற்
கியாமெது புரிகுதும்? எம்பணி யேற்குந்
திருவுள மவற்கு மருவுற வேண்டுமே.

திம்மரசு : வேந்தரே! நீயிர் விரும்பிய வாறெலாம்
இறைவர் திருப்பணி யியற்றலா மீங்கே.
நாகலா தேவி நணுகி யிருத்தலால்
திருமால் திருமுன் திருமண நிகழலாம்.

[நாகலாதேவி அரசரை வணங்குகின்றாள்.]

அரசர் : வருக வருக! வருகபெண் ணரசே!
யாமே நந்நகர் எய்தி நின்னை
மணந்து கொள்ளவே மனங்கொண் டிருந்தேம்.
இங்குநீ யெய்திய தினிதா மன்றே.

நாக : அன்பி னுருவமே! அரசருக் கரசே!
என்சிறு குடிலிடை யெனக்கன் றருளிய
வாய்மொழி பலிக்க வருமோ நாளென
இந்நாள் வரையான் எதிர்பார்த் திருந்தேன்;
அப்பாஜி யெனையீங் கழைப்பித் தாரென
அறிந்தனன் வந்தேன்; அறியேன் ஒன்றுமே.

அரசர்: பெண்மணி! யானொரு பெண்ணருங் கலத்தை
மணந்துளேன் காணாய் மால்திரு வருளால்.
[திருமலா தேவி முன்னே வருகின்றாள்.]

நாக: அரசியீர்! வருக! அடியாள் எனையோர்
பாங்கி யெனநும் பணியினுக் கேற்க!
அரசர் பிரான்பணி யடியேன் புரியச்
சிறிதே யுரிமை தேவியீ ரருளுக!

திருமலா: யாது கூறினை எழில்வளர் அணங்கே!
தோழியர் பாங்கியர் ஏழையர் பலரே.
அரசர் பிரான்மனத் தாலயங் கொளுநீ
பாங்கி யாகவோ பணிசெய வேண்டும்?
ஈங்குநீ வருக இறைவர் திருமுன்.
யானே நினையெம் மினிய தலைவருக்
குரிமை மணவினைக் குவப்பொடு தருவன்.
ஒருநொடி நோக்கினும் உயர்குலப் பிறப்பினை
அருங்குண வமைதியை அறிதர லெளிதே.

நாக: அன்னை யிலேன்யான்; அன்புறு தந்தையை
இழந்தேன் யானே; எவரையு மறியாப்
புதுமை நாட்டினிற் புகுந்தனன் வாழ்ந்தேன்.
உம்மை மணந்தநம் முத்தம மன்னவர்
என்னையு மரசிய ரினத்துட் சேர்க்க
இணங்குவ ராயின் என்னினு மின்பப்
பெருங்கடல் குளித்தார் பிறரெவ ருளரே?

அரசர்: அரசி யிணங்கின் அரசரும் இணங்குவர்.
சங்கம குலத்துத் தவக்கொழுந் தாகிய
தேவிநீ யிவளையுந் தேவியென் றேற்க
மனங்கொண் டனையோ? வழங்குக வின்னே!

திருமலா: யானே வழங்குவல் இனியவென் றங்கையை.
எம்மையாண் டருளி யினிது வாழுக!
எம்முயிர் எம்மன் பெம்மர செம்மிறை
இருபெருந் தேவியர் இலங்கவீற் றிருக்கும்
தலைவனே யிம்மணந் தழைக்க வருளுவன்.

திம்மரசு: அரசே! என்மன மானந்த மடைந்தது.
நாகலா தேவியின் நட்பினைப் பிரித்த

416789
894.8112
KAN

பாவ வினையினைப் பலநாள் சுமந்தேன் ;
இன்றே குறையகன் றிருப்பே னினிதே.

**அரசர் :** அப்ப! நீர் செய்த வனைத்து நன்மையே.
பிரித்த நீரே, 'பொருத்த மறிந்து
மாளிகை யமைத்து மணநிறை வேற்றி
வாழவைப் பேன்,' என வாக்களித் திரே.
அதனையான் மறத்தல் ஆகுமோ ஐய!
இன்று முதல்யான் என்னுயி ரனைய
நாகாம் பிகையை நாகலா தேவியைச்
சின்ன தேவியாத் தெரிந்து கொண்டனன்.

**திருமலா :** இருவரும் உரிமையா லொருமனங் கொண்டு
தலைவர் திருப்பணி தாங்கி வாழ்குவம் ;
அவர்செயு நல்லற மனைத்து நலம்பெற
இயன்ற வளவியாம் முயன்றுபணி செய்வம்.

**அரசர் :** நாடு நலம்பெற நாரண தேவனுக்
கமைந்த திருப்பணி யாற்றுவம் யாமே.
நவமணி பதித்த நலமலி திருமுடி
நவமணி மாலை நாவலம் பொன்னால்
இயன்றபூ ணாரம் எழில்மலி பவள
மாலிகை வயிரமே வனையும் பூணூல்
இவையெலாம் அரங்கன் இனிதினேற் றருள்க!
காலைப் பூசனை கவினொடு நடைபெற
இரண்டு கிராமம் எய்திய விளைவெலாம்
காவிரிக் கரையிற் கடவுளேற் றருள்க!
தேவியர் பெயர்பெறு சிற்றூர் இரண்டும்
தேவ தானமாய்த் தேவற் காகுக!

['அர்ச்சகர் வந்து அரசர்க்கும் அமைச்சருக்கும் பரியட்டம் சாத்துகின்றார். தேவியர்க்குப் பிரசாதம் தருகின்றார்.]

**திம்மரசு :** அரசே! அறவோர்க் கறஞ்செயல் நன்று.
கல்விக் கடலினிற் களிப்புற நீந்திய
ஒருவரீங் குளரென வுணர்ந்தேன். அவருக்
குவப்புட னறஞ்செயல் உரிய தாகும்.

**அரசர் :** யாங்குள ரவர்யார்? ஈங்கவர் வருக!

[கங்காதரர் முன்னே வருகின்றார்.]

இம்மரசு : இவரே கலைகளுக் கிருப்பிட மாயவர் ;
சிவகங் கைப்பதி செய்தவ வடிவினர் ;
ஆரியம் கருநடம் ஆந்திரம் தமிழெனும்
நான்மொழி பயின்ற நாவலர் சிகாமணி ;
கங்கா தரரெனு மங்களப் பெயரினர் ;
ஆயிர மாணவர்க் கருங்கலை பயிற்றும்
நல்லறம் பூண்டவர் ; நாமகள் சேவகர் ;
எவ்வகைச் சிறப்பும் ஏற்கத் தக்கவர்.

அரசர் : ஆயின் இவர்க்கியா மமைவது செய்வேம்.
திருநா ரணபுரத் திருமால் திருத்தளி
காணுங் கருத்துளம் பூணுவ துளதே.
அவன்றிரு வருளால் அரசுபூண் டிங்குள
மன்னவர் நமக்கு வணங்கி யளித்த
பெரிய சாதகப் பெயருள ஊரும்
அதனைச் சூழ வமைந்தநான் கூரும்
சின்ன தேவியின் மன்னிய பெயராற்
சிற்புறு சின்ன தேவி புரமென
வழங்கியிவ் வந்தணர் வழிவழி யாளும்
உரிமை பெறுகென வுவப்பொடு வழங்குவம்.

சி. தேவி : யான்புரி புண்ணிய மிதுவென எண்ணுவன்.

[வீரப்பர் வந்து வணங்குகின்றார்.]

வீரப்பர் : குணங்கொடு மகிழும் கோமான் ! அடியேன்
தந்தையார் ஆண்ட தழைவுறு நாட்டுள்
வினுகொண் டாவினை மேவுவோர் யாரே ?

அரசர் : மறந்திலே னதனை மன்னவன் குமர !
தகுதி யுடையார் தாமது தாங்கலாம்.
நினக்கது செய்மை நிலத்தி லுள்ளது.

[கொண்டமரசையாவும் தேவமரசையாவும்
எதிர் வந்து வணங்குகின்றனர்.]

கொண்ட : வேந்தர் பிரானே ! விசய நகருக்
கினிநாம் புறப்பட வெண்ணுதல் வேண்டும்.

அரசர் : புறப்படு முன்புநும் புதல்வர் தமக்கியாம்
பதவியொன் றளிக்கும் பழநினை வுடையேம்.

**தேவம :** அரசர் பிரானே! அடியே னுந்தம்
புணிபூண் டிருப்பது பதவியிற் பெரிது.
இன்னும் வேறெனக் கியாது வருவது?

**அரசர் :** வினுகொண்ட நாட்டில் வேற்றவர் நுழையா
வண்ணம் காக்கும் வலிமைநீ ருடையீர்.
ஆதலின் ஆங்குப் போதல் நன்றே.

**கங்கா :** பொருவறு புகழ்பூண் புரவலர் சிகாமணி!
அரச ரினத்திடை யகன்பெரு நாட்டின்
தலைமை தாங்கிய தலைவர் மிகச்சிலர்;
அமர்க்கள வென்றியோர் அவரினுஞ் சிலரே;
தெள்ளியோர் சிறப்புத் தெளிதரும் புலமை
தமக்கே யமைந்த தகைமையோர் மிகச்சிலர்;
இன்னவர்க் கிப்பொரு ளீவது தகுமென
உணர்ந்தன ரீயு முத்தமர் பலரிலர்;
இத்தகைக் குணத்தோ ரெண்ணில ரிருப்பின்
இன்றள வவர்பெயர் இருந்திடல் வேண்டும்.
புலமையும் அரசும் பொருந்திய போசனும்
திருவொடு கலைபொலி ஸ்ரீஹர்ஷ வேந்தும்
உக்கிர வழுதியும் உயர்நெடுஞ் செழியனும்
பெறுபுகழ் புனைபவர் பிறரெவ ருளரே?
அருமறைப் பொருளினை யாய்ந்து விளக்கிய
ஆசில் புலவரை ஆரிய மணியினைக்
குருவர ரெனக்கொளும் குலப்பெருங் குரிசில்
எண்ணில வாகிய இயலிசை நாடகம்
பன்மொழி களினும் பாற்பட வியற்றிப்
பொன்மழை பெற்றுநின் புகழே புனைய
வாழிய வூழி மரபுநல னுறவே!

**அரசர் :** கலைப்பெருங் கடலே! கங்கா தரரே!
எம்பெரு நகர்க்கினி யாமே குவதால்
மகிசுர புரியினும் மற்றுள நகருளும்
ஆரியம் கன்னடம் ஆந்திரம் வளர்க்கும்
தவப்பணி நீயிரே தாங்குதல் வேண்டும்.
கலைமகள் திருக்கழல் கவினுற வாயிரம்
மலர்களைச் சொரிந்து வணங்கும் பணியினும்

சிறந்ததிங் கிதுவெனத் தெளிதிர் நீரே.
மேல்கோ டெனவொரு வியன்பெயர் பொருந்திய
திருநா ரணபுரச் செல்வப் பிள்ளையைக்
கலைக்கோட் டுயர்முனி நிலைபெ றுறவே
தவம்புரி தலமெனச் சான்றவர் புகல்வதும்
எங்குடி யாண்ட வியல்புசால் குருவரர்
வித்தியா ரணியர் வீற்றிருந் ததுவுமாம்
சிருங்க கிரிவரு தேவிசா ரதையை
மகீசுர புரியிடை மகீதர சிகரத்
தமர்ந்துதன் னடிதொழ மரசினை யாண்டருள்
தனிப்பெருந் தலைமைச் சாமுண்டி தேவியை
அமுதினை நாடிய அமரர்கள் வாழ்வுற
நஞ்சினை யுண்டருள் நாயக தேவனை
ஈண்டுள மக்கள் வேண்டினர் போற்றியெங்
குலநலம் பெறுகெனக் குறித்தனர் வாழத்
தகுநெறி நீவிரே புகலுதல் புரிவீர்.
நாட்டினை யாளுவான் நரபதி யாயினும்
அவனலம் பெறுவதும் அமைபுகழ் புனைவதும்
குடிகள் உளமுறு கொள்கையா னன்றோ?
இவையீங் கும்பணி.

கங்கா : ஏற்றன னரசே!
இயன்ற வளவினில் முயன்று புரிகுவல்.

[தேவமரசையா முன் வருகின்றார்.]

அரசர் : தேவ மரசே! செப்புவ துளதோ?

தேவம : ஒருமொழி புகல வருகுவன் மன்ன!
புரவுப் பணிநீ பூண்கென வென்பால்
அருளினால் விடுத்த வகன்பெரு நாட்டிடை
மக்களுக் கொருகுறை வளர்வதா வறிந்தேன்.

அரசர் : யாதலை தின்னே யியம்புதி; ஒழிப்பும்.

தேவம : சாளுவ மரபினர் தாமர சாள்கையில்
முன்னைய மன்னர் முறைகளை மறந்து
தேவ தாயமாச் செய்யும் நிலங்களில்
பிரம தாயமாப் பிரிவுறு நிலங்களில்
வருவாய் தேடுறு மனத்தாற் சிலசில

வரிகளை விதித்தனர். மற்றவை கொடுக்கும்
குடிகள் தருமம் கெடுமென மிகவும்
கூக்குர விடுவது கூறக் கேட்டனன்.
தகுவ தியற்றுதல் தகுமே தலைவரே!

**அரசர்:** நாடுக ளெவற்றினும் நடைமுறை யறியாக்
குறையினால் நேர்ந்தவிக் கொடுமைக ளொழிக!
பிரம தாயமும் தேவ தாயமும்
எவ்வகை வரியுமற் றினிது வளருக!
ஈதுநம் மாணை யெனநா டறிக!

**திம்மரசு:** தக்கதே செய்தீர். தான தருமம்
வளர்வதா லன்றோ மன்னவர் மரபு
வளருவ தாகும்? மன்னவர் பெரும!
இனியா மேகுவம் இறையருள் நினைந்தே.



# இரண்டாம் அங்கம்

## முதற்களம்

இடம் : உதயகிரிப் போர்க்களப் பாசறை
காலம் : பிற்பகல்
பாத்திரங்கள் : அரசர், திம்மரசு, கொண்டமரசையா, பெம்மசானி இராமலிங்கர், அல்லசானி பெத்தன்ன, திருமலை ராவுத்த ராயர்.

[அரசர் பாசறைக்குள் தனித்திருக்கின்றார். மெய்காவலர் வெளியே நிற்கின்றார். உள்ளே அரசர் இருக்கையில் அமர்ந்து ஒரு சாசனத்தைப் படித்துப் பார்க்கின்றார்; எழுந்து நடக்கின்றார்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

அரசர் : (தமக்குள்)

உதய கிரியிஃ துன்னத கிரியே!
அரணே வரைமே லமுகுற வமைந்துள
தருகினில் வருவார் அணுகுத லரிதே.
சிறுவழி யொன்றே செலவுக் குதவும்.
ஒருவன் இருப்பின் உரிமையி னதனைத்
தன்புய வலியாற் றனே தாங்கலாம்.
புறத்தார் புகுதல் பொருந்துவ தன்றே.
எத்துணைப் படைஞரோ டிட்டனன் முற்றுகை!
முறையுற வின்னும் முடிந்தில ததுவே.
அகத்தவர் படையோ மிகச்சுருங் கியதே.
ஆயினும், வெற்றி யடைவரின் றளவும்
ஒன்றரை யாண்டிவ் வுதய கிரியரு
கிருந்தாற் பிறநா டேகுத லெவ்வணம்!
விரைவினில் வெற்றி வருமென வூக்கம்
முதுபெரும் புலவர் மூதறி வாளர்
அமைச்சர் பெருமான் அகத்தே யுளதாம்.
எத்துணை மதிகள் இங்ஙனம் கழிவது!
நரசிங்க மன்னர் நல்லுள மிணைந்து

விடுத்த சாசனம் வீணுகுவதோ!
இதோவஃ துள்ள தென்னகூ றுவது!

[சாசனத்தை எடுத்துப் பார்க்கின்ருர்.]

விசய நகர வேந்தர் மரபினில்
என்பின் வருவோர் எவரே யாயினும்.
இன்னது புரிக; இஃதவர் கடனும்.
உதய கிரியரண் ஓங்கரண் ராய்ச்சூர்
முட்கல் அரணிவை மூன்றும் மீட்க!
எங்குலத் துரிமையென் றிருந்தன விவையே.
அயலவர் இவற்றினை யடைந்தனர். யானும்
இயன்ற வளவு முயன்றும் பயனில்லை.
உள்ளங் கலங்க ஊருமித் துயரே.
பண்டுநங் குடியினர் பாலனம் புரிந்தவிம்
மூன்றரண் மீட்கும் தோன்ற லெவனே,
பிறர்க்கொரு தீங்கும் உறற்குள் நினையாக்
குடிகளை வருத்திக் கொடுமைக ளிழைத்த
பகைப்புல வேந்தர் மிகைத்திற னடக்கி
வெற்றிக் கொடியினை வெற்றித் தூணத்
தேற்றினன் மகிழும் ஏந்த லெவனே,
வணங்கிய பகைவரை வாழ்விடை நிறுத்தி
வணங்கா முடியரை வணக்கின னிம்ரும்
கோமக னெவனே, குரிசி லெவனே,
அவனே யென்மன மாரயா னுரைக்கும்
ஆசி மொழிகளுக் கருகதை யுடையான்.
வாழிய வவனே! வாழியிந் நாடே!
வாழிய சங்கமர் வழிவரு குலமே!

[சாசனத்தைக் கீழே வைக்கின்ருர்.]

போர்த்திற மிகுந்த புலியினை யிரவலர்
கார்த்திற மறிவுறக் கனிந்தருள் வள்ளலை
அரசர் திருப்பணிக் காவிகை யளித்த
தரும வீரரைக் கரும வீரரை
எந்தையை யமைச்சென வேற்றவிம் மன்னவர்
ஞால மெலாம்புகழ் நரசிங்க தேவர்
மனமுற மறுகி வரையுமிச் சாசனம்

எமதுநன் னகரகத் திண்டிய வீரரும்
மண்டலத் தலைவரும் தண்டநா யகரும்
தெளிவுற வறியத் தேர்ந்துண ரமைச்சர்
அன்றொரு நாளிதன் நன்றமை கருத்தெலாம்
விளக்கி யுரைத்தது துளக்கற வறிந்தேன்.
உதய கிரியினை யுரிமையி னடையுமா
றெடுத்துள முற்றுகை யின்று நிகழ்வது.
வெற்றி யெவர்க்கென விளம்புத லெளிதோ!
இருதிறப் படையுளு மெண்ணிலர் மடிந்தனர்
களிறுகள் பலபல பிளிறின வீழ்ந்தன;
மலையர ணுறுதி வாய்ப்பது துணிந்தே
அகத்தவர் தளரா தமரா டுவரே.
புறத்தவர் உள்ளம் போர்ப்புயல் கவ்விய
தியாதினி விளையினு மெவரெதிர் வரினும்
முன்செலும் அடியினைப் பின்செல வையேன்.
வாழ்வும் தாழ்வும் வருமா வருக!
வெற்றி தருவாள் வெற்றித் திருமகள்.
இன்றவள் என்றோள் நன்றுற நின்றனள்.
அவள்துணை யுளவரை யையமேன்?

[திம்மரசு வந்து நிற்கின்றார்.]

**திம்மரசு :** வெற்றி
வெற்றி வெற்றி விளைவது வெற்றியே!
வெற்றி நகராள் வேந்தர் குடிக்கு
வெற்றி யன்றி வேறும் விளையுமோ?
அரசே! வெற்றியாம் அடைவ துறுதியே.
கலிங்கம் கவிழும்; கயபதி வணங்குவன்;
இன்றே வெற்றியின் இன்மொழி எழுமே.

**அரசர் :** அப்பா வாய்மொழி யருமறை யென்பேன்.
வேதம் பொய்ப்பின் வித்தகர் பிரான்மொழி
பொய்படு மென்பன். புண்ணிய மூர்த்தி
வெற்றி யென்று விளம்புதல் கேட்டேன்.
கயபதி மன்னனைக் காண்கில மீங்கு.
மறைந்தனன் யாண்டோ வுறைந்தன னரணுள்;
சேரிட மறிந்து சேருவ தறியான்;

பகைப்படை காணலும் பதைபதைத் தோடினன்.
இங்கிவற் குதவியென் றிருப்பா ரயலவர்.
அவர்தம் முதவியா லகங்கரித் தனனே.
நந்நாட் டகத்தே யந்நா ளயலவர்
இயற்றிய தீங்குகள் எத்துணை! எத்துணை!
கொடுமைகள் எத்துணை! கொள்ளைகள் எத்துணை!
அவையெலா மிவன்றுணை யமைந்தே நிகழ்ந்தன.
அறஞ்சிறி தறியார் மறம்புரி பாவியர்,
எதிர்ப்பதற் கியலா வேழையர் தம்மை
வாளால் வேலால் வாட்டிய தீயவர்,
நம்படை வன்மை நன்கனம் உணரத்
தருணம் இதுவே. தருமமு நமக்கிது.
யாம்பிறர் கொடுமைகள் எங்ஙனம் எதிர்ப்பேம்
என்னு முண்மையை இவன்வாய் மொழியால்
அனைவரு முணரவே அமர்க்களத் தாடுவேம்;
தெய்வந் துணையெனத் தேறிமுற் செல்வமே.

[அல்லசானி பெத்தன்ன வருகின்றார்.]

**திம்மரசு:** வருக வருக மாபெரும் புலவீர்!
யாது செய்தி? ஓதுதிர் இன்னே!

**அரசர்:** பாடும் புலவர் படைகள் தாங்கினர்
போர்க்களம் புகுந்த புதுமை யென்னே!

**அ. பெத்த:** பாட்டையும் பாடுவேன்; நாட்டையும் ஆள்வேன்.
கலைகள் இனத்திலே களிப்புடன் புகுந்தார்
போர்க்கலை தெளிதல் புதுமையோ அரசே!

**அரசர்:** ஐய! மண்டலத் ததிபர்நீ ராயினும்
நும்மூர் செல்லீர் எம்மூ ரகத்தே
என்று மிருப்பீர்; எங்ஙனம் ஆள்வீர்?

**அ. பெத்த:** மாபெரு நாட்டினை மன்னர் பிரானீர்
விசய நகரில் வீற்றிருந் தாங்கே
எங்ஙன மாளுவீர்? அங்ஙனம் யானும்
அருகி லிருந்தே ஆள்வனென் னாட்டினை.

**அரசர்:** ஆளு முறைமை அழகிதே அழகிதே!
அமர்க்களம் புகுவதும் அங்ஙனந் தானோ?

அ. பெத்த : அந்தணக் குடியில் வந்தன னுயினும்,
சாளுவ திம்மர சாளுமிந் நாளிடை
யானும் போர்க்களம் இனிது புகுவனே.

திம்மரசு : இளமையிற் போர்த்தொழில் யான்பயின் றறியேன்;
ஈங்குள வீரர்பால் இயன்றள வுணர்ந்தேன்.

அ. பெத்த : காவியக் கடலிடை ஓவியம் சிற்பமா
விளங்குமெய்த் தலைவர்கள் விளைத்த போர்களைப்
பயின்றனன் போர்த்தொழில் பயின்றேன் யானும்.

அரசர் : முதுமொழிப் புலவீர்! மொழிந்த துண்மை.
யாரோ வருவர்! என்னென வினவுதும்.

[பெம்மசானி இராமலிங்கர் வருகின்றார்.]

பெ. இராம : அரசர் பிரானே! அடைவேம் வெற்றி.

அரசர் : அடைவே மென்றீர்; அடைந்தே மில்லையே!

பெ. இராம : நம்படை புகுந்தது நகர்க்கு ளரசே!
கொண்ட மரசே கொண்டு நடத்துவர்.
உதய கிரியினை உமதடிப் படுத்தப்
பெரும்புக ழவர்தாம் பெறுகென வந்தேன்.

அரசர் : அகநகர் வாழும் அறநெறி மக்கள்
மனங்கவல் செயல்கள் வளரா வண்ணம்
வீரரும் பிறரும் போர்செயல் நன்றே.
வென்றிப் பெருமிதம் வேண்டு மாயினும்,
நல்லவர் கலங்கும் அல்லலா காதே.

[ஒரு தூதன் ஓடிவருகின்றான்.]

தூதன் : வாழிய வெங்கள் மன்னர் பிரானே!

திம்மரசு : நிகழ்ந்த தியாதோ? நிகழ்த்துதி விரைவில்!

தூதன் : உதய கிரிநமக் குரிமை யாயது.
நகர்க்குட் புகுந்து நடந்தன படைகள்.
எதிர்த்தவர் யாவரும் இறைஞ்சினர் அரசே!
அரணினைக் காத்த அரச ருறவினர்
வாளினை வீழ்த்து வணங்குதல் கண்டேன்.

அரசர் : முழங்குக சங்கம்! தழங்குக முரசம்!
அரியமூன் றரணுள் உரியவர் போன்று
புகுந்தவர் போகப் போரினை யியற்றுதல்

எங்கட னுகும். இஃதொன் ருயது.
எஞ்சிய விரண்டரண் இனிமுயன் றடைதும்.
திம்மரசு : அடைய முயன்ருல் அவையுநம் வயமாம்.
மலையரண் இதுநம் வயப்பட லரிதென
நினைந்தே சிறுபடை நிறுத்தினன் கயபதி.
அகப்படை நடத்திய ஆண்டகை யாரென
யானுநன் கறிவேன். எனையவர் அறிவார்.
இவ்வரை சிறியதே யெள்ளினு மின்றள
வெவரு மேறிய தில்லை. பகைவர்
ஏறவும் வழிகள் இல்லை பலவே.
நம்படை யின்று நடந்தது விரைந்தியாம்
முதற்கண் முயன்ற முயற்சியா லன்ருே?
அரசர் : ஒருவரே நுழையும் ஒருசிறு வாயிலும்
சுற்றிலும் பாறையும் சூழ்ந்தவிவ் வரணைப்
பற்றுதல் அரிதெனப் பலர்முன் சொற்றதால்
மலைகளைப் பிளந்து வழிவா யகற்றிக்
காட்டகத் திருந்து கான்யா றழைத்து
வேண்டிய நலமெலாம் விளைத்தே மன்ருே?
இன்ன முயற்சியால் ஏகின பலநாள்.
ஆதலி னன்ருே ஆண்டொன் றரையாய்
யாமிப் போர்க்களத் திருந்தே மைய!
திம்மரசு : செயத்தகு மனைத்துஞ் செய்தா லன்ருே
வெற்றி விழைபவர் வெற்றி புனையலாம்?
முழக்கம் எழுவது முறையே கேட்பம்.
[அகத்திலிருந்து வெற்றி முழக்கம் கேட்கின்றது. படைஞர் பலர் வருகின்றனர். அவர்கள் பின்னே கொண்டமரசையாவும் திருமலை ராவுத்த ராயரும் வருகின்றனர்.]
திம்மரசு : வெற்றி விளைத்த வீரரே வருக!
விழுப்புண் உரனிடை மிடலுறத் தாங்கிய
கொண்ட மரசே! குன்றங் கொண்டு
மன்னரை வணக்கிய வாள்கரங் கொண்டீர்.
வருக வருக மன்னவ ரருகே!
கொண்ட : போரினை யாமோ புரிந்தே மைய!
இத்துணை நாட்களா யிவ்வரண் பற்றும்

நெறியெலா நினைந்து நேர்படப் படைஞரை
நடத்திய புகழெலம் நராதிபர்க் குரியதே.
இழந்ததென் றெண்ணிய விவ்வரண் மீட்டேம்.
இனியெவை நினையினும் எளிதி னியற்றுவேம்.

**அரசர்:** அருகில் நிற்பவர் ஆரே யைய!
ஆண்டினில் முதியார் அறிவிலு முதியார்.
உடலெலாம் விழுப்புண் ஒளிர்தர நிற்பரே!

**கொண்ட:** அரசே! இவ்வர ணுண்டவர் இவரே;
போரின் மிகுந்தவர்; புகழ்க்கே யுரியார்:
படையெலா மடிவது பார்த்தே வணங்கினர்;
வீரருள் மிக்கவர்; வேந்தருக் குறவினர்
என்னவும் அறிந்தேன். இயைவது புரியலாம்.

**அரசர்:** (அவரைப் பார்த்து)
ஐய! நீர் பெரியீர். அமருக வீங்கே.
நன்குநீர் போர்வினை நடாத்திய தறிவேம்,
வென்றன மாயினும் விளையேம் கொடுமை.
நகர மக்களும் நடுங்கத் தக்க
தீவினை யொன்று மேவலம் யாமே.
கயபதி மன்னன் கரந்தனன் போலும்!
அவனைக் காணவே யவாவி வந்தேம்.
நும்மை நிறுத்தினன் எம்மை யெதிர்க்கவே.

**திருமலை:** அமர்க்களம் புகுந்த அரசர் இருவருள்
ஒருவர் வேறலும் ஒருவர் தோற்றலும்
இன்று புதுமையோ? என்று முளவே.
இருவரும் வெற்றி யெய்த வியலுமோ?
உதய கிரியினில் உறையு மக்களை
அன்பினு லின்புற வாண்டனன் கயபதி.
ஆணை யவனதே; ஆட்சியிங் கெமதே.
எமக்கவன் மருகன் எனநீ ரறிதிரோ?
எம்மா லியன்றன வியற்றினம் யாமே.
தோல்வி யெம்முளம் சுட்டதே யாயினும்,
விசய நகரவர் விசயமே பெறுநெறி
ஆக்கிய வமைச்சரை நோக்குதல் கருதியே
உரிமையை யிழந்திங் குற்றனம் யாமே.

அரசர்: உரிமையை யிழந்ததற் குளங்கரை கின்றீர்.
இன்றுநும் முரிமை யெம்மக மாயினும்
கயபதி பெரும்பகை கழிந்ததன் பின்னர்
எல்லாம் நலமாய் இயலுமென் றிசைப்பம்.
இவரெம் மமைச்சர்; இவரைநீ ரறிவீர்.
உயர்குணம் புகுந்துறை யுறையு ளிவரே.
அரசியற் கலையினுக் காகர மிவரே.
அமர்த்தொழில் வளம்பெறு மாலய மிவரே.
புலமைக் கலைபுகும் நிலயமு மிவரே.
எந்தையி னினியா ரெமக்கீங் கிவரே.

திருமலை: அமைச்சர் பெரும! அரசருக் கமைந்த
கவச மாயினீர்; கருதின முடித்தீர்;
கயபதி யரசைக் காணுங் காலை
மாந்தர் பலர்பலர் மடியா வண்ணம்
வேண்டுவ புரிகென வேண்டுவ னுமையே.

திம்மரசு: ஆவத்து மதியா ராவுத்த ராயரே!
உண்மைநன் கறிவேன்; உமதுபோ ரறிந்தேன்.
பெண்ணர செம்மொடு பெரும்போ ரியற்றிய
எண்ணிய தாக வியம்பினர் சிலரே.
இவ்வர ணகத்தே செவ்விய வமர்த்தொழில்
அறிந்தபெண் ணரசி யாரே யைய!
அத்தகைப் பெண்ணினை யரசரும் வணங்குவர்;
தக்க நிலையினில் தகவே நிறுத்துவர்.

திருமலை: அமைச்சர் பெரும! நீ ரறியா தனவிலை.
ஆண்டினின் முதியே மைய யாமே.
இளமை வலிமை யெழிலெலாம் பொருந்திய
மனைவி யொருத்தி வாய்த்தன ளெமக்கே.
விசய நகர வேந்தர்தங் குடியிற்
புகுமர சியரெலாம் போர்த்தொழில் பயின்ற
புதுமையை யறிந்தவப் பூவையெம் மிடமே
போர்த்தொழில் பயின்றனள்; போர்ப்படை தாங்கினள்;
ஆடவ ருடையணிந் தமர்க்களம் புகுந்தனள்;
கணக்கறு மறவரைக் கடிந்தனள் கொன்றனள்.

பெண்ணென வறியாப் பெரும்படைத் தலைவர்தம்
வாட்படை பாய்ந்து மாய்ந்தன ளவளே.

அரசர் : ஏங்ஙனம் பொறுத்திர் இப்பெருந் துயரை!
மனவலி சிறந்தீர்! வாள்வலி யுடையீர்!
வீரப் பெண்மணி போரிற் புண்பட
மாய்ந்த விடத்தினை மக்க ளறியவே
அங்கொரு கோவி லமைத்திடல் வேண்டும்.

கொண்ட : பெண்ணென வறியேன் பேதையேன் கொன்றேன்!
இனியாங் கியல்வன யாவு மியற்றுவேன்.

அரசர் : குன்றங் கொண்ட கொண்ட மரசே!
இனியிவ் வரணகத் தியற்ற வுரியன
யாவுநும் பொறுப்பே. இந்நாட் டுரிமை
நுமக்கே யளித்தேம்.

திம்மரசு : எமக்கும் சம்மதம்.

அரசர் : யாமினி வடக்கே யேகுதல் வேண்டும்.
விசய புரியினில் மேவுமன் னவனம்
வலிமை யறியான், மதங்கொண் டுள்ளான்.
கோல கொண்டக் கோமகன் அவனொடு
கூடின னென்றே கூறக் கேட்டேம்.
இவர்தமை யடக்குதற் கிதுவே சமயம்.
கயபதி நாட்டையும் கடந்திட வேண்டும்.

திம்மரசு : வேங்கட மலையினை வேந்தர்நீர் வலங்கொள
எண்ண முளதென வியம்பிய துளதே.
விசய நகர்க்கும் விரைவினிற் சென்று
மீளுதல் நலமென விளம்புவல் யானே.

அரசர் : மறந்தேன் மறந்தேன்! மாவா முரத்தினன்
திருவடி பணியத் திருமலை யேகுதும்.
ஆங்கு நின்றுநம் மரசு மடைவேம்.
திருவேங் கடற்குச் செயத்தகு வழிபா
டனைத்து மியற்றி யதன்பி னமர்க்களம்
புகுதலே நன்று புகழ்புனைந் திடவே.
உதய கிரியினை யுவந்துமுன் காத்த
வீரர் தலைவரை மேதகு சிறப்பொடு
நந்நக ரகத்து நாட்டி வைப்பேம்.

கொண்ட : போர்க்களம் புகுந்து புகழ்புனை தோள்வர்
மன்னவ ராயினே மண்ணவர் மதிப்பர்.
சின்னு ணகரிடைச் சென்றபின் மறுவலும்
வடநாட் டகத்து வருதல் வேண்டுவல்.
என்னல் இயன்றன இயற்றவு முள்ளேன்.

அரசர் : அங்ஙனே யாகுக! அமைதியு மதுவே.

## இரண்டாம் களம்

இடம் : கொண்ட வீட்டுக் கஜபதி அரண்மனையில் மகா மண்டபம்.

காலம் : முற்பகல்

பாத்திரங்கள் : பிரதாப ருத்திர கஜபதி மன்னர், வெங்கோஜி, தாதோஜி, கேசவ பாத்திரர், வீரபத்திரன், நரகரி பாத்திரர், பாலசந்திர மகாபாத்திரர், மல்லுகான், உத்தண்ட கான், ஒற்றர்கள்.

[கஜபதி மன்னர் அரியணையில் அமர்ந்திருக்கின்ருர். அமைச்சரும், தண்ட நாயகரும் சூழ இருக்கின்றனர். அரச குமரன் வீரபத்திரன் அருகில் இருக்கின்ருன்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

கஜபதி : அன்புடை மைந்த! அறிவுசா லமைச்சீர்!
நன்குள மாய்ந்து நாட்டி னலத்தினுக்
கேதுதகு மதனை யியம்புவீ ரின்னே.
'மகாநதி பாயும் வளநா டுடையேம்;
கடக நகர்நமைக் காக்கப் போதும்,'
என்ன நினைப்பதற் கிதுநா ளன்று.
கிருட்டிண வேணியைக் கிட்டிய நாடுகள்
அனைத்துமவ் வாந்திர னடிப்படுத் தினனும்.
விசய புரியினும் விரைவொடு புகுந்தனன்.
பலப்பல கொடுமைகள் விளைத்தன னென்ப.
ஓரிய ராந்திரர்க் குட்பட வாழ்வது
சிறுமையோ பெருமையோ சிந்தனை செய்ம்மின்.
பொறுத்தன மிருப்பது பொருத்த மன்று.
வேதண்ட கோட்டை வேந்தரு நம்மவர்.

கோல கொண்டக் கொற்றவர் நம்துணை.
அமுத நகரத் தரசரு நம்மவர்.
நால்வர் மன்னவர் நாமொரு சேர
எதிர்த்துநின் முந்திர னேற்ற மனைத்தும்
ஒடுக்குவே மென்ன உளமுறத் துணிந்தேம்.
இப்பொழு தியற்றுவ தியாதென வியம்புதிர்.

கேசவ : போரெனப் புடைக்கும் பொருதோட் படைஞர்
எண்ணிறந் துள்ளோ ரெம்மக மிருக்கப்
பகைத்திற நினைந்தியாம் திகைத்தலும் வேண்டுமோ!

வீரபத் : எந்தையா ரேவிய தியற்றவு ளேம்யாம்.
நேற்றிர வொருபுது நிகழ்ச்சி கேட்டனன் :
நமக்குரித் தாகிய நல்லரண் ஒன்று
விசய நகர வேந்தர்க் காயதாம்
உதய கிரியென் றுரைப்பக் கேட்டேன்.

கஜபதி : உதய கிரியர ணுழிந்தது கேட்டேம்.
விரைவினி லதனையா மீட்பது துணிவேம்.
வடக்கே யவனினி வாரா வண்ணம்
தடுக்க வேண்டுவ வடுத்து முயலுவம்.

பாலசந் : அரசர் பிரானே! அயலவர் துணைநமக்
கிருந்தும்நம் படைஞர் எதிர்ந்துபோ ரியற்றியும்
வெற்றியை யவர்கொள விட்டனம் யாமே.
இனிவரும் போர்களில் யாமே வெல்லற்
குரியன வனைத்தும் உஞற்றுவம் நினைந்தே.

[வெங்கோஜியும் தாதோஜியும் வருகின்றனர்.]

வீரபத் : வருகவெங் கோஜி! வருகதா தோஜீ!
காரியம் கனிந்த கனியா, காயா?

வெங்கோ : அரச குமர! அடியேன் புகுஞ்செயல்
கனியா காது காயென நிற்குமோ?

கஜபதி : மன்னவர் மூவரும் சொன்னவை கூறுக!

தாதோ : அவர்தம நினைவும் நமர்மனக் கருத்தும்
ஒத்த வெனவே யொருமொழி யுரைப்பன்.
பெரும்படை நடத்திப் பொரும்படை வீரர்
இருவரைத் துணையென வீங்கனுப் பினரவர்.
அமர்க்களம் புகுங்கா லவர்துணை யுளதே.

கஜபதி : போர்நிகழ் காலம் புகுந்தது கண்டீர்.
பகைவர்நம் நாட்டிடம் பாய்ந்தனர் ஏறுவர்.
அவரைத் தாக்குதற் காய்தல் வேண்டும்.

வீரபத் : தந்தையீர் ! என்றன் சிந்தை நோவ
வந்தவோர் செய்தி வழங்குவ னீங்கே :
உதய கிரியினுக் குயிரா யிருந்தவென்
மாதுலர் சிறையினில் மறுகு கின்றனர்.
மாமி களத்திடை மாய்ந்துயிர் நீத்தனள்.
நம்மவர் நகரில் அம்மவப் புதியோர்
சிவபிரான் தளியிலும் திருமால் தளியிலும்
பெரும்பொருட் செலவிற் பெருவிழா வியற்றி
மகிழ்ந்தனர் நாடெலாம் வளைத்தன ராதலால்.
அரச குலத்தினர் அடிமைப் படவும்
அமைச்ச குலத்தினர் அவரை வதைக்கவும்
இடமென வமையுமக் கொடியவர் குடியில்
நன்மையும் தீமையு நாடா ராதலால்
விரைவில்யாம் போர்செய மேவுதல் நன்றே.

[மல்லுகானும் உத்தண்டகானும் வந்து மரி
யாதை செய்து வணங்குகின்றனர்.]

கஜபதி : வருக வருக ! பொருபடைத் தலைவீர் !
மன்னவர் ஆணை வழியே யமர்க்களம்
புகுந்தயற் படைஞர் புறந்தர வெல்லும்
வீரர் நீரென விளம்பக் கேட்டேம்.

வெங்கோ : இறைவ! இவ் விருவரு மிருந்தன ராங்கே.
மும்முடி மன்னரும் செம்மையி னுய்ந்து
மொழிந்தன மொழிகள் மொழிகுவ ரிவரே.

தாதோ : மல்லுகான் எல்லாம் சொல்ல வல்லவர்.
உத்தண்ட கானும் உணர்த்துவர் அறிந்தன.

கஜபதி : யாதுநும் மன்னர் இயம்பினர் வீரர்காள் !

மல்லு : பிறர்செவி புகத்தகா மறைமொழி யுளசில :
அவையான் புகலுவல் அரசர் பெரும !
மந்தண நிலயம் வரத்தகா தவரெலாம்
அகலுக வெனவர சாணை பிறக்கலாம்.

கஜபதி : ஏவலர் தூதுவர் சேவகர் ஏனையோர்
யாவரும் புறத்தே யேகுக வின்னே.

[ஐந்தாறு பேர் தவிர ஏனையோர்
வெளியே போய்விடுகின்றனர்.]

தாதோ : அரசர் பிரானினி அமைவுடன் கேட்கலாம்.

கஜபதி : மல்லு கானினிச் சொல்லுக கருத்தே.

மல்லு : 'பாமினி யரசெனப் பண்டமைந் திருந்தது
மூன்றாய் நான்காய் முறையே பிரிந்தது.
அவரெலா மொருகுலம்; அன்பிறு லிணங்கி
ஒற்றுமை பொருந்தி வெற்றியே நாடுவர்.
நிருபர் நீயிரு மொருதுணை யாயினீர்.
ஆதலி னம்வலி யறியா னெதிர்த்த
விசய நகர வேந்தனை யினியாம்
வெலத்தகு சூழ்ச்சி விளைப்பேம்,' என்றனர்.

உத்தண்ட : பொருவது கருதினீர் பொருகளம் புகுவது
துணிவே யாமெனிற் சொல்லுவம் யாமது.

கஜபதி : யாங்களம் புகோமென எவரே புகன்றனர்?
வெற்றி விளையும் வியனு ளளவும்யாம்
உறைகழி வாளினை உறையகஞ் செறியேம்.
'மதங்கொளும் பகைவரை வாட்ட வலியிலார்
இவர்!'என வுலகினர் எம்மை யிழித்திட
வாழே மைய!யாம் தாழேம் முயற்சியில்.
வேண்டுவ தியாது? பூண்டுள விவ்வினை
நன்கு நிகழ்வுற நடாத்துவ தியாதே?

மல்லு : அரசே! அவர்மொழி யமைவொடு கேட்க :
விசய புரத்து வியன்பெரும் படையும்
அமுத நகரத் தரசர்மாப் படையும்
கோல கொண்டக் கோமகன் படையும்
வேதண்ட கோட்டை விரிவலிப் படையும்
ஒன்றென விணங்கி யொருமுக மாகவே
கிருட்டிண வேணியின் கரைகளைக் கடந்து
விசய நகர வேந்தர்மா நாட்டிற்
புகுந்து வலிந்துநற் போர்த்தொழில் பூணும்.
அப்பெரும் படையை ஆந்திர னெதிர்ப்பன்.

அவற்கு வெற்றி யமையா துறுதியே.
கால நிலையாற் கருதிய போரினில்
அவனே வெற்றி யடைந்துமேல் வருமேல்
கலிங்க நாட்டினைக் காக்கு மரசே!
நீயிர் அவன்படை நேருற நிற்பீர்.
உம்மையு மெதிர்த்தனன் செம்மைய வெற்றி
பெறுத லரிதே. பிழையே யுறுவன்.
இதுவெம் சூழ்ச்சி. நும் மெண்ண மென்னையோ?

கஜபதி : சூழ்ச்சியும் நன்றே; துணிபும் நன்றே.
நினைந்த வண்ணமே நிரம்பலு மாகும்.
'செல்வம் சிறந்தான், கல்வியும் சிறந்தான்,
அறிவிற் சிறந்த அமைச்சரை யுடையான்,
வீரமே செறிந்த வீரரை யுடையான்,
போர்க்களம் புகுந்திடிற் புறக்கொடை யறியான்,
அத்தகு வேந்தன் அடைவது வெற்றியே,'
என்பது நூலவர் இயம்பிய மொழியே.

மல்லு : ஆயினும் முறைமுறை ஆய்வது வேண்டும்.

வீரபத் : பகைவன் வலிமையும் பார்த்திட வேண்டும்.
நம்படை வன்மையும் நட்பினர் படையின்
வலிமையுந் தெளிந்தே வன்போர் தொடங்கலாம்.

வெங்கோ : நம்மைப் பகைக்கும் நரபதி வலிமை
அளவு கடந்ததென் றறைகுவ ரொருசிலர்.
பரிகளும் கரிகளும் பல்லா யிரமென
ஆட்படை கோடியி னதிகமே யாமென
அறியார் புகன்றன வறிவே மரசே!
உதய கிரியினுக் கொன்றரை யாண்டு
கழிந்த கதையினைக் கண்டோ மன்றோ?
நம்வலி யெளிதென நாமே நினைப்பின்
வெற்றி விளையுமோ வேந்தர் வேந்தே!

உத்தண்ட : நம்வலி பெரிதென நாமே நினைவதும்
தோல்விக் கிடமெனச் சொல்லுவ துண்டே.

கஜபதி : 'பொருள்கருவி காலம் வினையிட மைந்தும்
இருள்கெட வெண்ணி யெழுக போர்க்கென
ஒருபெரும் புலவர் உரைத்தன ரென்ப.
ஆதலி னுமினிப் போதலே நன்று.

**தாதோ் :** நதிகளால் வளம்படு நாடு நமதே.
மலைகளின் பேரரண் வாய்வது முளதே.
கடலு நமக்கொரு காவலா யுளது.
நம்படை பகைவர் நற்படைக் கெளிதோ!
அவரிட மிருப்பன ஆயிரம் களிறே.
பரிகள்பத் தாயிரம் பாய்ந்து வருமாம்.
வேழப் படையினில் வெற்றி விளைவது
திண்ண மெனவுளத் தெண்ண முளதேல்
நாமே வெல்லுவம். நம்படை வன்படை
என்பதில் ஐயம் யார்க்குமிங் கில்லை.
**வீரபத் :** தந்தையீர்! ஒருமொழி சாற்ற விரும்புவல்:
இவர்மொழி யனைத்தும் யானும் கேட்டேன்.
விசய நகர வேந்தரிப் பொழுது
நாட்டக முளரோ, கோட்டக முளரோ,
கடலக முளரோ கருதி யோருமின்.
பொழுது மிடமும் பொருந்தி னன்றி
வெற்றி நமக்கு விளைவது மரிதே.
**தாதோ :** அவர்புகு நிலத்தினை யறிவன் யானே.
திருமலை யாலயம் சேர்ந்தன ரங்குக்
கோவில் கொண்ட தேவனை வணங்கி
இருப்பரென் றொற்ற ரியம்பக் கேட்டேன்.
**கஜபதி :** ஒற்றச் சென்றவர் ஒருவரோ இருவரோ?
எங்குளர்? அவரை யிங்கழைத் தறிவோம்.
வீர பத்திர! வெளிப்புற முள்ள
ஏவலர்ப் போக்கி யிங்கழை யவரை.
[வீரபத்திரன் வெளியே போகின்றான்.]
**வெங்கோ :** ஐவர் சென்றனர் அறிந்தனர் நிகழ்ந்தன.
மூவர் இன்னும் மேவுவர் ஆங்கே.
இருவர் இன்று வருவது கண்டோம்.
அவர்புகல் மொழிகளை யறிவது நலமே.
அறிந்ததன் பிறகியாம் அமர்க்களம் புகலாம்.
[வீரபத்திரன் இருவரை அழைத்து வருகின்றான்.]
**ஒற்றர் I :** வணங்குவ மரசே! வாழ்த்துவம் வருவேம்
சென்ற திசைகளிற் றெரிந்தன பலவே.
ஈங்கவை பலர்முன மியம்ப லாகுமோ?

கஜபதி : இவர்முன் ஐயமின் றியம்பலாம்; இயம்புக!
ஒற்றர் II : உதய கிரியினில் ஒன்றரை யாண்டு
நிகழ்ந்த போரிடை நேர்ந்துள வெற்றியால்
மகிழ்ந்த வாந்திர மன்னவர் மீண்டுதம்
நன்னக ரகமுற நண்ணினர் ; ஆங்கே
கலைநல மாய்ந்து சில்நா ளிருந்தனர் ;
உதய கிரியினில் உயிருருப் பொலிந்த
கண்ணன் சிலையினைக் கவர்ந்தனர் ஏகி
ஆலய மொன்றமைத் தணிகெழு விழாவுடன்
தந்நகர் நடுவுறத் தாபித் திட்டனர்.
வணங்குவார் முகத்தை மகிழ்வொடு நோக்கிப்
பேசுவான் போன்று பிறங்குநங் கண்ணனை
இழந்தனம் யாமே; ஏற்றூர் அவரே.
கஜபதி : வருந்தி யென்பயன்? பொருந்திய துரைமின்.
ஒற்றர் I : ஆயிரம் கால்கள் அழகமை சிற்பக்
கலைக்கள மாகக் கவினவோர் மண்டபம்
அமைத்தன ரவரே ; அயலுள நாட்டகம்
போராற் பெறுவன பொழிந்தன ரதற்கே.
இஃதொன் றேயோ! இன்னும் பலவே!
விசய ஆலயம் வெற்றிக் கோவில்
எனும்பெயர் பொருந்தவோர் எழில்வளர் மண்டபம்
தொடங்கின ரதனைச் சுதன்மையே யென்பன்.
அத்தகு கோயிலி னகமுற வமைக்கும்
தெய்வம் யாதெனத் தெளியே மரசே!
சிவமய மாகத் திகழ்ந்தவப் பெருநகர்
விண்டு மயமுற விளங்குவ தின்றே.
இராமன தாலய மெழுந்ததும் கண்டேன்.
இவைமிக விரைவில் இயன்றன. அவரும்
வடக்கு நோக்கு மனமே யுடையராய்
இன்னும் உளரென யாம்நன் குணர்வோம்.
கஜபதி : திருமலை யகத்துச் சென்று ரென்ன
ஈங்குளார் புகன்றனர். ஆங்கது பேசுவோர்
இலரோ? நீவிர் ஏகவு மில்லையோ?
ஒற்றர் II : தமிழ்க்குள முருகுந் தனிப்பரம் பொருளை
வேங்கட முடியமர் வேத மூர்த்தியை

வணங்கவும் வாழ்த்தவும் வழிபா டியற்றவும்
கருதுமிம் மன்னர் கனிந்தநல் லுளமொடு
புலவர் பலர்தமை நலமுறச் சூழ்த்
தேவியர் இருவர் மேவினர் தொடர
ஆங்குப் புகுந்தது மறிவே மரசே!

**கஜபதி :** நிகழ்ந்ததெ தெனுங்கு? நிகழ்த்துதிர் விரைந்தே.

**ஒற்றர் :** திருமலை யகத்தே யொருமதி யிருந்தனர்;
நவமணி குயிற்றிய நற்பணி பலப்பல
அலர்மேல் மங்கைக் கமைத்தன ருதவினர்;
வேங்கட நாயகன் மெய்யெலா மறைய
முப்ப தாயிரம் மோகரா நிறைத்துக்
கனகாபி டேகம் களிப்பொடு புரிந்தனர்;
அப்பணி நிகழ்ந்தபின் பத்திரு மலைமேல்
இறைவனை வணங்கி யென்று மிருக்கும்
தோற்றம் விளங்குறத் தோன்ற விழைந்துதம்
உருவமும் தேவியர் உருவமும் வெண்கலச்
சிற்ப மமைத்துத் தேவர் பிரான்றன்
திருமுன் நிறுத்தினர் சிறப்பெலா மியற்றியே.

**கஜபதி :** ஆலயம் வழிபட வாயிர மாயிரம்
பொன்னை யிறைக்கும் மன்னவர் போர்க்களம்
புகுவரேல் வெற்றி புனைவது மெளிதோ!

**வெங்கோ :** உண்மை! முற்றிலு முண்மை யரசே!
நாட்டின் வருவாய் நன்றே வளரினும்
அதனிற் பாதி ஆலயம் விழுங்கின்
அரசர் வலிகுறைந் தழிகுவ துறுதியே.

**மல்லு :** கல்லினுஞ் செம்பினும் காசைக் கொட்டிக்
கடவுளென் றெண்ணிக் கலங்கு மினத்தார்
நாட்டினை யாளவும் நன்னெறி தெளிவரோ?

**கஜபதி :** அங்ஙனம் கூறுதல் அழகன் றைய!
எத்துணைச் செல்வ மிருப்பினு மன்னவன்
நம்பகை யிருக்கவே நாடெலா நல்லறம்
வளர்ந்திடப் பொருளினை வாரி யிறைக்கும்
வண்மையோ டிருப்பனென் றெண்ணுதல் வேண்டும்.
பங்கவ்வரை யஞ்சும் பதரென வவனை

எவருமே யுரையார். எண்ணிலாப் பொருளைத்
தருமம் செய்யவும் தகுதியு ளானெனில்,
அவன்வலி பெரிதே யாதல் வேண்டும்.

வீரபத்: விசய நகர மேவிய பின்னரோ
அதற்கு முன்னரோ ஆலயப் பணியெலாம்
நிகழ்வன வாயின?

கஜபதி: நீயறி யாயோ?
திருமலை நாயகன் திருப்பணி முன்னரே;
மற்றவை யெல்லாம் வளர்ந்தன பிறகே;
ஈதொரு புறத்தே யிருக்க. இப்பொழு
தெங்குள னவனே? யாதவன் கருத்தே?

வெங்கோ: போர்க்களம் புகவே புறம்போந் தனரவர்;
நந்துணை மன்னவர் நாட்டையும் நந்திரு
நாட்டையும் வளைத்தனர்; கேட்டையே விளைப்பர்.
விசய புரியரண் வீழ்ந்தது வீழ்ந்ததே.
மன்னவர் மறைந்தனர் வழிக்கொண் டனரே.
நகரெலாம் பாழ்பட நல்லோர் வருந்தப்
பற்பல கொடுமையைப் பார்த்திவர் புரிந்தார்.
இனிநாம் பொறுமையோ டிருப்பதில் நலமிலை.
வடக்கி லவர்படை வருவது கண்டேம்;
அவர்நாட் டகம்புக வனுப்புதும் நம்படை.

கஜபதி: மல்லு கானினிச் சொல்லுவ தென்னையோ?

மல்லு: முன்னரே யெல்லாம் மொழிந்தன மரசே!
யாமிவ ணிருப்போம். எம்படை யாந்திரர்
வளநாட் டகத்தே வளைத்துப் போர்செயும்.
மன்னவர் மூவர் வளம்பொலி படைஞர்
தென்புலஞ் சென்று நன்குபோர் புரிவர்.
நீயிர் கடக நிலைநன் கிருப்பது
நோக்குதல் வேண்டும். நும்படைத் தலைவர்
மொழிந்தவா றெல்லாம் முறையே யியற்றவும்
ஆங்கே செல்லுதல் அமைதியா மரசே!

கஜபதி: இனுஞ்சில நாளிடை யிந்நக ரகத்தே
பகைப்படை வருமேற் பாய்ந்தப் படையினை
எதிர்த்து நிற்பவர் ஈங்கியா ருளரே?

**வீரபத் :** எந்தையீர்! யானுளேன்; இவரும் உளரே!
கெடலரு வீரதைக் கேசவ பாத்திரர்
ஞாட்பினிற் புறங்கொடா நரகரி பாத்திரர்
பால சந்திர பாத்திரர் உளரே!
பல்லா யிரம்பெரும் படைஞரும் உளரே!
ஐயமேன்? நீவிர் ஆங்கே சேறலாம்.

**கஜபதி :** கடக நகர்க்குக் காவல் வேண்டும்.
யாவரு மீங்கே யிருப்பே மாயின்
ஆங்கவன் வருவதற் கமையினு மமையலாம்.
ஆதலின் யானவண் போதல் புரிகுவன்.

[சபை கலைகின்றது.]

## மூன்றும் களம்

**இடம் :** சிம்மாத்திரிப் போத்தனூர்.
**காலம் :** முற்பகல்
**பாத்திரங்கள் :** விசயநகர மன்னர், கலிங்க மன்னர், திம்மரசு, அல்லசானிபெத்தன்ன, பெம்மசானி இராம லிங்கர், கேசவ பாத்திரர், வீரபத்திரன், ஜகன் மோகினி, தோழியர், கலிங்கவமைச்சர் முதலியவர்.

[அரசர் நகர் நடுவில் உள்ள மாளிகையகத்து வீற்றிருக்கின்றனர். அதன் புறத்தே பெரும்படை நிற்கின்றது. பெரு விழா நடைபெறும் முயற்சிகள் நிகழ்கின்றன. சிற்பிகள் ஒரு பெருங்கல்லிற் சில எழுத்துக்களைச் செதுக்குகின்றார்கள். வீரர்கள் வருவதும் போவதுமாய் இருக்கின்றார்கள். மாளிகையினுள் பரத நாட்டியம் நிகழ்கின்றது.]

**நிலைமண்டில ஆசிரியப்பா**

**அரசர் :** நாட்டியக் கலையின் நயந்தான் என்னே!
இன்பக் கலைகளுள் இணையறு கலையிது.
வாக்கினிற் பலர்தம் மனக்கருத் தளப்பர்.
இக்கலை பயின்றோர் இனிய முகக்குறி
கைக்குறி யுடற்குறி காட்டிக் கருத்தெலாம்
தாளம் பொருந்தத் தாள்பெயர்த் தாடி

இசையொடு பொருந்த வினியபாட் டோதி
விளக்குந் திறமை வியப்பே! வியப்பே!

**திம்மரசு :** நாட்டியக் கலையினை நாடெலா முணரக்
காட்டிய ஒருவன் கடவுளே யன்றோ?
அம்பலத் தாடிய அமலனிக் கலைக்கு
முதற்குரு வென்று முழங்கு மறைகளே.

**அரசர் :** அமைச்சர் பெரும! அதனையான் கேட்டுளன்.
இனியிவர்க் குரியன வீதல்நன் றன்றோ?

**திம்மரசு :** விரும்பிய வாறு விடைகொடுத் தருளலாம்.

**அரசர் :** பெறுகநீ ரிவற்றைப் பெருகுக கலையே!

[வெகுமதி கொடுக்கின்றார். நாட்டியம் ஆடினவர் வெகுமதி பெற்றுப் போகின்றனர். புலவர்கள் வருகின்றார்கள்.]

**அ. பெத்த :** அரசர் பிரானே! அறப்பெருந் துணையே!
கயபதி வேந்தர் கருதிய கருத்தெலாம்
நிறைவுறுத் துயரொடு நிற்பர்நம் வாயிலில்.

**அரசர் :** கயபதி யீங்குக் காணவந் தனரோ?
அவரை யெதிர்கொள லமைவே யாகும்.

**திம்மரசு :** யானே யவரை யீங்கழைத் தூறுவேன்.
வந்தபின் தகுந்த வண்ண மியற்றலாம்.

[திம்மரசும் கஜபதி மன்னரும் வருகின்றனர். அரசர் இருக்கையினின்று எழுகின்றார். எல்லாரும் எழுந்து நிற்கின்றனர்.]

**அரசர் :** கயபதி வேந்தே! கருணை வள்ளல்
அருளால் யாவும் அமைவன. உள்ளம்
தளரா தீங்குத் தாமமர்ந் தருள்க!

[கஜபதி மன்னர் அமர்கின்றார்.]

**திம்மரசு :** சிவனு மரியுஞ் சேர விருந்த
காட்சி காட்டும் காவலர் நீவிர்
அன்பா லிணங்கி னவனி மகிழும்.

**கஜபதி :** பகைத்திற மிருந்தேம்: பலபோர் புரிந்தேம்;
மிகைத்திற மடங்கி வீழுந்தேம்; இனியாம்
எதிர்ப்பதிற் பயனிலை யெனவீங் கடைந்தேம்;

பெரும்படை திரட்டிப் பிறர்பலர் துணைகொடு
பல்லாண் டரும்போர் நில்லா தியற்றினேம்;
வெற்றி விளைவது விமல னருளெனத்
தெளிந்தேம்; இனியென்?

திம்மரசு : செய்வன செய்திர்.
அரசே! இனியெம் மரசர் பிராணையும்
அன்ப ரெனக்கொள லமைவா காதோ?

கஜபதி : போரிடை முதற்கண் போந்தவர் யாமோ?
வெல்வதும் தோற்பதும் வேந்த ரியற்கையே.

அரசர் : மனத்திடை யொளித்த சினத்தினை மறந்தே
யான்மொழி சொற்களை யினிதுநீர் கேட்க!
போர்க்கள மிந்நாட் புகுந்தவன் யானே.
எம்மவர் ஆண்டநா டெல்லா நீர்கொள
முயன்றது முண்டோ, இல்லையோ? மொழிதிர்.
வலியிலா வேந்தர் வாழ்வுறு நாளில்
எந்நாட் டகத்தே எளிதுநீர் புகுந்து
பிறர்பல ருதவியாற் பெற்ற அரண்களை
மீட்பது கருதியே ஞாட்பினிற் புகுந்தேன்.
என்செயல் தவறென வெண்ணுகின் றீரோ?

கஜபதி : தவறென வீங்கியான் சாற்றிப் பயனென்?
நுங்குல முன்னையோர் நும்மையெங் கடகமும்
பற்றியே யாள்கெனப் பணித்தது முளதோ?
கிருட்டிண வேணி கிட்டிய நாட்டினை
மகாநதி யளவும் வளர்க்க நினைந்தீர்.
அரசருக் கிவையெலா மறமே யாகும்.

[பெம்மசானி இராமலிங்கர் வருகின்றார்.]

அரசர் : நாட்டினை வளர்ப்பதே நரபதி கடனும்.
இருப்பது போதுமென் றிருக்கு மொருவன்
மன்னவ னலனென மனுநெறி யுரைக்கும்.
திருமகள் என்றும் ஒருவர் குடியில்
நிலையுற விருப்பதும் நிகழுவ தன்றே.
பாரத நாடு பரந்தபே ரளவின
ததனு ளநேக ரரசுநிலை நாட்டினர்.
ஐம்பத் தறுநா டமைந்த தொருகால்.

ஒருவனே யவற்றை யுரிமையி னுண்ட
காலமு முண்டே. கவரு டியதால்
உரிமையை யிழந்த வுயர்குடி பலவுள.
போரினில் நாடுகள் போவதும் வருவதும்
இன்றைய கதையோ? என்றுமுள் ளதுவே.
இருநில மதனிடை யிரண்டா மனிதன்
இருக்கு மளவும் இருக்கும் போரே.

கஜபதி : நன்று கூறினீர்! நாளெலா முயன்று
பெரும்படை திரட்டிப் பிறர்தம் நாடுகள்
கவர்வதே தமது கடனெனக் கருதும்
அரசரா னன்றோ வளவிலா மனித்தர்
உயிரினை யிழப்பர், உறுபொரு ளிழப்பர்,
பன்னெடுங் காலம் நன்னெடு முயற்சியால்
வளர்த்த கலைகளின் வளமெலா மழியும்?

அரசர் : உண்மையே யுரைத்தீர். உற்ற துரைப்பேன் :
இராம லிங்கரே! ஈங்குவந் தெம்முன்
நீயி ரறிந்தன நிகழ்த்துதி ரின்னே.
நுமையான் போர்க்கு நொடியினிற் போக்கிய
நிகழ்ச்சியைச் சிறிது நிகழ்த்து மிங்கே.

இராம : மன்னவர் மன்னரே! வணங்குவல் யானே.
கலிங்க மன்னர் கயபதி யரசர்
தெரியா தனவல சிறியே னுரைப்பன.
நிகழ்ந்த துரைப்பது நிருபரி னாணை.

திம்மரசு : விசய புரியினில் வேந்தர் பிரானுமை
ஏவிய வண்ண மியற்றினீ ராதலால்,
நிகழ்ச்சியை மொழிய நீரே தகுந்தவர்.
ஆதலின் விரைவில் ஓதுதிர் ஈங்கே.

இராம : கயபதி மன்னர் நயமொடு கேட்க :
விசய புரியரண் வீழ்ந்தநாள் யாமெலாம்
அதனை யழிக்கும் ஆணையால் அரசர்
அருகினி னின்றே புரிவன புரிந்தேம்.
ஒற்றர் சிலரங் கோடி வந்தனர்.
விசய புரியார் வேதண்ட கோட்டையார்

அமுத நகரார் அளவிலாப் படைகளும்
கோல கொண்டக் கோமகன் படைகளும்
பெருகிய புனல்வளக் கிருட்டிண வேணியின்
தென்கரை புகுந்தெந் திருநாட் டகத்துப்
புகுந்துநன் னிலங்களைப் பூழி யாக்கி
ஊர்களைக் கனலிக் குண்டெனக் கொடுத்தே
ஆடவர் பெண்டிர் அருமை யிளஞ்சிறுர்
யாவரே யாயினும், எதிர்ந்தில ரெனினும்,
வணங்கின ரெனினும், வாய்வெரீஇ யோடி
ஒளிந்தன ரெனினும், ஒருவரை விடாது
பிடித்துக் கொன்று பிணக்கா டாக்கினர்
என்னுமிச் செயலெம் மிறைவர்க் குரைத்தனர்.
காவலர் சினமூங் கண்டனன்; அவர்தம்
குடிகள் படுந்துயர்க் கொடுமை கேட்டுக்
கலுழ்ந்த கண்ணீர் கரைகடந் தோடிய
காட்சியும் கண்டேன்; கடிதினி லெழுந்தேன்;
'அரசரே! ஏவிய தாற்றுவல்,' என்றேன்.
'ஏகுக விரைவில்; ஆங் கெங்குடி மக்களை
வாட்டிய படைஞரை மடக்கி யழிக்'கென
எண்ப தாயிரம் இருப்படை வீரரும்
தந்தெனை யனுப்பினர் தந்தையி னினியார்.

திம்மரசு: போர்க்களம் புகநீர் புறப்படு மன்று
மணமகன் போன்று மகிழ்வொடு நடந்தீர்.
அரசர் பிரான்முன் ஒருமொழி சொற்றீர்;
அதனையு மறவா தறையு மீங்கே.

இராம: 'பகைவரை யெதிர்த்தவர் மிகையினை யடக்கி
நந்நாட் டிடையவர் நாட்டிய படவீ
டனைத்தும் பறக்க வவற்றின் கயிறறுத்
தாப்பினைப் பிடுங்குவ லடியனேன்,' என்றேன்;
'அங்ஙனம் யான்செயு மளவையில் மன்னவர்
படையெலா மாங்கே படர்தனன் ெ'றன்றேன்;
செப்பிய வண்ணமே செய்யவுஞ் செய்தேன்;
விரைந்தவண் சென்றேன்; கரைந்த குடிகளின்
கண்ணீ ராறு கடந்து புகுந்தேன்.

எதிர்த்த பகைவர்தம் கதித்த படையிடை
எண்ணு யிரம்பரி இறந்தன விரைவில்.
படமியல் மாடம் பறந்த வளவிலெம்
மன்னர் பிரான்படை வந்ததக் களத்தே:
ஈரா யிரங்களி றெழுந்தன வந்தன;
அறுப தாயிர மசுவம் வந்தன;
ஐஞ்ஞா றுயிரம் ஆட்படை வந்தது;
இப்படைத் தலைமை யெம்மர சேற்றனர்.
கிருட்டிண வேணியும் கிளர்ந்தோ டியதே.
பகைவர் களிற்றுப் படையெம் படையின்
தாக்கினைத் தாங்கும் ஊக்கமு மின்றி
ஆற்றினில் விழுந்தன வாங்கே யிருந்தன.
படைஞரும் விழுந்தனர் படர்ந்தனர் தென்புலம்.
தென்கரைக் கண்ணே திரண்ட பகைப்படை
உயிர்பிழைத் துய்ய வோடிய தரசே!
வெள்ளத் திடையே விழுந்தபல் களிறும்
களத்திடைக் கிடந்த கணக்கறு பொருள்களும்
எமக்கே யுரியன வாயின வெளிதினே.

அரசர்: கயபதி யரசரே! கதையிலை; இதுவே
உண்மை. நிகழ்ந்தவா றுரைப்பக் கேட்டீர்.
அப்படைத் துணையால் அடையலாம் வெற்றியென்
றெமைநீ ரெதிர்க்க வெத்துணை முயற்சிகள்
செய்தீர்? அவையெலாம் தெரியு முமக்கே.
உதய கிரியினை யும்மிடம் கவர்ந்தேன்.
கண்டகூர் வந்தது; கொண்டவீ டடைந்தேன்.
ஆங்கிருந் தெனைநீ ரமர்க்களத் தெதிர்ந்தீர்.

திம்மரசு: கயபதி வேந்தர் களிறுகள் ஆயிரம்
இருப தாயிரம் பரிகளு மெழவே
ஐஞ்ஞா றுயிரம் ஆளொடு வந்தார்.

அரசர்: அங்கு நிகழ்ந்தன அமைச்சரே புகலுவீர்.

திம்மரசு: கலிங்கப் படைகள் கயபதி வேந்தே!
வெள்ளம் பெருகிய வியனாற் றொருகரை
இருந்தன; எம்படை யிருந்தது மறுகரை.

தூத ரொருவரைத் தூய நினைப்பால்
எம்மர சும்பால் ஏவிய துளதே.
'கரையரு கிருந்தாற் கணக்கறு மாந்தர்
வெள்ளப் பெருக்கினில் வீழுவ ராதலிற்
காத மளவு கழிந்தியான் விலகுவேன்;
ஆறு கடந்துநீர் அடைமி னிக்கரை;
வறுநிலம் வந்ததும் வன்போர் தொடங்குதும்',
என்றொரு நன்மொழி இயம்பிய துண்டு.
நீரது மதியீர் நின்றனிர் கரைக்கண்.
அளவறு மக்களை யாற்றிடை யிழந்தும்
யாநுமை யெதிர்ப்பதற் கேன்றனம் மறுகரை.
எத்துணைக் களிறுக ளிழந்தீர் ஆங்கே!
படைஞரெத் துணையர் படர்ந்தனர் விண்ணகம்!
அவ்வுழி நிகழ்ந்தன அனைத்து மறிவீர்.
கொண்ட வீடுங் குறுகினம் யாமே.
அவ்வரண் வலிதென அகமுறத் துணிந்து
வடபால் வந்துநும் வளநா டடைந்தீர்.
கேசவ பாத்திரர் வீசினர் படைகளை,
அரும்போர் புரிந்தனர். ஆயினும், வென்றேம்;
இருமதி யளவினில் அரணினைக் கவர்ந்தேம்.
வீரமே விளைத்த வீர பத்திரர்
நரகரி பாத்திரர் நச்சி ராசர்
பால சந்திர பாத்திரர் மல்லுகான்
உத்தண்ட கானிவ ரோடுநும் வலிய
படைகளின் தலைவர் கேசவ பாத்திரர்
சிறையென வெம்மகஞ் சேர நேர்ந்தது.
எம்மர சவ்வரண் எனக்கே யளித்தார்.
யானதை யென்ற னிளவல்பால் விட்டு
மேலும் போர்க்களம் விழைந்திவண் வந்தேன்.

கஜபதி: எம்மகன் சிறைப்பட் டிருப்ப னென்றீர்.
கண்டவ ரவன்கொலை யுண்டன னென்றார்.
கொன்றது மேனோ? குற்றமும் யாதோ?

திம்மரசு: சிவசிவ! இவ்வுரை செப்பினர் யாரே?
போர்க்களத் தன்றிப் பொருபடை வீரரைக்

கொன்று மகிழ்வதெங் கோவியல் பன்றே!
வீர பத்திர! விரைந்திவண் வருதி.

[வீரபத்திரன் உள்ளிருந்து வருகின்றான்.]

**அரசர்:** உன்னையாங் கொன்றதா வூரவர் உரைப்பராம்!
நினக்குத் தந்த நிலைமையா துரைக்க!
வீர பத்திர! மெய்யே மொழிக!

**கஜபதி:** மகனே வந்தனை! மரண மடைந்ததாப்
பற்பலர் கூறினர்!

**வீரபத்:** அற்பர்பொய் யுரைத்தார்!
தோற்றே னென்னினும் துயர்துடைத் தாண்ட
மன்னர் பணியினில் மகீசுர புரியினில்
வாழ்கென வைத்தனர்; வாழுவன் எந்தாய்!

**அரசர்:** கொண்ட பள்ளி கொண்டனம் பிறகே.
ஆங்குநீ ரில்லை. அரச குமரன்
இராம சந்திர னெம்வய மாயினன்.
அரசியா ரொருவர் ஆங்கிருந் தனரே.
அவரும் சிறையென வமைந்தா ராயினும்,
தாயினு முயர்வுறத் தாங்கினே மவரை.
மகனையும் தாயையும் வருவித் துண்மை
அறிய விருப்பமோ?

**கஜபதி:** அரசே! வேண்டா.
அரசியை மீட்கவே யவாவுத லுடையேன்.

**அரசர்:** அமைந்த நெறியால் அன்னது செயலாம்.
எழுபெருந் தலைவர் எம்வயம் ஆயினர்.
அவரெலாம் விடுதலை யடையவேண் டிலிரோ?
எதிர்த்தெமைத் தடுப்போர் எவரு மிலாமையாற்
சிங்க சயிலமும் சேர்ந்தனம் யாமே.
ஈங்குநீர் வந்திர்; இயன்றள வெதிர்க்கவே
முயன்றீர்; வலிமையு முறையே யுடையீர்;
துணிவு முளீர்; பலர் துணைமையும் பெறுவீர்
என்பது தெளிந்தனம்.

**திம்மரசு:** யாதொரு சூழ்ச்சியால்
அரசே! நும்வலி யனைத்தும் குறைத்தேன்.

வேதண்ட கோட்டை வேந்தர்நும் துணையா
வருதலு மாமென வொருவா றறிந்தே
முதற்கண் அவர்நகர் முறையே புகுந்தே
படையெலாம் புறக்கொடை பார்த்தனம்; அரணினை
இடித்துப் பாழ்படுத் தெய்தின மீங்கே.
அன்றியும் வேறென் றாற்றினன் அரசே!
இலாங்கூ லியமா நதிக்கரை யமைந்தவிப்
போத்த னூரிடைப் போர்க்களம் புகவே
ஊக்க மிகமுயன் றும்படை திரட்டினீர்;
பதினறு பேர்மகா பாத்திரர் தம்மை
அவரவர் படையொடு மடைகென வேவினீர்;
அவரொடு நீயிரிங் கமர்க்களம் புகுதிரேல்
வெற்றி யெமக்கு விளையா தென்றே
தோன்றிய தெனக்கு; சூழ்ச்சியீ தியற்றினன்:
நட்புப் பிரித்தலும் நமக்குள கடமையே.
ஆதலி னவரைநீர் அகமுற நம்பா
வகையொன் றியற்றினேன்; மயங்கினீர் நீரே.

**கஜபதி :** உண்மை யிதுவோ? உம்செயல் தானோ?
அவரெலா மென்றுணை யாகா தகன்று
பகைத்திறம் புகுந்த பாதக ரெனயான்
நெஞ்சுள் நினைந்து நினைந்து வருந்தினேன்.

**திம்மரசு :** நவமணிப் பேழை நானனுப் பியதே.
எம்மிட மவரவை யேற்க விடுப்பதாக்
கடிதமும் பேழையும் காட்டுதற் பொருட்டே
ஏவலர் சிலரையா னேவிப் போக்கினேன்.
அதனைநீர் நம்பி யவரை யகன்றீர்;
அவர்துணை யிராதென அகமுற நினைந்து
களம்புக வஞ்சிக் கரப்பதுந் துணிந்தீர்.

**கஜபதி :** என்னே சூழ்ச்சி! என்னே சூழ்ச்சி!

[மகா பாத்திரர் பதினறுவரும் வருகின்றனர்.]

**அரசர் :** கயபதி யரசே! கருதுமி னிவர்செயல்.
குறையொன் றியற்றிலர்: கொள்ளுமின் நட்பென.

[மகா பாத்திரர் கஜபதியை வணங்குகின்றனர்.]

கஜபதி : ஆயேன் தெளியேன் ஐயம் மிகுந்தேன்.
நுங்குறை யொன்றிலை; என்குறை யதுவே.
[கேசவ பாத்திரர் வருகின்றார்.]

அரசர் : கேசவ பாத்திர! நேசமு ளாரிவர்
தோல்வி நுமதெனச் சொல்வேன் யானே.

கேசவ : விசய நகர வேந்தர் பெருங்குணம்
அனைத்தும் படைத்தவர் அறிந்தே னுதலால்
அவரொடு நட்புற லமையு நமக்கே.

திம்மரசு : யானு மிதனையே யியம்ப நினைந்தேன்.

கஜபதி : அரசினை மக்களை யரசியை நாட்டினை
இழந்தன னிருப்பே னெங்ஙன நட்பெனும்
உரிமையை விழைவேன்? உரையீர் நீரே.

அரசர் : இழந்தன இழந்தன வல்ல வென்னவே
நாட்டினை யரசியை நன்மகார் தம்மைத்
துணைவர் தம்மைத் தொல்பெரும் புகழினை
முன்போ னுமக்கே யன்போ டளிப்பேன்.
எனக்குநீ ரளிப்பன எவையு மிலையோ?

கஜபதி : யாது மொழிந்தீர்! யாது மொழிந்தீர்!
இழந்தன யாவும் எனக்கே தருதிரா!
இங்ஙன மரசர் எவரே யியற்றினர்!
அரசருக் கரசர் அரசரு ளரசர்
நீரே! நுமக்கிணை நீரே யைய!

திம்மரசு : இவையெலா மீந்த வெம்பெரு மன்னர்
விரும்பின ரிரந்த வியன்பொருள் தருதிரோ?

கஜபதி : அரும்பொருள் யாதென வறியே னைய!
அறிந்தா லின்னே யதனைத் தருவேன்.
இவர்குணம் அறியா விழிவினு லன்றோ
இன்றளவிப்பகை யியக்கத் திருந்தேன்!

கேசவ : எதனைக் கேட்பினும் எம்மர சளிப்பர்.

திம்மரசு : 'குறிப்பறிந் தீவது கொடை;மற் றின்றெனை
மறுப்பதே கேட்டபின் வழங்கல்,' என்ப.

அரசர் : கயபதி வேந்தே! கருத்துற நுந்தம்
அன்பெலாங் கவர்ந்தவோ ரரும்பொரு ளுளது.
மறத்திரோ வதனை?

கஜபதி : மறந்தே னில்லை.
இப்பொழு தறிந்தேன் ! ஈவே னுவந்து.
சகன்மோ கினியெனத் தன்பெயர் விளக்கும்
என்பெருஞ் செல்வம் என்னன் பெண்மகள்
என்னுயிர் தன்னிலு மினியா ளவளையான்
அரசே ! நுமக்கோ ரரசியா வளிப்பன்.

அரசர் : அன்பினில் வளருமவ் வணங்கருங் கலத்தினை
அடையவே நெடுநா ளருந்தவம் புரிந்தேன் !

[தாயும் மகளும் முகம் மூடி வருகின்றனர்.]

கஜபதி : இழந்தன பெற்ற யான்றரும் செல்வம்
இவளை யன்பினு லேற்க வரசே !

[ஜகன்மோகினியை அரசரிடம் சேர்க்கின்றார்.]

வீரபத் : யாமுவந் தீயும் எங்குலக் கொடியைத்
தகுநெறி போற்றுதல் மகபதி போலுமெம்
மன்னவர் பொறுப்பென வழங்குவல் யானே.
தங்காய் ! இவர்நின் தலைவர் ; எங்குலம்
தந்த பெருந்தனம் தாங்கும் குரிசில்.
நின்னுளக் கோவிலில் மன்னுக இவரே.

[தாயும் தந்தையும் தமையனும் இணங்கிக் கொடுத்ததால், ஜகன்மோகினி மனமகிழ்வோடு தன் உள்ளம் நிறைந்த வள்ளலை மணந்து கொண்டு தோழியருடன் உள்ளே போகின்றாள்.]

அரசர் : வெற்றித் தூணம் விளக்க முறவே
நாட்டுத லீங்கு நலமென நினைந்தேன்.
சிற்பியர் அனைத்தும் செய்து முடித்தனர்.

கஜபதி : அங்ஙனே செய்யலாம்.

திம்மரசு : அமைவே யன்றோ ?

[வெற்றித் தூண் நாட்டப்படுகின்றது. வாத்தியங்கள் முழங்குகின்றன.]

## நான்காம் களம்

இடம் : விஜயநகர விஜயாலய மண்டபம்

காலம் : விசயதசமி முற்பகல்

பாத்திரங்கள் : அரசர், திம்மரசு, அல்லசானி பெத்தன்ன, நந்தி திம்மையா, நதிண்ட்ல கோபன்ன, மல்லன்ன, இலட்சுமிதரர், சபாபதி கவிஞர், தெனலி ராமகிருஷ்ண கவிஞர், பட்டுமூர்த்தி, அப்பளாசாரியர், இராதாமாதவ கவிஞர், திம்மன்ன கவிஞர், பிற புலவர்களும் பிரபுக்களும் சேவகர்களும்.

[நவராத்திரித் திருவிழா நன்கு நிறைவேறுகிறது. விசயதசமி யன்று அரசர் காலை வேளையிற் செய்யத்தக்க பூசைகள் விஜயாலயத்தில் நன்கு நிகழ்கின்றன. அரசர் புலவர்களோடு சிறிது நேரம் அளவளாவியிருக்கின்றார்.]

### நிலைமண்டில ஆசிரியப்பா

அரசர் : புலமையாற் பெரியீர்! புகழாற் பெரியீர்!
நிலையாம் நலத்தினை நீணிலம் பெறுமா
றியற்றும் பெரியீர்! இறைவியின் திருவருள்
நிரம்பப் புனைந்த நிறைகவிப் புலவீர்!
நீவிர் புனைந்த நிறைமண மலர்களால்
அருச்சனை புரிமின்.

திம்மரசு : ஆயிர மலர்களால்
அருச்சனை செயலினும் அன்புளங் கனிய
ஒருகவி புனைவதா லுவப்ப என்னை.
அட்டதிக் கயங்க ளாமென வுலகோர்
புகழும் பெருமைப் புலவர் நிறைந்துளீர்!
கலைமகள் திருக்கழல் கவினு மலர்களை
ஒவ்வொன் றுக உதவுமின்.

தெனலி : பெரியீர்!
புனைந்துளேன் கவிதை; புகலவும் துணிந்தேன்.
அரசர் பிரான்கவி அன்னைக் குவப்பென
என்னுளம் உரைத்ததே.

அரசர் : அன்னை திருச்செவி
கவிதை நயத்தினைக் களிவொடு காணும்.
அரச ராயினென், ஆண்டியே யாயினென் ?
உண்மைப் புலமையை யுவப்ப தவள்செயல்.

திம்மரசு : 'நூல்பல வியற்றி நூலோர் திருப்பணி
மேல்மேல் வளர வேண்டுவ வெலாஞ்செயும்
குணநலம் பொருந்திய கோமகன் வாய்ப்பது
நாட்டினற் பேறெ'றன 'நல்லோ ருரைப்பர்.
ஆதலி னரசே! காதலி னீர்செயும்
புதுநூ லகப்பொருள் புகலுக சிறிது.

அரசர் : புலவீர்! ஒருமொழி புகலுவல் கேட்டிர்:
கலிங்கநா டாளுங் கயபதி வேந்தனைப்
போரினி லெதிர்க்கயாம் போயின நாளில்
மசூலிப் பட்டின மருங்குள தாகிய
சிகா குளநகர் சின்னா ளிருந்தேன்.
ஆலய மங்கொன் றழகுற விருந்ததால்.
ஆந்திர மதுசூ தனனெனு மமலனை
உள்ளங் கவர்ந்த கள்வனை வணங்கினேன்.
அன்றிரா வந்நகர் அமைதியொ டிருந்தேன்.
கனவென வென்னுளம் கண்டதொன் றுளது :
அருளுரு வாமாந் திரமது சூதனன்
முன்னர் நின்று மொழிந்தனன் இவையே :
'அரசப் புலவனென் றுயினை யைய! நீ
புலமைக் கரசியாப் புவியிடை வாழ்ந்த
தமிழச் செல்வி தனையெனக் களித்த
அன்புரு வாகிய ஆண்டாள் கோதை
சூடிக் கொடுத்த சுடர்த்தொடி வரலா
றழகுற வமைக்கு மாற்றலு ளாயோ ?
வேங்கட மலையின் விருப்பினோ டதனையான்
செவிக்கொள விழைகுவன். செய்யுளாற் புனைந்து
விரைவினில் வருதி நீ. விளம்புவ லொருமொழி :
ஆரிய மொழியினில் அதனைப் புனையேல் :
அவள்தமிழ் மொழியா லமைத்தன ளென்னை.
ஆந்திர மொழியா லவள்புகழ் பாடி

இந்நாட் டுளாரெலா மினிதினே யறிய
நின்பணி யாக நிகழ்த்துக இனிதே.'

அ. பெத்த : அரசர் பெரும! அமல ஞானுண
நிறைவே றியதோ?

அரசர் : நிறைவே றியதே.

பட்டு மூர் : ஆயி னதனையிங் கனைவரு மகிழ
ஓதி யருளுக!

அரசர் : கோதறு கவிபுனை
புலவர் நும்முனம் புகல வென்னுளத்
துணிவு கொண்டிலேன்.

நந்தி : சொற்றது நன்று!
புலவருட் புலவர் புலமைச் செல்வர்
புலமைப் புரவலர் புரவலப் புலவர்
என்றுமை யுலகெலா மினிதி னறியும்.

சபாபதி : மன்னர்நீ ரியற்றிய மதாலசை சரித்திரம்
புலவர்பா ராட்டுப் புனைந்த தறிவீர்;
சகல நற்கதா சாரசங் கிரகம்
வளமெலா நிரம்பி வழங்குவ தறிவேம்;
சூக்தி நைபுணி ஞானசிந் தாமணி
மாபெரும் புலவர் மனமெலாம் கவர்ந்தது.
நயமெலாம் பொதுளிய ரசமஞ் சரியினை
அறியாப் புலவரிவ் வவைக்களத் துளரோ?
இன்னுநீ ரியற்றிய வெத்துணைக் கவிதைகள்
நாடெலாம் வழங்கு நலம்புகழ் விளைப்பன!
ஆந்திர மொழியினு மாயிரங் கவிதை
புனைந்துளீர்; நுமக்கிது புதுமை யன்றே?

அரசர் : மாபெரும் புலவர் மண்டல மிதன்கண்
என்சிறு புன்கவி யிசைக்க நாணுவன்.

அ. பெத்த : அரசே! இந்நூற் கமைபெயர் யாதோ?

அரசர் : ஆமுக்த மால்யதா அதன்பெயர் ஐய!

அ. பெத்த : புலவர் செவிக்கொளச் சிலகவி சொல்லுதல்
நலமென நினைவேன்.

இராதா : நவராத் திரிவிழா
புலமையை யறியவே பொருந்துவ தன்றோ?
இலட்சுமிதரர் : புகலுக வரசே! புகலுக சிறிதே!
அரசர் : இன்றிங் கிரண்டொன் றிசைப்பல்கேட் பீரே.
[ஏட்டைப் பிரித்துப் படிக்கின்றார்.]

அறுசீர் ஆசிரிய விருத்தம்

அளவறியா வாரியநான் மறைக்கவிதை
நீயிசைத்தாய். அதன்கண் நின்சீர்
பளகறவே விளக்கிலையே நின்னளவு
நீயறியாப் பான்மை தன்னால்.
உளமலர நினக்கினிய தமிழ்க்கவிதைத்
தொடையல்புனை யுரிமை பூண்டாள்
வளமணங்கொள் குழல்சூடிக் கொடுத்ததுழாய்
மாலையினில் மனங்கொண் டாயே!
விண்டுசித்த ரெனவுலகு புகழ்பெரியார்
தவம்பொலிந்து விளங்கும் பேருய்ப்
பண்டுதித்த பூம்பாவை கோதைமலர்
வாய்ப்பிறந்த பனுவல் மாலை
வண்டுசுற்று கோவையினும் நான்மறைமாக்
கோவையினும் வளத்த தேகொல்!
மண்டுசித்த மகிழ்ச்சியுற வணிந்தனையெந்
திருமாலே! வழங்கு வாயே.

நிலைமண்டில ஆசிரியப்பா

தெனாலி : சுவைமலி கவிதையைச் சொல்லிக் காட்டி
அவையக மலர்த்திய அரசர் பெரும!
தமிழரே சொல்லித் தமக்குளே மகிழ்ந்த
கோதை கவிதையின் குளிர்சுவை நந்தம்
தேனினு மினிய தெலுங்கு மொழியினும்
யாம்பெற வருளிய வேற்றம் நுமதே.
திம்மரசு : காவிய மிதன்கண் காவலர் கடமை
இதுவென யாண்டு மியம்பிய துண்டோ?
அரசர் : தகுமிட மறிந்தே புகுகென வரசியல்
நெறியினை முறையுற நிகழ்த்தினே னைய!

அப்பளா: ஆண்டாள் கதையினில் அரசியல் ஏது?
சூடிக் கொடுத்தாள்; பாடிக் கொடுத்தாள்;
அரங்கனை மணந்தாள். அத்துணை தானே!

அரசர்: உண்மைநீ ருரைத்தது. பெண்மை விளக்கமாம்
ஆண்டாள் வரலாற் றளவே யிதனையான்
முடிவு செய்திலேன். முடிவறு பரம்பொருள்
விளக்க முலகினர் மேவவே யருளிய
யமுனைத் துறைவ ரெனுநற் பெயர்கொளும்
ஆள வந்தா ரரும்பெருஞ் சரிதையும்
ஒருவா றிதன்கண் மருவ வமைத்துளேன்.

இராதா: நாத முனிகளின் நன்மர புடையார்
கலைக்கொரு கடலெனக் கதித்தவ ரவரே.
அவர்சில காலம் அரசினை யாண்டார்.

அரசர்: ஆமாம்! அவரே அவரர சாண்டுதம்
மகனார் தோளிலவ் வன்பொறை யிறக்கித்
தவஞ்செயப் போயினர் தகுவன வருளியே.

பட்டு மூர்: அரசியல் நெறியினை அவர்வாய்ப் பெய்தீர்
ஆந்திர ரறிய அமைத்தீர் போலும்!
ஆங்குள மொழிசில அறைய வேண்டும்.

அரசர்: ஒருமொழி யுரைப்பல், புரிவினிற் கொள்கவே.

**எழுசீர் ஆசிரிய விருத்தம்**

பொருளினை வளர்க்கு நெறியிது புகல்வேன்
புதல்வ! நீ யுளத்தடைத் திடுதி:
உருளுறு மிரதக் கதிரவன் முகிலை
யுதவுநீ ருட்டினை வளர்க்க!
தெருளுறு புலவர் புகழவே நாட்டின்
செழிப்பினில் மனஞ்செலுத் திடுக!
இருளுறு பகைவர் நெருங்கவும் விடாமல்
இயன்றன வெலாம்புரிந் தாள்க!
'இறையினைக் கொடுக்கும் வகையிலேம்! விபினம்
ஏகுதும்!' எனக்குடி கலுழ
முறையினைச் சிறிதும் நினைகிலா மூர்க்கர்
முழுவது மவர்தம துடைமை

நிறைவுறக் கவர்து மெனவுரைத் ததனை
நிகழ்த்தவும் துணிந்திட வவரை
மறைவறு பதவி யிருத்துமன் னவனை
மகிதல மதிப்பது மிலையே.

நேரிசை ஆசிரியப்பா

அ. பெத்த: அரசே! இக்கருத் தழகிதே! அழகிதே!

அரசர்: என்கவி கேட்ட திவ்வள வாகுக!
இனிநுங் கவிதை யான்செவிக் கொள்ளுவன்.
சீநாத மாகவி சிட்டரென் றவனி
போற்றிய இருமொழிப் புலவரே! நீயிர்
இயற்றிய கவிதையை இனியீங் கருளும்.

அ. பெத்த: அரசர் பெரும! நும் மாட்சியைப் புகழ்கோ!
நாட்டின் பெருமையை நன்கனம் புகழ்கோ!
நகரத் தெழிலினை நயந்தனன் புகழ்கோ!
விசய நகரென மேதினி யறியப்
பொலியுமிந் நகர்க்கிணை பொன்னுட் டுளதோ?
துங்க பத்திரைப் பொங்குநற் புனலாற்
சாகர மிதுவென்த் தக்க நலமெலாம்
பொலிய வலைகளால் மலிகுளம் புகழ்கோ!
நகரத் தெருக்களை நாவுறப் புகழ்கோ!
கலத்தாற் காலாற் கணக்கறு விரிந்த
வணிகத் துறையின் மகிழ்ச்சியாற் புகழ்கோ!
உழவர் தொழிலின துயர்ச்சியைப் புகழ்கோ!
நாடெனப் படுவது நல்லீர்! உமதே;
நகரெனத் தகுவது விசயமா நகரே;
ஆங்குள சிற்ப வாலய வமைப்பெலாம்
யாங்கணு மிந்நா ளில்லையீ துண்மை.
புலமை பொலியுமெம் புரவலீர்!
எதனையான் பாடுவன்; எய்யேன் சிறிதே.

நிலைமண்டில ஆசிரியப்பா

அரசர்: எய்யாத் திறத்தா லிங்ஙனம் புகன்றால்
அழகெலா மமைத்துநீ ராக்கிய செய்யுளைக்
கேட்கத் தக்கவன் கேசவ னொருவனே.

அவன்கதை நன்குநீ ரமைத்தி ரன்றோ ?
அரிகதா சாரம் அரியதோர் காவியம்.
அதன்நய மறிவதற் கவாவுவர் பலரே.

அ. பெத்த : மனுச்சரித் திரமென மற்றொரு காவியம்
ஆக்கினே னுரிமையென் றதனையேற் றருள்க !
பூர்த்தியென் றின்னும் புகலத் துணிகிலேன்.
மானவர் புகழ்சொல வருமச் செய்யுளில்
தேனினு மமுதினும் தெளிசுவைத் தெலுங்கில்
நாடு மனங்கொள நவின்றனன் சிலவே.

அரசர் : ஆரிய மொழியின் அமைதிநன் கறிவீர் !
ஆயினுங் கவியெலாம் அமுதினை வெல்லுநம்
தெலுங்க மொழியிலே செய்தீ ராதலின்,
ஆந்திர கவிதா பிதாமகன் எனநுமை
உலக மறியவே ஓதுவம் புலவீர் !
அறிவினுற் பெரியர் அமைச்சர்திம் மரசு.
கவியினுற் பெரியீர் கவிஞர் நீரே.
ஆதலின், நுமக்கிவண் அரும்பொற் குவையால்
அபிடேக மியற்ற வவாவினம் இன்னே.

நந்தி : அதுவே தகுவதெம் அரசர் பிரானே !
கலைமகள் திருவருள் கவினுமிந் நாளே
பொருந்திய நாளித் திருந்திய பணிக்கே.

அரசர் : இரத்தின கம்பளம் ஈங்கே விரிக்க !
பொன்னும் மணியும் பொலிவுற வருக !

[அதிகாரிகள் அனைத்தும் செய்கின்றார்கள்.]

திம்மரசு : புலவர் பெருமான் பூசனைக் குரியார்.
அரசர் பெரும ! அவர்க்கது செய்யலாம்.
அமைச்சுத் தொழிலுளே மாதலி னெம்மை
உயர்த்திப் புகழ்வதை உலகின ரொப்பார்.

கோபன்னு : 'உலகம் என்ப துயர்ந்தோர் மாட்டே.'
ஈங்குள பெரியோர் இயைவரே யாயின்,
அரசர் விரும்பிய தாற்றத் தடையென் ?

இராமா : புலவர் குழுவினிற் புலவருட் டலைமை
தாங்கத் தக்கவர் சாளுவ திம்மர

சென்பது நல்லோர் யாவரு மறிந்ததே.
புலவரென் றிருந்தே புதுமை புதுமையாக்
கவிதை புனைவதிற் கருத்தவர் கொள்வரேல்,
அரசினைத் தாங்கு மமைச்சுத் திருப்பணிக்
கெம்முளும் நாட்டுளும் எவருமிங் கிலையே,
ஆதலி னன்றே யவரையெம் மினத்தினின்
றகலவு மமைச்சியற் காகவும் விடுத்தேம்?
ஈதுநன் கறிந்தும் ஏனிது புகலுவர்?

**இலட்சுமிதரர் :** மன்னவர்க் கிருகண் மணியென விளங்கும்
அமைச்சரும் புலவரும் ஆடகம் குளித்தல்
எமக்கெலாம் விருப்பே.

**தெனாலி :** எனக்கும் சம்மதம்!
புலமையைப் போற்றும் புரவலர் நீரென
உலக மறிய வுவந்தன செய்வீர்.

**அரசர் :** கனகம் தருக! கனகம் தருக!

[அதிகாரிகள் பை பையாகத் தர,
அரசர் முதலிற் புலவர்க்கு
அபிடேகம் நடத்துகின்றார்.]

**அ. பெத்த :** குபேரனும் வெட்கம் கொள்ளுவன் வேந்தே!
பொன்னின் குவையிது போது மெனக்கே.

**அரசர் :** இவ்வள வேயோ வீவன நுமக்கே?
விருப்புள பகுதியில் விரிந்தநந் நாட்டுள்
ஊரு ராகநீர் உவந்தன கொளலாம்:
அவற்றைநும் மனம்போ லறங்களுக் குதவலாம்.

**திம்மன்ன :** முன்னே பெற்றன மூந்நூ றூர்கள்.
இன்னும் அளித்திடின் யானவை தம்மை
ஆலயத் தரும மாகவே யுதவுவன்.

**அரசர் :** யாதுநீர் செயினும் ஈவன கொண்மின்.

**தெனாலி :** கொடுத்த கோமகன் குணமே பெரிதோ,
கொண்ட புலவர்தம் குணமே பெரிதோ,
அறியே னறியேன்!

**கோபன்ன :** அறம்விளங் கரசின்
ஆதர வடையும் அரும்பெரும் புலவர்

புரவலர் போலவே பொன்னினை வீசுவர்.
புதுமையன் றிதுவே.

**சபாபதி :** பொருத்தம் பொருத்தமே!

**அரசர் :** இரத்தின கம்பளத் திருக்கவெம் மப்பா.

**திம்மரசு :** உள்ளம் கூசும் உவந்தங் கிருக்க!
அரசர் ஆணை ஆதலின் வருவேன்.

**இலட்சுமிதரர் :** அரசர் ஆணை அமைச்சரை விடுமோ?

**அரசர் :** பொன்னினைத் தருக! பொன்னினைத் தருக!

[அதிகாரிகள் பை பையாகத்தர, அரசர் முதலிற் பெரும்பகுதியை அபிடேகம் செய்யப் பின்பு புலவரும் செய்கின்றார்.]

**திம்மரசு :** வறுமையால் வாடிய மரபினிற் பிறந்தேன்
அரசைச் சார்ந்ததால் அடையும் பெருமை
ஈதென வறிந்தேன். இறையே வாழிய!

[அபிடேகம் நிறைவேறுகின்றது.]

**அரசர் :** நவமணி வகைகளை நன்கனம் கொணர்க!
மணிக்குவை கொட்டி மறைப்போ மிவரை.

[நவமணிகள் வருகின்றன. அதிகாரிகளிட மிருந்து அவற்றை வாங்கி அரசரே திம்மரசு தலையில் அபிடேகம் செய்கின்றார்.]

**திம்மரசு :** அரசர் நீரே!

**அரசர் :** அமைச்சரும் நும்மின்யார்?
தக்கவர் தமக்குத் தகுவ தியற்ற
அறியா னொருவன் அரசா யிருந்தென்?
அவனா லுலகினர் அடைபய னுளதோ?
புலவீர்! நுமக்கினிப் பொழிவன் பொன்மழை;
நவமணி மழையும் நலமுறப் பொழிவன்.

[அவரவர்க்குத் தக்கவாறு சம்மானம் அரசரே வழங்குகின்றார். எல்லாரும் முகம் மலர்ந்து மனமகிழ்ந்திருக்கின்றனர்.]

சபாபதி: நராதிப ரிவர்போல் நவமிசி விழவினை
நிகழ்த்திஞ ரெவரே? நேயப் புலவீர்!
வாழ்த்துமின் மன்னவர் மரபினை மகிழ்ந்தே!
அரசிய ரிருவருக் கரச குமரிகள்
பிறந்துளர்; இன்னும் பிறந்திலர் இளவர
சாதலி னுந்தம் ஆசியால் அரசர்
வழிவழி வளர வாழ்த்துமின் இன்னே!

புலவர்கள்: இலக்குமி தரரே எம்முட் பெரியார்.
அவர்வாய் வாழ்த்தின் அங்ஙனே யமையும்.

இலட்சுமிதரர்: வாழிய அரச! வாழிய வள்ளால்!
வாழிநின் மரபு வழிவழி சிறந்தே!

எல்லாரும்: வாழி! வாழி! வாழி! வாழி!

[தருமாதிகாரி வந்து அரசரை வணங்குகின்ருர்.]

அரசர்: வருக வருக தரும வமைச்சே!
செயத்தகு நல்லறம் செவ்வனே செய்யின்
அரசு வாழுமென் றறிதிர்நீ ராதலின்
நிகழ்ந்தவை நிகழ்பவை நிகழ்த்துமின் நேரே.

தருமாதிகாரி: விசய நகர வேந்தர் பெருங்குலம்
பெரும்புகழ் படைக்கப் பிறந்தபே ரரசே!
போர்க்களம் புகுந்துநீர் பூண்ட புகழினும்
அறத்தாற் புனைபுகழ் அதிகமே யென்பதை
ஈங்குள புலவர் யாவரு மறிவர்.
அனுமதி பெற்றதால் அவைசில வியம்புவன்:

திம்மரசு: இனிவரு மரசரும் ஈங்குள பெரியரும்
பிறருநன் கறியப் பேசுமின் அவையே.

தருமாதிகாரி: அறிந்த வளவில் அவற்றை விளம்புவல்:
மகுடம் புனைந்த மங்கள வாண்டில்
விருபாக்க வாலய வெளிக்கோ புரமும்
அகக்கோ புரமும் அமைக்கப் பட்டன.
ஆங்கே யழகிய வரங்க மண்டபம்
எழுந்தது. தேவனுக் கிரணியத் தாமரை
நவமணி குயிற்றி நல்கப் பெற்றது.
நாகா பரணமு நலமுற வியன்றதால்.

உதய கிரியினை உரிமை பூண்டதும்
ஆங்குள கோயிலி னமலனுக் கெனவே
தேவ தாயமுத் திருவூ ராயின.
திருமலை நின்ற திருமறு மார்பன்
கனகாபி டேகம் கவினுற நிகழ
முப்ப தாயிர மோகரா வாயின.
வயிரமு முத்தும் மாணிக்க மரகத
வகையு மழுத்திய வயிரகங் கணமும்
நவமணி குயிற்றிய நால்வடக் கோவையும்
ஆங்கே யிறைவனுக் கர்ப்பண மாயின.
இந்நகர் புகுந்த எம்பிறை கண்ணனுக்
காலய மெழிலுற வமைக்கப் பெற்றது.
குழந்தைக் கண்ணனைக் கோலமண் டபத்தில்
தவழ வைத்தவன் தனித்திருப் பூசனைக்
காயிரம் பொன்பெறு மரதனப் பணிகளும்
பொற்கல வகைகளும் நற்கலம் பிறவும்
அளிக்கப் பெற்றன. அன்றியும், ஒன்பதூர்
மானிய மாக வழங்கப் பெற்றன.
'இராமன தாலயம் இனிதிவை பெறு'கெனத்
தேவியர் இருவரும் செழுமணிப் பூண்பல
ஊர்பல வுதவினர் உவப்புறு முளத்தின்.
கொண்ட வீடுநாம் கொண்டதன் பிறகிரண்
டரசியர் தம்மொ டரசர் பெருமான்
தரணிக் கோட்டையாம் தானகட கத்தே
அமர்ந்த தலைவனை அமரே சுரனை
வழிபட நினைந்தனர். மற்றத் தலத்தே
பொன்னிறை துலையிடைப் புகுபெருந் தானம்
அமரே சுரனுக் கரச ரளித்தனர்.
அரசியர் தம்முன் திருமலா தேவி
சத்த சாகர தானஞ் செய்தனள்.
இரத்தின தேனு வெனும்பெருந் தானம்
சின்ன தேவி செய்து மகிழ்ந்தனள்.
அரசர்தம் பெற்றோர் அமருல குறுகெனப்
பேரு ரொன்றினைப் பிரானுக் களித்தனர்;
வேத மோதிய மேதையர் நூற்றறு

பெரியர் கொள்கெனப் பினுமிரண் டூர்கள்
ஆங்கே யளித்தனர்; அரங்க நாத
தீக்கிதர் தமக்கும் செய்தனர் தானம்:
கலிங்கஞ் சென்ற காலையி லகோபில
நரகரி தேவன் நற்றளி புகுந்தே
வயிர மழுத்திய மதாணி தூங்குமோர்
நவமணி மாலை நல்கினர் அவற்கே;
செம்மணி குயிற்றிய செம்பொற் கடகமும்
பசுமணி யழுத்திய பணிகளும் பொன்னால்
அமையுமோர் கலமும் ஆயிரம் வராகனும்
மனமுவந் தளித்தனர் வ்ள்ள லவற்கே;
அரசியோர் மதாணி அளித்தனள் தனியே.
நிவேதனம் நிகழு நினைப்பால் மதுரை
எனுஞ்சிற் றூரினை இறைவனுக் காக்கினர்.
சிங்க சயிலம் சேரும் பெருமான்
சிங்கப் பெருமாள் திருவருள் பெறவே
அரசரோ டரசியர் அறம்பல புரிந்தனர்.
பொற்பணி மணிப்பணி பொற்புற வளித்தனர்.
அரச மகேந்திர புரமதி லரசியர்
நல்லோர் பலர்கொள நல்லறம் புரிந்தனர்.
திருக்கா ளத்தித் திருப்பதி யதன்கண்
அறம்பொலி சத்திர மமைக்கப் பெற்றது.
நூறு கால்கொளு நுட்பக் கைவினை
மண்டப மொன்றும் வளர்கோ புரமும்
வகுக்கப் பெற்றன. வருங்கா லரன்வாழ்
திருவண் ணமலைத் திருநக ரதன்கண்
ஆயிரங் காலுள அழகிய மண்டபம்
தெப்பக் குளமொன் றெுப்ப வமைந்தன.
திருமலா தேவி திருக்கோ புரமும்
பதினொரு நிலையுடன் பணிசெயப் பெற்றது.
உத்தம சோழன் உயர்திரு வாயிலில்
கதவுகள் பொன்னாற் கவியப் பெற்றன.
பொற்கலம் பலவும்வெண் பொற்கலம் பலவும்
இறைவனுக் குதவ வீயப் பெற்றன.
ஐம்பொற் சிலைசில வாக்கப் பெற்றன.

திருச்சிற் றம்பலச் சிதம்பர நகரில்
வடக்குக் கோபுரம் வகுக்கப் பெற்றதால்.
அழகர் கோயிலென் றுண்டையார் புகலும்
சோலை மலைத்தளி மேலுறு திருமால்
கழல்களை வணங்கிய காலையில் அரசரும்
தேவியர் தாமும் செய்பல வுதவினர்.
மதுரைத் திருநகர் வாழ்கயற் கணியும்
சொக்க னுகிய சுந்தர மூர்த்தியும்
பல்லா யிரம்பொற் பணிகள் சூடினர்.
ஆமுக்த மால்யதா அரசரே யியற்றக்
காரண மாகிய கவிப்பே ரரசியாம்
கோதை பிறந்த மேதகு திருப்பதி
விண்டு சித்தர்தம் வில்லிபுத் தூரில்
திருமுக் குளமும் செவ்விதி னமைத்ததன்
இடைமண் டபமும் இயற்றப் பெற்றதால்.
அகத்திய மலையினி லாயதோர் கோபுரம்.
நெல்லைத் திருப்பதி நிலைகொளு மம்பலம்
செம்பினு லமைந்து சிவனுக் காயதே.
அத்திரு நகர்க்கரு கரசர் பெயரால்
கிருட்டிண ராய புரமெனு மகரம்
அந்தணர் குடிக்கென அமைக்கப் பெற்றதே.
இராமே சுரந்தனை எய்தி யாங்குப்
பருவத வர்த்தனிப் பரைதிரு மேனி
புதையப் பலபணி பூட்டப் பெற்றன.
இராம நாதனும் ஏற்றனன் திருப்பணி.
தனுக்கோடி தலமும் சாரப் பெற்றது.
பொன்னினைத் துலையிற் பொதித்து மும்முறை
துலாபுருட தானம் தொன்னூல் முறையே
வடநாட் டமர்களால் வரும்பல பாவமும்
ஒழிகவென் றுன்னி யுதவப் பெற்றது.
மூன்னா ளாங்கு முறையே யிருந்துபின்
கோகன நற்பதி குறுகப் பெற்றது.
பெரிய நாயகிக் குரிய கோகனன்
கொள்கென நவமணி கொடுக்கப் பெற்றது.
சின்னுட் சென்றபின் சீரங்க பட்டினம்

சேர்ந்த அரசரும் தேவியர் மூவரும்
ஆதி யரங்க நாதனுக் காகப்
பொற்பணி மணிப்பணி பொழிந்தனர் போற்றினர்.
இவையெலா நிகழ்த்தி யீங்குறு மன்னவர்
புலவர்நும் முன்னிலை பொன்னும் மணியும்
தக்கவர் பெறுகெனத் தந்தது நோக்கினீர்
இங்ஙனே யின்னும் இனிதே தருமம்
முறைமுறை நிகழ முழுமன முடையநம்
அரசர் வாழிய! அவர்குடி வாழிய!

தெனாலி : பெரும்பொரு ளளித்த பிரான்தன் திருப்பணிக்
கரும்பொரு ளனைத்து மமைத்தபே ரரசு
புகழொடு பொருந்துதல் புதுமை யன்றே?
அரசர் பிரானீர்! அமராற் பெறுபுகழ்
மேரு விமயம் விந்தியம் போலும்!
அறத்தாற் பெறும்புகழ் அவனியைச் சூழும்
எழுபெருங் கடலினும் ஏறுமென் றுரைதுவன்.
புகழப் புகலும் புதுக்கவிப் புலவீர்!
கவிதையி லடங்காக் கழிபுகழ்க் கோமகன்
மரபுவா ழியவென வாழ்த்துதிர் மகிழ்ந்தே!

புலவர் : மனமுற வாழ்த்துதும்; வாழியர் மரபே!

அரசர் : அறிவினுற் பெரியீர்! அன்பினுற் பெரியீர்!
ஒருமொழி புகலுவல் உவந்தினிக் கேளீர்:
புதியதோர் நகரம் வதிதர வமைத்தேன்.
விசய நகர்ப்பெரு வீதியு மந்நகர்
மாபெருந் தெருவு மயங்கு மிணங்கியே.
நாற்பெருங் குலத்தோர் பாற்பட வாழப்
பலப்பல மாளிகை புலப்பட வமைத்த
வீதிகள் எண்ணில விளங்கு மதன்கண்.
தொழில்வகை வளரத் தோன்றுபல் குடிகளும்
இயல்புற வாழ வியல்தெருப் பலவுள.
ஆலயம் பலவும் அரண்மனை பலவும்
தக்க விடங்களில் தகவே யமைந்துள.
அந்நகர் புகுதற் கமைந்தநாள் நாளையே.
எம்மவர் யாவரும் எம்முடன் வருக!

நகரவர் பலர்க்கும் நல்வர வுரைத்தேம்.
எந்தாய் பெயரதற் கிட்டுளேம் ஆதலின்
நாகலா புரமென நாடினி வழங்கும்.
எண்ணிய வெல்லா மினிது நிகழுக!

திம்மரசு : அங்ஙனே யாகுக அரசர் தலைவரே!

[சபை கலைகின்றது.]

## ஐந்தாம் களம்

| | |
|---|---|
| இடம்: | நாகலாபுரப் பெரிய அரண்மனை |
| காலம்: | முற்பகல் |
| பாத்திரங்கள்: | அரசர், திம்மரசு, இராமராயர், திருமலை ராயர், பாமினியிளவரசர், கிரிஸ்தபோ-டி-பிகரிடோ, திருமலாம்பிகை, வெங்கலாம்பிகை, அரங்கநாத தீட்சிதர், பிற புரோகிதர், தோழியர், சேவகர் முதலியவர். |

[கலியாண மண்டபத்தில் அரசரும் அமைச்சரும் தக்க இருக்கைகளில் அமர்ந்திருக்கின்றனர். புரோகிதர் கலியாண வைபவம் நடத்துகின்றார். இராம ராயர் திருமலாம்பிகையோடு அமர்ந்திருக்கின்றார். திருமலை ராயர் வெங்கலாம்பிகையோடு அமர்ந்திருக்கின்றார். வாத்தியங்கள் முழங்குகின்றன.]

### நிலைமண்டில ஆசிரியப்பா

அரங்க: மங்கள வாத்தியம் சங்கம் முழங்குக!
பெரியோர் மணமலர் புரிவொடு தூவுக!
திருமணம் புரிந்த திருமலைத் தேவியும்
இராம ராயரும் இனிதே வாழ்க!
வெங்கலாம் பிகையினை விரும்பினர் வேட்ட
திருமலை ராயரும் சிறப்புற வாழ்க!

[மலர் மழை பெய்கின்றது. வாத்தியம் முழங்குகின்றது. திரை மறைவில் நிற்கும் பிராமணப் பெண்டிர் மங்களம் பாடுகின்றனர். சிலர் தாம்பூலம் வழங்குகின்றனர். பிராமணர் சபையில் இருப்போர்க்கெல்லாம் சந்தன தாம்பூலம் வழங்குகின்றனர்.]

அரசர்: இருவர்தம் பதிகளும் இனிதே வாழ்க!

இராம: அரசர் பிரானரு ளடியேன் பேறு.

[வணங்குகின்றார்.]

திருமலை: வணங்குவல் யானும் மன்னர் பிரானே!

அரசர்: மருக வுரிமை வாய்த்த செல்வரே!
கண்ணினுண் மணியெனக் கருதிப் பேணிய
பெண்ணருங் கலங்களைப் பெறுகெனக் கொடுத்தேன்;
அன்பின் செல்வம் அமையநீர் வாழ்திர்!

அரங்க: அரசியர் மனமுவந் தமைந்த திருமணம்
நன்றே யாமென நாடெலா மறியும்.
இளவர சியரினி எவ்வகை யின்பமும்
மலிய இறையருள் பொலிய வாழுவர்.

திம்மரசு: அரசரைக் காண வவாவின ரினியிவண்
வருவது பொருத்தம்.

அரசர்: வருக வருக!
யாவரே வரினும், எதனையே யிரப்பினும்,
திருமண நாளிது புரிவினை டீகுவம்.

[பாமினி இளவரசர் வந்து
வணங்குகின்றார்.]

திம்மரசு: வருக வருக மன்னவர் குமரீர்!
அரச ரருகடைந் தவாவிய துரைக்க!

பாமினி: அரசர் பிரானே! அரசச் செல்வம்
ஆண்டுகள் பலவாய் ஆண்டவர் மரபில்
வறுமைக் கிருப்பாய் வாழ்வேம் இன்றே.
இளையவர் இருவர் எனக்குளர். அவரொடு
முன்னைநாள் எந்தம் முன்னோர் வாழ்ந்த
பெருமையை நினைந்தே பேதுற் றிடுவேன்.
இன்றுமூன் றரசாய் இருக்கு மிவைமுனம்
எந்தையர் ஒன்றாய் இயக்க விளங்கிய
தரசர் நீரே யறிதிர் நன்றே.
அமுத நகரமும் விசய புரமும்
கோல கொண்டமும் கொண்ட

எமக்கென வொன்றுமின் றிலை;என் செய்வேம்!
'கேட்டவர் கேட்டவர் கேட்டன பெறுக'என
வாய்மொழி யருளி வழங்கும் வள்ளால்!
எமக்கெந் நாட்டினை ஈந்தருள் புரிதிரோ?

அரசர்: ஐய! நீர் புகன்றன வனைத்தும் கேட்டேன்;
செய்யத் தகுவன செய்குவன் விரைவினில்.
வாழ்வும் தாழ்வும் மக்களுக் கியல்பே.
வாழ்ந்தவர் தாழின் மனந்தளர்ந் தழிவர்;
தாழ்ந்தவர் வாழின் தருக்கினு லழிவர்.
எவர்க்கும் நிலையிலை யிந்நில வாழ்வே.
இளையோர் இருவரும் ஈங்கே யிருக்கலாம்.
ஒவ்வொரு வருக்கும் ஒருபதி னுயிரம்
வராகன் உதவுவன் வருடந் தோறும்.
உமக்கும் மரசினை யுதவுத லுறுதி.

பாமினி: அதுவே வேண்டுவ தரசர் பெரும!

திம்மரசு: அங்ஙனம் நிகழும் ஐய மின்றியே.
எமக்குமங் கவர்க்கும் இன்றுநட் புளது.
பகைக்கும் காரணம் பார்க்க வேண்டும்.
அதன்பினர் நுந்தம் அரசு நுமக்கே.

பாமினி: அரசர் போர்களுக் கமைந்த காரணம்
இருப்பது மரிதோ? இயற்றுவ தரிதோ?
சூழ்ச்சித் திறத்திற் றுணிபினி னிகரிலா
அமைச்சர் இருக்கையில் அதுகிடை யாதோ?
விரைவினி லெந்த மரைசினை யாம்பெற
அருளுதல் நும்பொறுப் பாமென மொழிவேன்.

அரசர்: அமைச்சர் தலைவிர்! அடில்ஷா நம்மொடு
நண்பு பூணுமிந் நாளினில் நாமவன்
நாட்டினைத் தாக்கக் காட்டுமோர் காரணம்
உளதோ? ஆராய்ந் துணர்த்துமின் இன்னே.

திம்மரசு: காரண முளதெனக் காட்டலா மொன்றினை.
'போது மது,'எனப் புகலத் துணியேன்.
பெரும்போர் எழுந்து பீழையே விளைக்க
அத்தகு காரணம் அமையா தென்பர்.

DIP. IN LINGU.

அரசர்: அதனையிங் குறையும்; அமையுமோ பார்ப்போம்.

திம்மரசு: அரசர் பெரும! யா னறைகுவ னதனையே:
நம்மிடம் பலநாள் நன்கு பயின்றவன்
நம்மாற் பலப்பல நன்மைக ளடைந்தவன்
செல்வஞ் சிறந்துள சித்திமரக் காயர்
கோவை நாட்டினிற் குதிரைகள் கொள்கென
நாமே சொல்ல நாற்பதி னாயிரம்
வராகன் கொண்டு வழிக்கொண் டனனே.
யாங்கவன் போயின னென்ப தறியேம்.
மீளற் குரியநாள் மீண்டில னவனே.

அரசர்: இப்பொழு தவன்செயல் யாதென வறிதிரோ?

திம்மரசு: ஒற்றரா லொருவா றுணர்ந்தே னரசே!

அரசர்: யாது கூறினர்? இயம்புமி னைய!

திம்மரசு: கோவைக் கருகினிற் குறுகின னவனே;
அடில்ஷா முயற்சியா லங்கிருந் தோடினன்.
பொன்னொடு மவன்பாற் போயின னென்றார்.
அவன்மிகக் கற்றவன் அறநூ லெனவே
கேட்டதால் அவனுக் கேற்றவோர் தலைமை
விசய புரியார் விரும்பியீந் தனராம்.
தாபூல் நகரின் தலைமையின் றவற்கென
அறிந்தேன். ஆயினும், அயலார் அவனைக்
கொள்ளைக் காரர் கொன்றனர் என்ப.
உண்மைவே றுள்ள துரைப்பன் உணர்ந்தன:
அடில்ஷா ஏவலால் அவ்வர சேவலர்
பணத்தைக் கவர்ந்து படுத்தன ரவனை.

அரசர்: எம்முடை மனிதனை இங்ஙனம் இவரே
கொன்றது குற்றம். ஒன்றிது போதும்.
போர்க்கினி யெழுகம்; புறப்பட லாமினி.
நம்வலி யடில்ஷா நன்கினி யுணரக்
காலம் வந்தது. காட்டுது மதனை.

[கிரிஸ்தபோ-டி-பிகரிடோ அரசரைக்
காண வருகின்றார்.]

திம்மரசு : ப்ரங்கியர் ஒருவர் பார்க்க வந்துளர்.

பிகரிடோ : திருமண மெனவே தெரிந்து வந்தேன்.
மணமகன் மணமகள் மனமுற மகிழ்ந்தே
கொள்ளுக இவற்றைக் கொடுப்பன் அரசே!

[பரிசுகள் பல கொடுக்கின்ருர். உரிய அதிகாரிகள் அவற்றைப் பெற்றுப் போகின்ருர்கள்,]

அரசர் : வருக! நும் நாடு வளமிக் குளதோ?
பரிகள் முன்போல் வருவ துளதோ?
இன்னுமெண் ணுயிரம் இருப்பினும் வேண்டும்.
நம்நாட் டினுக்கு நற்பரி யுதவும்
பணிநும தெனநீர் துணிவுறக் கருதுவீர்.

பிகரிடோ : பதினு யிரமுள பரிமா வெம்மிடம்;
பேசிய வண்ணமே பிரிவ மவற்றை;
அயலார் கேட்பின் அவற்றை யளியேம்;
சொன்னசொல் தவறும் தன்மையி லேமே.

அரசர் : நல்லது சொன்னீர் நண்பரே! நீவிர்
இயற்று முதவியை யென்றும்யா மறவேம்.
கோடி கொடுப்பது குலவற மெமக்கே.
இதனைநீர் பெறுதல் ஏற்ற தாகும்.

[கோடி வேட்டி கொடுக்கப்படுகிறது,]

திம்மரசு : அரசர் பிரானே! அயலவ ரேனும்
இவர்நம் கருத்தினை ஈதென வறிதல்
நன்றெறன வென்னுள நவிலுவ துளதே:
இராய்ச்சூர் முற்றுகை யியல்வுற வேண்டும்.
முட்கல் அரணையும் முற்றுதல் வேண்டும்.
புறப்படு முன்னரே பெறப்படு பரிகளால்
நம்படை வலிமிகு மென்பது காணீர்.

அரசர் : நரசிங்க மன்னர் நல்கிய சாசனம்
மொழிந்தன வரண்கள் மூன்றுமா மன்றே?
உதய கிரியெனு மொன்றே மீட்டேம்.
மற்றவை மீட்க வந்தது காலம்.

திம்மரசு : ஆதலி னிவரைநல் லசுவ வகையெலாம்
விரைவினில் தருகென வேந்தரே மொழிக!

அரசர் : போர்க்களம் புகுதும் புகழ்மலி நண்பீர்!
விரைவினில் எமக்குநீர் மிகுபரி தருக!
இனும்பிற வுதவிகள் இயலுமேல் இயற்றுக!
விருந்துண வருக! மிக்கன பின்னே.

[எல்லாரும் விருந்துண்ணப் போகின்றனர்.]



# மூன்றும் அங்கம்

## முதற்களம்

இடம் : இராய்ச்சூர்ப் போர்க்களம்
காலம் : முற்பகல்
பாத்திரங்கள் : அரசர், திம்மரசு, காம நாயக்கர், திரியம்பக அரசு, ஆதியப்ப நாயக்கர், கொண்டமரசையா, குமார அரசு, கோவிந்த ராஜர், விசுவநாத நாயக்கர், வீரப்ப உடையார், அரிய நாதர், இஸ்மேல்அடில்ஷா, ஸலாபத்கான், பரங்கிப் படைஞர், முசல்மான் படைஞர்.

*நிலைமண்டில ஆசிரியப்பா*

அரசர் : ஈங்கு நம்படை ஏழுநாள் நின்றதே!
இசுமேல் அடில்ஷா ஏனினும் வந்திலன்?
போர்க்களம் புகுதல் பொருந்துமோ இல்லையோ?

திம்மரசு : இன்று வருவன் எனவே தோன்றும்.
நேற்றிரா வவர்படை யாற்றினைக் கடந்தது:
போர்செய நாமும் புறப்படல் நன்றே.

அரசர் : ஐய! நம்மிடம் அமைந்த படைக்கும்
அவன்பா லுள்ள வதற்கும் பேதமென்?

திம்மரசு : இந்நாள் போர்க்கெழ நன்ன ளாகும்.
எழுகம் விரைவினில் எதிர்ந்தோர் வணங்க.
நரபதி கேட்க நம்பால் உளபடை
அளவினி லடங்கா தாயினும் புகலுவன் :
ஆட்படை யெழுநூ றுயிர மாகும்;
இருபத் திரா யிரம்பரிப் படையுள;
அறுநூ றுகும் ஆனைப் படையே.
அவர்தம் படையின் அளவையு மறிந்தேன்:
ஆட்படை யிருநூ றுயிர மாகும்;
பதினெண் ணுயிரம் பரிப்படை யுண்டு;
களிறுநூற் றைம்பது காணப் படுமே;

குண்டுகள் வீசும் கொடும்படை பலவுள.
அவற்ருல் அவர்வலி அதிகமே யெனலாம்.

அரசர்: கனலி யெதிர்ப்பினும், காற்றே வரினும்,
கடலே பெருகினும் கலங்காப் படைஞர்
நம்மிட முள்ளார். நானிஃ தறிவேன்.
ஆதலின், வெற்றிக் கையமிங் கில்லை.
பரங்கியர் இன்னும் படர்ந்திலர் ஈங்கே.
அவர்துணை வாய்ப்பின் அமர்க்களம் கொளலாம்.

காமநா: போருக் கிறங்குதும் புகழைப் பொருந்த.

அரசர்: காம நாயக்கர் காக்க வலப்பால்.
திரியம் பகர்நீர் செல்லுக இடப்பால்.
ஆதி யப்பரும் அடுத்தே வருக!
கொண்ட மரசும் கோவிந்த வரசும்
எனக்கிரு பக்கமும் இருந்தனர் பொருக!
விசுவ நாதனும் வீரப்ப ராயரும்
அமைச்சரும் பிறகிருந் தாவன வியற்றுக!
புகுதும் களத்துப் பொருதும் அன்பரே!
முழங்குக முரசம்; முழங்குக சங்கம்;
தழங்குக பேரிகை; தழங்குக காளம்.
எழுந்தனம் போர்க்கென யாவரு முணர்க!

[இஸ்மேல் அடில்ஷா படையோடு எதிர் வருகின்ருர். அவர் படையில் மறைவாய் இருந்த பீரங்கிகள் குண்டுகளைப் பொழிகின்றன.]

அடில்ஷா: பொழிக குண்டுகள்! விழுகநம் பகைவர்!
ஆட்படை பரிப்படை ஆனைப் படைகள்
சேத முருது சிறிதுபின் னிற்க!
பகைப்படை முறிவது பார்த்து மகிழுவம்.

[குதிரைமேல் அங்கும் இங்கும் வந்து ஊக்கம் விளைத்துப் போர் தொடுக்கின்ருர்.]

கொண்ட: ஈதென்! ஈதென்! யாதும் புரியா
திருந்தவர் நிலத்தினில் எதிருற வுருளுவர்!
உருண்டவர் பிணங்களை ஒதுக்கவு மறியா
தவர்பின் னிருப்பவர் அஞ்சித் தளருவர்!

[ஓடுகின்ருர்.]

காமநா : அரச ரெங்குளர்? அரச ரெங்குளர்?
பகைப்படை பாய்வது பார்த்தும் நம்படை
ஒன்றும் செயாமல் ஓடத் தொடங்கும்.
[வேறு பக்கம் போகின்ருர்.]

ஆதியப் : கோழைகள் கூட்டம்! ஏழையர் கூட்டம்!
குண்டு மழையினைக் கொட்டுவர் பகைவர்.
நாடெலாம் வென்று நடந்த நம்படை
பின்னிடைந் தோடும் பீழையும் கண்டேம்.
அரசர் வந்தா லன்றியா காதே.
[மற்ருெரு பக்கம் போகின்ருர்.]

அடில்ஷா : கொன்று குவிக்க நின்ற படைகளை
எவரு மெதிருற வினியிட மில்லை
என்பதை ஆந்திரர் நன்குணர்ந் திடுக!
[பாய்ந்து செல்கின்ருர்.]

அரசர் : என்னே புதுமை! இதுவும் உண்மையோ?
கண்கொண் டிதனையான் காண்கின் றேனு?
வெற்றியே புனையும் விசய நகரப்
பெரும்படை யிரிந்தது சிறுபடை யதனுல்.
[கோபச் சிரிப்புச் சிரிக்கின்ருர்.]

விசுவ : அரசர் பெரும! அடியேன் உள்ளேன்!
உயிரினைக் கொடுத்தும் உடற்றுவன் கடும்போர்.

அரசர் : விசுவ நாத! விரைந்துபோய் வளைக்க!
புறங்கொடுத் தகலும் மறங்கெடு படைஞரை
மீட்டற் குரிய வினைகளைப் புரிக!
திம்மர சிடமும் செப்புக விதனை.
தலைவர் பிறரையும் தருகவிக் களத்தே!
[விசுவநாதர் விரைந்து ஓடுகின்ருர்; படை வீரர்
பலரையும் வளைத்து அழைத்து வருகின்ருர்.]

கொண்ட : பார்த்திவ! குண்டுகள் பாய்ந்ததும் நம்மவர்
செயலறி யாது திகைத்தன ரோடினர்.

அரசர் : நன்று கூறினிர்! நன்று கூறினிர்!
போர்க்களம் புகுந்தபின் புறங்கொடுத் தோடிய
மறவரைப் பெண்டிர் வரவேற் றிடுவரோ?

திம்மரசு : அரசே! படைஞர் அஞ்சினர் போலும்!
மீண்டனர் நும்மைக் காண்டலு மவரே.

அரசர் : (கோபத்தோடு படைஞரை நோக்கி)
யாது செய்தீர்! யாது செய்தீர்!
மறஞ்செய வந்தீர்; புறங்கொடுத் தோடினீர்.
வாளும் வேலும் வளைத்த வில்லும்
அம்பும் கரங்களில் அழகுக் குளவோ?
போரினில் நிற்கப் பொருதநும் கால்கள்
நாட்டினை நோக்கி நடக்கவும் துணியுமோ?
முன்னணி முடிந்தாற் பின்னணி யுளதே!
யானைகள் விழுந்தால் யானைகள் வருமே!
குதிரைகள் விழுந்தால் குதிரைகள் வருமே!
தலைவரே மடிந்தாற் றலைவருந் தோன்றுவர்!
அரசரே மடியினும் அரசன் தோன்றும்!
போர்க்கு நுழைந்த போர்ப்படை யிடையின்,
பதாதியர் இடையிற் பரிப்பவர் உளரோ?
ஓடினிர் யாண்டே யொளியும் கருத்தோ?
முன்விழு குண்டுகள் பின்விழ கிலவோ?
உயிரொடு நகருக் கோடிநீர் சென்று
கற்ப காலம் களிப்பொடு வாழ்திரோ?
மறவருக் குயிரினும் மானமே சிறந்தது.
பன்னெடு நாளாய்ப் பலபெருங் களங்களில்
ஈட்டிய புகழினை ஈங்கழித் தோடினீர்.
நாண முளதெனின், மான முளதெனின்,
முன்னே நடமின். முடியுங் காலம்
பிரளய காலம் பிறந்ததென் றெண்ணலிர்.
ஏமனே வரினும் எதிருற நின்மின்.
அரசுயா னென்னினும் அடில்ஷா படைமுன்
பாய்குவன். என்னுடன் பாய்ந்து தொடருதிர்.

விசுவ : இனுஞ்சிலர் ஓடுவர். யாது செய்யலாம்?

அரசர் : ஓடுவார் தம்மை யுடனே வெட்டுக!
பகைவர் படைக்குப் பயந்தவர் நம்மால்
வெட்டுண் டிறப்பது மேன்மையே யாகும்.

[அரியநாதர் அருகில் வந்து வாள்
தாங்கி நிற்கின்றார்.]

விசுவ : அரச ராணை யடியேன் புரிவன்.

அரசர் : அரிய நாத! தருகநம் வாளை.
முத்திரை பொறித்த மோதிர மிதனை
வாங்குக; பொதிந்து வைக்க மடியினில்.
போரினில் என்னுயிர் போமேல் இளஞ்சேய்
இளவர சொருவன் இருக்குநீ யறிதி.
அரசியர் தமக்கும் அயலுள பிறர்க்கும்
என்முடி வோதி யிளவர சவனை
அரச னுக்குக! அதுநினக் காணை.

அரிய : அரசர் பெரும! அடியேன் சிறியேன்.
இப்பெரும் பொறுப்பினை எப்படிப் பரிப்பேன்?

அரசர் : பிறரெலாம் போர்செய முறைமுறை யகன்றனர்.
அருகுளா னீயே யாதலி னினக்கிது
கடமை யாமெனக் கருதுக! போதி!
[படைஞரைப் பார்த்து வேகத்தோடு]
படைஞரே! மறவரே! பாய்மின்! பாய்மின்!
பிறப்பின் பின்னே இறப்ப துறுதி.
மான மிழந்த வாழ்வு வேண்டுமோ,
மான மிழவா மரணம் வேண்டுமோ?
பாய்திர்! பாய்திர்! பகைப்படை பாரீர்!
[பாய்கின்றார். படை பாய்கின்றது. அடில்ஷா குதிரைமேல் வருகின்றார். அருகில் அசாத்கானும் உடன் வருகின்றார்.]

அடில்ஷா : என்ன காட்சி! என்ன காட்சி!
இடைந்தவர் எழுந்ததும் எம்படை விழுந்ததே!
ஆந்திரன் தன்படை அனைத்தும் நடத்தினன்.
பாரிது நம்படை போரற வோடும்.
அசாத்கான்! வாநாம் ஆங்குப் போவோம்;
படைகளைத் தடுத்துப் படுப்போம் பகைவரை.

அசாத் : தலைவரே! ஒருமொழி சாற்றுவல்; கேளீர்:
நம்படை யெல்லாம் நாச மாயது:
நதியிடை விழுந்து நடுங்கி யழிந்தது.
ஈங்கினி நிற்பின் யாமும் அழிவேம்.
போதும் வாரீர்: மோதுவம் பின்னே!

அடில்ஷா : புறங்கொடுத் தோடவோ புகலுதி நீயே!

அசாத்: உயிர்கொடு போனல் உடற்றலு மாகும்.
உயிரினை யிழந்தால் உயர்வுதான் விளையுமோ?
வருக வரசே! மறைந்தனம் போவோம்.
பகைத்திற மன்னர் பாய்வது பாரீர்!

[இருவரும் குதிரைகளோடு மறைந்து ஓடுகின்றனர். அரசர் படைகளைத் தொடர்ந்து பாயந்து வருகின்றார்.]

அரசர்: என்னே வீரம்! என்னே போர்த்திறம்!
பகைவர் படையின் மிகையுறு தலைவருள்
இவனை நிகர்ப்பார் யாவரும் அங்கிலை!
ஒருவனே தனிநின் றுடற்றினன் பெரும்போர்!

விசுவ: பரங்கியர் சூழ்ந்து பாது காத்தனர்.
ஆதலின் இவன்நமை அமரி லெதிர்த்தனன்.
தன்படை யழிந்தது தானறி யலனிவன்.
தலைவன் மறைந்ததும் சமயத் தறிந்திலன்;
புறக்கொடை விரும்பாப் போரே புரிந்தனன்.
இன்னுமோர் நால்வர் இருந்தனர் பின்னர்.
ஐவரும் சிறையென வாயினர் அரசே!
சலாபத் கானிவன் தலைவனு மாகலின்
உரிய நிலையில்யாம் ஊக்குவம் இவனை.

சலாபத்: அரசே! தோல்வி யடைந்தே மாயினும்,
இத்துணை நாசம் எதிர்பார்த் திருந்திலேம்.
நதியி லழிந்தன அதிகமே யாகும்.
இருதிறப் படையிலும் எத்துணை யழிவே!

அரசர்: சிறையகப் பட்டது சிந்தையிற் கொள்ளலிர்.
போதும் இன்னும் போர்செய யாமே.
விசுவ நாத! மேதகை யோரிவர்.
அமைச்சர் பக்கல் அனுப்புக விவரை.
இராய்ச்சூர் அரணினை யானே தாக்குவல்.
இன்றே யதனகம் எய்திடல் வேண்டும்.

விசுவ: அரசே! உடன்வர வாணை யுளதோ?

அரசர்: அரிய நாதனை யழைத்து வருக!
இருவரும் துணைவர் என்னரு கிருப்பீர்.

[விசுவநாதர் போய் அரியநாதரோடு வருகின்றார். திம்மரசு அருகில் நிற்கின்றார்.]

திம்மரசு: அரணிது பெரிதே! அமைந்தது காவலும்.
தகர்க்கவும் கவரவும் மிகுத்தநா ளாகும்.

அரசர்: இன்றே யிதனை யெம்ம தாக்கி
வெற்றிக் கொடியினை விண்ணவர் காணப்
பறக்க விடுவம் பாரீ ரமைச்சரே!

திம்மரசு: பற்பல தலைவரும் படைஞரு முள்ளேம்.
அரணினைத் தகர்க்கும் முரணினும் குறையிலை.
பாசறைக் கேகிப் பார்த்திருப் பீரேல்
போர்புரி களைப்புப் போயபின் வரலாம்.

கொண்ட: யாமுள மரசே! இருந்து நோக்குதிர்.

காமநா: தோல்வியை மாற்றிச் சால்புறு வெற்றியை
அளித்தது மின்றிவர் அரிய தலைமையே.

[கிரிஸ்தபோ-டி-பிகரிடோ வந்து வணங்குகின்றார்.]

அரசர்: வருக பிகரிடோ! வருக நண்பரே!
இவ்வரண் பற்றுதல் இன்றெம் கருத்தாம்.
உம்மா லியலும் உதவி புரிதிரோ?

பிகரிடோ: அரசர் நீரிங் கமர்ந்தே நோக்குமின்.
அரணினை யொருநொடி யளவினிற் பற்றுவன்.

கொண்ட: வருதிர்யாம் அரணின் அருகிற் போகலாம்.

பிகரிடோ: அங்ஙனே செய்தும். அரசர் காண்க!

திம்மரசு: அன்பரே! நல்ல வமயத் தடைந்தீர்!
வெற்றி விளைப்பது முற்றிலும் நும்செயல்.

பிகரிடோ: இத்துணை வீரர் இருக்கையில் யானும்
என்னால் இயல்வன இயற்றத் தடையிலை.

[அரண்மேல் நிற்கும் வீரர் சிலர் கீழே நிகழும் அமர்க்களத்தை நோக்குகின்றனர். பிகரிடோவும், அவர் துணைவர்களும் அரண்மேல் நிற்பாரைத் துப்பாக்கியால் சுடுகின்றனர். பலர் மடிந்து விழுகின்றனர். அரணின் தலைவன் அரண்மேல் வருகின்றான்.]

அரண் தலைவன்: எத்துணை வீரர் இறந்தன ரீங்கே!
எங்ஙனம் இச்செயல் இயலுவ தறியேன்!
வில்லிலை வாளிலை வேலிலை யாயினும்
அரண்மே லிருப்பவர் அடியுண் டிறப்பர்!

பிகாரிடோ : நீயே விழுதி! நேருற வறிதி!

[சுட்டு வீழ்த்துகின்றார்.]

[விசய நகரப்படை அரணுக்குள் வெற்றி முழக்கோடு நுழைகின்றது. தண்ட நாயக்ரும் அமைச்சரும் தொடர அரசர் பிரான் பெருவாயில் வழியே நகர்க்குள் நுழைகின்றார். நகர மாந்தர் பலர் நகர் நடுவில் உள்ள பெருநிலத்தே கூடியிருக்கின்றனர். ஆங்குள்ள மேடைமேல் அரசர் வந்து நின்று சுற்றிலும் பார்க்கின்றார். விசுவநாதர் மேடையில் உள்ள கொடிக் கம்பத்தில் அரசர் கொடியை ஏற்றுகின்றார்.]

விசுவ : வெற்றி வெற்றி! விசய நகர
வேந்தர் குடிக்கு வெற்றி வெற்றி!
வாழிய கொடியே! வாழிய மன்னர்!
பகைத்தோர் கெடுக! பணிந்தோர் வாழ்க!
ஓங்குக பெருங்கொடி யுலக மெங்குமே!

அரசர் : நற்குணம் நிரம்பிய நகர மக்காள்!
சிலமொழி விளம்புவல்: நலமுறக் கொள்வீர்.
முந்தைநாள் நீவிர் எந்தம் குடிகளே.
அயலவர் பின்னாள் ஆண்டனர் உம்மை.
இறைதிரு வருளால் இன்றரண் மீட்டேம்.
அரசருக் கரசர் அமர்வினை நிகழ்வது
பழம்பெரு வழக்கமே. பார்த்து மிருப்பீர்.
மக்கள் நும்மையெம் மனத்திற் பகைத்திலேம்.
உம்முடைச் செல்வ முடைமை உமக்கே.
நிலங்களும் மனைகளும் நிறைபிற பொருள்களும்
முன்பு போலவே யின்றும் கொள்வீர்.
நுங்கள் உரிமைகள் நுங்கள் வசமே.
குடிகளின் பொருள்களைக் கொள்ளை யிடுவதெம்
படைஞரி னியல்பிலை. பயங்கொள வேண்டா.
யாவரு முன்போ லினிதே வாழுமின்.
தெய்வங் கொள்கையும் சித்தம் சென்ற
கலையும் பிறவும் காத்தல்நம் பொறுப்பே.
இவ்வள வுரைத்தும் எம்கொடி யின்கீழ்

இந்நகர் உறையும் எண்ண மிலாதவர்
தம்பொரு ளனைத்தும் தாமே கொண்டு
விரும்பிய வூர்க்கு விரைவினி லேகலாம்.
போநெறி தீங்கிலாப் போக்கு நல்குவேம்.
மக்கள் யாவிரும் மனநிறை யமைதியோ
டின்பநல் வாழ்வில் இனிவா ழுதிரே!

[நகர மாந்தர் கரகோஷம் செய்து, 'அரசர் வாழ்க!' என்று பெருமுழக்கம் செய்கின்றனர். அரசரும் படை வீரரும் தத்தமக்கு ஏற்ற இடங்களை அடைகின்றனர்.]

## இரண்டாம் களம்

இடம் : குல்பர்க்கா நகரம்

காலம் : காலை.

பாத்திரங்கள் : அரசர், கலியாண ராயர், காம நாயக்கர், கோவிந்தராஜர், விசுவநாதர், அரியநாதர், பாமினி சகோதரர், அடில்கான் படைஞர், தூதர்.

[அரசர் கோபத்தோடு உலவுகின்றார். அரிய நாதர் கை கட்டி அருகில் நிற்கின்றார். காம நாயக்கர் வருகின்றார்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

அரசர் : மானம் பெரிதே! மானம் பெரிதே!
மானம் இழந்தபின் வாழவும் துணிவரோ!
'போர்க்களம் புகுவது போதும்,' எனவே
நல்லோர் உரைப்பர் :

காமநா : நாமென் செய்யலாம்!
நாகலா புரத்தில் நம்மிடம் வந்த
தூதர் புகன்றன சொல்லெலாம் பொய்யே.

அரசர் : அங்கவன் கூறிய வனைத்தும் பொய்யே!
முட்கல் வருகென மொழிந்தான் நம்மை.
அடில்ஷா முட்கல் அடைந்திலன் ; நாமும்
விசய புரியினை மேவி நின்றனம்.

ஆங்கும் வந்திலன். ஆதலின், வேறினி
வழியிலை யென்று வன்போர் தொடுத்தேம்.
ஈங்குமவன் வாரா னெனவே தோன்றும்.

அரியநா : விசய புரியினில் மேவிய அசாத்கான்,
'எம்மர சீதோ வெய்துவர்,' என்றான்.
வந்து வணங்கி வாழ மனமிலை.
போக்குக் காட்டியே போரினை யழைத்தார்.

அரசர் : முட்கலும் புகுந்து முற்றிலும் அழித்தேம்;
விசய புரியினை வெறும்பா ழாக்கினேம்.
இந்நக ரகத்தும் எதிர்ப்பவ ரிலையோ?

[கோவிந்தராஜர் வருகின்றார்.]

காமநா : அரண்மனை யகத்தே யரசர் இருக்கலாம்.
போரினை யாமே பொறுப்பே மின்று.
கோவிந்த ராசரும் கூட விருப்பர்.

கோவிந் : அரணின் காவலன் அடில்கான் என்பான்
கடமைநன் குணர்ந்த கடும்புலி யென்பர்.
போரினி விளைக்கும் புல்லியோ னல்லன்.
ஆதலி னவனை யடக்கிய பின்னரே
அரசர் அரண்மனை யகத்துப் புகலாம்.
முதற்கண் இதனில் முயலுதும் யாமே.

[அரண் போர் நிகழ்கின்றது. அடில்கான் வீரத்தோடு போர் செய்கின்றான். விசயநகரப் படையில் பலர் வீழ்கின்றனர். அரசரே நேரிற் பார்த்து அதிசயிக்கின்றார்.]

அரசர் : எத்துணை வீரரை இவனே கொன்றான்!
இவனைக் கொல்ல இங்கியார் வலியார்?

அரியநா : யானுளே னரசே! ஏவுக அடிமையை!

விசுவ : அடியேற் கிப்பணி ஆணை யிடுக!

அரசர் : இருவரு முயலுக இவனைக் கொல்ல!

[இருவரும் அரண்முன் போய்ப் போர் புரிகின்றனர்.]

படைஞர் : உருண்டது தலையே! புரண்டது முண்டம்!

[அரண் தலைவன் தலையை விசுவநாதர் வாளில் தூக்குகின்றார்].

விசுவ : அரசர் பெரும! அடியேன் கையுறை:
அரணைக் காத்த அடில்கான் தலையிது!

அரசர் : படைஞர் இன்னும் படுகள மகல்கிலர்.
நீள்கழை யொன்றில் நிறுத்துக தலையை.
பகைவர் அதனைப் பார்த்ததும் பறப்பர்.

[விசுவ நாதரும் அரிய நாதரும் அங்ஙனமே செய்கின்றனர். பகைவர் படை போர் நிறுத்திப் புறங் கொடுக்கின்றது.]

அரியநா : இனிநாம் நகர்க்குள் இனிதே நுழையலாம்.

அரசர் : விசுவ நாத! விரைந்துநீ சென்று
பாமினி குமரரை யாமிவ ணழைத்ததாச்
சொல்லித் தருக! சூட்டுது முடியே.

[நகர்க்குள் நுழைந்து அரண்மனை மண்டபத்தில் அரசர் வீற்றிருக்கின்றார். பாமினி குமரர் மூவரும் விசுவ நாதரோடு வருகின்றனர்.]

கோவிந் : அமருக அமருக அனைவரு முறையே!
பண்டை நாளிலிப் பரந்தநா டாண்ட
பாமினி மரபினிற் பண்பெலாம் பொருந்திய
மூத்த குமராரிம் முடியணி விழாவில்
விசய நகர வேந்தர்தம் துணையால்
விரும்பிய வாழ்வு மேவுதல் காணீர்!

அரசர் : வருக பாமினி மரபின் செல்வரே!
உம்மர சுமக்கென வுதவினம் கொள்ளுதிர்;
இனியாம் நுந்துணை யென்ப துணருதிர்.
அரிய நாத! தருக மணிமுடி.

அரியநா : மணிமுடி யீதோ மன்னவர் தலைவீர்!

கோவிந் : மங்கல முழக்கம் வகைவகை முழங்குக!
பாமினி யரசர் பல்லாண்டு வாழ்க!

அரசர் : மணிமுடி யாமே வைத்தனம் நுமக்கு.
வாழ்கநீர் நுந்தம் மரபு வளரவே!

பாமினியரசு : அரசே! நுந்துணை அடைந்தேம் வாழ்வேம்.

அரசர் : இளையோர் இருவரும் யாம்முன் உரைத்த
பதினா யிரம்பொன் படைப்பார் இனிதே.

[தூதர் இருவர் வருகின்றனர். சேவகர் அவர்களை அரசர்முன் அழைத்து வருகின்றனர்.]

அரசர் : யார்நீர்? நுமக்கிவண் யாது வேண்டும்?
தூதர் : அரசே! யாமெம் மரசர் போக்கிய
தூதர்; அவர்மொழி சொல்லிய வந்தேம்.
கோல கொண்டக் கோமகர் தாமும்
அமுத நகரத் தரசர் பிரானும்
எம்மைப் போக்கினர்.
அரசர் : யாது கருதியோ?
தூதர் I : ஆணை பிறப்பின் அவர்கருத் தியம்புவம்.
அரசர் : நாமும் அவரும் நட்பே யுடையேம்.
பகைவரை யடக்கிப் பண்டைய வரசரை
அரசு பெறச்செய் தகமகிழ் வெய்தி
யாமிவ ணுறைவதை எம்முடை நண்பர்
அறிவர். தூதரை யனுப்பிய தெதற்கோ?
தூதர் II : அரசர் மொழிகளை அங்ஙனே யியம்புவம்:
'எம்முடை யினத்தினில் எவ்வகைக் குறையும்
இல்லா வொருவரை ஏனோ பகைத்தீர்?
காரண மின்றியே போரது தொடுத்தீர்.
அவர்நுமைப் பகைத்த தறிகிலம் யாமே.
அவர்தம் நாடெலா மரசொடு கொண்டீர்.
இச்செயல் தகாதென எண்ணுவம் யாமே.
ஆதலி னின்றே யவர்க்கவர் உரிமையை
அளித்தல் வேண்டும்.
அரசர் : அளியா விட்டால்
நும்முடை மன்னர் எம்மையென் செய்வர்?
தூதர் : I 'எம்மினத் தவரெலாஞ் செம்மையி னொன்றாய்
இணங்கி நும்மை யெதிர்க்கவும் துணிவேம்.'
அரசர் : அவரது நினைந்தே ஆற்று மளவும்
யாம்பொறுத் திருப்பமென் றெண்ணினர் கொல்லோ?
யாமே யவரை யெதிர்க்க விரைவினில்
வருதுமென் றங்கு வழங்குதிர் தூதரே!
தூதுரை யென்பதாற் சொற்பொறுத் திருந்தேம்.
போதிர் நீர்; இனிப் போர்க்களம் உளதே.
அவர்வலி யெம்வலி யாங்கே நோக்குவம்.

[தூதர் போகின்றனர். கலியாண ராயர் வந்து வணங்குகின்றார்.]

**கலியா :** அரசே! அடிமைக் காணே யென்னையோ?

**அரசர்:** இந்நா டெல்லாம் இனிநீ ராளுக!
யாம்பெரும் போர்செய ஏகுதும் இன்னே.

## மூன்றும் களம்.

| |
|---|
| **இடம் :** விசயநகரப் பெரிய அரண்மனை அரசவை |
| **காலம் :** பிற்பகல் |
| **பாத்திரங்கள் :** அரசர், விசுவநாதர், அரியநாதர், கொண்டமரசையா, திம்மரசு, கோவிந்தன், திம்மன்ன தண்டநாயகன், கோவிந்தராஜர், ஒற்றர், சேவகர். |

[சபையில் ஒருபால் சங்கீதக் கச்சேரியும் மற்றொருபால் நாட்டியமும் நிகழ்கின்றன. பிரபுக்களில் பலர் தலையசைத்து இன் புற்றிருக்கின்றனர்.]

### நிலைமண்டில ஆசிரியப்பா

**கொண்ட :** அமல னருளா லமையு மெல்லாம்
அரசர் பெரும! அவனி மகளினை
இருபத் தோராண் டினிதுறத் தாங்கினீர்.
அறுப தாயிரம் ஆண்டு தயரதர்
நாடு புரந்தனர்; நன்மகன் ராமன்மிசைப்
பொறையினையேற்றுதல் பொருந்துமென் றெண்ணினர்.
நீயிரிந் நாட்டின் நிறைபொருள் வளர்த்துப்
புரிவினிற் புரிவன வெவையும் புரிந்துநும்
தவக்கொழுந் தாகிய தனய சிகாமணி
திருமலைத் தேவ ரரசு பெறுகென
நாடெலா மறிய நவின்றீர்; அங்ஙனே
இயற்றவு மியற்றினீர்; எட்டுத் திங்களா
அரசர் அவரென அனைவரு மறிய
விழாவும் நிகழ்த்தினீர்; 'விரும்பிய வாறு
நவமணி பொன்னினை நல்லோர் கொள்க'என
வாரி யிறைத்தீர். வாழி வாழிய!
இன்றர சாள்பவர் இளஞ்சிறு பாலகர்;
ஒன்ப தாண்டும் உறப்பெற் றிலரே.

ஆயினும், அவர்க்கியாம் அடங்கி யிருப்பேம்
என்பதில் ஐயம் எள்ளள வில்லை.
அவரே யெம்மை யாளுவ ராயினும்,
அவர்க்குப் பெருந்துணை யாகவெம் மன்னர்நீர்
ஈங்கே யிருக்க விரந்து வேண்டுவம்.
பகைவர் பலரையும் பணிய வைத்தேம்;
கொளத்தகு நாடெலாம் கொண்டனம்; இன்னும்
பாரத பூமியே நேருற வெம்மர
சாளத் தகுமெனு மவாவெம்மக் குள்ளது.
தரும பூபதி சக்கர வர்த்தி
எனநீர் வாழிய இனும்பல் லாண்டே!

கோவிந்: வடக்குள மன்னர் வளர்ப்பர் பெரும்படை.
அவர்மனக் கசப்புக் களவே யில்லை.
பாய்ந்த புலியையும் படுத்ததும் அஞ்சார்;
உறங்கும் கோளரி யுளவலி யுணரார்;
சமர்க்களம் புகோமெனத் தமக்குளே நினைந்து
நமையவர் எதிர்க்கவும் நாடினர் எனவே
ஒற்றர் சிலர்சிலர் உரைத்தனர் அரசே!

அரசர்: யாரென நினைத்தார் எம்மை யிவரே!
'யாமே வருதும்,' எனமுன் இசைத்தேம்;
அங்ஙனே புறப்பட ஆவன புரிதும்.
எழுந்தியாஞ் செல்லின் எதிர்ப்பவர் யாரே?

[அந்தப்புரக் காவற்பெண்டிர் இருவரும் அகச்சேவகர் இருவரும் விரைந்து வருகின்றனர்.]

சேவகர்: அரசர் பிரானே! அரசர் பிரானே!

[பேச அறியாது திகைக்கின்றனர்.]

அரசர்: நிகழ்ந்த தென்ன? நிகழ்த்துதிர் உடனே!
பெண்களே! உண்மை பேசுதிர் விரைந்தே!

பெண்டிர்: எப்படி யுரைப்போம் எம்பெரு மானே!
சொல்லுக் கடங்காத் துயரம் விளைந்தது!
கொடுமை! கொடுமை! கூறவும் துணியேம்!

அரசர்: என்ன செய்தி! என்ன செய்தி!
உரைக்க வறியீர் உள்ளது சொல்லும்.

சேவகர் : அரசர் ! அரசர் ! அரசர் ! ஐயோ !

அரசர் : அரசருக் கென்ன வாயது ? சொல்லுக !

பெண்டிர் : விருந்தினை யுண்டார்; விளையாட் டயர்ந்தார்
மயக்கம் வந்தது ; மாண்டு கிடந்தார் !

அரசர் : என்னே ! என்னே ! என்னுயிர் என்மகன்
என்கண் இளவர சிறந்தா போயினன் !
சற்றுமுன் கண்டேன் ! முற்றவும் நோயிலன் !
மருத்துவர் பார்த்தார் ! மற்றவர் இருந்தார் !
எங்ஙனம் மயக்கம் எய்திய துரையீர் !

பெண்டிர் : உண்டு காட்டுவோர் உண்டபின் உண்டார்.
உணவினில் ஒன்றும் உறுகுறை யில்லை.
ஏனோ மயங்கினர் இறந்து விழுந்தார்.

கொண்ட : அரசர் பெரும ! ஆராய்ந் தறிவோம்.
துயரம் சினத்தினைத் தாண்டி யெழுப்பும்.
உண்மையைத் தெளிவுற வுணர முயலுவோம்.
ஆவன இனிநாம் ஆற்றவும் வேண்டும்.

அரசர் : இழந்தேன் ! இழந்தேன் ! இழந்தேன் மதலையை !
மரபு மழிந்தது ! வாழ்வுபா ழாயது !
யானே முடிதந் திறைமை நல்கிய
என்மகன் இறப்ப தியார்செய லைய !
மகன்வழி யரசு வரலா காதோ !
சங்கம குலத்தார் சாபமோ இதுவே !
இப்பெருங் கொடுமை யிழைத்தார் யாரே ?
யாரே யாயினும் என்சினம் அறிவர்.

கொண்ட : கோமக னுயிரைக் கொள்ளை கொள்ளும்
எண்ண முள்ளவர் இந்நாட் டில்லை.
விருந்துகள் உடற்குப் பொருந்துத லின்றி
அரசர் மரணம் அடைந்து மிருக்கலாம்.

அரசர் : மருத்துவர் அவையெலாம் வகைவகை யறிவர்.
யாதோ சூழ்ச்சி ! எவரிது செய்தார் !

கோவிந் : அரச குமரரை அடாத நெறியாற்
கொடியவர் சூழ்ச்சி கொல்லவும் இயலுமோ ?

அரண்மனைக் காவல் அனைத்தும் கடந்து
சூழ்ச்சி யாளர்தம் துணிவு பலிக்குமோ?

[ஒற்றன் ஒருவன் வந்து அரசரிடம் மறைவாக ஏதோ பேசுகின்றான்.]

அரசர்: அறிந்தேன்! அறிந்தேன்! அவனே கொலைஞன்!
அவனே! அவனே! அவனலா தில்லை!
கொன்று மகிழும் கொடியோன் அவனே!
அரச குலத்தை அழித்து மகிழும்
ஆத தாயி யவனே! அவனே!

கொண்ட: அரசர் பெரும! அறிந்த தென்னை?
கோமக னுயிரைக் கொள்ளும் கொடியரும்
தருமம் பிறந்தவிப் பெருநாட் டுளரோ?
எக்குடி? எக்குலம்? யாரவன்? யாண்டுளன்?

அரசர்: கொலைத்தொழில் புரிந்தவக் கொடியனை யறிவேன்!
அவனை யீதோ வழைப்பேன், பாரீர்!

[ஒற்றரையும் சேவகரையும் ஏவி அனுப்புகின்றார். சேவகர் மூவரை அழைத்து வருகின்றனர். திம்மரசு, கோவிந்தன், திம்மன்னு என்னும் மூவரும் காவலோடு உள்ளே நுழைகின்றனர்.]

கோவிந்: அரசர் பிரானே! ஆண்டில் முதியவர்
நாட்டி னலமே நாளு நாடிய
திம்மர சிவரோ செய்தார் இக்கொலை?

அரசர்: கோவிந்த ராசரே! கொண்ட மரசே!
நிகழ்ந்தன இவையே.

கோவிந்: நிகழ்ந்தன வென்பன
தீரத் தெளிந்துபின் தீர்ப்பினை யுரைக்கலாம்.

அரசர்: என்துய ரறியீர், என்சின மறியீர்,
யாதோ பிதற்றுவீர் எல்லா மறிந்தீர்!

கொண்ட: அறிவினில் முதியார் ஆண்டினில் முதியார்
ஒப்புயர் வற்ற வுத்தம வமைச்சர்
என்னவின் றளவும் யாவரு மறியும்
திம்மர சிங்ஙனம் செய்யவும் துணிவரோ?

அரசர்: கோவிந்த! திம்மன்ன! கூறுதிர் உண்மை.
தண்ட நாயகத் தலைமைதந் தும்மை
வாழ வைத்தது மன்னவர் குலத்தைப்
பாழாக் குதற்கோ?

திம்மரசு: பாரா இங்ஙனம்
முறைமையை மறந்து மொழிவது மரசருக்
கழகோ! குற்றம் ஆய்வதன் முன்னமே
ஒருவர்மேற் சுமத்தல் உயர்ந்தோர் வழக்கோ!

அரசர்: ஆய்ந்தேன்! தெளிந்தேன்! அறிந்தேன்! இவரே
என்மக னுயிரை இக்குல மழியக்
கருதி மாய்த்த காதகர்! பாதகர்!

திம்மரசு: உண்மையை யுறுதியாய் உணர்ந்துகொண்டீரோ?
இளவர சுயிரை யிழப்பதால் அரசினை
எய்துவோர் யாரோ இவரோ அரசே!
ஊதிய மின்றி ஒருவனு மொருபழி
பூணு னென்பது புரவல ரறியீர்!

அரசர்: ஐய! நீர் யாரென வறிவேன் நன்றே.
என்றன் முன்னவர் இவ்வர சுரிமை
தம்மகற் காகெனச் சாற்றினர் நும்மிடம்.
அதனைக் கெடுத்தெனை யரச னாக்கினீர்;
அரச ராணையை யன்றுங் கடந்தீர்;
இன்றுங் கடந்தீர்; இக்கொலை யியற்றினீர்!

திம்மரசு: சிவசிவ! சிவசிவ! சிசுக்கொலை செய்வதும்
உயிர்க்கொலைத் துணையா லுயரர சடைவதும்
அரசர் தொழிலோ, அந்தணர் தொழிலோ?
அன்றுமக் கரசினை யளித்தது புகழ்ந்தீர்;
இன்றதை யிவர்முன் இகழவும் துணிந்தீர்.
என்மகார் இருவரும் எவ்வகைப் பாவமும்
அறியார். யானுமொன் றறியேன். அறத்தினை
மதிப்பீர் என்னின், மதித்தநன் மரபினிற்
பிறந்துளீர் என்னிற் பிறர்பழி கூறுவோர்
மொழிகளைத் தேறி முடிபு காண்கிலீர்.
இன்னும்யான் வாழ்வன எண்ப தாண்டிலை;

எண்ப தாண்டு மிருந்தேன் புகழுடன்;
மக்கள் இருவரும் மன்னனைக் கொன்ற
கொலைஞர் என்றெழும் கொடும்பழி பூண்டேன்;
குற்றம் நினையாக் குடிப்பிறப் புடையேன்;
அரசு சேவகத் தாக்கமும் கண்டேன்;
ஏற்றமும் கண்டேன்; இறக்கமும் கண்டேன்;
முறையுறத் தெளிந்து முடிபினை யுரையா
மன்னவர் நாட்டில் வாழ்வதின் வனத்து
விலங்குடன் றிரிவது மிக்க தாகுமே!

அரசர்: யாது கூறினீர்! யாது கூறினீர்!
கொடுமை யிழைத்த கொடியோர் இவரே!
நஞ்சினால் இவரே கொன்றனர் மகனை!
'கொலையிற் கொடியரைக் கோமக னொறுத்தல்
பசும்பயிர் இடைவளர் பாடுறு களைகளைக்
களைவத னிகர்,' எனக் கழறினர் புலவர்.
ஆயினும் உம்மையும் பேயினர் இவரையும்
சிறையிடை யடைப்பது செய்குவ லின்றே.
மனுநெறி யும்முயிர் வாங்க விடாதே.
அன்றியு மின்றள வரசினுக் கியற்றிய
பணியினை நினைந்தும் பால சோகம்
உள்ளந் துளைத்தும் உமையா னிவ்வள
வாகிய தண்ட மளித்துப் போக்குவல்.

திம்மரசு: அரசே! வெகுமதி யடைந்தேன் இதனை!
நினக்கென நெடும்பகல் நேர்மையி னுழைத்த
உழைப்பினிற் கோடியி லொருபங் கென்னையும்
உன்னையும் படைத்த வொருவனுக் கின்றள
வியற்றி யிருப்பனே லின்றெனை யவனிக்
கொடிய தண்டம் கொள்ளென விடுத்திரான்.
கொடுமை யிழைத்தனை! கொடுங்கோல் தாங்கினை!
ஆக்கிய வரசுக் கழிவு தேடினை!
மாளிகை வாழினென்? வாழா தழியினென்?
சிறையகம் புகிலென்? சேவகர் சூழிலென்?
என்னை யிறைவன் இனிநன் குணருமே.

அரசர்: யான்கொடுங் கோலன் என்றீர் அந்தணீர்!
வான முட்ட வாழ்த்திய புலவரை

அறிவீர்; கொடியரை யறநெறி யொறுத்த
என்னை யிகழ்ந்தீர். இனியான் பொறேனிது.

[சேவகரை நோக்கி]

தீயிடைக் காய்ந்த செவ்விரும் பெடுத்தே
மூவர் விழிகளும் மூடவே செய்ம்மின்.
குருட ராயபின் கொடுமையை யறிந்தெனைப்
பழிப்ப ராயினும் பழியே கொள்வன்.

கொண்ட: அரசர் பிரானே! அறமன் றிதுவே.
முதியவர்; அமைச்சராய் முன்ன மிருந்தவர்;
இருவரு மிளைஞர். இவர்க்கிது தகாது.
சொன்னதே போதும்! சுடுதலும் வேண்டுமோ!

கோவிந்த: புரவலர் தமக்குப் பொறுமை வேண்டும்.
'எற்றென் றிரங்குவ விறைவர்செய் யற்க!'
என்றே வள்ளுவர் இயம்பிய துணர்வீர்.

கொண்ட: குற்றமே யிவர்தாம் கூடிப் புரிந்தார்
என்றே விளங்கினும் இதுசெய வேண்டா.

அரசர்: உண்மை யுணரீர் உரைத்தீர் நீவிர்!
இவர்பெருங் குற்றம் யாதென வறிந்தால்
இங்ஙனம் பேசிர். இதனையான் மாற்றேன்.
சுடுக! சுடுக! சுடுக! சேவக!

[சேவகன் மக்கள் இருவர் கண்களையும் சுட்டுப்
பொசுக்கிப் பிறகு திம்மரசு கண்களையும் சுட்டு
ஒழிக்கின்றான்.]

திம்மரசு: இழந்தேன் விழிகளை! இழந்தே னில்லை!
மகனை யிழந்த மன்ன! நீ யறக்கண்
இழந்தாய்! அகக்கண் இழந்தாய்! புறக்கண்
இரண்டும் புண்ணே இனியுனக் காகும்.
தீரத் தெளியாய் கோரக் கொடுமை
விளைத்தா யாகலின் விளம்புதல் கேட்டி:
நின்னொடு நின்குல நிலத்திடை யழியும்;
இனிநும் மரபு மிழிவெலாம் அடையும்;
விரைவினிவ் வரசும் வீழ்ந்துகே டெய்தும்;
நாடு மழியும்; நகரமும் அழியும்;

நகரம் நின்றிடம் நரகமே யாகும்;
நிற்க விருக்க நிழலற மரபினோர்
கலங்குவர்; இவையெலாம் காணாய் நீயே.
இன்றே நீயுமிங் கிறந்து வீழுதி!
உன்குலம் பாழாய் ஒழியும் இன்னே!

[சேவகர் திம்மரசையும், அவர் மக்களையும் சிறைக்கு அழைத்துச் செல்கின்றனர். அவைக்களத்திருந்தார் கலங்கிக் கண்ணீர் விடுகின்றனர்.]

கோவிந்: அரசே! இஃதென்! அறநெறி கெடுத்தீர்!
ஒருகுறை யிலாரைக் குருட ராக்கினீர்!
சிறையகம் செல்கெனச் செப்பியு நின்றீர்!

கொண்ட: குடிகள் அனைவரும் கொடுமை என்பரே!
மகன்பாற் கொண்ட வகையிலாக் காதல்
அறத்தை யழித்த தரசையும் அழிக்குமே!

[விசுவநாதரும் அரியநாதரும் ஓடி வருகின்றனர்.]

விசுவ: புதுமை! புதுமை! புதுமை யரசே!
சிறைக்களம் போய திம்மர சமைச்சர்
ஏம கூடத் தெதிரே நின்றார்;
விரூஉ பாக்கனை வேண்டினர் தொழுதார்;
மயங்கி விழுந்தார்; மரண மாயினர்!

அரிய: அவருடல் சிறையி னகம்புகு முன்னே
உயிரே யுடற்சிறை யுதறிய தரசே!
விழுந்த விடத்தே யெழுந்த மக்களின்
கூட்டமு மினைத்தெனக் கூறவொண் ணாதே!

விசுவ: அவர்மகா ரிருவரு மரசர் சிறையெனல்
அறிந்தும் குடிகள் அவரை விடுவித்
துரிமையை யுதவின ரொருநொடி யளவிலே.

[அரசர் முகம் மாறுகின்றது.]

அரசர்: எந்தையா ரெனயா னேத்திய பெரியார்,
குணக்குன் றெனவே குலவிய வமைச்சர்,
இறைவன் றிருமுன் இறந்து விழுந்தார்!
கொன்றேன் யானே! கொலைஞன் யானே!

மகன்மே லெழுந்த வரையறு காதலால்
அவருரை செவியக மடையே னுயினேன்!
அரசரைத் தேவரி னதிகரா யெண்ணும்
குடிகளு மாணையின் கொடுமை யறிந்தனர்.
அறிவின் பெருங்கட லவர்வாய்ப் பிறந்த
சொல்லின் வண்ணமித் தொல்லர சழியுமோ!
வாழ்வு சிறந்தபின் தாழ்வு வருதல்
உலகிடை யியல்பே. ஒருபெருங் குடைக்கீழ்ப்
பலநா டாண்ட பார்த்திவ ரனைவரும்
மாண்டு மறைந்து மண்ணு யினரே!
யானவர் தொகுதியில் எத்துணைச் சிறியேன்!
அறிவறை போகிய அரசென வாழேன்!
அமைச்சரை யழைத்த அந்தக வருக!

[அரியணையில் வீழ்ந்து மரணமடைகின்றார்.]

**அமைச்சர்:** அரசே! அரசே! அரசே! அரசே!

## நான்காம் களம்

**இடம்:** விசய நகர அரண்மனைச் சபா மண்டபம்
**காலம்:** காலை
**பாத்திரங்கள்:** போஜ திருமலைராயர், அரச குமாரர், இபுரகீம் அடில்ஷா, அசாத்கான், நகர காவலன், தூதர், ஒற்றர், சேவகர்.

[போஜ திருமலைராயர் தனியே நடமாடுகின்றார். அவர் தம் எண்ணங்களைத் தமக்குள் ஒழுங்குபடுத்துகின்றார்.]

### நிலைமண்டில ஆசிரியப்பா

**போஜ:** அரசர் இறந்தார்! 'அரசர் வாழ்க!'
என்று கூறி யிளஞ்சிறு குழவியை
அரச னாக்கினேன். அரசன் யானே.
என்னை யெதிர்ப்பார் யாரே நோக்குவன்!
விசய நகரம் வேந்த னிலாது
பாழாய் விழுந்திடப் பலரு முயல்வார்.

பன்னிரு தேவியர் பார்த்திவர்க் கிருந்தனர்.
ஒருவர் இருவரே வருபெயர் பூண்டார்.
ஏனையர் அரசியர் இலரோ உண்மையில்?
என்னருந் தங்கை அன்ன பூரணைக்
கொருசிறு குழந்தை யுண்டெனவுணர்ந்தும்,
அரசர் மகனவ னுவது தெளிந்தும்.
மருமக னரசு வாய்ப்பது நன்றெனத்
திருமலைத் தேவியும் சின்ன தேவியும்
மொழிந்தனர். கலிங்க மோகினி தேவியும்
தன்மக னரசு தாங்கி யிறந்ததால்
மவுனம் பூண்டாள். மற்றத் தேவியர்
உரிமை பேசுவார் ஒருவரும் இல்லை.
ஏனையோர் பித்தரென் றெண்ணினர் இவரே.
இராம ராயருக் கிவ்வர சளிக்கத்
திருமலைத் தேவி செய்த சூழ்ச்சிகள்
எத்தனை யம்ம! எத்தனை யம்ம!
கனலைக் காற்றுக் கருதி யிணங்கிய
செயலே போலச் சிலசில தலைவர்
இந்தக் கட்சியி லிருந்தனர்; என்னை
மதியார் எதிர்த்து வாயும் திறந்தனர்.
இவரை யினியான் எங்ஙனம் ஒறுப்பேன்
என்பது விரைவில் எடுத்துக் காட்டுவேன்
ஒன்றரை யாண்டே யுள்ள குழந்தை
அரசனே; யானே அவனது காவலன்!

[நகர காவலன் மெல்ல உள்ளே நுழைகின்றான்.]

போஜ: ஐய! வருக! அன்ப! வருக!
...டு முழுவதும் நமக்குப் பகையே.
நீயும் யானுமே நெறியினி னின்றோம்.
அரச குலத்தையே அழிக்கக் கருதும்
மற்றையோ ரெல்லாம் வளைத்தே யெதிர்ப்பரோ?

நகர கா: எதிர்த்தா லவரால் என்னை மைய!
பொன்னும் மணியும் மன்னிய நிதியறை
இருபது மென்னிட மிருப்பன வென்பதை
அறிந்தா ராயின், அடங்குவா ரவரே.

மன்னர் பிரானல் வாழ்வெலா மிழந்து
மான மழிந்த மன்னரைத் துணையர் !
அவருட் சிலரை யன்பொ டிணங்கினல்
இவரெலா நம்மை என்செய வியலும் ?

போஜ : ஒன்றுநான் செய்துளேன். உரைப்பன் கேளாய் :
அரச குமரன் அரசுக் குரியான் ;
என்னரு மருமான் எனநீ யறிதி.
அவனை யரச னுக்கியும் வைத்தோம்.
அவன்றுணை யெனநா மமைதல் வேண்டும்
இராம ராயரும் இனியுள பிறரும்
பெரும்படை திரட்டி யருஞ்சமர் செய்ய
முயற்சி செய்வது முழுவது மறிவேன்.
அவரெலாம் வணங்கற் காவன செய்தேன்.

நகர கா : சூழ்ச்சி யாதே? சொல்லுவீர் சிறிது.

போஜ : விசய புரியின் வேந்தரா யிருப்பவர்
இபுரகீம் அடில்ஷா என்ப தறிவாய்.
அவர்தம் நாடெலாம் அமரா லிழந்த
வஞ்சந் தீர்க்க மனங்கொண் டுள்ளார்.
ஒவ்வொரு நகரா யுட்புகுந் துள்ளார்.
அவரையீங் கழைத்தேன். அவரும் வருகிருர்.

நகர கா : என்ன சொல்லி யிங்கழைத் தீரோ ?

போஜ : ‘இழந்த நாடெலா மெடுத்துக் கொள்ளுவீர் ;
அன்றியு மெங்கள் அரசையும் ஏற்று,
விசய நகரம் விசய புரியின்
சிற்றர சாகச் செய்து கொள்ளுவீர் ;
அரியணை யேறி யாட்கொளு மெம்மை ;
எதிர்க்கும் பகைவரை யிறைஞ்சச் செய்வீர்,'
என்றே சொற்றேன். இணங்கி வருகிருர்.

நகர கா : என்று வருகிருர் ?

போஜ : இன்றே வருகிருர்.

நகர கா : எதிர்கொளச் சென்றவர் யாரே? அவர்தாம்
ஈங்கு வருதலும் யார்வர வேற்பவர் ?

போஜ : அமைச்சருட் சிலரை யனுப்பி யுள்ளேன்.
யானே யரண்மனை யெதிர்வர வேற்பேன்.

நகர கா : நல்லதே செய்தீர் ! நல்லது ! நல்லதே !

போஜ : இராம ராயரை இனிதுநீ யறிதி.
அவரே நின்னை யரண்மனைப் பதவியில்
வைத்தார் எனவும் வழங்குவ துண்டே.
அவரைச் சிறைசெய் தடைத்துளேன் ஒருபால்.
அவரும் வெளிப்படா தடங்குவ ராயின்
எதிர்க்க வல்லவர் எவரே யிருப்பர் ?

நகர கா : ஒருவரு மில்லை உம்மை எதிர்க்க !

[சேவகர் சிலர் ஓடி வருகின்றனர். தூதரும் பிறரும் தொடர்ந்து வருகின்றனர்.]

சேவகன் I : விசய புரியினர் வேந்தர் வந்தார் !

சேவகன் II : அரண்மனை வாயி லடைந்தா ரவரே !

[இபுரகிம் அடில்ஷாவும் அசாத்கானும் தக்க பரிவாரங்களோடு உள்ளே நுழைந்து வருகின்றனர்.]

நகர கா : வருக வருக மன்னர் மன்னரே !

போஜ : எம்மை யாளுதற் கினிதே வருக !

[இபுரகிம் அடில்ஷா சிங்காதனத்தில் அமர்கின்றார். அசாத்கானும் அருகில் அமர்கின்றார்.]

போஜ : விசய புரியின் வேந்தர் பிரானே !
இந்நாட் டரசினை யேற்றுக் கொள்க !

அசாத் : ஐய ! நீ ரெமையீங் கழைத்த தெதற்கோ ?
கிருஷ்ண தேவர் உரிமையி னுண்ட
அரசினை யாள்பவ ராரே யிந்நாள் ?

போஜ : அவர்மக னொருசிசு வரச னாயினன்.
யானவன் றுணையா யிருப்பே னைய !
உரிமையைக் கவரும் உள்ள முடையார்
பலரெனை யெதிர்த்துப் பகைக்கத் துணிந்தனர்.
ஆதலி னும்மை யழைத்தே னீங்கே.

இபுரகிம் : எந்தையை யமர்க்களத் தெதிர்த்து வென்ற
வேந்தனை வெல்ல விழைவு தூண்ட

அவன்கவர் நாடெலா மடைடுவே கொண்டேம்;
ஈங்கும் வந்தனம் இறைமை பூணவே.

நகர கா: அரச ரிவருக் காதர வளித்தால்
உமக்கு வேண்டுவ துதவுவம் யாமே.

இபுரகீம்; அரசரை நோக்குவம். அரசரைப் பார்த்தே
நாம்சொலத் தக்கது நவில வேண்டும்.

போஜ: வருவிக் கின்றேன் மன்னவர் மன்னரே!

[சேவகர் அந்தப்புரக் காவலரிடம் தெரிவித்துத் தாதியரோடு குழந்தையரசைக் கொண்டு வருகின் றனர்.]

நகர கா: இவரே யெந்த மிறைவ ரின்றே.

இபுரகீம்: இச்சிறு குழவியோ இந்நாட் டரசர்!
கிருஷ்ண தேவ ரரியணை மீதினில்
ஏறும் உரிமை யிவற்கோ! இவற்கோ!

போஜ: அவர்மகா ராதலா லரசுக் குரியார்
இவரே யென்ன யாம்துணிந் துள்ளேம்.

இபுரகீம்: (நகைத்து) அரசர் வாழ்க! அரசர் வாழ்க!
அரசரே! நீரெமக் கடங்கிய சிற்றர
சென்பது தாயருக் கியம்பக் கூடுமோ?

[குழந்தையரசர் அழுகின்ருர். தாதியர் எடுத்துப் போகின் றனர்.]

அசாத்: உமக்குத் துணையாய் உம்மர சிவரைக்
காக்கும் பொறுப்பினைக் கருத்தோ டேற்க
எம்மர சிவர்க்குநீர் யாது கொடுப்பீர்?

போஜ: என்ன கேட்பினும் ஈவேன்; உண்மை.

இபுரகீம்: வேண்டுவ வெல்லாம் விளம்புக விரைவே.
பெற்றுக் கொண்டபின் பேசுவம் பிறவே.

அசாத்: அரண்மனை நிதியகத் தருவிலை நவமணி
எண்ணிறந் துளவென வியம்பக் கேட்டுளேம்.
உள்ளவை தம்முள் உயர்வற வுயர்ந்த
மாணிக்கம் ஒன்றும் வயிரம் ஒன்றும்
கோடி வராகனும் கொடுத்தெம் மரசரைப்
பணிந்தால் நுந்தம் பால வரசர்

சிற்றர செனயாம் தெளிவுறப் புகல்வேம்.
சம்மத மோவிது ?

போஜ : சம்மதம்! சம்மதம்!
நவமணி யறையினுள் நல்லன நாடி
அளிப்பே ெனருகணத் தரசர் விரும்பிய
திறையும் தருவேன். சிற்றர சென்ற
பதவியு மேற்கும் பண்பினே யரசுக்
கின்றே யமைத்தேன். எம்மினை வெல்லாம்
நிறைவே றுகவென நீயிர்நின் றுதவுதிர்.

நகர கா : விரும்பிய பொருளெலாம் விழைவொ டுதவினேம்.
அரசர் பிரானே! ஆளுக வெம்மை.
[பொன்னும் நவமணியும் கொட்டுகின்றான்.]

அசாத் : இனிநும் மரசர்க் கியாந்துணை யென்ப
துலக மறிய வுணர்த்தலா மைய!
பகைவர் வருவரேற் பயப்பட வேண்டா.
யாம்வந் துதவுதல் எம்கட னென்பேம்.
அரசர் களைத்தனர். அவரும் யானும்
அருகி லரண்மனை யகத்தே யிருப்பேம்;
சிலநாள் இருந்துபின் செல்லுவ மூர்க்கே.

போஜ : அங்ஙனே யாகுக! அதுவும் நன்றே.
[அடில்ஷாவும் அசாத்கானும் அரண்மனைக்குட் போகின்றனர். தூதர் இருவர் வருகின்றனர்.]

நகர கா : யார்நீர்? அரண்மனைக் கேனே வந்தீர்?

தூதர் : ஐய! தூதர்யாம். அறவீ டுடையார்
அனுப்பின ராதலி னரண்மனை புகுந்தேம்.

போஜ : அறவீ டுடையார் ஆரவர்? யாரவர்?
ஈங்குமைப் போக்கிய தெதன்பொருட் டேயோ?

தூதர் I : இராம ராயர் எம்பெருந் தலைவர்.
அவரைநீ ரறிவீர். அவருமை யறிவார்.
தெரியார் போலச் செப்புவ துண்டோ?

போஜ : இருஞ்சிறை யகத்தே யிருந்தார் அவரே.
வெளிப்பட் டாரோ? வேந்தரைப் பகைத்துக்
கலகம் புரியும் கருத்துடை யாரோ?

தூதர் II : நாட்டின் நலத்தில் நாட்ட முடையார்
அவரென நீவிர் அறிந்து கொண்டால்
இங்ஙனம் பேசிர்.

போஜ : எங்ஙனம் பேசிலென்?
இன்றெமை யெதன்பொருட் டெதிர்ப்பார் அவரே?

தூதர் I : உம்மை யெதிர்க்கும் உள்ள மவர்க்கிலை.
அரசினைக் காக்கவும், அமைதியைக் காக்கவும்,
நாட்டின் மானம் நன்கு புரக்கவும்
எண்ணினர் அவர்; நீர் இசைந்தால் வருவர்;
வந்துநும் கழலிடை வணக்கமும் செய்வர்;
அரசரைக் காக்கும் ஆணையைப் பூணுவர்.
அவர்தம் தம்பியர் அவரொடு மிணங்கி
உமக்குப் பணிந்தே யுழைக்கவும் இசைவர்.

போஜ : உண்மையா விவையெலாம்! உண்மையா! உண்மை
[யா!

தூதர் I : முற்றிலு முண்மை முக்கண னறிய!
வேண்டுகோ ளொன்று விடுத்துளா ரவரே.
நீரதற் கிணங்கின் நேருற வருவர்;
அரசரை வணங்கி யவர்துணை யாவர்.

போஜ : நகரின் றெமதே. நராதிப ரெம்மவர்.
நிதியறை யெம்பால் நின்றுள தன்றியும்
நாட்டினைக் காக்கும் நற்பெரும் படைஞரும்
எம்முரை கேட்பவ ரென்ப தறிவரா?

தூதர் II : அறிவ ரறிவ ரரசமா துலரே!

போஜ : வேண்டுகோள் யாது? விரைவின் விளம்புக!

தூதர் I : ஈதவர் வேண்டுகோள்; இசைமின் நீரே.
இசைந்தீர் என்னின் இன்றே யவர்வந்
தன்பொடும் பணிவொடு மடங்குவர் நுமக்கே.
இன்றிவண் புகுந்துள இபுரகீம் அடில்ஷா
நாட்டினை யகன்று நாளையே யேகுதல்
நன்றா மென்றனர்; நரபதி புகழும்
நாட்டவர் மானமும் நலம்பெற நிலைக்க
வழிவே றிலையென வணங்கி விளம்பினர்.

நகர கா : சூழ்ச்சி! சூழ்ச்சி! சூழ்ச்சி யிங்கிது!
இபுரகீம் அடில்ஷா ஏகிய பின்னர்
நம்மையும் கொன்று நாட்டையும் கொள்வர்!

தூதர் I : இறைமை கவரும் எண்ணம் இல்லையென்
றொருபடி யாக வுரைத்துளா ரவரே.
பொய்ம்மை விளம்பும் புல்லிய ரவரலர்
என்பது நுமக்கே நன்கு தெரியும்.

நகர கா : அவர்பொய் பேசா ரைய! ஆயினும்
சலாக சகோதரர் தமது சகோதரி
கொழுநரே யரசு கொள்ளுதல் வேண்டும்
என்று முயல்வதா யானறிந் துள்ளேன்.
வரதாம் பிகைதான் மன்னவர் தலைவியாய்
இந்நகர் புகுந்திடி னெமக்குப் பிழைப்பிலை.

தூதர் II : அவர்கருத் தெம்மவ ரறியா ரைய!
தென்னாட் டிருந்து திரும்பிய வுடனே
சிறையகம் புகுந்தார்; சிறைப்புறம் வந்தார்.
பிறவெலா மவரிடம் பேசுவா ரில்லை.
ஆதலி னவர்மொழி தீதறு மெனநீர்
ஏற்றுக் கொள்ளுதிர்; ஈதிர்நும் விடையே.

போஜ : விரும்பிய வண்ணமே வேற்றுநாட் டரசரைத்
திறைகளை யளந்து செல்கெனப் போக்குவேம்.
இராம ராயர் ஈங்குவந் தெமக்கும்
அரசர் தமக்கும் அமைந்தநற் றுணையாய்
இருந்திட வேண்டும். இன்ன துறுதியோ?

தூதர் I : உறுதி! உறுதி! உறுதி யுரைத்தோம்.
ஐய முறும லாவன புரிதும்.
யாமுமெந் தலைவர் இருப்பிடம் போதும்.

போஜ : நல்லது! செல்லுதிர். நாமுமிங் கிவரை
விரைவினில் அனுப்ப வேண்டுவ புரிதும்.

[தூதர் விடைபெற்றுப் போகின்றனர்.]

நகர கா : இபுரகீம் அடில்ஷா ஈங்குவந் துறைவதும்
நரபதி யரியணை யுரிமையொ டமர்வதும்
நமக்குச் சிறுமையே. நாட்டவர் விரும்பார்.
ஆயினும், அரசருக் காதர வளிப்பவர்

ஒருசில ரேனும் உறுதியாய் நிற்பின்
யாமு மவரொடு மிணங்கிநட் புறலாம்.
இராம ராயர் இணையிலா வீரர்;
மானு பரணர்; வாய்மொழி தவருர்.
பிறர்மொழி கேட்டாற் பிறழ்வரோ வெனயான்
ஐய முற்றேன்; ஆதலின், வினவினேன்.
சலாக சகோதரர் சல்லிய நமக்கே.
அச்சுத தேவரு மவர்துணை பூண்டு
நாடு கவரு நாட்ட முள்ளார்.
யாமே யரசருக் கேற்ற துணையாய்
ஒருமன மாக வுழைத்திடல் வேண்டும்.

போஜ : அங்ஙனே செய்வோம். அச்சுத ராயர்
அரசு பெறுவதற் கவாவின ரென்பதை
அன்றே யறிவேன். அவரிடம் படையிலை.
இராம ராயர் எம்வய மாயினர்.
இனியவர் நம்மை எதிர்ப்பது மியலா
தரசும் நமதே; ஆட்சியும் நமதே;
வாழ்வும் நமதே; வளர்திரு நமதே;
வைத்தது சட்டம்; வகிப்பது பதவி;
நினைத்தது நீதி நெறியென வாழலாம்.

நகர கா : எனையும் துணைவனென் றேற்றுக் கொண்டால்
இருவரும் உரிமையை யியன்றள வாளலாம்.

போஜ : உனக்கு மந்த வுரிமை யுண்டே!

## ஐந்தாம் களம்

இடம் : அரண்மனை அகமும் புறமும்

காலம் : நண்பகல்

பாத்திரங்கள் : போஜ திருமலை, சலாக சகோதரர், இராம ராய சகோதரர், அச்சுத ராயர், கொண்டமரசு, ஐயப்ப அரசு, நகர காவலன், குழந்தையரசர்.

[போஜ திருமலை அரண்மனைப் புது மண்டபத்தில் உலவுகின்ருர். உட்காருகின்ருர், நிற்கின்ருர். மது பானம் நடக்கிறது.]

நிலைமண்டில ஆசிரியப்பா

போஜ : மதுவே! மதுவே! வானே ரமுதே!
உள்ளக் கிளர்ச்சி யுதவுவாய் நீயே.
உலகினை மறந்துவே றுலகந் திரிய
ஆற்றலை யுதவும் அசுவம் நீயே.
உனக்கிணை நீயே. உணரா துன்னை
வெறுப்பவர் அறிவிலா வீணர் கசடர்;
நற்பொருள் நயத்தினை நலமுற வுணரார்;
அமல னவரையும் அகன்ற வுலகில்
எதற்கோ படைத்தான்!

[நகர காவலன் வருகின்றான்.]

நகர கா : எனக்கும் உண்டோ?
என்ன ஆனந்தம்! என்ன ஆனந்தம்!
தன்னை மறந்த தலைமையை யுதவும்
மதுவை மறுப்பவர் மதியிலா மூடரே.

போஜ : உனக்கும் எனக்கும் உரிமை யொன்றே.
பொன்மணிக் கலத்திற் புதுமது வருந்தும்
பாக்கியம் வாய்த்தவர் பலரிலை பாராய்.

நகர கா : புதுமது நன்றோ? பழமது நன்றோ?

போஜ : உள்ளக் கிளர்ச்சி யொன்றே நாடுவோர்
புதுமது வருந்துவர். புரண்டு விழுந்து
மயங்கித் திரியும் மனநிலை வுடையோர்
பழைய மதுவினைப் பார்த்தன ரருந்துவர்.

நகர கா : சிறிதே பழமது சேர்த்துத் தருதிரோ?

போஜ : ஈதுநீ பருகுதி. இமையவ ருலகமே
சேருவாய்; மீளும் சிந்தனை கொள்ளாய்.

[நஞ்சு கலந்த மதுவைக் கொடுக்கின்றார்.]

நகர கா : என்னே யிதன்சுவை! என்னே யிதன்சுவை!
அமரருங் காணா வமுதச் சுவையே!

[குடித்துக் கீழே உருளுகின்றான். போஜ
திருமலை புரட்டிப் பார்க்கின்றார்.]

போஜ : அடிமைப் பையலுக் கரசி லுரிமையாம்!
ஒழிந்தான்! ஒழிந்தா னொருபெரும் பகைவன்!
இனியொரு சிறுபகை யிருப்ப ததனையும்

ஒழித்தால் யானே யுண்மை யரசன்!
என்னை யெதிர்ப்பவர் யாரே பார்ப்பேன்!

[அந்தப்புரக் காவற்பெண் ஒருத்தி வருகின்ருள்.]

கா. பெண்: அரசியர் தம்முள் அடங்காக் கலகம்!
ஆங்குள பெண்டிர் அடக்க வியலாது.

போஜ: காரணம் யாது கலகம் நடக்க?

கா. பெண்: அரச வுரிமையே அரசியர் தம்மை
உட்கலாம் விளைக்க வுளங்கொளச் செய்யும்.

போஜ: விரைந்துநீ போதி! வேந்தச் சிசுவை
ஈங்குக் கொணருதி! யாஞெரு வழியாய்
அரசியர் கொட்டம் அடக்குவன் பாராய்!

[காவற்பெண் உள்ளே போகின்ருள்.
ஒரு சேவகன் வருகின்ருன்.]

சேவகன் I: அமர்க்களம்! அமர்க்களம்! ஐய! பெரும்படை
நகரைச் சூழ்ந்தது! நம்படை திரட்டி
அதனையா மெதிர்க்க ஆவன புரிதும்!

[மற்ருெரு சேவகன் வருகின்ருன்.]

சேவகன் II: அரசமா துலரே! அரசினைக் கொள்ள
அச்சுத தேவர் அமர்ப்பெரும் படையொடு
நகரினுள் நுழைந்தார்! நகரவ ரெல்லாம்
மகிழ்வினே டவரை வரவேற் கின்றனர்!

போஜ: இராம ராயர் எம்மவர் என்பதும்
முப்ப தாயிர முறைதெரி படைஞர்
எம்மிட முள்ளா ரென்பதும் வருபவர்
அறியார் போலும்! அறிவினை யூட்டுவன்.

[சேவ்கர் இருவரும் போகின்றனர்.]

கா. பெண்: அரசமா துலரே! அரசரைப் பாரும்.

[குழந்தையைக் கொடுக்கின்ருள்.]

போஜ: 'அரச மாதுலன், அரச மாதுலன்,'
என்றே வழங்குவர் யாவரு மென்னை.
மாதுல னல்லேன்; மன்னனே யினியான்.
அரசியர் கலகமும் அடக்குவன் முறையே.
என்வலி எதிர்ப்பவர் யாவரு மறிக!

[குழந்தையைக் கழுத்தைத் திருகிக் கொல்கின்ருர்.]

கா. பெண் : ஐயோ ! பாவீ ! அரசரைக் கொன்றாய் !
அருமந்த பெருங்குலம் அழிந்து போயது !
நீயினி யாளவோ நினைந்தாய் நாட்டினை ?
என்கை வாளால் யானுனைக் கொல்வேன் !

[வாளை வீசிப் பாய்கின்றாள்.]

போஜ : வாளொடு பாய்ந்தால் மாய்ந்து போவனோ !
சாட்சி நீயே சதிச்செய லிதற்கு.
நின்னையு மொழிப்பேன் ; நீயும் துணைபோ !

[வெட்டிக் கொல்கின்றார் ;. பிணங்களை ஒருவாறு மறைத்து வைக்கின்றார். மறைவில் நின்ற சில பெண்கள் செய்தியை அரண்மனைக்கு வெளியே பரப்பிவிடுகின்றனர். காட்டுத் தீப்போல இக்கொடுங்கொலைச் செய்தி பரவுகின்றது.]

போஜ : நானே யரசன் ! நானே யரசன் !
எதிர்ப்பவர் வருக ! என்வலி காண்க !

[அரியணையில் அமருகின்றார். மூன்று தூதர் புறத்தேயிருந்து வருகின்றனர்.]

தூதர் I : அரசரைக் கொன்றீர் ! அரசை யழித்தீர் !
நாட்டவர் பெருமை நன்மை மானம்
யாவும் கெடவே யிழிசெயல் புரிந்தீர் !
பன்னா டடக்கிப் பல்லாண் டாண்ட
அரசினைப் பிறருக் கடிப்படச் செய்தீர் !
உம்பெருங் குறைகள் உணர்ந்தி ராயின்
அரசினைக் கைவிட் டகலுக நொடியில் !

போஜ : இல்லையேல் நிகழுவ தென்னை தூத !

தூதர் II : போர்ப்பெருங் களத்தே புரளுநும் முடலம்.

போஜ : இங்ஙனம் உரைத்தார் யாவரே யைய !

தூதர் III : அச்சுத தேவரெம் மரசர் புகன்றார்.
இராம ராயரும் இருப்ப ரவரொடே.

போஜ : இருவரும் சேர்ந்தோ எமைஎதிர்க் கின்றனர் ?
போரினி லெம்முடல் புரளா தறிவீர் !

ஈங்குள பொருள்களி லெவையு மவர்க்கென
விட்டனம் போகோம்; வேண்டுவ செய்வோம்!
வெளியே போதிர் விரைவினி னீரே!

தூதர் மூவரும்: போது மைய!யாம் போதும் போதும்!
வருதும் விரைவில்நும் வாழ்வினை நோக்க!

[தூதர் போகின்றனர்.]

போஜ: எவரே சேவகர்? ஈங்கு வருதிர்!
அருமணிக் குப்பை யனைத்து மெடுத்தே
அரைகல் லிடையிட் டரைத்துப் பொடிப்பீர்!
யானைகள் வாலறுத் திருகண் குத்துதிர்!
பரிகளைக் குத்திப் படுத்து வருதிர்!
வருவார் ஒன்றும் மருவா வகையில்
எவற்றையும் அழிப்பதே யெனது கருத்தாம்.

[சேவகர் அவ்வண்ணமே செய்கின்றனர்.]

சேவகன் I: அரசச் செல்வம் அரசரோ டழிந்தது.
அரசருக் காகா அருமணி பொன்னினை
ஏழையர்க் காயினும் ஈதல் செயலாம்.
அந்தோ! பாழாய் அழிந்தன எல்லாம்!

போஜ: பேச்சு வேண்டா; பிடித்தது முடிக்க!
'எல்லாம் ஒழிந்தன! எல்லாம் ஒழிந்தன!'
என்பது விரைவினில் என்னிடம் உரைக்க!

சேவகன் II: ஒழிந்தன! ஒழிந்தன! ஒழிந்தன வையா!

போஜ: இனியா னிருப்பதால் யாதும் பயனிலை.
பாவியர் அரசினைத் தேவியர் விருப்பம்
தெரியார் என்னையும் செலுத்துதல் விடாஅர்.
அழிக்கத் துணிந்தனர். ஆதலி னெல்லாம்
அழிக! அழிக! அரசனாகயான்
வாழ வியலா வண்ணம் புரியும்
கொடியர் வருமுன் கூடுவன் எமனுல
கெனக்கங் கிடமிலை யென்பார் யாரே?
நரபதி யாக நரருல காளத்
தகுதி யிலேனெனில், தற்கொலை புரிந்து
நரக ருலகிடை நானர சாள்வேன்!

வாளே! வருக வருக! எனக்குப்
புகழோ பெருமையோ பொருந்தத் தந்திலே.
போர்க்களம் புகவும் வேர்த்து நடுங்குவன்.
ஆதலி னெனக்கீ தமையும். பிறர்புகப்
பாரேன், வாழேன், பணியேன், வணங்கேன்;
எனைப்பிறர் வணங்க விருந்தா லிருப்பேன்;
பிறரையான் வணங்கும் பிழையி னில்லேன்.
நரகமே! எனக்கு நல்வழி திறக்க!

[வாளிற் பாய்கின்றார். படைஞர் அரண்மனைக்குள் நுழைகின்றனர். அச்சுததேவ ராயரும் இராம ராயரும் மங்கள வாத்தியங்களோடு பின் வருகின்றனர். அமைச்சரும் தொடர்கின்றனர்.]

**சலாகம் பெரிய திருமலை ராயர்:**

அச்சுத தேவரே! அரியணை யமர்க!
நாடு நலம்பெற நன்கு புரக்க!

**சலாகம் சிறிய திருமலை ராயர்:**

வரதாம் பிகையார் மனம்புகு மரசே!
புலவருக் குரிய பொன்பொழி வள்ளால்!
அரசச் செல்வம் அமைதியி னேற்க!

**இராம:** யானுமென் சோதரர் இருவரு மரசே!
இனிநுமக் கடியவ ரெனவே வாழ்வேம்.
நாட்டின் வளமும் நகரின் சிறப்பும்
குடிகளின் மானமும் குன்றா வண்ணம்
அரசினை யாண்டுபல் லாண்டுவா ழியவே!

[வணங்குகின்றார். அவர் சகோதரர்களும் வணங்கி நிற்கின்றார்கள்.]

**கொண்ட:** படைகளை நடத்திப் பலபோர் புரிந்து
நாடுகள் புரந்து நரபதி பெறுபுகழ்
மாசுறு வகையில் வாழிய வரசே!
அமைச்ச வுரிமை அதிகநாள் வகித்தேன்;
இனிப்பிறர்க் கப்பதம் ஈந்தருள் புரிய
வேண்டி யுரிமையால் விடைவேண் டுவனே.

ஐயப்ப : வணங்குவ லரசே! வாழிநீ டூழி!

அர்சுந : அன்புடை யமைச்சர்காள்! அமர்க்கள வீரர்காள்!
உம்முடை யுதவியால் உற்றேன் அரசினை.
ஆதலின், உம்மிடம் காதலே யுடையேன்.
இருதோள் உடைய இறையவர் தமக்குப்
பல்பெருந் தோளெனப் பயிலுதிர் நீவிர்.
வேண்டிய வேண்டிய விழைவுகள் பெற்று
நாட்டினை முன்போல் நயந்து வாழுதிர்!

இராம : இனியா னென்னகர்க் கேக விழைகுவல்.
வேண்டும் பொழுதெலாம் ஈண்டுவந் தரசர்க்
குரிய பணிகளை யுவப்பொடு பூணுவன்.
நாடு நலம்பெற நாடி யுழைக்கும்
சோதரர் துணையினல் சொல்லிய வண்ணமே
புகழ்பெருந் துயர்நெறி புகுந்துவா ழுவலே.

[எல்லாரும் விடை பெறுகின்றனர்,]



# நான்காம் அங்கம்

## முதற்களம்

இடம் : ஸ்ரீரங்கம் பெரிய கோவில்
காலம் : காலை
பாத்திரங்கள் : அச்சுததேவ ராயர், சலாகம் திருமலை ராயர், திருவடியரசு, விட்டல ராயர், ஸ்ரீவல்லப தேவர், ராஜநாத கவிஞர், விசுவநாதர், திருமலாம் பிகை, புலவர்.

[அச்சுதர் கருட மண்டபத்தில் வீற்றிருக்கின்றார். புலவர் பலர் அருகில் இருக்கின்றனர். பிரபுக்கள் சூழ இருக்கின்றார்கள்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

அச்சுதர் : புலமைச் செல்வம் பொருந்திய பெரியீர்!
தமிழ்மொழி வழங்கும் தமிழ்நா டடைந்துளேம்;
பைந்தமிழ்ப் பின்செலும் பச்சைக் கொண்டல்
வளர்ந்தருள் கோவில் வணங்கப் பெற்றேம்;
திருமங்கை மன்னர் செய்துள திருப்பணி
அனைத்து நோக்கி யகக்களிப் புற்றேம்.
பொன்னி யன்னையின் புதுப்புன லாடி
நினைத்தன யாவும் நிறைவுறு மெனுமன
உறுதி தூண்ட வுளேமிவண்.

ராஜநா : அரசே!
தானே யருளிய தனிமறைத் தன்னைத்
தொடர விடுத்துச் சுவைசால் தமிழ்மறை
முன்னே போக்கி முகமக மலரச்
செவியுற் றுவக்குந் திருவரங் கத்தான்
அழகிய மணமக னாகிய வண்ணம்
ஆண்டாள் மாலை யணிந்த கோலம்
காட்டி யருளுதல் காணப் பெற்றேம்.

திருமலா : தமிழ்ப்பெரும் புலவர் தமிழெனு மமுதம்
அரசர்க் களிக்க வவாவி நிறைந்துளர்.
யாமுமெம் மாந்திரத் தேமொழி யதன்கண்

இசைத்தன கவிதைகள் இசைக்க விழைகுவேம்;
ஆரிய மொழியிலு மாக்கிய கவிதைகள்
புலவர் திருமுன் புகல விரும்புதும்.

அச்சுதர்: ஆரிய மாயினென்! ஆந்திர மாயினென்!
தமிழே யாயினென்! தலைமைசால் புலவீர்!
கலைமகள் திருவருள் கவினிய புலவர்
எம்மொழிக் கவிக்கலை யேற்றன ராயினும்
அவையெலா மவள்கழற் கருச்சனை யன்றோ?
தென்னாட் டகத்தும் திருவடி யரசிலும்
அமர்செயச் சென்றோர் அடையுங் காறும்
புலவர் பணிகளை நலமுறத் துய்ப்பம்.

ராஜநா: இருபெருங் காவியம் இயற்றி யுளேன்யான்.
அவற்றையிவ் விடத்தி லரங்கேற் றுதற்கே
அனுமதி வேண்டுவன் அரசர் பெரும!

அச்சுதர்: மாபெரும் புலவர் வாய்மலர் பெய்யும்
சுவையினை யரங்கனுஞ் சுவைத்து மகிழும்.

திருமலா: யானுமோர் காவியம் இயற்றிக்கொணர்ந்துளேன்.

அச்சுதர்: ஆரிய மொழியினோ, ஆந்திர மொழியினோ?

ராஜநா: தெலுங்க மொழியினிற் செய்யு ளுரைத்திடிற்
செந்தமிழ் நாட்டினர் செவிச்சுவை யறியார்.
ஆரிய மெனினே யனைவரு முவப்பர்.
ஆதலின் யாமவை ஆரியத் தியற்றினேம்.

அச்சுதர்: பெண்மைப் புலவர் பெருங்கா வியத்தினை
முதற்கட் கேட்பம் முதுபெரும் புலவீர்!

ராஜநா: அன்னது நன்றே அரசர்க் கரசே!

அச்சுதர்: அன்னையீர்! நீவிர்செய் அரும்பொருட் பேழையை
அறிஞர் மகிழ வரங்க மேற்றுக!

திருமலா: அருமை யறியும் பெருமை யுடைய
விழுக்குடிப் பிறந்த வேந்தர் பெரும!
வரதாம் பிகைபரி ணயகா வியந்தனைச்
சம்பு நடையாற் சாற்றினன் யானே.

அச்சுதர்: பரிணயப் பகுதி பகருக சிறிதே.

எழுசீர் ஆசிரிய விருத்தம்

திருமலா : அரவணை வளர்வோன் பயோததி யளித்த
அமலையை மணம்புரிந் தாங்குப்
பரமனை யுளத்து நிறுவிய வரசர்
பரம்பரை விளக்குமச் சுதர்தாம்
மரபினி லுயர்ந்த சலாகனுர் அளித்த
மங்கையை வரதவம் பிகையை
வரமலி யறங்கள் வளர்வுறு கருத்தால்
மணந்தனர் நிறைந்தநா ளினிலே.

நிலைமண்டில ஆசிரியப்பா

அச்சுதர் : அன்னையீர்! நன்கனம் அமைத்துளீர் காவியம்!
முழுவது மரங்கின் முன்னரே கேட்பம்.
முதுபெரும் புலவரு மொழிகதம் செய்யுள்.

ராஜநா : பாகவத சம்பு பகர்ந்துளே னரசே!
அச்சுத ராய அப்யுத யம்மெனும்
காவிய மொன்றும் கழறி யுளேன்யான்.
இரண்டையு மரசர்நீ ரேற்றுக் கொண்டால்,
உளமுற மகிழுவன் உண்மை உண்மையே.

அச்சுதர் : அவற்றை முழுவது மரங்கனு லயத்துப்
புலவர் திருமுன் புகலுதல் நன்றே.
ஒவ்வொரு கவிதை யுரைத்திர் கேட்குவம்.

ராஜநா : விரும்பிய வாறே விளம்புவல் அரசே!

எழுசீர் ஆசிரிய விருத்தம்

பெண்மையை மறந்து தம்மையே மறந்து
பின்ருெடர் மகளிரை யவர்தம்
உண்மையை யுணர்ந்து மனத்தகத் தூய்மை
ஒன்றையே பெரிதென நினைந்து
வண்மையை யுருவ மெனவுள கண்ண
வருகென விருந்தைமா வனத்தே
அண்மையி னிராசக் கிரீடைசெய் தனையுன்
அகக்கருத் தறிபவர் எவரே!

நிலைமண்டில ஆசிரியப்பா

அச்சுதர் : நன்றே ராசக் கிரீடை நவின்றீர் !
கண்ணன் கருத்துக் கண்டவர் உளரோ !
இறைவன் பெருமையை இசைப்பக் கேட்டுள
அவைக்களத் தேனைய தமர்ந்து கேட்கவும்
விருப்பம் கொள்கிலேம்; வேறொரு நாளது
கேட்குவம் புலவீர் !

ராஜநா : வேட்டவா செய்வல்.

சலாகம் : இனும்பல புலவர் இருப்பர். அவரவர்
கவிதைக ளெல்லாம் களிப்பொடு கேட்க
அரசரும் விரும்புவர் ; அமைச்சரும் விரும்புவர்.
ஆயினும் இன்னொரு தூயநற் றிருப்பணி
பேசுதல் வேண்டும் பெருமைசால் புலவீர் !
அரசர் பரிசிலீ தன்பொடு கொண்மின்.

[பொன்னும் மணியும் நிறையக் கொடுக்கின்றூர்.]

திருமலா : அறவுரு வுணர்ந்த வரசர் பிரானே !
விசய நகரில் விட்டலர் ஆலயத்
தடைந்தவர் மருட்கை யடையநீர் திருமுடி
சூடிய ஞான்று சுவண மேரு
மாபெருந் தானம் வழங்கிய தறிவேன் ;
ஆழ்வார் திருவுரு வாறிரண் டமைத்தவ்
வாலயம் பெருமை யடையவே புரிந்த
பெருமையு மறிவேன் பெருங்குடித் தோன்றல் !
இன்றள வெவரு மெண்ணவே யறியா
ஆனந்த நிதியெனு மரும்பெருந் தானம்
வழங்கிய வண்மையிம் மகிதல மறியும்.
திருமால் திருத்தளி சென்றுசென் றன்பால்
மழையெனப் பொழியுநும் வண்மையைப் புலவர்
பொருளுறு கவிகளாற் பொருந்தவே புகழ்ந்துளர்.
எமக்கென வியற்றிய இச்சிறப் பென்னே !
நுமக்கிவை சிறிதென நுவலவும் துணிவல்.

ராஜநா : வேந்தர் பெருமான் வேதநூ லாய்ந்த
சான்றவர் பலருளர் தத்தம் கவிகளை
அரங்க நாதனுக் கர்ப்பணம் செய்யவே.

யானுமின் றிங்கிவ் விரும்பே றடைந்தேன்
என்குல முந்தையர் இயற்றிய வறத்தால்.

சலாகம்: தெற்குத் திசைக்கட் சென்ற விட்டல
தேவர் மீண்டது செப்புவர் சிலரே.
அவரையிப் பொழுதீங் கழைக்க லாகுமோ?

ராஜநா: அரசே! யாங்கள் அரங்கனை வழிபட்
டவன்றிருத் தலைவியி னருளினை யெய்து
விரும்புது மாதலின் விடைகொள் கின்றோம்.

[புலவர் எல்லாரும் புறப்படுகின்றனர். அரசரும், அமைச்சரும், சில பிரபுக்களும் இருக்கின்றனர்.]

அச்சுதர்: திருமலை ராயரே! திருவடி யரசினும்
பாண்டி நாட்டினும் பலர்பலர் கலகம்
புரிவரென் றறிந்தே போந்தன மிங்கே.
அவரை யடக்கவே யவாவி வந்தும்
நீயிரே யவரை நேர்சென் றடர்க்க
விரும்பினி ராதலின் விமல னரங்கனை
வணங்கியே யிங்கு வதிந்தனம் இந்நாள்.

சலாகம்: விட்டல தேவரை விடுத்தனன். அப்பணி
நன்றே யியற்றி நணுகி யுளாரவர்.
அவரைக் கேட்பின் அனைத்தும் விளங்கும்.
விசுவ நாதரும் விட்டல தேவருக்
குதவி புரிந்த துரைத்தார் சிலரிங்
காதலி னவரையும் அழைத்துக் கேட்கலாம்.

அச்சுதர்: மதுரை நாட்டு மன்னவர் குடியை
நாகம நாயகர் நலமறக் கெடுத்ததை
அறிந்தியாம் போக்கிய அருந்திறல் வீரன்
விசுவ நாதனே மேவின னீங்கே.
அவனையும் அழைத்தே அனைத்தும் கேட்பம்.

சலாகம்: சேவக! அவரைச் சேர்க்க வீங்கே.

[சேவகன் போய் அழைத்து வருகின்றான்.]

அச்சுதர்: வருக! விட்டல! வருக விசுவ
நாத! நும் வரவு நல்வர வாகுக!
சென்ற திசையினிற் சேர்ந்தீர் வெற்றி

எனவே யெண்ணுதும். யாவும் இயம்புதிர்.
திருவடி நாடு சென்றிருந் தீரோ?

**விட்டலர் :** திருவடி நாடு சென்று மீண்டேம்.
விசய நகரினில் வேந்தருக் கமைச்சாய்
இருந்தசெல் லப்பர் எம்மை எதிர்த்துப்
பெரும்போர் புரிந்தார். பெரும்படை திரட்டி
அவருந் திருவடி யரசுஞ் சேர்ந்து
பாண்டி நாட்டுப் பார்த்திவர் தம்மை
அடிமைப் படுத்தவும் அவாவினர் என்றூர்.
வழுதிநா டாளும் வல்லப தேவர்
எம்முடை யுதவி யினிது பெற்றனர்;
வெற்றியும் புனைந்தார்; வீமைவுட னிங்கு
வணக்கம் கூறவும் வந்துளா ரவரே.

**அச்சுதர் :** பரமக் குடிநகர்ப் பகுதியி லிருவர்
கலகம் செய்ததாக் கழறக் கேட்டேம்.
அவரெலா முறைமுறை யடங்கிவிட் டனரா?

**விசுவ :** மானு மதுரையில் வாழு மறவர்
மாவலி வாணரும் மற்றவ ருதவியைப்
பெற்றதாற் சிறுபடை பெயர்த்தெமை யெதிர்க்கும்
துணிவு பூண்டதும் பிச்சிநா யகரும்
போர்க்களம் புக்கனர் பொருதவர் தம்மை
அடக்கிப் போந்தன மரசர் பிரானே!

**அச்சுதர் :** திருவடி யரசர் திறையளந் திலரோ?

**விசுவ :** திறையினை யளக்கவே திருவடி நாட்டார்
ஈங்கு வந்துளர் எம்பெரு மானே!

**அச்சுதர் :** வல்லப தேவர் வந்த தெதற்கோ?

**விசுவ :** நாட்டினை மீட்டு நல்கிய நன்றியை
உளமுற நினைந்துதம் முயிரினு மினிய
அழகுரு வாகிய வரும்பெறல் மகளை
அரசருக் களிக்க வடைந்தன ரவரே.

**சலாகம் :** அவரையும் அழைக்க ஆணையோ அரசே!

**அச்சுதர் :** வழுதியுஞ் சேரரும் வரலா மவைக்கே.

[சேவகர் இருவர் போய் அழைத்து வருகின்றனர்.]

திருவடி : அரசர் பிரானே! அடியேன் வணக்கம்!
வணக்கம் வணக்கம் வணக்கம் அரசே!
புரிந்துள பெருங்குறை பொறுத்தே யருளுக!
மும்மடி திறைகளை முகந்துள னேற்க!

[வணங்கி நிற்கின்றார்.]

வல்லப : வாழிய அரசே! வாழ்வினை யிழந்த
நாயடி யேற்கு நல்வாழ் வளித்தீர்!
எங்ஙனம் புகழ்வே னியற்றிய வுதவியே!

அச்சுதர் : வழுதியர் தலைவீர்! வருக வருக!
அமருக விந்த யரியணை தனிலே!
சேரரே! பகைத்தீர்; செல்லப்பர் துணையால்
செயத்தகா வினைபல செய்தீர். உம்மையும்
பொறுத்தேம்; முன்போற் புவியினை யாளுதிர்.
ஆண்டு தோறும் அமைந்த திறையினை
விசய நகர்க்கே யிசைவுறப் போக்கி
வாழுதிர்.

சலாகம் : திருவடி வளநாட் டரசரே!
சொல்லிய வண்ணம் நல்லியல் பூண்டு
நாட்டினை யாள்வீர். கேட்டினை விளைத்த
செல்லப்பர் எங்குச் சென்றனர் தெரியுமோ?

திருவடி : அமர்க்களத் திருந்தார் அகன்றார் என்றனர்.
என்ன வாயினர் என்பதை யறியேன்.

அச்சுதர் : ஆக்கிய வரசினை யமர்க்களத் தெதிர்த்த
பாவியர் கதியினைப் பண்டைய புலவர்
நன்கு விளக்கினர்; நாமுமஃ தறிவேம்.
அவரினி யென்ன வாயினு மென்னே!
இன்றள வவரிடம் இருந்த நாடெலாம்
செல்வ மெல்லாம் சேருக நுமக்கே.

சலாகம் : எனக்கோ செல்வம்! யானது விழைகிலேன்.
கடமை புரிவதே கருத்தெனக் காகும்.
அவர்குலத் தோன்றலர்க் களிப்பது நன்று.

அச்சுதர் : மைத்துனக் கிழமையால் மன்னர் பணியினை
அறநெறி பிழையா தாற்றிய நுமக்கே
அவர்தம் திருவெலாம் அளித்தே மளித்தேம்.

விசய நகர வேந்தர் குலத்தோர்
உரைத்த மொழிகள் ஒருமையும் தவறார்.

சலாகம் : அரச ராணி யாதலி னேற்றேன்.

வல்லப : பிறர்க்குக் கொடுத்தே பெரும்புகழ் பூண்ட
அரசருக் கொருபொரு ளளிக்க விரும்புவல்.
யான்றரு பொருளினை யேற்க வேண்டுவல்.

அச்சுதர் : பாண்டிய மன்னரே! பழம்பெருங் குலத்திற்
பிறந்தீ ராதலிற் சிறந்தீ ரெம்மினும்.
கொடுக்க விழைவது கொடுப்பீர் ; கொள்வல்.

[சில பெண்டிர் பாண்டிய குமாரியை
அழைத்து வருகின்றனர்.]

வல்லப : அரும்பொரு ளிவளே. அரசர்க் கர்ப்பணம்.

அச்சுதர் : அரங்க னங்கள் அழகிய மணமகன்
கோயி லகத்தியாம் கொள்வே மிவளை.
நன்றே வாழிய நலம்பொலி யரசே!

[வாத்தியங்கள் முழங்குகின்றன. அர்ச்சகர்
பிரசாதம் கொண்டு வருகின்றார்.]

அர்ச்சகர் : வாழிய வரசே! மறைநான் குணரா
ஆயிர நாமத் தரங்கன் றிருவருள்
நுங்குடிச் செல்வமாப் பொங்குக பொங்குக!

[பிரசாதம் கொடுக்கின்றார். ஒரு தூதன்
ஒற்றன் ஒருவனோடு வருகின்றனன்.]

தூதன் : வணங்குவல் அரசே! வாழிய வாழிய!
வடநாட் டிருந்து வருவல் யானே ;
நன்மண நிகழ்வுறு நலம்பொலி பொழுதினில்
வந்துளன். எவையும் மங்கள மாகுக!

ஒற்றன் : விசய நகர வேந்தர் வேந்தே!
கயபதி யாகிய கலிங்க வேந்தும்.
அயபதி யாகிய அடில்ஷா வரசும்
நம்மைப் பகைத்தனர் ; நட்பு மறந்தனர்.
கிருட்டிணை நாடெலாம் கெடுத்தார் கயபதி.
அயபதி சினத்தொடு மடைந்தனர் நந்நா
டாங்கியா மின்மையி னழிவு விளைத்தனர்.

நாகலா புரமெனும் நகர மழிந்தது
வேந்தருக் குணர்த்த விரைவினில் வந்தேன்.

அச்சுதர் : தூத! நீயினிச் சொல்லுவ தியாதே?

தூதன் : அரசர்க் கரசே! அடியே னறிந்தன
அதிக மில்லை யாயினு முரைப்பேன் :
கிருட்டிண தேவராற் கிளர்மதிப் புற்ற
தூமொழி தொடுக்கும் வாய்மொழிப் புலவர்
அல்ல சானிபெத் தன்னு அவர்தாம்
கயபதி வேந்தனைக் கண்டன ரெதிரே.
'முன்னை மன்னர் முறைபுரி நாளையில்
வணங்கி வாழ்த்தி மகளைக் கொடுத்தீர் ;
இன்றுநீர் கொடுமை யெத்துணை யிழைத்தீர் !
அரசருக் கிவ்வினை யழகி தாகுமோ?'
என்றே கேட்டனர் எனயா னறிவேன்.
எவரே யாதே யிசைப்பினும், பகைவர்
விரும்பிய கொடுமை விளைத்தே யிருப்பர்.

அச்சுதர் : அங்ஙனம் நிகழ்வதோ? ஆயின் இனிநாம்
வடக்கு நோக்குதும் வாள்கர மெடுத்தே.

[சபை கலைகின்றது.]

## இரண்டாம் களம்

இடம் : விஜய வாடி

காலம் : மாலை

பாத்திரங்கள் : அச்சுதர், சலாகம் திருமலை ராயர், குலி குடுப்ஷா, அசாத்கான், இபுராகிம் அடில்ஷா.

[அச்சுதர் பாசறையில் உலவுகின்றார். சலாகம் திருமலை ராயர் வருகின்றார்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

அச்சுதர் : என்னே சூழ்ச்சி! என்னே சூழ்ச்சி!
அசாத்கா னுண்மையில் அசகாய சூரன் ;
பரங்கியர் கோவைப் பக்கம் இரண்டூர்
வேண்டு மென்று விளம்பிய தறிந்தே
அவரிடம் பேசிநம் மரண்மனை யகத்து

நவநிசி விழவினில் நம்மிடம் வந்து
நாட்டினை யவர்க்கே நல்கச் செய்தான்.
அடில்ஷா இதுகண் டளவறு கோபம்
கொண்ட தறிந்தும் விண்டில ஞென்றும்.
உதய கிரியரண் உயர்கொண்ட பள்ளி
பகைவர் கையகப் பட்டவென் றறிந்தேன்.
அவற்றை மீட்பா னடைந்த நிலையில்
குலிகுடுப் ஷாவொடு மெளியநட் பாடி
அமைதியும் விளைத்தே அடில்ஷா வந்தான்.
இராய்ச்சூர் நகரம் ஈந்தனன் நமக்கே.

திருமலை : அசாத்கான் வந்தே அடில்ஷா முன்பு
தந்திர மிகவே தன்கருத் துரைத்து
வென்ருே னென்று விளம்பக் கேட்டனன்.

அச்சுதர் : அவன்மொழி கேட்டே அடில்ஷா நம்மை
எதிர்த்தான் பகைத்தான் இத்துணை யியற்றினன்;
அரணெலாம் பற்றினன்; அவைகளை மீட்க
யாம்வருஞ் செயலை யெளிதி னறிந்தே
முன்போ லவற்றை முறையே கொடுக்க
இசைந்தனன். ஆதலி னினிப்போ ரில்லை.

அசாத் : அரசரே! முன்போ லமைதி வந்தது.
பற்றிய அரணெலாம் பழமைபோ லாயின.
உமக்கினி யென்குறை? எமக்கே குறையெலாம்.

அச்சுதர் : யாமினி யெம்மூர் ஏகுதன் முன்னே
அரண்களை மீண்டும் அடையவே முயல்வீர்.
உமக்கும் குறையிலை; எமக்கும் குறையிலை.
ஒன்று கேட்டனன்! உண்மையோ அதுவே?

அசாத் : யாதது? புகன்ருு லியன்ற துரைப்பேன்.

அச்சுதர் : அதவனி நகரினை அமர்புரிந் தெதிர்த்த
நாளினில் நிகழ்ந்தன நன்றே புகலுதிர்.

அசாத் : உண்மை யுரைப்பேன் உத்தம வேந்தரே!
அதவனி நகரினை அடில்ஷா பெரும்படை
கொண்டநா ளங்குநுங் குடிப்பெண் கொண்ட

இராம ராயர் ஏவலால் அவர்தம்
இளவலே எம்மை யெதிர்க்க வந்தார்.

அச்சுதர் : வேங்க டாத்திரி மேவிய தறிவேன்.
அவர்க்கென் னுய தறைதி ரைய!

அசாத் : போர்க்களச் சூழ்ச்சிகள் பொருந்த வறியார்
தம்முட னிருந்த தமது மனைவியை
அவள்தோ ழியரை அமர்க்களத் தெம்பாற்
சிறைப்பட விட்டனர், திகைத்து நின்றார்.

அச்சுதர் : பிறகென் னிகழ்ந்தது ?

அசாத் : பெரும்புலி வந்தது ;
பாய்ந்தது படையொடு ; பற்றிய தெம்மை ;
சின்ன பின்னம் செய்தது விரைந்தே.
யாமு மொருவா றெதிர்த்தே நின்றேம்.
இராம ராயர் இயல்பினை யறிந்தே
அமைதி நாடி யன்பு காட்டினேம்.

[குடுப்ஷாவும் அடில்ஷாவும் வருகின்றனர்.]

அச்சுதர் : வருக வருக மன்னர் மரபினீர்!
தோழமை பூண்டீர் வாழிய வாழிய!
இனியாம் பகைத்தல் ஏலா தென்று
நன்கன மறிந்தீர். நாளையே யானினி
விசய நகர மேவ விரும்புவல்.
இனிநம் படைஞர் எதிர்த்துப் பொருதற்
கிடமிலா நட்பினை யாம்கொள வேண்டும்.

குடுப்ஷா : நட்பே வேண்டும் நாடு நலம்பெற.
யாமுமிந் நாட்டில் இருக்கும் உரிமையேம்.
நீருமிந் நாட்டில் நிலைத்து விட்டீர்.
ஆதலி னமக்குள் அன்பே பெருகுக!

அச்சுதர் : உண்மையே யுரைத்தீர். ஒற்றுமை வெற்றியே!

அடில்ஷா : சோதர வரசர் சொல்லிய வனைத்தும்
எனக்கும் சம்மதம் என்றே யுரைப்பேன்.
இனியா மடிக்கடி யெதிர்த்துப் போர்செய
வேண்டா வென்றே விளம்புவல் யானே.

அச்சுதர் : நமக்குள் அமைதி நாளுமோங் குகவே!

## மூன்ரும் களம்

**இடம்:** விசய நகரத்தில் அரங்க விலாசம்
**காலம்:** நண்பகல்
**பாத்திரங்கள்:** வேங்கட தேவ ராயர், அரங்க ராயர், சலாகம் திருமலே ராயர், திம்மையா, இராம ராயர், திருமலே ராயர், வேங்கடாத்திரி ராயர்.

### நிலேமண்டில ஆசிரியப்பா

**சலாகம்:** அரசர் இறந்தார்! ஆன்மா வாழ்க!
அச்சுதர் வடநாட் டமரினின் றீங்கு
வருங்கா லிறந்தனர். மற்றவர் மகனுர்
வேங்க டாத்திரித் தேவர் வேந்தராய்
அரியணே யேறினர். அறிவீர் நகரீர்!

**அரங்க:** ஆண்டிற் சிறியராய் அரச ரிருத்தலால்
அவர்சிற் றப்ப ஞகிய யானே
அரசப் பொறுப்பினி லமர்தற் குரியேன்.

**சலாகம்:** அதுதகா தைய! அமைச்சர் எண்மர்
ஈங்குளேம். யாமே யியைவது புரிவேம்.
அரச ரிளேஞ ராயினு மென்னே?
அமைச்சர் முறையினே யரசினே யாளலாம்.

**திம்மையா:** அரச ரரியணே யமர்வதன் முன்னே
அமைச்சரு ளுரிமை யாளருட் பிறருள்
இத்துணே வேற்றுமை யெழுமே யென்னின்
நாட்டி ஞட்சியை நன்கு தாங்குவோர்
யாரே யென்பதை யானு மறியேன்.
ஈங்குள பிறரு மெய்யா ருண்மையே.

**சலாகம்:** அரசினே யிவரே யடைகென வெண்ணும்
அனேவரு மொருமன மடைதல் வேண்டும்.
இல்லேயேல் புறத்தார் எதிர்க்கவும் துணிவர்.
அரசன் ருயும் அயலவர் துணேயால்
நலத்திணே நாட நயந்து முயலுவள்
அடில்ஷா துணேமை அரசர் வகைக்கே.

திம்மையா : இராம ராயர் என்னசெய் கின்றார்?
இன்னுமே னீங்கவர் எய்த வில்லை?
ஏதோ சூழ்ச்சி யியற்றுவர் போலும்!

அரங்க : என்மொழி யொருவரு மேற்றுக் கொள்ளலிர்.
அரசினை யொருவர் அடைவதே பொருத்தம்.
எண்மர் அரசரென் றிருக்க வியலுமோ?

திம்மையா : அரங்க ராயரே! அறைந்தீர் நன்றே!
உமக்கே யரசினில் உரிமை சிறிதுண்
டாயினும் கொடுப்பவர் ஆருமிங் கில்லை.

அரங்க : எனக்கவ் வுரிமை எய்துமோ விலையோ?

சலாகம் : அடில்ஷா வந்தா லவரையே கேட்போம்.
[ஒரு தூதன் வருகின்றான்.]
என்ன செய்தி? யாருனைப் போக்கினர்?

தூதன் : இராம ராய ரேவிய தூதன்யான்;
அவர்கருத் துரைக்கு மாணைபெற் றுள்ளேன்.

திம்மையா : யாதவர் கருத்தோ?

சலாகம் : இயம்புக விரைந்தே!

தூதன் : 'அரியணை சுற்றி யதுகாத் திருக்கும்
பெரியீர் நுமக்குப் பேசுவ கேண்மின் :
அச்சுத தேவர் அரசினைப் பெறுமுன்
அடில்ஷா நந்நகர் அகத்தே புகுந்து
பெரும்பொருள் கொண்டது பெரியீர் மறந்தீர்!
இன்றவர் பெரும்படை யெடுத்து வருகிறார்.
எதற்கென நீவிர் யாரும் அறியீர்.
ஒருவா றுற்றறா லுணர்ந்தேன், கேளீர் :
வரதாம் பிகையார் வருகென வழைத்தார்.
அரங்க ராயரும் அகம்புக வழைத்தார்.
இருவரு மொருதிற மில்லையென் றுணர்ந்தே
இனும்பிற வகைகளும் இருக்கலா மெனவே
உள்ளத் துய்த்துணர்ந் துற்ற பொழுதிடை
விசய நகர வியன்பெரு நாட்டைக்
கவருது மென்னும் கருத்தான் வருகிறார்.
இங்ஙனம் பிறர்துணை யெதிர்பார்த் திருப்பது

நமக்கே தீங்காய் நாட்டுக் கிழவாய்
மறவர்பல் லாயிரர் மரண மடையக்
காரண மாகிக் கதிக்குங் கண்டீர்.
ஆதலி னீவி ரனைவிரு மொன்றாய்
என்னொடு சேருதிர். இபுரகீம் அடில்ஷா
நகர்க்குள் நுழையுமுன் நாமே யெதிர்ப்போம்.
நெருங்கி வருவது நேருற வறிவேன்.
ஒருநொடி தவறினல் உறுபொருள் இழந்தீர்!
அரசினை யிழந்தீர்! அரும்பெரு நாடும்
அவன தாயதென் றறிவீர் நீரே.
நாடு நிலைத்தபின் நரபதி நாடுதும்,'
என்றே இசைக்குமா றேவின ரெனையே.

சலாகம்: இராம ராயர் இயம்பிய மொழிகள்
இவ்வள வேயோ? இன்னும் உளவோ?

தூதன்: அவருரை மற்றொன் றறைகுவல் கேளீர்:
'என்கடன் பணிசெயல்; இப்பெரு நாட்டினுக்
கென்றும் என்னல் இயன்றன வியற்றுவேன்;
நீயிர் துணைவர நினையீ ராயினும்
அடில்ஷா படைகளை அமர்க்களத் தெதிர்ப்பேன்.
வருபவர் வருக! வாரார் ஒழிக!'
என்றும் உரைத்தார்.

சலாகம்: என்ன வம்பிது!
ஒருவழி விரைவினில் உணர்த்துதல் வேண்டும்.
அரங்க ராயரே! அமைச்சப் பெரியீர்!
இராம ராயருக் கியாதிங் குரைக்கலாம்?

அரங்க: போந்தவித் தூதுரை பொய்யோ, மெய்யோ!

திம்மையா: ஒற்றர் நமக்கும் உளரே! அவரெலாம்
உண்மை நமக்கிங் குரையா திருப்பரோ?
அரசர் இலாமையா லவரெலாம் வந்திலர்.
ஒருவ ராயினும் வருவ ராயின்
உண்மை யுணரலாம்.

[ஓர் ஒற்றன் வருகின்றான்.]

சலாகம்: ஒற்றர் வருகிறார்.
வேண்டுவ தெல்லாம் வினவுமின் இவரை.

திம்மையா: யாங்குப் போயினீர்? யாதுநீ ரறிவீர்?

ஒற்றன்: அறிந்தன வுரைப்பேன்: அடில்ஷா பெரும்படை
வந்தது நங்கர் வளைத்துக் கொள்ளவே.
பேசியே நின்றாற் பெறும்பய னில்லை.
படைகளைத் திரட்டிப் பாய்ந்து செல்லுமின்.

அரங்க: நாட்டைக் காப்பது நராதிபர் கடமை.
நராதிபர் தமக்கு நாமெலாம் துணைவர்.
உள்ள மொன்றுற வுழைப்பே மென்னின்
வெற்றியே விளையும்.

தூதன்: விடையான் பெறுகேன்.

ஒற்றன்: யானும் போர்வல் எதிர்க்கும் பணிக்கே.

[தூதனும் ஒற்றனும் போகின்றனர்.]

சலாகம்: அங்ஙனே செய்தும்! அதுநன் றாகும்!

[இரண்டு சேவகர் ஓடி வருகின்றனர்.]

சேவகன் I: பகைப்படை நாடு பறிக்க வந்ததே!
இராம ராயர் எதிர்த்துநிற் கின்றார்!
அரணின் பெருங்கத வடைத்து வந்தேன்!

சலாகம்: மாற்றலர் நம்மை வளைத்தா விட்டனர்!

அரங்க: இன்னுமேன் யோசனை? எழுமெழும் போதும்.

சேவகன் II: யானும் போர்க்கள மேக விழைகுவன்.

திம்மையா: புறப்படு போகலாம்; பொருந்திய தியற்றுவோம்.

சலாகம்: அரியணை யேறிய வரசர் பெரும!
பூவணை யெனவே மேவிய வவ்வணை
முள்ளணை யென்ன முடிந்த தின்றே.
வாழ்வும் தாழ்வும் வல்லான் வகுத்த
வண்ணமே யமையும். மன்னராய் நீவிர்
ஆளும் காலம் அமரொடு தொடங்கும்.

வேங்கடா: யானும் போருக் கெழுதல் வேண்டுமோ?

சலாகம்: வேண்டா. அரண்மனை யீண்டே யிரும்;யாம்
போயினம் மீளும் பொழுதுபார்ப் போமே.

[போகின்றார்கள்.]

## நான்காம் களம்

இடம் : விசயநகர அரண்மனை அந்தப்புரம்
காலம் : இரவு
பாத்திரங்கள் : திம்மையா, சலாக சகோதரர், வரதாம்பிகை, பணிப் பெண்கள் முதலியவர்கள்.

[வரதாம்பிகை தோழிகளோடு ஆலோசனை செய்துகொண்டிருக்கின்றாள்.]

### நிலைமண்டில ஆசிரியப்பா

வரதாம் : என்ன கொடுமையீ தென்ன கொடுமை!
அறமறிந் தவரிவ் வவனியி லிலரோ!
'அரசரா யிருந்தவர் ஆவி நீத்ததும்
அவர்மக னரசினை யடைவது நீதி,'
என்பதை யொருவரு மேற்கின் றிலர்.
திருமலா தேவியும் சின்ன தேவியும்
தமது மருமகன் தானே யரசினை
அடைய வேண்டுமென் றவாவு கின்றனர்.
அன்னவர் முயற்சி யனைத்துந் தெரிந்தியான்
விசய புரியுறை வேந்தரை யழைத்தால்
இவருக் கென்ன? எனையேன் பழிக்கிறார்?
நாட்டினை நகரினை நல்லர சிதனை
யானே கெடுத்தே னென்றே யேசுவர்.
மகனே யரச வரிசை பெறுகென
மகுடாபி டேகம் வரன்முறை யியற்றச்
சோதர ரிருவரும் துணையாய் நின்றனர்.
சலாக குலத்தே தனக்கிணை யிலாத
திம்மண னெனக்கே செவ்விய துணையாய்
நின்றன னென்றே நினைப்பல் யானே.
இடையிலிப் பெரும்போர் ஏனோ வெழுந்தது?
அமுத வல்லி! அரசியர் நோக்கம்
இனியு நடக்குமோ? என்னவெண் ணுகிறாய்?

அமுத வல்லி : அரசியர் தலைவியீர்! அரசனும் மைந்தரே.
அவர்தகு பருவ மடைந்தில ராதலால்,

அரங்க ராயரும் அவர்தம் மகனும்
அரசினை யெய்தவே ஆவன புரிவர்.
அவர்செயு முயற்சி யனைத்து மறியத்
திருமலை சோதரர் திம்மைய ரிவரே
வேண்டுவ வனைத்தும் விரைவினி லியற்றுவர்.
அடில்ஷா வருகென வழைத்தேம் யாமே.
அவரேன் நம்மையு மறியா தெதிர்ப்பரோ?

**வரதாம் :** போர்க்களம் போயினுர் புகுந்தது மெல்லாம்
வெளிப்படை யாகும். வேறினி யென்செய!
ஆனந்த வல்லியும் அறிவள் எல்லாம்.
அவள்சோ் தரரும் அன்புறு கணவரும்
களஞ்சென் றிருத்தலாற் கவலுவ ளவளே.

**ஆனந்த வல்லி :** அரசியீர்! கொழுநரை யமர்க்களத் திழத்தல்
எமக்கெலாம் குலத்தொழி லென்றே யுரைக்கலாம்.
காரண மின்றியிக் கடும்போ ரெழுந்ததே
என்னுளந் துளக்கு மின்னல் தருமே.
அன்றியு மென்னுள மொன்றுறை வதுவே;
யாமறி யாத தீமையொன் றெமக்கு
விரைவினில் வருவது மெய்யா மெனவே.

**வரதாம் :** துயர்க்குறி யெனக்கும் தோன்று கின்றது.
வலக்கரம் வலத்தோள் வலக்கண் துடிக்கும்.
புகுவது மெதுவோ பொருந்த வறிந்திலேன்.

**அமுத :** அமர்க்கள வெற்றி யவர்க்கோ நமக்கோ?

**ஆனந்த :** சோதரர் போரினிற் சூரரே யாயினும்,
சூழ்ச்சியின் வயத்தாற் றுயரம் விளையலாம்.

**வரதாம் :** அரச னாகிய வருமந்த மதலாய்!
வருக வீங்கே! அருகுற வருக!

[வேங்கட தேவராயர் வருகின்றார்.]

**வேங்கட :** அன்னையீர்! எனையே னரச னாக்கினீர்?
இளவர சாகவே யிருக்க விழைவேன்.
தந்தையா ரிறந்தார்; தகுந்துணை யில்லை.
முடியினைச் சுமத்தல் முற்றிலும் துயரமே.

**வரதாம்:** மகனே! மணிமுடி மற்றெவர்க் குரியது?
நினைப்பலர் பகைப்பர்; எனைப்பலர் வெறுப்பர்.
ஆயினு முரிமையை அடைவது வேண்டுமே!

**அமுத:** வாயிலி லேதோ வருமொரு முழக்கம்!
என்னென வறியேம் எமதுநல் லரசியீர்!

**வரதாம்:** ஆணுடை பூண்ட அரிவையர் இருவரை
அனுப்பியஃ தென்னென வறிய முயலுக!
வாளுடை மகளிர் வருகென வழைக்க!

**ஆனந்த:** அந்தப் புரத்திலும் அநேகர் அரிவையர்
போர்த்தொழில் பயின்றூர் பார்த்திவ குலத்தினைக்
காக்கும் பணியே கடம்பூண் டுள்ளார்.
அவருள வளவும் அச்ச மிலையே.

[சில பெண்டிர் பரபரப்போடு வருகின்றனர். காவற்பெண்டிரும் வாள் தாங்கி வருகின்றனர்.]

**வேங்கட:** அன்னையீர்! யான்போய் அறிந்து வருவேன்.
விடைகொடுத் தருளும்.

**வரதாம்:** விளைவது விளைக!
ஈங்கே யிருக்கநீ; யாண்டும் போகேல்.

[திம்மையா வாள் ஏந்தி விரைவாக உள்ளே நுழைகின்றுன்.]

**திம்மையா:** அரசர் யாண்டுளர்? அரசியா ருளரோ?
அந்தப் புரத்தே அரசர் அடங்கின்றற்
போர்க்களக் கொடுமை பொறுப்பவர் யாரே?

**வரதாம்:** சோதர! குமரனைத் துருவுவ தெதற்கோ?
மற்றச் சோதரர் வாராமை யென்னே?

**திம்மையா:** அரசியீர்! சோதர ரனைவரும் வருவர்.
நம்முடை யெண்ணம் நடவா தறிந்தேன்.
இனியெனை யவர்தா மென்ன செய்வரோ?
பெரும்பொருள் போக்கினேன். பெற்றுக் கொண்டும்
அடில்ஷா நமையே யடர்க்க வந்தான்.
என்னபா முலகம்! யானினைந் தனவெலாம்
வீணு யின! இனி வேறென் செயலாம்?

வேங்கட : மாதுலீர்! போர்க்கள மறந்து வந்ததேன்?
ஈங்குள மக்களுக் கியாதும் விளங்கா
தாதலி னீரங் கறிந்தன புகல்வீர்.

திம்மையா : புகலுவ லரசே! போதுக வீங்கே.
பணமும் என்வயம்; படையும் என்வயம்.
தனக்கிணை யிலாத சலாக குலத்தே
வந்தும்யா னரச மரபினர் சேவகன்
எனவே யிருத்தல் எனக்கிழி வாதலால்,
குழப்ப மடங்கவும் கொடுமை யொழியவும்
வல்லா னொருவன் மன்னனென் றிருத்தல்
நன்று மாதலால் நானே யரசினை
ஏற்றுக் கொள்ளவே யெண்ணங் கொண்டேன்.

வரதாம் : என்மகன் கதையென்! என்னபேச் சிதுவே!

திம்மையா : அரசியீர்! நும்மகன் அடங்கி யிருந்தால்
ஈங்கே சிறைக்களத் திருக்கலாம். நீரும்
அவன்துணை யாக வடங்குதல் வேண்டும்.

வரதாம் : யாதுநீ புகன்றாய் தீதுறு கொடியோய்!
நச்சர வெனநினை நானறிந் திலனே!
மன்னர் மரபின் வரன்முறை யழியச்
சூழ்ச்சி புரியவே துணிந்தனை யென்னில்
மகளிர் படைகொடு வதைப்பே னுன்னை!
மகனையு மெனையு மகளிரே காப்பர்.

திம்மையா : மகளிர் பெரும்படை மடங்கிய தறியீர்!
பணத்தால் மடங்காப் படையு முளதோ?
எனக்கவர் பகையென எழுதல் துணியார்.
நீரவண் சிறையகம் நிலைப்பதே யறிக!
அடங்கி யிருந்தா லாவி நிலைக்கும்.

வரதாம் : இலையேல்!

திம்மையா : கணத்தில் எமனுல கடையலாம்.

வரதாம் : தோழிமீர்! அழைமின் சுற்றுள மகளிரை!

[தோழியர் போகின்றனர்.]

திம்மையா : ஒருவருந் துணைசெய வருபவ ரல்லர்.
என்னை வீணே யெதிர்க்க வேண்டா!

**வரதாம் :** எந்தையார் குலத்தில் இழிவெலா முருவெடுத்
தேனே பிறந்தாய் எமனுரு வுடையாய்!
நேர்மையு முறைமையும் நீதியும் வழாத
இராம ராயரை யான்பகை பூண்டது
பிழையே யென்பது பேதை யறிந்தேன்!
எனக்குமென் மகற்கும் நினைத்தன கொடுமை
இயற்றுதி யாயினு னியற்கை தெளிந்த
குடிகள் நினது குலத்தைவே ரறுப்பர்.
அறங்கெட வொன்றும் மறங்கொடு புரியேல்.
ஒழிக! ஈங் கிருத்தலும் பழியா மெனக்கே.

[உள்ளே திரும்புகின்ருள்.]

**திம்மையா :** செப்பிய வண்ணம் செய்வது காண். இனி
என்கை வாளே யெனக்குப் பெருந்துணை.
மன்ன குமரனென் வாட்கிரை காணுய்.

[அரசனை வெட்டுகின்ருன். வரதாம் பிகை பாய்ந்து வருகின்ருள்.]

**வரதாம் :** ஐயோ மகனே! அன்பின் உருவமே!
உயிர்கழிந் தனையே! உடல்விழுந் ததுவே!
பாவீ! பாவீ! படுகொலைப் பாவீ!
இழிநர கெய்தும் பழிபடு பாவீ!

**திம்மையா :** யாது கூறினை! இதுநினக் காகும்!

[வாளை ஓங்கி வீசுகின்ருன். வரதாம் பிகையும் இறந்து விழுகின்ருள். திம் மையா இரத்தம் படிந்த வாளோடு வெளியே போகின்ருன். அந்தப் புரத்தின் வெளியே அரங்க ராயர் மெல்ல வருகின்ருர். வேறு சிலர் அங்கும் இங்கும் போர்க் குழப்பத் தால் நடக்கின்றனர்.]

**அரங்க :** (தமக்குள்) சலாக சகோதரர் தம்கருத் தென்னவோ!
என்மக னிருக்கவே யேனிச் சிறுவனுக்
கரசினை யளித்தனர்! அன்றியு மின்னும்
பருவம் நிரம்பிய அரச குலத்துக்
குமரரோ ரைவர் குறைவறு குணத்தால்

அரசத் தகுதி யமைந்தே யிருப்பதும்
அவரே யறிவர்; அடாதன வியற்றினர்.

[திம்மையா உதிரம் படிந்த வாளோடு
வந்து பாய்கின்றான்.]

**திம்மையா:** ஒழித்தேன் ஒழித்தேன் உம்குல மனைத்தும்!
உமது மைந்த னொளித்தே யோடினன்.
மற்றவ ரனைவரும் வாட்கிரை யாயினர்.
மகனைக் காட்டுதிர்; மறைத்தவர் நீரே!

**அரங்க:** என்மகன் யாண்டுளன்? யானே யறியேன்!
ஏனிக் கோலம்? என்ன கருத்து?

[திம்மையா வாளை ஓங்குகின்றான்.]

ஐயோ! கொலைகொலை! யாருமிங் கிலரோ?

[இறந்து விழுகின்றார்.]

**திம்மையா:** சதாசிவ னொருவனே தப்பி யிருப்பவன்.
அரசன் யானே! அவனே வரினும்
இராம ராயரே எதிர்த்திவண் வரினும்
என்வலி தெளிந்தே யிறைஞ்சுவர். எனக்கே.
சோதர ரமைச்சுத் தொழிலே பூணுவர்.

[வாளை எறிந்துவிட்டு வெளியே போகின்றான்.]

## ஐந்தாம் களம்

**இடம்:** விசயநகர ஏமகூட முடிசூட்டு மண்டபம்
**காலம்:** காலை
**பாத்திரங்கள்:** இராமராயர், வேங்டாத்திரிராயர், திருமலை ராயர், சதாசிவ தேவராயர், பட்டுமூர்த்தி, பயகர ராமப்பையர், குடிகள், புலவர், சேவகர் முதலியவர்கள்.

### நிலைமண்டில ஆசிரியப்பா

**இராம:** உலகம் புகழ்ந்த வுத்தம வேந்தர்
கிருட்டிண தேவர் தருமா சிதற்குத்
தக்கவ ரொருவரை மக்களே கூறுமின்.

**பட்டுமூர்:** அரச குலத்தின ரனைவரு மழியக்
கொடுமை விளைத்த கொடியரக் குலத்தில்

ஒருவரை யேனும் உயிரொடு விட்டிலர்.
எவரை யரசென வினியா முரைப்பதே?
பகைவரை யோட்டிப் பழமை பொலியுமித்
திருநாட் டுரிமை திறம்படப் புரந்த
அறவீ ருடையீர்! அவாவிய துரைமின்.

**வேங்கடா :** சலாக சோதரர் தந்துணை யாகிய
திம்மைய ேனாடு தீங்குகள் விளைத்ததால்
அவரைச் சிறையினி லடைத்தேம். இனியாம்
தகுவ தியற்றச் சமயமு மிதுவே.

**பயகர :** முப்பெரும் பகையாய் மூண்டெழு மூவரை
அழிக்கும் கடமை யரசருக் குரியதே.
அரசர் யாரென வறிய முயலுவேம்.

**ஒரு கிழவர் :** அரங்க ராய ரருமை மைந்தர்
சதாசிவர் கொலைக்குத் தப்பி யோடினர்.
இன்றவர் உயிரொடு மிருப்பரே யாயின்
அரசுக் குரியா ரவரே யாவர்.

**மற்றொரு கிழவர் :** தகுதியு மதுவே ; தருமமு மதுவே.
அரசர் எவரே யாயினும், இனிநா
டெவ்வகை யானு மிழிநிலை யுருவணம்
காக்கும் திறமையும் கருத்தும் பூண்ட
இராம ராயரீங் கிருக்கவே வேண்டும்.

**இராம :** சதாசிவ தேவர் தம்முயிர் தாங்கி
எம்மிடம் வந்தனர். ஈங்குள ரவரே.
ஆதலி னவர்க்கே யரசளித் திடுவேம்.

**குடிகள் :** அதுவே பொருத்தம்! அறமு மதுவே!

**இராம :** அரியணை யமருக வரசர் பெருமான்.

[சதாசிவ ராயர் அரியணையில் அமர்கின்றார்.]

**திருமலை :** சங்கர மடத்தார் தந்த திருமுடி
அரசர் பெருமாற் கணிதல் நலமே.

**இராம :** அங்ஙனே புரிவம். ஆரிய மொழிக்குப்
புத்துயிர் நல்கிய புண்ணிய குரவர்
மரபின ரருளிய மாமுடி யிதுவே.

சூட்டுது மணிமுடி ; தொழுது மரசினை.
மகிபதி வாழி வழிவழி சிறக்கவே!

[வாத்திய முழக்கம்; சிலர் பாடுகின்றனர்.]

**பட்டு மூர் :** நலமெலாம் பொலிய நரபதி வாழிய!
விசய நகர வியனகர் வாழிய!
வித்தியா ரணிய மேதகை முனிவர்
அமைத்தபே ரரச ரருங்குலம் வாழிய!
மழைவளஞ் சுரக்க! வயல்வள மலிக!
பகையெலா மழிக! மிகைசெய்வா ரொழிக!

**பயகர :** அரசர் இவரே அன்புள குடிகாள்!
இவரைக் காத்தலும் இவர்திரு நாட்டின்
மானம் காத்தலும் மறவர் பொறுப்பாம்!

**இராம :** பெரியீர்! அரசர் பிரான்மன மகிழும்
உமது துணைக்கொண் டுயர்நா டிதனை
நன்கன மாளுவர் நலமெலாம் வளரவே.

**பயகர :** ஆண்டி லிளையர் அரச ராதலின்
இராம ராயரே யிறைமை தாங்குக!

**எல்லாரும் :** சம்மதம்! சம்மதம்! சருவசம் மதமே!

[மங்கல வாத்திய முழக்கம்.]



# ஐந்தாம் அங்கம்

## முதற்களம்

**இடம் :** விசய நகர இரத்தின கூடம்
**காலம் :** காலை
**பாத்திரங்கள்:** இராம ராயர், திருமலை ராயர், வேங்கடாத்திரிராயர், விட்டலராயர், இராமையஅமைச்சர்.

[பொன்னிருக்கையில் இராம ராயர் வீற்றிருக்கின்றார். அவர் சகோதரர் இருவரும் அருகில் இருக்கின்றனர். அமைச்சர் இராமையர் வருகின்றார்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

**அமைச்சர் :** மன்னர் கருணையால் மங்கள குலத்தினர்
நாடெலாம் வரிகளை நமக்குக் கொடாமலே
வாழ்கெனு மாணை வழங்கப் பெற்றதே.

**இராம :** அதுவே நீதி! அதுவே யமைவதாம்!
ஏனெனில் திம்மனுக் கியாமிது செய்வது
பிறர்மனம் புகைதற் குறுகா ரணமாம்.
எத்தொழில் புரியினு மத்தொழில் வலியனை
அரசர்பா ராட்டுவ தனைவரு முணர்தல்
நன்றே யாகும். நல்லது செய்தீர்.

**அமைச்சர் :** திருமுடி புனைநாள் உரிமைகொள் மன்னர்
பன்னிரண் டாண்டே படைத்திருந் தாரென
அரசப் பொறுப்பெலா மடைந்திர் நீவிர்.
இந்நா ளவருக் கிருபா னுன்கு
பருவ நிரம்பிப் பண்பெலா நிரம்பிப்
படையின் மயிற்சியும் திடமுற வமைந்து
நன்னல மனைத்தும் நலமுறப் பொருந்தலால்
இனியவ ரரசினை யெய்துதல் தகுமெனக்
குடிகள் நினைப்பது கூறக் கருதினேன்;
திருவுள மெதுவோ தெரியே னைய!

திருமலை : யானு மதனையே யியம்ப விரும்பினேன்.
உரிமை யாளருக் குரிமையை யுவப்புடன்
உரிய காலத் துதவுத லன்றே
அதனைப் புரந்தோர் அறக்கட ளுகும்?
பன்னிரண் டாண்டு பரித்தீ ரரசினை.
அரசப் பெயர்நீ ரமையீ ராயினும்
பொறுப்புஞ் சிறப்பும் பொருந்தி வாழ்ந்தீர்.
அமைச்சும் படைகளை அமைவுற நடாத்தும்
பணியும் பிறவும் பரிப்பது பொருத்தம்.
அரசையே யடைய வவாவுத லறமிலை.
வேங்கடா : முன்னவர் நீரே ; முறைக ளனைத்தும்
நன்ன ருணர்ந்த நரோத்தமர் நீரே.
ஆயினு மொருகுறை யடைந்துள துள்ளம்:
துச்சி லிருந்த சுவண மாளிகை
உரிமை யாகவே யுவந்தீ ரையா!
முடியினுக் குரியார், முறைமைக் குரியார்,
தலைமைக் குரியார் தனித்தன ரிருக்க,
அவரை யடக்கினீர் அரசரே யாக
நினைப்பீ ரெனப்பலர் நிகழ்த்துதல் கேட்டேம்.
இதுதகா திதுதகா திதுதகா தென்பேம்.
அறம்புகல் பெரியர் நிறைந்தவிந் நாட்டிற்
கட்டியங் காரன் கருதிய கருத்து
நும்முள னிருத்தல் செம்மைய தன்றே.
இராம : அமைச்சரே! இளையீர்! அறிவேன் அறிவேன்!
விட்டலர் வருவது விளம்பினர் சில்லோர்.
அவர்புகல் செய்தி யறிந்தபின் பேசுதும்.

[விட்டல ராயர் வருகின்றார்.]

விட்டலர் : வெற்றி யெமக்கே வெற்றிக் குரியீர்!
இராம : நிகழ்ந்தன வனைத்து நிகழ்த்துக விட்டலீர்!
கேரள வருமன் போரிடை யெதிர்ந்து
புரிந்தன நீயிர் புரிந்தன வனைத்தும்
ஈங்குளா ரறிய வினிது விளம்புக!
விட்டலர் : விசுவ நாதர் விருப்பொடு முடன்வரக்
கேரள நாட்டினிற் போர்செயப் புகுந்தேம்.

சீரிய முனிவர் சேவியர் என்பார்
இயேசு நாதர் இயல்பே யுடையார்
நன்மொழி புகன்றனர்; ஞாட்பு நிறுத்தினர்.
நெல்லை நகரினை நேர்ந்தன னமக்கே
கேரள வருமனும் கெடலற வாழுவன்.
மக்களு நலமுற வாழ்வது புரிவர்.
யாமுமந் நாட்டி னிடையிரண் டிடங்களில்
வெற்றிக் கம்பம் விழைவொடு நிறுத்தினேம்.
மீண்டே மைய! வேறென் செய்கேம்!

இராம: உன்னி கேரள னொடுங்க வில்லையோ?
இன்னு மவனமை யெதிர்க்க நினைப்பின்
மறுவலு மமர்க்களம் வழிக்கொள நினைப்போ?
யாது செய்தீர் இருவருஞ் சென்றே!
சாமியார் பணிக்கும் சமர வினைக்கும்
பொருத்தம் யாதே? புகழெலா மழிந்தது!

விட்டலர்: தலைவரே! உண்மை சாற்றி விட்டேன்.
அரசர் பணியினி லாயிர மாண்டு
பயின்றவர் தமக்குப் பயன்வினை யொன்றே.
முகம னுரைப்பவர் முன்னே செல்லுவர்.
அதுசெய வறியார் அடங்கி யொடுங்குவர்.
முப்பது வற்சர முறையே போர்த்தொழில்
புரிந்துளேன்; இன்னும் புரியவு முள்ளேன்;
பிறரை யொழிப்பதே பெருமையென் றறியேன்.
சாம பேத தான நிகழ்ந்தபின்
தண்டமும் கடைநிலந் தானே நுழைவுறும்?
முன்னைய வுபாயமே முழுநல முதவின்
நான்கா முபாயம் நயப்பவ ருளரோ?

இராம: விட்டலர் பெற்றது வெற்றியே யறிவேன்.
பொறும்பொறும் புகன்றன புகழ்பூண் புயத்தீர்!
இனும்பல வாண்டுக ளிந்நாட் டரும்பணி
நன்றே பூணுக! நயந்திவை கொள்ளுக!

[சிறப்புக்கள் செய்கின்றார்.]

விட்டலர்: இனியான் விடைபெற வியலு மன்றோ?

இராம : விடைதந் துதவினம்; வேண்டும் போது
மறுவலு மழைப்பம்; வருதி ரையன்மீர்!
[விட்டல ராயர் விடை பெற்றுப் போகின்றார்.]
அமைச்சர் : வடநாட் டுள்ளார் வலிந்து நம்மை
அமர்க்களத் தெதிர்க்க அவாவின ரென்ப.
இராம : அவாவினர் நந்திறம் அறிந்தா லடங்குவர்.
இளையோர் மனக்கருத் திசைவது நன்றே.
இன்றெனிற் போருக் கெழுவ தெங்ஙனம்?
திருமலை : மூத்தவ ராயினும் மொழிவன மொழிவேன் :
அரசரைச் சிறையிடை யடைத்தது கொடுமை!
வாட்படை வல்லார் ஞாட்பிடை நிற்பின்
விசய னென்னவே விளங்கத் தக்கார்
அரசர்! அரசர்! அவரைநீர் சிறையில்
இன்னுமெத் தனைநாள் இருத்த நினைந்தீர்?
அமைச்சர் : அரண்மனை யகத்தே யரச ருள்ளனர்.
வேங்கடா : அரண்மனை! அரண்மனை! அரசச் சிறையின்
அகத்தே யிருக்க அரசருக் குரிமை;
புறத்தே யாண்டும் போதலா காது.
புறப்பட நினைப்பிற் பொருந்துவ தறியேம்.
அண்ணா நுமக்கிஃ தாகா தென்றே
பன்முறை சொல்லியும் பயனிலை. இனியாம்
பிரிந்தன முறையும் பெருங்கருத் துடையேம்.
இராம : முடியும் கோலும் கொடியு மரியணை
அமரும் பெருமையு மரச ரவர்க்கே.
போர்களை நிகழ்த்துபு பொறுப்பினை யேற்கும்
பணியிஃ தொன்றே படைத்தேன் யானே.
இந்நா ளயலவர் இருக்கு நிலையினை
அறிந்தி ராயி னறையீ ரிதனை.
இழந்தன நாடுக ளெல்லா மீட்கவும்,
பிறர்தலை யெடாது பெரும்போ ருடற்றவும்
வல்லவ னொருவனே மன்னர் பொறுப்பை
வகிக்கத் தக்கவன் மற்றிந் நாளினே.
பொறுமி னெல்லாம் பொருந்துவ தறிதிர்.
இன்றிது போதும்; நன்றே முடிக!

[சபை கலைகின்றது,]

# இரண்டாம் களம்

இடம் : திருமயிலை நகர வெளிப் போர்ப் பாசறை

காலம் : பிற்பகல்

பாத்திரங்கள் : இராமராயர், திருமலைராயர், இராமைய அமைச்சர், பட்டுமூர்த்தி, பரங்கியர், போர் வீரர், பொது மக்கள், ஒற்றர் முதலியவர்கள்.

[இராம ராயர் கவலையோடு நடமாடுகின்ருர். மெய் காவலன் ஒருவன் உடனிருக்கின்ருன்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

இராம : (தமக்குள்)

விசய நகரம் மேதகு நகரமாய்
விளங்கத் தகுவன விழைந்து புரிகுவன்.
அரசரைச் சிறையிடை யடைத்தது தவறெனத்
தம்பியர் கூறுவர், வம்புக ளுணரார்.
அவரே யரசரா யரியணை யேறினர்.
இன்னும் அரியணை யிருப்பவ ரவரே.
அரண்மனை யகத்தே யடங்கி யிருப்பதும்
புலவர் குழுவிடைப் பொருளுரை கேட்டலும்
புரவலர் விழையும் பொழுதுபோக் கெனவே
உணர்ந்ததா லன்றே யுலக முணரா
நிலையிடை யவரை நிறுத்தினன் யானே ?
இன்னத னுண்மை யீதென வறியா
இளையோ ரென்னை யெதிர்க்கவும் துணிந்தனர்.
அவரையு மடக்கினேன்; அதன்பின் கோவை
நகரிடை வாழ்வும் நலமும் பொருந்திய
பரங்கியர் சிலசில படுகொலை புரிந்தது
கேட்டனன். அவரை யோட்டுதல் துணிந்து
'தீரத் தெளிந்தபின் போரிற் புகுவது
நீதியாம்,' எனயா னினைவுற் றிருக்கையில்
மற்றுமோர் செய்தி வந்தது நகர்க்கே:
திருவேங் கடமெனுந் திருப்பதி யதனைப்

பரங்கியார் சூழ்ந்தனர். படைப்பெருங் கடலினெ
டெனுமது கேட்டது மென்னுளம் பொருது
வந்தன னிவ்வுழி ; மடக்கின னவரை.
நினைத்த வண்ணமே நிறைவேற் றுறுதிறம்
இன்மையி னவர்தா மேகினர் அறிந்தேன்.
ஆயினு மவரை யடக்குதல் வேண்டும்.

[திருமலை ராயர் வருகின்றார்.]

திருமலை : பரங்கியர் நிறைவுறு பரங்கி மலையினை
முற்றுகை யிடுதல் முறைமையே யாகும்.
அவர்செயல் ஒன்றும் அறச்செய லன்றே.
பரங்கியர் தலைவன் படைகளைத் திரட்டி
நாற்பது மரக்கலம் நடத்தினன். அவைதாம்
திருமலை முடியுறை திருமால் திருத்தளி
மிகுபொரு ளுளதென வேற்றவ ருரைத்த
மொழியினு லம்மலை முற்றப் போயின.
ஆங்குநம் படைஞர் அயற்படை யதனை
எதிர்த்தனர் நின்றதால், ' இயலா திது,' எனச்
சேரலர் நாட்டிடைத் திரும்பின னவனே.
நம்முடை யரசினை நலமுற வணங்கி
வாழும் நாடுகள் வலியிலா திருந்தால்
எளிதே தாக்கினன் என்பது கேட்டேன்.

இராம : அமைச்சர் யாண்டுளர்? அயலவர் பெரும்படை
எங்கெங் கடைந்தது? இயற்றிய தியாதே?

திருமலை : அமைச்சர் வந்தனர். அவரையே கேட்கலாம்.

[இராமைய அமைச்சர் வருகின்றார்.]

இராம : அமைச்சரே! பரங்கியர் அமர்க்களத் தியற்றிய
செயலெலாம் விரித்துத் தெளிவுற வியம்புமின்.

இராமைய : எங்ஙனம் உரைப்பேன்! என்ன கொடுமை!
விசய நகர வேந்தருக் கடங்கிய
நாடுகள் பலப்பல நாசம் அடைந்தன.

இராம : யாது கூறுதிர்! எங்கிது நிகழ்ந்தது?

இராமைய : புகலுவ லனைத்தும்; பொறுமை வேண்டும்.
போர்த்துகல் நாட்டவர் பொல்லாச் சூழ்ச்சியர்.

கிருட்டிண தேவரின் கீர்த்தியை அறிந்தே
அவரர சியற்றுநா ளடங்கி யிருந்தனர்.
சென்றசில் லாண்டாச் செய்துள கொடுமை
அனைத்துநா மறியா தடங்கி யிருந்தேம்.
வேங்கட நாயகன் வியன்திருக் கோவிலிற்
கொள்ளை யிடுவது குறிக்கொண் டனரென
அறிந்தே யெம்மா லாவன வியற்றினேம்.
அதன்முன் நிகழ்ந்தன வாயிரம் கொடுமைகள்
ஒன்றொன் ருக வுரைக்கவு மறியேன்.
தெரிந்தவை சிலவே செப்புவன்.

**இராம :** திருமலை !
இவர்மொழி யனைத்தும் ஏனிது காறும்
நம்பெரு நகரினில் வம்பென வழங்கில?

**திருமலை :** வழங்கி யிருக்கும்; வாரா செவிக்கே.
ஈங்கு வருமுனம் யானும் சிலசில
அறிவேன். விட்டலர் அறிவார் பலப்பல.
எல்லாம் கூட்டி யெண்ணிப் பார்த்தால்
அமைச்சர் உரைப்பன அமைவே யென்பன்.

**இராம :** அறந்தெரி யமைச்சே! அனைத்து முரைக்க !

**திருமலை :** முன்னர் ஒருமொழி மொழிகுவல் அண்ணு !
பரங்கியர் நமக்குப் பலபல கொடுமைகள்
இழைத்தன ராயினும், யாமவர் நாட்டிற்
பரிப்படை திரட்டும் கருத்துளே மாதலின்
அவரொடு பகைத்தல் அடாதென நினைப்பேன்.

**இராமைய :** அதுவும் உண்மையே; ஆயினும் அவரையாம்
எதிர்க்கவும் நினையா திருப்பே மாயின்,
விளையும் கேடு மிகுதி யாகலாம்.

**இராம :** எதிர்ப்பதும் பொருவதும் இருக்க பின்னே.
நிகழ்ந்தன வனைத்தும் நிகழ்த்துக அமைச்சே !

**இராமையா :** தலைவீர் ! கேட்க: தனது கொழுநனை
நம்பெரு விசய நகரினி லிழந்த
பட்கல் அரசியைப் பரங்கியர் எதிர்த்தே
ஆயிரத் திருநூ ருட்களை யனுப்பினர்.

அவளு மியன்றள வமர்க்களம் புகுந்து
தன்சிறு படையினைத் தானே நடத்தினள் ;
தோல்வி பெற்றனள் ; துயரந் தாங்கினள் ;
பரங்கியர் கொள்ளை பலர்பல ரிடையே
கலகம் வளரக் காரண மாயதே.
அப்பொழு தரசி யவரை மறுவலும்
எதிர்த்தன ளோட்டினள். இறங்கினர் கடலினில்.
ஆங்குப் புயலால் அழிந்தனர் பலரே.
இதுகேட் டுணர்ந்தான் எதிர்த்துள தலைவன் ;
பெரும்படை திரட்டிப் பின்னும் வந்து
நாட்டிடைப் புகுந்து நகரை யழித்துச்
சூறை யாடித் தொலைத்தன னைய !
அரசி நந்துணை யடையப் பெருமையால்
அவனை வணங்கி யவனே கேட்ட
திறைகளை யளந்து செழிப்புறு நாட்டினை
மீட்டுப் பெற்றனள். கேட்டனிர் இதனை.
இன்னும் கேளீர் இவரே புரிந்தன :
உள்ளல் நாட்டின் உயர்குணத் தரசியைக்
காரண மின்றியும் போரிடை யெதிர்ந்தனர்.
மங்கள புரமென வளர்பெரு நகரினைச்
சூறை யாடினர் ; தொல்பெருங் கோவிலை
அழித்தனர் ; பொருட்குவை யளவறக் கவர்ந்தனர்.
அன்ன வரசியும் அவர்க்கு வணங்கித்
திறைகளைக் கொடுத்துத் தேய மீட்டனள்.
மறுவலு மாங்கே வந்தனர் சிற்சில
ஆண்டுகள் கடந்தது மயலவ ரவரே ;
மங்கள புரத்தினை வளைத்தனர் அழித்தனர் ;
அரசி யுயிர்கொடு பிரிவு புரிந்தனள்.
அந்நக ரகத்தோர் அரணினை யமைத்தனர்.
அவரது வலிமை யறிந்தவ் வரசி
அவர்க்குப் பணிந்தே அரசு தாங்கினள்.
வரவர நாட்டிடை வழிகள்நன் குணர்ந்து
மயிலையி னருகும் வரற்குத் துணிந்தனர் ;
புதியதோ ரரணும் புரிவினெ டமைத்தனர்.

அவ்வர ணவருக் கருங்கடி யாயதே.
ஈங்குள வாலயத் தெண்ணறு சிலைகளை
அழித்தனர்; நாகையில் அதுவே புரிந்தனர்.
பழைமை மாறுக புதுமை புகுகெனத்
தமது நெறிதரு தரும வாலயம்
பலப்பல வமைத்தனர்; பலரையும் சேர்த்தனர்.
இதுகேட் டன்றோ யாமிங் கடைந்தேம்?

இராம: ஆமஃ துணர்வே னுயினு மொருவன்
ஈங்குள பரங்கிய ரிருநிதிக் கிழவரென்
றுரைத்த வொருமொழி பெருத்த பொய்யே.
நகரெலாம் பார்த்தும் நாலு பணமுளார்
சிலரே யிருப்பர்; செல்வரே யில்லை.

திருமலை: வளமுள ராயினும் வறிய ராயினும்
செய்தன கொடுமைகள் தெளிவே மாதலால்,
நூறா யிரம்பொன் வேறே திறையெனக்
கேட்டலே தகுமிக் கோட்ட மொடுங்கவே.

[பரங்கியர் தலைவர் சிலர் வருகின்றனர்.]

இராம: வம்மின் பெரியீர்! வம்மின் ஈங்கே!

ப. தலைவர்: விசய நகர வேந்தர் வாழியே!
அரசர் பிரதி நிதியவர் வாழியே!
குறையொன் றறியேம் குடிவள மில்லேம்.
எம்மிடைப் பெரும்படை யெழுந்த தென்னையோ?

திருமலை: கோவை நாட்டுநும் குலத்தவர் தலைவன்
காரண மின்றியே கடும்போர் புரிந்தெம்
நாடுகள் சிலசில நாசம் செய்தனன்
என்ப தறிந்தே யீங்குப் புகுந்தேம்.

ப. தலைவர்: ஐய! யாம் போர்முறை யறியேம்; அன்றியும்
வணிக நெறியிடை வாழ்வே மடங்கி.
நும்பெரு நாடு பம்பிய பொருள்வளம்
எமக்குச் சிறிதே யிவ்வழி வந்திடும்.
கடல்வழி யாம்பெறு கலினமாக் கொடுத்து
விசய நகர வேந்து தரும்பொருள்

பெற்றே வாழப் பெறுவே மைய!
பிறிது பொருளிலேம்; பெருமைவே றறியேம்.
எம்மவர் எக்குறை யியற்றி யிருப்பினும்
பொறுத்தே யருளுக! போதும் முற்றுகை.
எம்மா லியன்ற தியற்றவு முள்ளேம்.

இராம: அனைத்தும் பொறுப்பனா லாயிரம் பொன்னைத்
திறையென நீவிர் குறைவற வளந்தால்.

ப. தலைவர்: அத்துணைப் பெரும்பொரு ளறியே மைய!
பதினா யிரம்பொன் பணிந்து தருவேம்.
எஞ்சிய பொன்பிற கீத்து வணங்குவேம்.
ஏழை மக்க ளினைந்திரங் காவகை
படைகளை மீட்டுப் படர்தல் வேண்டுவம்.

இராம: அங்ஙனே செய்தும்! அங்ஙனே செய்தும்!
பொன்னிவண் வந்ததும் போதல் செய்வேம்.

ப. தலைவர்: ஈங்குள தைய! ஏற்றெமை யருளுக!
அமைதி நம்மிடை யமைவ தாகுக!

இராம: விடைகொண் டேகுவம் விரைவினில் யாமே.
இனிநீர் மனக்கவ லின்றி யேகலாம்.

[பரங்கியர் தலைவர் வணங்கிப் போகின்றார். விட்டலர் அனுப்பிய தூதர் ஒருவர் வருகின்றார்.]

தூதர்: வணக்கம் புரிந்தேன். வாழிபல் லாண்டு!
விட்டல தேவர் விடுத்தன ரென்னையே.
'புன்னைக் காயலிற் புகுமயற் பரங்கியர்
சேது செல்லும் கோதிலா மக்களை
வழியிடை மறித்து வரிகள் வாங்கினர்.
பரவரு மவரொடு விரவின ராதலின்
இருவர் தம்மையும் எதிர்த்தே யடக்கி
அமைதி நாட்டினம் தமிழ நாட்டிலே
எனவிவை கூறு'கென் றேவின ரென்னையே.

இராம: மீன்பிடித் தடையும் வியன்பொரு ளனைத்தும்
முன்போ லொழுங்கா யெம்பால் வருமா?

தூதர் : மதுரைநா டாளும் மன்னவர் அதனுள்
ஒருநாள் வருவ்ய் உரிமையிற் பெறுவர்.
மற்றவை யனைத்தும் வருமா லிங்கே.

திருமலை : வெற்றி பெற்றனர் விட்டல ராதலின்
அவர்க்குநம் நன்றி யனுப்பத் தக்கதே.

இராமைய : அவரைநந் நகருக் கழைத்தல் நன்று.
வந்தபி னவர்க்கு வகைவகைச் சிறப்புகள்
உரிமை தகவே யுவப்பொடு வழங்குவம்.

இராம : இனியாம் நகரம் ஏகுதல் நன்றே.

[சபை கலைகின்றது.]

## மூன்றும் களம்

இடம் : கலியாண புரம்

காலம் : காலை

பாத்திரங்கள் : இராம ராயர், திருமலை ராயர்,
அனுமப்ப நாயகர், இக்கேரிச் சதாசிவராய நாயகர்.

[இராம ராயர் பாசறையில் உலவுகின்றார். அனுமப்ப நாயகர் அருகில் நிற்கின்றார்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

இராம : போர்க்களம் புகுவது புகழினைப் பூணவே.
விசய நகர வேந்தர் முனைநாள்
ஆண்ட நகர்பல அயலவர் பாலுள.
அவற்றினை மீட்டலு மாங்குளார் திறத்தினை
அடக்கலு நம்பொறுப் பாகு மன்றே?

அனுமப் : முன்னு மொருமுறை யிந்நகர் கொண்டேம்.
அமர்க்களத் தழிந்தா ரளவில ரன்றும்.
இன்றும் பலர்பலர் இறந்தனர் அந்தோ!

இராம : விசய புரியின் வேந்தர் நம்மைப்
பகைத்தன ரதனால் பர்ஹன் நிஜாம்ஷா
உதவியை நாடினர் உடற்றினர் கடும்போர்.

எமதுநல் லன்பர் அமீர் பரீத்ஷா
வேதண்ட வரணினை விட்டன ரோடிப்
பழைய நட்பினைப் பண்புறக் கருதி
இபுரகீம் அடில்ஷா இருக்கைக் கேகினர்.
அவரோ அவரை அருஞ்சிறை புகுத்தினர்.
இதுதெளிந் தன்றே யெதிர்த்தன மன்றியாம்?
அடில்ஷா வெமதுநா டடையத் துணிந்தனர்.
யாமும் போர்க்கென வெழுந்தே மந்நாள்.
கோல கொண்டம் குறுகினம் யாமே.
நீயும் பெரும்படை நெறியுற நடத்தினை.
தம்பியும் வந்தது தகவே யறிதி.
கலியாண புரநம் கைவச மாயது.
நிஜாம்ஷா கானம் நேடி யோடினர்.
நீயே யவரை நேரிற் பற்றினை.
அமுத நகரமும் அழிக்கப் பெற்றதே.
அன்றுநம் முன்னர் அடைந்த நிஜாம்ஷா
அடில்ஷா நட்பினை அறவே யொழிப்பதா
வாய்மொழி யுரைத்தது மற்றுநீ யறிதி.

அனுமப்: ஆமாம்! அவையெலா மறிவேன். உண்மை.
நிஜாம்ஷா குடுப்ஷா நெறியுற நம்மொடு
துணைவராய் நிற்கத் தொடர்ந்துபின் சென்றே
அடில்ஷா நாட்டினை யழிக்கப் புகுந்தேம்.
குல்பர்க்க நகரம் கோல கொண்டத்
தரசரே கொண்டார். பர்ஹன் நிஜாம்ஷா
விசய புரிநா டசைவுற வழித்தனர்.
வீமை யென்னும் வியனதிக் கரையில்
நுந்தம் இளையோர் வேங்கடாத் திரியார்
அடில்ஷா வலிமை யனைத்து மடக்கினர்.
அன்றுநும் கழல்வீழ்ந் தவர்வாழ் வுற்றனர்.
அசாத்கான் உதவியால் அமைதியுண் டாயதே.
இவையெலாம் மறந்தே எழுந்தனர் இன்றே.

இராம: அன்றுநம் கழல்வீழ்ந் தடங்கிய வவரே
'இன்றுநம் தூதரை யிழித்துப் பேசினர்!
தூதரைக் கோறலும் துணிந்தன ரென்னக்

கேட்டனம். தூதர் ஓட்ட முயிர்தர
நந்நா டடைந்தனர், நலமோ விவையே?
கலியாண புரமுங் கவர்ந்து கொண்டார்.
பரீத்ஷா வவர்க்குப் பக்கத் துணைவராம்.

[திருமலை ராயர் வருகின்றார்,]

திருமலை : அரணினை நெருங்க லரிதென நினைத்தேம்.
வழியெலாம் தடைபட் வ்குத்த வகுப்பெலாம்
பிளந்தே மைய! பெற்றே மரணினை.
இக்கேரிச் சதாசிவ ரின்றைய பெரும்போர்
நன்கு நடாத்திய நாயக ராகுவர்.
அடில்ஷா பறந்தார். அவர்போ மிடத்தை
அறியா தடியே னடைந்தே னீங்கே.

இராம : சதாசிவ ராயரைத் தருக தம்பீ!

திருமலை : அங்ஙனே செய்வல் அரைநொடி யளவில்.

[திருமலை ராயர் போகின்றார், இக்கேரிச் சதா
சிவ ராயர் வருகின்றார்.]

இராம : வீர வருக! வென்றியோய் வருக!
இழந்தன பெறுதல் எவர்க்கும் இனிதே.
கலியாண புரத்தினைக் கைவரப் பற்றிய
நினக்கியா னியற்று நிலைமை யிதுவே.
'இராய நாயகர்' எனும்பெரும் பட்டம்
உரிமையிற் பூண்க! உயர்திருப் பொலியும்
சந்திர குத்தியும் பங்களூர் நகரும்
அருகுள நாட்டொடு மடைக நீயே.
சூடிய புகழ்பூண் கோடிகோ லாகலன்
எனவே விளங்குதி யின்று முதலே.

சதாசிவர் : என்னையும் பொருளென் றெண்ணியிப் பெருமை
செய்தநுஞ் சிறப்பைத் தேய முணரும்.
இன்னுநம் முயற்சி நன்னர் முடிந்தில
தரசர் முன்னைநா ளாண்ட நகர்களுள்
முட்கலும் ராய்ச்சூர் முதுபே ரரணும்
அவர்வய முள்ளன. அவற்றையாம் கொண்டு
வெற்றிக் கொடியினை விழைவொடு நாட்டுதல்
நன்றாம்.

இராம : நிஜாம்ஷா நம்மொடு சேர்வர்.
அவர்க்கிரண் டூர்க ளளித்தே மாகில்
நமக்குநம் நகர்கள் நன்கு பொருந்தும்.
வேங்க டாத்திரி மேவின னிங்கே.
நிகழ்ந்தன வறியேம்

அனுமப் : நேரில் இருந்தோர்
ஒருநகர் வந்ததென் றுரைத்தனர். அதற்குள்
பர்ஹன் நிஜாம்ஷா பரகதி யடைந்தார்.
வேங்கடாத் திரியார் மீண்டனர் நகர்க்கே.

இராம : யாமு நகருக் கேகுவம் : இன்னும்
போர்க்குத் துணிவார் புறக்கொடை காண
வேண்டிய யாவும் விரைவி னியற்றுவம்.
அடில்ஷா கதைதான் அடங்கிய தின்றே.

[காட்சி முடிகின்றது.]

## நான்காம் களம்

இடம் : அமுத நகர அரண் புறம்

காலம் : காலை

பாத்திரங்கள் : இராமராயர், ஆலி அடில்ஷா, இபுரகீம் குடுப்ஷா, ஹுஸேன் நிஜாம்ஷா, முஸ்தபாகான், வேங்கடாத்திரி ராயர், இராமைய அமைச்சர், இக்கேரிச் சதாசிவ ராயர்.

[பாசறையில் இராம ராயரிடம் ஆலி அடில்ஷா பேசிக் கொண்டிருக்கின்றார்.]

**நிலை மண்டில ஆசிரியப்பா**

ஆலி : எந்தையீர்! வேண்டுகோட் கிரங்கியீங் கடைந்த
நன்றியை யென்றும் நான்மறந் தொழியேன்.
தந்தையை யிழந்து தனதுநா டனைத்தும்
கொள்ளை கொள்ளும் கொடும்பகை சூழ
வருந்திய வெளியனை வருகென வரவேற்
றன்புறு மதலையென் றழைத்தீ ரன்றே?

இராம : மகனே! கலங்கேல்! வன்பகை சூழினும்
நினது நாடு நினக்கே யளித்தேம்.
எம்முரை பழுதுரு தென்பது திண்ணம்.
நெடுநாள் பகைத்தார் நின்து தந்தையார்.
அவரே பினைநாள் அன்பராய் நந்துணை
காடினர். இதுநீ நன்கன மறிவாய்.
ஹுசேன் நிஜாம்ஷா குடுப்ஷா இருவரும்
குல்பர்க்க நகரக் கோட்டையைத் தாக்கினர்.
அன்றுநின் றந்தையார் அழைப்பினுல் யாமே
வந்துநின் ஞட்டை வாழ்வுற வைத்தேம்.
சிறுவனீ யொன்றும் செயலறி யாயென
இன்றுனை யவரே யெதிர்ப்பது புரிந்தனர்.
ஆதலி னன்றே யடைந்தனம் யாமிவண்?
அமுத நகரமீ தழிந்தது காணுய்.
வாழ்ந்த மாந்தரும் மறுகி யோடினர்.
ஹுசேன் நிஜாம்ஷா ஓடினன் பைத்தான்.
இன்றவ னீங்கே யெய்தி நினக்கு
வணக்கமும் புரிவன். மகனே! பொறுபொறு!

ஆலி : ஹுசேன் நிஜாம்ஷா குடுப்ஷா துணைபெற்
றின்னும் எனையே எதிர்க்க நினைத்தார்.

இராம : குடுப்ஷா அவரொடு கூடார் கூடார்!
நமக்கு மவர்க்கும் நாள்பல கண்ட
பேச்சொன் றுளது. பிரியத் துணியார்.

[சேவகர் வருகின்றார்.]

சேவகர் : கலியாண நகரம் கைவச மாயது.
போரொடுங் கியதெனப் புகன்றனர் தலைவர்.

[வேங்கடாத்திரி ராயர் வருகின்றார்.]

வேங்க : ஒழுங்கென் பதுவே ஒருசிறி தில்லை.
சொன்னசொல் காப்பவர் துருவினு மிலரே.
நமக்கே துணையென நாவா லுரைத்துப்
பகைவர் தமக்கும் பக்கத் துணையாய்
இருப்பவர் சிலருளர். யாதுநாம் செயலாம்?

ஆலி : யானு மறிவேன் இங்கிலை பெரியீர்!
பொரும்படை நம்மொடு பொருத்திய வொருவர்
அவர்க்கும் துணையாய் அமைந்திருந் தனரே.

[முஸ்தபாகான் வருகின்றார்.]

இராம : வருக வருக! மந்திரத் தலைவீர்!
இபுரகீம் குடுப்ஷா யாது கூறினர்?
முற்றுகை யேனோ முடிந்தில தின்னும்?
பகைப்படை யொடுங்கிப் பறப்பது கண்டே
அமரினை முடிப்பம். அவருமீ தறிவர்.

முஸ்தபா : ஒருமொழி யீங்கியா னுரைக்க வருவேன்
எம்முடை யரச ரேவலா லைய!
'போதுமிம் முற்றுகை. பொறுமை காட்டிநீர்
மீண்டு போமெ'ன வேண்டுவ ரவரே.
நிஜாம்ஷா மைந்தர் நிலையிழந் தோடினர்.
நகரெலாம் பாழாய் நாச மடைந்தது.
பாவமொன் றறியாப் பலர்பெருங் குடிகள்
இருப்பிட மிழந்தன. இன்றொடு போரினை
நிறுத்த வேண்டுதும். நிறுத்துமி னைய!

இராம : பத்துநூ றாயிரம் பசும்பொன் திறையென
வருதல் வேண்டும்; மாற்றலர் நேருற
ஈங்கு வந்தெமை யிறைஞ்சவும் வேண்டும்;
கொண்ட பள்ளியைக் கொடுக்கவும் வேண்டும்.
இல்லையே லிப்போர் இன்னும் நிகழும்.

முஸ்தபா : விரும்பிய வண்ணம் விழைவொடு புரிவர்.
பெரும்போர் நிற்பது பேசுதல் வேண்டும்.

ஆலி : கலியாண புரியினைக் கையளித் தகன்றால்
யானு மமைதி யேற்பே னைய!
அதுமிக மாதெனி லாகா தொன்றும்!

முஸ்தபா : அங்ஙனே செய்தும். அமைதியே வேண்டும்.

இராம : நிஜாம்ஷா நம்மிடம் நேருற வந்து
வணக்கம் புரிந்து வாழ்வு வேண்டின்
வேண்டிய வாழ்வெலாம் விருப்பொ டளிப்பம்.

முஸ்தபா : ஐய! நும்படை யவர்திரு நாட்டிற்
செய்த கொடுமைகள் செப்புந் தரமல:
மனைக ளிடித்தனர்; மாளிகை தகர்த்தனர்;
தொழுதற் குரிய தூய்மைப் பள்ளிகள்
பழுதுறு பாவம் பலபல புரிந்தனர்;
ஆடவர் இனத்தினை அறவே யொழிக்க
எண்ணினர் போல விளஞ்சிசு முதியவர்
எனும்வேற் றுமையற எவரையும் கொன்றனர்;
பெண்டிர் மானமும் பெரிதெனா மதித்திலர்.
போர்க்களம் புகாத புண்ணிய மக்களை
இங்ஙனம் வாட்டுதல் இயைபோ? இயம்புதிர்!
மன்னர் குடிகள் வாழ்வன சிலநாள்;
ஓங்கிய நாள்மறந் தொடுங்குவ பிறகே.
நாட்டு மக்களோ ஈட்டிய பொருளொடும்
மரபு முறையே வாழ்வர்பல் லாண்டே.
குடிகளை யழித்தல் கோன்முறை யாமோ?
இவையெலாம் கொடுமையென் றெவரே புகலார்?

இராம : கொடுமை நிகழ்ச்சிநீர் கூறக் கேட்டேம்.
தலைவரை யழைத்துத் தகவே யறிதும்;
அமைதி யினியென வவரிடம் உரைக்கலாம்.
இனிநீர் விடைகொண் டேகுதல் புரிக!

[முஸ்தபாகான் போய்க் குடுப்ஷாவை யும் நிஜாம்ஷாவையும் அழைத்து வருகின்றனர்.]

வேங்க : அவரே வருகுவர், அண்ணா நோக்குமின்!

இராம : (எழுந்து) வருக வருக! மன்னர் மரபினீர்!
அமருக வீங்குள வாதன மிவற்றில்.
அமைச்சரே! நீரும் அமருக அருகே!

[எல்லாரும் அமர்கின்றனர். தாம்பூலம் வருகின்றது.]

முஸ்தபா : சொல்லிய வண்ணமே நல்லியன் மக்கள்
வாழ்வு கருதியே வந்தன ரெம்மிறை.

இராம : வந்ததே போதும். மற்றவை வேண்டா.
யாமேன் போர்க்களத் தெதிர்க்க வேண்டும்?
அவரவர் நாட்டில் அவரர்க் குரிய

வாழ்வுக ளனைத்தும் வாய்க்கப் பெற்றுப்
பிறர்தம் நாட்டினைப் பெறவே கருதுதல்
முறையோ வரசரே மொழிமின் நீயிர்!
யாமுமெம் மரசரும் இருபத் தேழாண்
டெம்முடை நாட்டில் எவர்க்கு மெவ்வகைத்
தீங்கும் நினையேம்; செந்நெறி செல்வேம்.
இடையிடை யமர்கள் எழுந்தன வனைத்தும்
எவர்செய லானே யியன்றன வாயினும்
இனியவை நேரா. இனிது வாழுவம்.
முதுமைத் தளர்ச்சி முடுகுவ தெம்பால்.
'பிறர்நலங் கருதும் பெருமையே பெருமை!'
எனவே யுள்ளத் தெண்ணுதும் யாமே.
அமைதி நிலவுக! அன்பு வளரவே!

[தாம்பூலம் தருகின்றார். அரசர் இருவரும் பெற்றுக்கொள்கின்றனர்.]

## ஐந்தாம் களம்

இடம்: விசயபுரி அரண்மனை
காலம்: இரவு
பாத்திரங்கள்: ஆலி அடில்ஷா, முஸ்தபாகான், கிஷ்வர்கான், அஹமதுகான், மஹமதுகான்.

[அடில்ஷா பொன்னிருக்கையில் இருக்கின்றார். மந்திரிகளும் பிறரும் அருகில் இருக்கின்றனர்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

ஆலி: அமைச்சரே! நாமினி ஆற்றுவ தென்னை?
நண்பர்பால் ஏகிய நால்வரும் வந்தனர்.
அவரவர் சொல்வதும் அறிந்து கொண்டேம்.
அசாத்கான் இறந்ததால் ஆற்றல் குறைந்தது.
பகைவர் படைவலி மிகையென லாயது.

முஸ்தபா: நாம்செயத் தக்கது நன்கன மறிவேம்.
இன்னும் யோசனை ஏனோ வரசே!
தெற்குள நாடுகள் செழிப்புற வமைத்தே

அரசரைச் சிறையிட் டாட்சி புரியும்
இராம ராயர்தம் இயல்பும் குணமும்
யாரறி யாதவர் எம்மவர் இனத்திலே?

கிஷ்வர்: அறிந்து மென்பயன்? அவர்கழல் விழுந்து
வணங்கினம் யாமே; மடங்கி யடங்கினேம்.
ஒருபே ரரசாய் உயர்பா மினிகுலம்
இருந்தநா ணம்மை யெதிர்ப்பவ ரில்லை.
ஐந்து கிளைகளாய் அதுவே பிரிந்ததும்
வலிமை யிழந்தது; மாற்றார் செழித்தனர்.
நம்முடை நாட்டில் நணுகிய பகைப்படை
எத்தனை கொடுமைக ளிழைத்த தவையெலாம்
விழியகஞ் செந்நீர் பொழியயாம் கண்டேம்.
ஒருவனை வ்ணங்கு மொருகுடி யுடையேம்.
ஒருகுல வுரிமை ஒருபெருங் கொள்கை
ஒருமன மமைதற் குள்ளன வெல்லாம்
உடையே மாயினு முடைந்தே மவர்க்கே.
யாமெலா மொன்றுற விணங்கினே மாயின்,
இராம ராயர் எதிர்க்கவும் துணிவரோ!

அஹமது: தகுவ ததுவே! சமயமு மிதுவே!
ஐவர் மன்னரும் அகமிக வொன்றி
இணங்கத் தக்க விடமு மிதுவே!

ஆலி: அமைச்சரே! நிஜாம்ஷா அமர்க்கு வருவரோ?

கிஷ்வர்: யானே யவர்பா லேகினே னரசே!
கோல கொண்டக் குடுப்ஷா மன்னரும்
அமுத நகரத் தரசரு நம்மொடு
சேரவும் பகைவரைச் செகுக்கவும் துணிந்தனர்.

ஆலி: முஸ்தபா கான்! நீர் மொழிவதி யாதே?

முஸ்தபா: கோல கொண்டக் கோமக னரெனை
நிஜாம்ஷா வேந்தர் நெஞ்சறி கென்னப்
போக்கினர்; யானே போயின னரசே!

ஆலி: ஆங்கென் னுரைத்தீர்? அவரென் னிசைத்தார்?

முஸ்தபா: ஆங்கியான் மொழிந்தன வனைத்தும் கேளீர்:
'விசய நகர வேந்தர் பெருங்குடி
கருநா டகத்துக் காவலர் தம்மை

அடக்கி யொடுக்கி யாக்கம் பெற்றது.
நம்மவர் நாடுகள் நட்புக் குறைவால்
ஒவ்வொன் ருக வொடுங்குதல் கண்டீர்.
அவர்தந் தலைமை யடங்கவு மழியவும்
நம்மினத் தலைமை நலம்பெற வோங்கவும்
ஒருவனை நம்பும் ஒருகுடிப் பிறந்தார்
அனைவரு மொன்று யமைவது வேண்டும்,'
என்றனன். அவரு மிணங்கின ரெளிதே.
அவர்தா மெம்முறை யன்பொடு செவிக்கொண்
டரசே! நுமக்கோ ரருமந்த மகளாம்
சாந்து பீபியைத் தரவும் இசைந்தனர்.
இனிநீ ரவருக் கினிய மருகர்.
ஆதலால் நாடுக ளனைத்து மொன்றுய்ப்
பகைவரை யெதிர்க்கப் படருதல் துணிவம்.

ஆலி: நன்று புரிந்தீர்! நன்மையே மலியும்!
நன்றி மறந்தே னென்றெனை யுலகம்
இகழினும் யானே எழுவனிப் போர்க்கு.
விசய நகரார் மேதகு குணமிலார்.
அரசரை யரசரென் றறியா ராயினர்.
இருக்கவும் இடங்கொடார். இழிந்த வூழியர்
போல வவர்பின் போதர வேவுவர்.
நம்மவர் நாட்டிடை யம்ம வவர்புரி
கொடுமைக ளெத்துணை! கூற்றுக் கடங்குமோ!
இன்னும் யார்நமக் கின்றுணை யாவர்?

மஹமது: வேதண்ட நகர வேந்தரு முண்டு.
பிறரும் வருவர்நம் பேச்சினை யறிந்தால்.
நம்மவர் இம்முறை நணுகுவர் வெற்றி.
ஒருவனை நம்பா ரொழிவ ரழிவரே.

முஸ்தபா: அரசே! திருமண மாதல் நன்று.
சாந்து பீபியும் தனக்கிணை யில்லாப்
பெரும்போர்த் தலைவியாய்ப் பிறங்கக் காணீர்.

ஆலி: முன்னரே கேட்டுளன் மன்னர் மகளின்
பெருமை யனைத்தும். திருமண நிகழ்ந்தபின்
நம்முடை முயற்சி நன்கு நடைபெறும்.

முஸ்தபா : சோழ புரத்தினைத் தோன்றலே நுமக்குச்
சாந்து பீபி தனது சீதனமாக்
கொணருவள். இன்னும் கூறுவ வுளவோ?

ஆலி : எங்கையை நிஜாம்ஷா விளவர சினிது
மணந்து கொள்கென வழங்குவம் யாமே.

முஸ்தபா : நல்ல மொழியே நவின்றீ ரரசே!
இங்ஙனம் நம்மவர் இணங்கின லன்றி
அயலவர் செருக்கினை யடக்க வியலுமோ?
இனியவ ரடியோ டெளிதிலே யழிவர்.
நம்மவர் தலையெடுத் திம்மையி லுயர்வர்.

ஆலி : அன்பரே! அமைச்சரே! அயலவர் நம்மவர்
எவரே யாயினும் யாமிது புரிவது
புறம்போ காது பொதிந்திட வேண்டும்.
சூழ்ச்சி துணிந்தது வீழ்ச்சி யெய்துமேல்
நினைந்தன யாவும் நிலையிலா தழியும்.

எல்லாரும் : ஆமாம்! மறைவே யமைவ திதற்கே.

[சபை கலைகிறது.]

## ஆறும் களம்

> **இடம் :** தலைக்கோட்டைப் போர்க்களம்
>
> **காலம் :** பிற்பகல்
>
> **பாத்திரங்கள் :** இராமராயர், நிஜாம்ஷா, அடில்ஷா, குடுப்ஷா, திருமலைராயர், வேங்கடாத்திரி ராயர், ஆலிபரீத்ஷா, கிஷ்வர்கான், மௌலானா இனயத்துல்லா, முஸ்தபாகான், சலாபிரூமிகான், இரு திறப்படைஞரும் பிறரும்.

[நேசப்படைகள் அணி வகுத்துக் கிருஷ்ணா நதிக்குத்தெற்கிலே போர்க்குச் சித்தமாய் இருக்கின்றன. விசய நகரப்படை கிருஷ்ணா நதியின் இரு புறமும் இருக்கின்றது.]

**நிலைமண்டில ஆசிரியப்பா**

அடில்ஷா : அன்பரே! வருக! அமர்க்களம் புகுதும்!
வெற்றி பெறுதும்! மீளுத லில்லை!
புறக்கொடை யென்பது மறக்குண மன்றே!

நிஜாம்ஷா : மருக ! போர்க்களம் வந்து புகுந்தேம்.
இனியவர் செய்கை யாதென வறியேம்.

குடுப்ஷா : கிருட்டிணை நதிக்கரை யிருபுற நிலமும்
அவரே பற்றி யடர்க்க விடாது
நாமவர் நிலையை நன்கு தெளிந்து
செய்யத் தகுவது செய்தல் நன்று.

பரீத்ஷா : சிற்சில நாடுகள் பற்றுதல் செய்தேம்.
அதனை யறிந்தபின் அவரும் போந்தனர்.
படைவகுத் துள்ளனர் பாரீர் பாரீர் !
நாமும் நம்படை நன்கனம் வகுப்பேம்.

அடில்ஷா ; ஐம்ப தாயிரம் அசுவம் உளவே.
ஆட்படை சிறிதே ; அதுமூ வாயிரம்.
சுடுபடை தாங்கிய வடுபடை நம்மகம்
உளதே. அவர்பா லொன்று மில்லை.
எதிர்த்து நின்ற விராம ராயர்
எழுப தாயிரம் வழுவறு பரிப்படை
தொண் ணூ றுயிரம் வண்ண வாட்படை
உடைய ரென்ப துணர்ந்தே மாதலின்,
சந்து பேசுதல் தகுமெனச் சிலரைப்
போக்கினம். அவரைப் பொருட்படுத் திலராம்.
இனிப்போ ரெழுவதே பேற்பது நமக்கே.

நிஜாம்ஷா : அளவினு ளடங்கா வாற்ற லுளதெனப்
பெருமிதம் கொண்டுள பெரியா ரவர்நமை
மதித்துநம் தூதுவர் வாய்மொழி கேட்பரோ ?

குடுப்ஷா : கேளா தொழியிற் கெட்டே யொழிக !
அறம்பிற ழாதே யமர்க்களம் புகுந்த
புகழே நமக்குப் பொருந்துவ தாகும்.

பரீத்ஷா : இனிநம் படையினை யியக்குத லெங்ஙனம் ?

அடில்ஷா : வலப்புறப் படையினை வகிப்பன் யானே.

பரீத்ஷா : இடப்புறப் படையினை யியக்குவன் யானே.

குடுப்ஷா : யானும் இடப்புறம் இருந்தமர் புரிவன்.

நிஜாம்ஷா : இடைநிலைப் படையினை யானே நடாத்துவன்.

அடில்ஷா : படைகளை நடத்தும் பணியுளார் யாரே ?

நிஜாம்ஷா : எம்படைத் தலைவர் இனயத் துல்லா.

குடுப்ஷா : முஸ்தபா கானெம் முயற்சித் தலைவர்.

அடில்ஷா : கிஷ்வர் கானெம் கிளர்படைத் தலைவர்.

[மற்றொரு புறம் இராம ராயரும் அவர் தம்பிமாரும் வருகின்றனர்.]

இராம : ஆற்றினை யெளிதே யடைந்தா ரவர்தாம்
இக்கரை வருதல் எளிதென வெண்ணிலேன்.

திருமலை : சூழ்ச்சிகள் துணிந்தனர் வீழ்ச்சி விரும்பார்
எங்ஙன மேனும் எதிர்க்கவீங் குறுவர்.

வேங்க : அவரிவண் வருமுன் அமைப்பேம் நம்படை

இராம : திருமலை யிடப்புறம் பொருக நின்றே.
வேங்க டாத்திரி மேவுக வலப்புறம்.
யானே யிடைநிலை யிரும்போர் தொடுப்பன்.

வேங்க : எண்பதாண் டெய்தினிர் இப்பொறுப் பெம்பால்
விட்டுநீ ரொருபால் மேவியிப் போரினைக்
கண்ணுற் கண்டு களிப்பது நன்றே.

திருமலை : அன்றியு நந்தாய், ' அயலவர் தம்மொடு
பகைகொள வேண்டா ; பயிலுக நட்பே'பன
உரைத்த மொழியையும் உணர்த்த விரும்புவன்.

இராம : யாது கூறினீர் ! என்னைநீ ரறியீர் !
இத்துணை யாண்டு மெத்துணை யமர்க்களம்
புகுந்துளேன் ! வெற்றிப் புகழ்புனை துள்ளேன் !
இடைந்தன னென்ப தியாண்டு மிலையே !
நேற்றிராக் கண்டே னெடுங்கன வொன்று.
யான்பின் செல்லுவ தென்ப தில்லை.
வருநெறி சகுனமும் மாறாய் வந்தது.
அவையெலா மதிப்ப தாடவர்க் கழகிலை.
போர்க்களம் புகுந்து புறக்கொடை யாகுமோ ?

[சேவகர் சிலர் ஓடி வருகின்றனர்.]

சேவகர் : பகைப்படை வந்தது ! பகைப்படை வந்தது !
மிகைப்பட விடாது விரைவினி லெதிர்க்க
ஆணை பிறப்பித் தருளுக வையா !

இராம : எழுகம் போர்க்கிங் கியாவரு மெழுமின்.

திருமலை : தொகையா லவர்படை சுருங்கிய தாயினும்
வலிமிகுந் துளதென மதிப்பேன் யானே.

இராம : அவர்பால் வலிமை யமைந்தில தறிவேன்.

வேங்க : அயல்நாட் டிருந்தோ ரரும்போர் வீரன்
அவர்க்குத் துணையா யமைந்தன னென்பர்.

இராம : யாரவன்? அவன்றிறம் யாதென வறிதியோ?

வேங்க : குண்டு கக்கும் கொடும்படைப் பாண்டில்
அறுநா றவர்பா லமைந்துள தென்பர்.
அவற்றை நடத்துவோ னயலவ னென்பர்.
சலாபி ரூமிகான் றூனவன் பெயரே.
களிற்றுக் கோட்டிடைக் கட்க மமைத்தே
இடையிடை நிறுத்தின ரெனவும் கேட்டேன்!
ஆதலி னிம்முறை யமர்செயல் விடுத்துப்
போதல் நன்றெனப் புகலுவ னுமக்கே.

இராம : இளையீ ராயினும் இளைத்தீர் நீரே.
என்னுள மறியீர்! என்செய லறியீர்!
யாது கூறினீர்! இனியிவை பேசலிர்!
படைகரந் தாங்கிய படைஞரே! கேண்மின்:
எதிர்த்தவர் சிறுபடை யிடைவது கண்டு
மதித்தெளி வுறவே வந்துமுன் னின்மின்.
தோல்வி நமக்கெனச் சொல்லத் துணிவார்
எவரே யாயினும் என்முன் கொணருதிர்.
அவர்படை யெலிப்படை; அரவம் நமதே.
பாய்திர்; பற்றுதிர்; பணிந்திரந் தவருயிர்
விடுதிர்; பிறரெலாம் வீட வெட்டுதிர்!
சிவிகையில் யாமே செல்லுது முன்னே.
வருக வருக மற்றுளார் பிறகே.

வேங்கட : புகுந்தேம் போர்க்களம்! மிகுந்தேம் வலிமை!
உள்ளந் தளரேம் வெள்ளமே யெதிர்ப்பினும்!
பாயும் பன்னூ றுயிரம் படைஞரை
நடாத்தும் பொறுப்பினை நாமே வகித்தேம்.
இருபத் தையா யிரம்பரிப் படையும்

ஐஞ்ஞா றளவே யாகிய களிறும்
இருநா றாயிரம் எண்ணுள பதாதியும்
என்கீழ் நடப்பன; எதிர்ப்பன் அவரையே.

**திருமலை :** யானுமென் மைந்தன் இரகு நாதனும்
வேதண்ட மன்னன் வியன்பெரும் படையைக்
கோல கொண்டக் கொற்றவன் படையை
எதிர்ப்பேம்; ஒருவரு மெஞ்சா தழிப்பேம்.
[போர் முழக்கத்தோடு தொடங்குகின்றது.]

**இராம :** பாய்மின்! பாய்மின்! பற்றுமின்! வெட்டுமின்!
கொல்லுமின்! குத்துமின்! வெல்லுமின் விரைவில்!
[சேவகர் சிலர் வருகின்றனர்.]

**சேவகன் I :** திருமலை ராயர் ஒருகண் இழந்தார்!
அவர்தம் மைந்தர் அந்தோ விறந்தார்!

**சேவகன் II :** பகைப்படை யுடைந்தது! பாய்ந்தது நம்படை!
வேங்கடாத் திரியார் வெற்றி பெற்றனர்!
அடில்ஷா பெரும்படை அஞ்சி யகன்றது!

**இராம :** இனியாம் பரிமீ திவருதல் வேண்டும்;
அமர்க்கள நெறிகளை யவரவ ருணரத்
தெள்ளிதி னுணர்த்தச் செல்லவும் வேண்டும்.
[சேவகன் ஒருவன் ஓடி வருகின்றான்.]

**சேவகன் :** உடைந்தவர் மீண்டனர்! ஒன்று திரண்டனர்!
அங்கியம் படையால் அடர்ப்பர் நம்மை!

**இராம :** குண்டினைக் கக்கும் குழிவாய்ப் படைக்கோ
அஞ்சுதல் வேண்டும்? அவரெது புரியினும்
யாம்பின் னிடைவே மென்ப தில்லை.
[ஒற்றர் இருவர் மெல்ல வருகின்றனர்.]

**ஒற்றர் I :** நிஜாம்ஷா விதான நிருமித் ததன்கீழ்
இருப்பர், 'வெல்கிலா தெழேன்!'என வுரைத்தே.

**இராம :** அரியணை யெமக்குமிங் கமைக்க! யாமும்
அவர்படை நோக்கி யமருவ மீங்கே.
வென்றனர் கொள்வர் மிகுபொரு ளிவையெலாம்.
[அரியணையில் அமர்கின்றார்.]

ஒற்றர் II : அடில்ஷா குடுப்ஷா அஞ்சி யோடுவர்.
யானே கண்டேன்; இதுவென் னறியேன்.
இருபுறப் படைஞரு மிடைந்தன ரோடினர்.
இடைநிலத் திருக்கும் இரும்படை நின்றது.

இராம : இடைநிலம் பாய்க! எம்படை எழுக!
கருட! கருட! கருட! வெற்றி!

[இராமராயர் படை முன்னே பாய்கின்றது. பீரங்கிக் குண்டுகள் அப்படைவீரர்களைக் பிணக்காடு செய்கின்றன.]

இராம : என்னே! என்னே! எம்படை யிடைந்ததே!
எம்படைத் தலைவருள் இருவர்தம் படையொடு
பகைப்படைப் பக்கம் பரிசறக் கலந்தனர்.
யாவர் சூழ்ச்சியோ விதுநன் கறியேன்.
ஆண்டு பலவெம் மரசுக் குழைத்தே
தங்குடி தழைத்தோர் தருண மிதன்கண்
உண்ட சோற்றின் உறுகடன் மறந்து
பகைத்திறஞ் சார்ந்தனர்; பழியே பூண்டனர்.
யாது விளையினும் யான்பின் னிடையேன்.
வருவது வருக! வாழ்வும் தாழ்வும்
எம்செய லல்ல; இறைவன் செயலே.

[படைஞர் குண்டு மழைக்கு ஆற்ருது புறங் கொடுத்து ஓடுகின்றனர். இராம ராயர் சிவிகை சுமந்த சேவகர், பகைப்படைக் களிறு பாய்வது கண்டனர்.]

சிவிகையர் : யானை! யானை எம்மையே கொல்ல
அந்தோ வந்ததே! ஐய! யாம் செத்தேம்!

[சிவிகையை விட்டு ஓடுகின்றனர்.]

இராம : களிறே! களிறே! கையை நீட்டுக!
எடுக்க என்னை; ஏற்றுக பிடரில்.

[யானை இராம ராயரைத் தும்பிக்கையால் எடுத்து ஓடுகின்றது. நிஜாம்ஷா எதிரே வருகின்ருர்.]

நிஜாம்ஷா : நில்நில் யானையே! பொல்லாக் களிறே!

நிருபரா மிவரை நீகொல லாகுமா?
எனக்கே யுரிமை இவருயிர் காணாய்!

[யானையை அடக்கி இராம ராயரைக் கையால் பிடித்துத் தரையில் நிறுத்துகின்றார்.]

இராம: மன்னவர் முறைமை மற்றிது வேயோ?

நிஜாம்ஷா: முறைமை நுமக்கு முழுதும் காட்டுவம்!
எம்முளம் வேவ வெத்தனை செய்தீர்!
அன்று நுமக்குநாள்; இன்றுநாள் எமக்கே.
உம்மைப் பிறர்பா லுய்க்கும் கருத்திலேம்.
எம்முடை வாளே யும்முடை யுயிரை
நரகுக் கனுப்பு நற்றுணை யாகும்.

[வாளால் வெட்டி வீழ்த்துகின்றார். சேவகர் சிலர் அங்கு வருகின்றனர்.]

சேவகர்: அரசே! யாமினி அவர்நா டடைவம்.

நிஜாம்ஷா: இராம ராயரின் இருந்தலை தூக்கிக்
களமெலாம் காணக் காட்டுமின் முதற்கண்.
நமர்படை மகிழும்; அவர்படை யுடையும்.

சேவகர்: அங்ஙனே புரிவம் அரசர் பெரும!

[ஈட்டி உச்சியில் இராம ராயர் தலையைக் குத்திக் களம் எங்கும் தெரியக் காட்டுகின்றனர். விசய நகரப் படை இடைந்தோடுகின்றது.]

படைஞர்: கொள்ளை! கொள்ளை! கொள்ளையோ கொள்ளை!
எத்துணை யரும்பொன்! எத்துணை நவமணி!
போர்க்களத் திவ்வணம் பொழிந்திவை யிருக்குமேல்
நகரத் தெங்ஙனம் நல்வாழ் விருந்ததோ!

நிஜாம்ஷா: அன்பரே வருக! ஆங்குப் போவேம்.
நகரை யழிப்பது நம்கட னினியே.

[எல்லாரும் ஆரவாரத்தோடு விசயநகரம் நோக்கிப் புறப்படுகின்றனர்.]

# ஏழாம் களம்

இடம் : விசய நகரம்

காலம் : பிற்பகல்

பாத்திரங்கள்: நிஜாம்ஷா, குடுப்ஷா, அடில்ஷா, பரீத்ஷா, படைஞர், கொள்ளைக்காரர், நகர மக்கள்.

[நகர நடுவில் நிஜாம்ஷா நின்று பார்க்கின்றார். மற்ற மன்னர்கள் குதிரைமீதேறி நகரைச் சுற்றி வருகின்றார்கள்.]

**நிலைமண்டில ஆசிரியப்பா**

அடில்ஷா : எங்கும் கொள்ளை! எங்கும் சூறை!
மாளிகை யிடிந்தது! மனையெலாம் தகர்ந்தன!
வீதிக ளெல்லாம் வெறும்பா ழாயின!
அரண்மனை யழிந்ததை யாரே பொறுப்பர்!
இங்ஙனம் நம்படை ஏனோ செய்யும்!
பெருங்குளங் கரைகெடப் பெருகிய தெங்கும்!
யாரோ வேவினர் இதுசெய விவரை!

நிஜாம்ஷா : எமது நகர மிவர்கைப் படுநாள்
இவர்செயும் கொடுமை யாவுநீ ரறியீர்;
அறிந்தா லிங்ஙனம் அனுதா பங்கொளீர்.

பரீத்ஷா : ஆலய மெனவே அமைந்தன வெல்லாம்
இடிந்து தகர்ந்தன எங்கும் நோக்கினேம்.
பெரும்பொருள் அரண்மனை யரும்பொருட் சாலை
அகத்தே யுளதென வறையக் கேட்டேன்;
ஒன்றையும் காணேன்; ஒருபெரும் பாழே.
அவர்திரு வெல்லாம் எவர்கவர்ந் தனரோ!

குடுப்ஷா : போர்க்களத் தவர்தாம் போக்கிய பெரும்பொருள்
வாரிய படைஞர் வளத்தினை நோக்கினேன்.
என்ன செல்வம் இவர்பா லிருந்தன!
அவையெலாம் போயின வாறறி கிலமே!

**நிஜாம்ஷா :** 'இளையவர் இருவரும் ஈங்குமுன் புகுந்தே
திருமலை யென்னும் திருப்பதிக் கோவில்
அகத்தே செல்வ மடையச் சேர்த்தனர்,'
எனவோர் பொதுமொழி யிங்குளார் பேசுவர்.

**அடில்ஷா :** இருப்பினு மிருக்கலாம். எமையே னெதிர்த்திலர்?
படைவலி யிலையா? பணப்பெருக் கிலையா?
நகரிடை நெடுநாள் நலமுற வாழ்ந்த
மக்களை நாமே வதைத்து வாட்ட
விட்டனர் சென்றது மேன்மை யாகுமோ?

[படைஞர் சிலர் பெரும்பொருட்
குவியலோடு முன் வருகின்றனர்.]

**படைஞர் :** பெரும்பொருள் பெற்றேம்! பீழை தவிர்ந்தேம்!
யானை குதிரைகள் என்செய லாமோ?

**நிஜாம்ஷா :** பிறபொரு ளெல்லாம் பெறுக! உரிமை
யானை குதிரை யிறைவருக் காகும்!

[படைஞர் மீண்டு போகின்றனர். அர
சர் வெளிப்படுகின்றனர். நகர மாந்
தர் கதறிக்கொண்டு வருகின்றனர்.]

**படைஞர் :** அங்ஙனே செய்தும் அரசே அரசே!

**ஒருவன் :** ஐயோ! நகரம் அழிந்ததே அழிந்ததே!
எத்துணை யழகுற விலங்கிய நகரம்!
இங்ஙனம் அழிவது மிறைவன் செயலோ!
பன்னூற் றாண்டுகள் பண்புற விளங்கிய
விசய நகரம் வெறும்பா ழாயதே!
ஏழு தலைமுறை யிருந்த வெம்மனை
இடிந்து தகர்ந்து பொடிந்து விழுந்ததே!
அரசர் நால்வர் அருகிலே யிருந்தும்
படைஞர் கொடுமை தடைசெய் பவரிலர்!
என்னே யழிவுகள் இங்ஙனம் நிகழுமோ!

[மயங்கி விழுகின்றான்.]

**ஒருத்தி :** அருமை மகனை அமரினி லிழந்தேன்!
உரிமைக் கொழுநனை ஒருநொடி யிழந்தேன்;
நாடு மழிந்தது! நகரமு மழிந்தது!

வீடும் சாம்பலாய் வெந்து விழுந்ததே!
இனியா னுயிரோ டிருந்தென் பயனே!
நீரினில் விழவோ! நெருப்பினில் விழவோ!

[ஓடுகின்றாள்.]

இழவர்: வாழ்வும் கண்டேன்; தாழ்வும் கண்டேன்.
கிருட்டிண தேவர் கிளர்வுறு மாட்சியில்
நகர மிருந்த நன்னிலை கண்டேன்;
இன்றிஃ திருக்கும் இழிவும் கண்டேன்.
நூறாண் டிருந்து நுட்பநூ லாய்ந்து
பலர்செவிக் கொள்ளப் பலபல பேசியும்
உள்ளம் பொறாமல் உயிர்விடு கின்றேன்!

[விழுந்து சாகின்றார்.]

சிறுவன்: இழவே யிழவே! இதுவுமோ ரழகே!

[மயங்கி விழுகின்றான்.]



## விளக்கக் குறிப்பு

அங்கம் - I] [களம் - 3

அரங்கம், அரங்க பட்டினம், திருமெய்யம் ஆகிய இம்மூன்று இடங்களிலும் திருமால் பள்ளிகொண்ட காட்சி அருள்கின்றார். நரசிங்கர், சிரங்கர் - இரு சகோதரர்; கல்விச்செல்வர். விரூபாக்கன்-அக்காலத்தில் விஜய நகரம் ஆண்ட மன்னன். தமனியம் - தங்கம் (பகரம் மகரம் ஆகியது பாகதச் சிதைவு) பூபதி - இங்கு விருபாக்ஷ அரசன். எருமை நாடு - மைசூர்த் தேசம்; 'மஹிஷாசுரபுரி' என்னும் பழம்பெயர் அந்நாட்டுக்கு உண்டு. வினுகொண்டம் - பெனுகொண்டா.

அங்கம் - I] [களம் - 4

கோவை - கோவா (Goa). விசயபுரம் - பீஜபூர். குலசேகரர் - ஆழ்வார்களுள் ஒருவர். இவர் கோழிக்கோட்டிலிருந்து அரசு புரிந்தவர். பரங்கியர் - அயலவர் எவர்க்கும் பொதுவில் வழங்கிய பெயர். ஞானி - சாமியாரை மரியாதையாய் வழங்கும் சொல். அகம் - அரண்மனையகம்.

அங்கம் - I] [களம் - 5

களர் - சேற்று நிலம்: 'காலாழ் களரி னரியஞ்சும் கண்ணஞ்சா வேலாழ் முகத்த களிறு,' என்னும் குறள் இங்கு மேற்கோள். உமட்டூர் அரசர் - சிவசமுத்திரம், தேரகனும்பி, சீரங்க பட்டினம் ஆகிய நகரங்களை ஆண்ட சிற்றரசர். பெனுகொண்டாவை இவர் கைக்கொண்டு, 'அரச குலத்தேன்' எனக் கூறிய தாற் போர் வந்தது. கோவிந்த ராஜர் - 'அப்பாஜி' என்னும் திம்மரசின் தம்பியார். இக்கேரி - ஒரு நாட்டின் பெயர்.

அங்கம் - I] [களம் - 6

'அருமறை பாடிய அன்னவுரு' என்றது, அன்னவுருவத்தோடிருந்து திருமால் வேதம் அருளிய புராண கதையை விளக்கும். அருள்வெளம் - அருளின் வெள்ளம். அங்கு-அமலனருகு. 'நாகாம்பிகை, நாகலாதேவி, சின்னதேவி' என்பன ஓர் அரசியின் பெயர். திருநாரணபுரம் - 'மேலைக்கோடு' எனப் பெறும் ஆலயம். தேவமரசு - கொண்டமரசின் மகன். ஸ்ரீஹர்ஷன் - வடமொழிப் புல

மை படைத்த அரசன். செல்வப்பிள்ளை - திருநாரணபுரத் திரு மால். நஞ்சினையுண்ட நாயகன் - நஞ்சுண்ட ஈசன். 'நஞ்சன்கூடு' என்னும் சிவ க்ஷேத்திரத்திற் கோவில் கொண்ட சிவன்.

அங்கம் - II] [களம் - 1

திருமலை ராவுத்த ராயர் - உதயகிரித் தலைவர்; கயபதியின் மைத்துனன். திருமலை ராவுத்த ராயர் மனைத்தலைவி போர் புரிந்து இறந்ததாக உரைப்பது சரித்திரச் செய்தியன்று; கற்பனை.

அங்கம் - II] [களம் - 2

மகா நதி - கயபதி நாட்டிற் பாயும் நதி. கிருஷ்ண வேணி - கிருஷ்ணா நதி. வேதண்ட கோட்டை - பீடார் (Bedar) எனப்படுவது. அமுத நகரம் - அஹமது நகரம். கனியா காயா? - மரபு மொழி. அரச குலம் - கயபதி குலம். அமைச்ச குலம் - கிருஷ்ணதேவராயர் நரச நாயகர் வழி வந்தவராதலால் அமைச்சர் குலத்தவராவர். பீழை - துன்பம்; தோல்வியால் வரும் துன்பம் இங்குக் கருதியது. 'பொருள் கருவி காலம் வினையிடனொடைந்தும் இருள்தீர எண்ணிச் செயல்,' என்னும் திருக்குறள் மேற்கோளாய் வந்தது.

அங்கம் - II] [களம் - 3

முகக்குறி முதலியன - இவை பரத சாத்திரப் பகுதிகள் எனப்படும். அம்பலத்தாடிய அமலன் - நடராஜன். அவன் நாட்டியக் கலைக்கு முதற்குரு. கண்டகூர், கொண்ட வீடு - நகரப் பெயர்கள், நச்சி ராஜர் - கயபதி சேனாதிபதி. இளவல் - தம்பி (கோவிந்த ராஜர்), கொண்டபள்ளி - ஒரு நகரம்.

அங்கம் - II] [களம் - 4

மசூலிப்பட்டினம், ஸ்ரீகாகுளம் - நகரப் பெயர்கள். தனையெனக் களித்த அன்புரு - இறைவனுக்குத் தன்னையளித்த அன்பே உருவம் பூண்ட கோதை. மதாலசா சரித்திரம் சகல ஸத்கதாசார சங்கிரகம். சூக்தி நைபுணி ஞான சிந்தாமணி, இரசமஞ்சரி - இவை கிருஷ்ணதேவ ராயர் இயற்றிய நூல்கள் என்பர். ஆமுக்த மால்யதா - சூடிக் கொடுத்தாள் வரலாறு. இதுவும் கிருஷ்ண தேவ ராயர் இயற்றிய தெலுங்கு காவியம். இங்குக் காட்டிய விருத்தச் செய்யுட்கள் ஆமுக்த மால்யதா மொழி பெயர்ப்பு என்று கருதத் தக்கனவல்ல; பொருட்பொருத்தம் கருதி அமைந்தன. யமுனைத் துறைவர் - வைணவ ஆசாரியர்; நாதமுனிகளின் பேரர்; இவர் வரலாறு ஆமுக்த மால்யதா என்னும் காவியத்துள் வருகிறது. இச்

செய்யுட்கள் இரண்டும் ஆமுக்த மால்யதா என்னும் அரசர் காவியத்தின் கருத்துத் தழுவியவை. ஸ்ரீநாத மகாகவி-அல்லசானி பெத்தன்னா என்னும் மகாகவிஞரின் குரு. அரி கதா சாரம் - அல்லசானி பெத்தன்னா இயற்றிய ஒரு பெருங்காவியம். மனுச்சரித்திரம் - அல்லசானி பெத்தன்னா தெலுங்கு மொழியில் இயற்றிய காவியம். ஆந்திர கவிதா பிதாமகன் - தெலுங்குச் செய்யுள் நெறி அமைதிக்கு மூதாதையானவர்; இப்பட்டம் உண்மையில் பெத்தன்னா அங்குப் பெற்ற பட்டமே. நால்வடக் கோவை - தொங்கும் வடங்களையுடைய மாலை; இம்மாலையில் மூன்று வடங்கள் உண்டு என்பது சரித்திரச் செய்தியாம். தான கடகம் - நகரப் பெயர். சத்த சாகர தானம் - கோவிலுக்கு உதவுமாறு செய்த இத்தானம் எங்ஙனம் இயன்றது என்பது விளங்கவில்லை: ஏழு குளங்கள் வெட்டிக் கொடுத்திருக்கலாம்; கோவிலுக்குள் நெய் எண்ணெய் முதலியன கொள்ளக் கற்பள்ளம் அமைத்தும் இருக்கலாம்: சரித்திர நிகழ்ச்சியாதலின், உள்ளவாறே உரைக்கப் பெற்றது. இரத்தின தேனு - நவமணி அழுத்திய பொன் பசுவொன்றை ஆலயத்துக்கு உதவும் தானம் என்று பெரியோர் கூறுவர். அரச மகேந்திரபுரம் - ராஜ மஹேந்திரபுரம் (Rajamandry). துலாபுருட தானம் - அரசர் துலைக்கண் நிற்க அவர் நிறையளவுக்குப் பொன்னிரப்பித் தானம் செய்வது. கோகனம்-திருக்கோகர்ணம் (சிவராத்திரித் திருத்தலம்).

## அங்கம் - II] [களம் - 5

திருமலைத் தேவி - கிருஷ்ண தேவ ராயர் புத்திரி. இவள் இராம ராயரை மணந்துகொண்டாள். வெங்கலாம்பிகை - இவள் கிருஷ்ண தேவராயரின் மற்றொரு மகள். இவள் இராம ராயர் சகோதரர் திருமலை ராயரை மணம் புரிந்தாள். சித்தி மரக்காயர் - கிருஷ்ண தேவரது பிரதிநிதியாய்க் கோவை சென்றுவரும் மகமதியர். கோடி கொடுப்பது - கலியாண காலத்தில் வந்த விருந்தினர்க்கு அரச குலத்தார் புது வஸ்திரம் அளிக்கும் மரபு.

## அங்கம் - III] [களம் - 2, 3

அடில்கான் - குல்பர்க்கா அரண் 'காவலன், 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்,' என்னும் குறள் மேற்கோளாம். 'எற்றென் றிரங்குவ செய்யற்க,' என்பது திருக்குறள்.

## அங்கம் - III] [களம் - 4

போஜ திருமலை - கிருஷ்ணதேவ ராயர் மைத்துனர்; அன்ன பூர்ணா தேவியின் சகோதரர். இவர் அன்ன பூர்ணா தேவி மகனாகிய

இளஞ்சிசுவை அரசனுக்கினர். மருமகன் - இராம ராயர். இவர் திருமலைத் தேவியின் மகளை மணந்தார். சின்ன தேவியின் மகளை இவர் தம்பியார் மணந்தார். கலிங்க மோகினி - கலிங்க நாட்டிலிருந்து வந்த ஜகன்மோகினி என்ற தேவி. இவள் மகனே முன் இறந்த அரச குமாரன். நகர காவலன் - விஜயநகரத்து அதிகாரம் வகித்த தலைவன். இவன் முன் அடிமையாய் இருந்து, இராமராயர் ஆதரவால் அரண்மனையில் நன்னிலை பெற்றவன். இவன் பெயர் சரித்திரகாரர் கூறவில்லையாயினும், இவன் முயற்சிகளை விளக்கினர். இபுரகீம் அடில்ஷா - இஸ்மேல் அடில்ஷாவின் மைந்தர். தாயர் - நற்ருய் செவிலித்தாய் முதலியோர். சலாக சகோதரர் - சலாகம் பெரிய திருமலை, சிறிய திருமலை: இவ்விருவரும் வரதாம்பிகையின் சகோதரர். வரதாம்பிகை - அச்சுதர் தேவி.

அங்கம் - IV] [களம் - 1

பைந்தமிழ்ப் பின்செலும் பச்சைக்கொண்டல் - திருமால்; இது கணிகண்ணன் கதை குறித்த தொடர்மொழியாம். திருமங்கை மன்னர் - திருமங்கையாழ்வார். திருப்பணி - திருவரங்கத் திருக்கோயிலிற் செய்துள்ள திருப்பணி. அரும்பொருட்பேழை - அருங்கருத்து நிறைந்த காவியம். அச்சுதராயாப்யுதயம் - அச்சுதர் புகழ்க்கதை. விருந்தை மாவனம் - விருந்தாவனம்; கண்ணன் விளையாடிய வனம். ஆயர் மகளிர் தம்மை மறந்து இராசக்கிரீடையில் ஈடுபட்ட வரலாறு பாகவத புராண ஆசிரியரால் தசம ஸ்கந்தத்தில் விளக்கப்பட்டது. ஏனையது - அச்சுதராய அப்யுதய காவியம். சுவர்ண மேரு - ஒரு மகாதானம்; பொன்னை மலைபோலக் குவித்து அதனை எடுத்துத் தானம் செய்தல். ஆனந்த நிதி - மற்றொரு பெருந்தானம்; அந்தணர்க்கு ஒரு பொற்கிழி வழங்கி, அக்கிழியிற் பொன்னின் அளவு எப்பொழுதும் குறையாதிருக்க உதவும் தானம். திருமலை ராயர் - சலாகம் திருமலைராயர் முதல்வர். விசுவநாதர் - நாகமநாயகர் மைந்தர். இவர் தந்தையாரைச் சிறைசெய்து அரசர் கடமையை நிறைவேற்றினர். இவர் இவ்வருஞ்செயல் செய்தது கிருஷ்ண தேவராயர் காலத்தில் என்று பலர் கருதினர். இந்நாளைய சரித்திராசிரியர் அச்சுதர் காலத்தில் இச்செய்தி நிகழ்ந்ததென்கின்றனர். பின்னைய கருத்து இங்குத் தழுவப்பட்டுள்ளது. அச்சுதர் பேச்சிற் காண்க. செல்லப்பர் - ஒரு தண்ட நாயகர்; அமைச்சுப்பூண்டிருந்தவர். சலாகம் திருமலைராயர் சூழ்ச்சியாற்றமது பதவியை இழந்தார்; அச்சுதரை எதிர்த்துச் சேரநாடு சென்ருர். வல்லப தேவர் - பாண்டி நாடு ஆண்ட அரசர். மாவலி வாணாதி ராயர்,

தும்பிச்சி நாயக்கர் - இவ்விருவரும் விசய நகரத்தை எதிர்த்து நின்று தோல்வி பெற்றவர். அல்லசானி பெத்தன்ன - கிருஷ்ண தேவர் அவைக்களப்புலவர்.

அங்கம் - IV] [களம் - 2

வேங்கடாத்திரி - இராம ராயர் சகோதரர். இவர் போர்க் களத்தில் தம் மனைவியர் அயலார் கையிற் சிறைப்பட விட்டுத் திகைத்து நின்றார். பெரும்புலி - இராம ராயர். இவர் தம்பி பெற்ற தோல்வியை விரைவில் வெற்றியாக மாற்றினர். சோதர அரசர் - இரு வேறு அரசர்.

அங்கம் - IV] [களம் - 3

வேங்கடாத்திரி - சின்ன வேங்கடாத்திரி. இவர் அச்சுதர் குமாரர்; அரசு பெற்றுச் சின்னாள் இருந்தார். அரங்க ராயர் - சதாசிவ ராயர் என்னும் பெயரால் இராம ராயர் முயற்சியால் அரசு கட்டில் ஏறிய அரசருக்குத் தந்தையார்; கிருஷ்ணதேவ ராயர்க்கு இளைய சகோதரர் முறையுள்ளவர். திம்மையா - சலாக குலத்திற் பிறந்த ஒரு பாவி. அரசன் தாய் - வரதாம்பிகை.

அங்கம் - IV] [களம் - 4

திம்மணன் - திம்மையா என்பான். அரசியர் - மற்ற அரசியர். திருமலை சோதரர் - சலாக சகோதரர்.

அங்கம் - V] [களம் - 1

இரத்தினகூடம் - இராம ராயர் புதிய அரண்மனை. மங்கள குலத்தினர். - நாவிதர் (தெலுங்கமொழி); சாசனத்தில் உள்ள சொல் அங்ஙனமே வழங்கப்பட்டது. திம்மன் - 'திம்மோஜன்' என்ற பெயர் பூண்ட ஒரு நாவிதன், இவன் இராம ராயரிடம் நன்கு வினையியற்றி மதிப்புப் பூண்டான். கட்டியங்காரன் - 'சீவக சிந்தாமணி' என்னும் காவியத்தில் 'சச்சந்தன்' என்னும் அரசன் அரசைக்கவர்ந்து அவனைக்கொன்ற அமைச்சன். இவனை எதிர்த்துப் போர் புரிந்து கொன்ற பிறகு சச்சந்தன் மகன் சீவகன் அரசு பெற்றான். கேரள வர்மன் - உன்னி கேரள வர்மன் என்ற சேர அரசன். விசுவநாதர் - மதுரைத் தலைவர். இவரே கிருஷணதேவ ராயர் நாளில் மெய்காவல் பூண்டிருந்தவர். சேவியர் - ஸெயின்ட் ப்ரான்ஸிஸ் ஸேவியர் என்ற பெரும்பெயர்ப் பாதிரியார். இவர் அந்நாளில் திருவாங்கூர் அரசரது நன்மதிப்புக்கு உரியவராய் இருந்தார். இவரைப்பற்றிப் பல தெய்விகச் செய்திகள் சொல்லப்

படுவதும் உண்டு. இயேசுநாதர் இயல்பு - சாந்த ஸ்வரூபம்; அன்புருவம். நெல்லை நகர் - திருநெல்வேலி நகரம். இந்நகர் திருவாங்கூர் அரசரால் விசய நகரத்தார்க்கு அக்காலத்தே கொடுக்கப்பெற்றது; பின்பு அமைதி நிலவியது. உன்னி - குழந்தை மலையாள மொழி; செல்வப்பெயராகி இயற்பெயர் போலவே ஓட்டி வருவது. சாமியார் - சேவியர்.

அங்கம் - V] [களம் - 2

உலகம் உணரா நிலை - அரசர் உலகத்தை அறியா நிலை, உலகம் அரசரை அறியா நிலை என்னுமிரண்டும். பட்கல் - ஒரு சிற்றரசு (Batkal). உள்ளல் - மற்றொரு சிறு நாடு. (Ullal) மங்களபுரம் - மங்களூர் என வழங்கும் நகரம் (Mangalore). அரண் அமைத்தனர் - மங்களபுரத்தில் போர்த்துகேசியர் அமைத்தது. மயிலை - மயிலாப்பூர் (சென்னை) தமது நெறிதரு தருமவாலயம் - கிறிஸ்தவ ஆலயம்.

அங்கம் - V] [களம் - 3

பர்ஹன் நிஜாம்ஷா - நிஜாம்ஷா குலத்தில் அரசராயிருப்பவர். அமீர் பரீத்ஷா - பீடார் (வேதண்ட) நாட்டு அரசுபூண்டிருப்பவர். இபுரகீம் அடில்ஷா - பீஜப்பூர் (விஜயபுரி) அரசராயிருப்பவர். அவரோ - இபுரகீம் அடில்ஷா, அவரை-பரீத்ஷாவை, குடுப்ஷா-கோலகொண்டா அரசர். வீமை - பீமா நதி; அடில்ஷா நாட்டினது. அசாத்கான் - பெரிய சூழ்ச்சி வல்ல அமைச்சரும் வீரரும். தூதரை இழிக்கவும் கொல்லவும் துணிந்தவர் - இபுரகீம் அடில்ஷா. இராய நாயகர் - பெரிய போர் வீரர்க்கு விஜயநகர மன்னர் உதவும் பெரிய பட்டம். அரசர்க்கே உரிய இப்பட்டம் வீரர்க்கும் அன்பின் குறியாக அளிக்கப்படும். சந்திரகுத்தி, பங்களூர்-இவை சதாசிவர்க்கு வந்தன. கோடி கோலாகலன் - இக்கேரிச் சதாசிவர் பெற்ற மற்றொரு பட்டம். இராமராயர் இப்பட்டம் தந்தார்.

அங்கம் - V] [களம் - 4

ஆலி அடில்ஷா-இபுரகீம் அடில்ஷா மைந்தர், இபுரகீம் குடுப்ஷா - கோல கொண்ட நாடு ஆளும் பொறுப்புளார். ஹுஸேன் நிஜாம் ஷா - பர்ஹன் நிஜாம் ஷாவின் மைந்தர். முஸ்தபா கான் - முஸல்மான் படைத்தலைவரும் அமைச்சரும். எந்தை - ஆலி அடில்ஷா இராமராயரைச் சரண் புகுந்து நலம் பெற்றதால் அவரை எந்தையே என்று அழைக்கிறான். பிறர் தன்னை வளைத்துக்கொண்ட தொல்லையைப் போக்கினால் இராய்சீரும் முட்க

லும் விசயநகர்க்குத் தருவதாக இவன் வாக்களித்திருந்தான். அமுத நகரம் - நிஜாம்ஷாவுக்குரியது. பைத்தான் - பிரதிஷ்டான புரி (Paithan). பகைவர் பக்கத்துணை - ஒருபக்கம் வருவதாய் உரைத்து மற்றொரு பக்கத்துக்கும் தம்மால் இயன்ற உதவி செய்பவர். இபுராஹிம் குடுப்ஷா இராம ராயர் பக்கம் சேர்வதாகச் சொல்லி அங்ஙனமே வெளிப்படையிற் படையோடு வந்து சேர்ந்திருந்தும் மறைவாக நிஜாம்ஷாவுக்குப் பல வகை உதவிகளும் செய்தார். தொழுதற்குரிய தூய்மைப் பள்ளி - முசல்மான்கள் பள்ளி வாசல். மற்றவை - வணங்குதல் முதலிய சிறுமைச் செயல்கள். யாமும் எம்மரசரும் - இராமராயரும் அவர் அரசராக வைத்துச் சிறையிட்டிருக்கும் சதாசிவராயரும். இராமராய சகோதரர் சதாசிவ ராயரை வருடம் ஒரு முறை சிறையிலே கண்டு வணங்கி வருவது வழக்கம் என்று சரித்திரகாரர் கூறுவர்.

அங்கம் - V] [களம் - 5

நண்பர் - இங்கு அயலரசர். ஒருவன் - அல்லா. ஒரு குடி - முசல்மான்கள். எல்லாம் உடையேம் - ஒரு குடி, ஒரு மனம், ஒரு மதம் ஆகிய எல்லாமுடையேம். உலகம் இகழினும் - ஆலி அடில்ஷா இராமராயரிடம் பெற்ற பேருதவியை மறந்து சூழ்ச்சி செய்வதால் அவர் வாய்ப்படவே இச்சொல் அமைக்கப் பெற்றுளது. ஒருவனை நம்பார் - அல்லாவை நம்பாத அன்னியர் எல்லாரும். இங்கு இத்தொடர் இந்துக்களைக் குறிக்கிறது. சோழபுரம் - ஷோலாப்பூர் (Sholapur).

அங்கம் - V] [களம் - 6

பெரியார் - இகழ்ச்சிக் குறிப்பு. இனயத்துல்லா - மௌலானா இனயத்துல்லா. இவர் அமைச்சரும் படைத்தலைவரும் ஆவர். நிஜாம்ஷா படையைத் தலைக்கோட்டைப் போரில் நடத்தினர் இவரே. முஸ்தபா கான் - இவர் சூழ்ச்சித்திறம் மிக்க அமைச்சரும் படைத் தலைவரும் ஆவர். கோல கொண்டப் படையைத் தலைக்கோட்டைப் போரில் நடத்தினவர் இவரே. கிஷ்வர் கான் - அடில்ஷாவின் அமைச்சரும் படைத் தலைவரும் ஆவர். முசல்மான் அரசர் ஒன்றுசேரும் வழியைத் தேடிவைத்த திறமை பூண்ட சூழ்ச்சியாளர் இவரே. இம்மூவரும் சரித்திரகாரராற் பாராட்டப்பெற்ற வீரரே. நந்தாய் - இராம ராயர் தாயார். இப்பொழுது இராம ராயர் எண்பது வயது உள்ளவர்; தாயார் உயிரோடிருக்கும் பாக்கியத்தை இவ்வயதிலே பெற்றவர். நெடுங்கனா - இராமராயர் போர்க்களம் புகுந்த முதல் நாள் கண்ட கனா. அக்கனா அவர்க்கு அழிவே வரும் என்பதை விளக்கியது: தாயாரும் தடுத்தார். சகு

னம் மாறுய் வந்தது - போர்க்குப் புறப்படும்போது இராமராய ருக்கு நல்ல சகுனம் ஏற்படவில்லை. அவர் இதைப் பொருட்படுத் தாது போர்க்கு வந்தார். குண்டு கக்கும் கொடும்படைப் பாண் டில் - பீரங்கி வண்டி. சலாபி ரூமிகான் - இவன் வெளி நாட்டான். இளையீர் - நீர் வயதால் இளையவர். இளைத்தீர் - மனம் தளர்ந்தீர். அவர் படை எலிப்படை; அரவம் நமது - இது கம்பர் கருத்து. இருவர் பகைப்படை கலந்தார் - இராமராயரைக் காத்திருந்த இரு படைத்தலைவர் தத்தம் படைகளோடு ஆபத்தான சமயத்தில் பகை வர் பக்கம் சேர்ந்தனர். இச்செய்தி சரித்திரம் வல்லார் பலரால் இந்நாளில் உரைக்கப்படுகிறது. இங்ஙனம் சென்ற இருவரும் பல் லாண்டாக இராம ராயர் படையிற் சேவகம் பூண்டிருந்தவர் என வும் உரைக்கப்படுகிறது. போர்க்களங்களில் இது வழக்கமே என்பது சுராஜ்உத் தௌலா காலத்திலும் கண்டதே.

அங்கம் - V] [களம் - 7

இளையவர் - திருமலை ராயரும் வேங்கடாத்திரியும். இவர்கள் போர் அறிந்ததும் நகர்க்குள் வந்து செல்வம் எல்லாம் திருவேங்கட மலையிற் சேர்த்துவிட்டார்கள். பலபல பேசுதல் - பிறர் கேட்க வேதாந்த விசாரம் பேசுதல். அப்பயிற்சி தமக்குத் துயர் வரும் போது சிறிதும் பயன்படாமை இங்கு விளக்கப்பட்டது. குழந்தை - ஐந்து வயதுக் குழந்தை பெற்றோரையும் உற்றோரையும் இழந்து விழுந்து மரணம் அடைகின்றது. 'அழகு' என்னும் சொல் துயரக் குறிப்பு விளக்குவது காண்க.

# அரும்பதம் முதலியவற்றின் அகராதி


அ

அகரம்-அக்கிரகாரம், 97
அங்கியம்படை-பீரங்கிப்படை, [187
அச்சுவம்-குதிரை, 31
அசகாய சூரர்-துணை வேண்டாத வீரர், 11
அசுவம்-குதிரை, 33
அசைவுற-வருந்த, 174
அஞ்சலை-பயப்படாதே, 16
அட்டதிக்கயங்கள்-எட்டுத் திக்கிலும் நின்று உலகைக்காக்கும் யானைகள், 85
அடர்க்க - போர் செய்து ஒழிக்க, 144
அடுபடை - பகைவரைக் கொல்லும் சைனியம், 184
அண்மை - சமீபம், 48
அடைவே - முறையே, 129
அதிபர் - தலைவர், 27
அந்தக - எமனே, 125
அந்தப்புரம் - பெண்டிர் இருக்குமிடம் (Zenana), 48
அம்பலத்தாடிய அமலன் - நடராஜன், 75
அமர் - போர், 33, 58
அமர்க்களம் - யுத்த பூமி, 62
அமரகம் - போர்க்களம், 26
அமரர் - தேவர், 134
அமருலகு - சுவர்க்கம், 39, 35
அமலன் - கடவுள், 31
அமலை - இலக்குமி, 142
அமைவு - பொறுமை, 68; பொருத்தம், 75
அமைவுடைத்து - பொருத்தமுடையது, 2
அயபதி - அசுவ பதி, 147
அயர்த்திர் - மறந்தீர், 14
அயன் - பிரமன்; 48
அரங்க பட்டினம் - ஸ்ரீரங்க பட்டினம், 21
அரங்கம் - ஸ்ரீரங்கம், 20
அரங்கம் ஏற்றுக - சபையில் வெளியிடுக, 141
அரசிலை - அரசில், 13
அரண் - கோட்டை, 45, 46
அரதனம் - இரத்தினம், 95
அரவணைப் பள்ளி கொள் அமலன் - பாம்பாகியபடுக்கையைக் கொண்ட அரங்கநாதன், 45
அரனார் - சிவபெருமான், 8
அரி - திருமால், 22
அரி கதா சாரம் - ஒரு பெருங் காவியம், 91
அரியணை - சிங்காதனம், 3, 127
அரியரர் - விசய நகர அரசு நாட்டிய சகோதரரில் ஒருவர், 9
அரியார் - திருமால், 8
அரியிலச்சினை - இராம நாமம் எழுதிய முத்திரை, 22
அருகதை - தகுதி, 57
அருகுக - சுருங்குக, 8
அருங்கடி - அரிய காவல் உள்ளது, 171
அருமந்த - அருமருந்து அன்ன (மரூஉ மொழி), 136
அருள் - கிருபை, 48
அல் - இரவு, 11
அல்லல் - துன்பம், 60
அலர்மேல் மங்கை - திருமகள், 72
அவனி - பூமி, 3, 155
அவனி மகள் - பூமி தேவி, 117
அளவளாய் - கலந்து, 11
அளவை - சமயம், 78
அற - முற்றும், 15
அறவீடு - இராம ராயர் குலம், [181
அறிவறை போகிய - அறிவை இழந்த, 125
அனுதாபம் - இரக்கம், 191

ஆ

ஆக்கம் - வாழ்வு, 122
ஆகரம் - இடம், 2, 3

ஆசி - வாழ்த்து, 94
ஆசிமொழி - வாழ்த்துரை, 157
ஆசில் - குற்றம் இல்லாத, 53
ஆட்டுதற்கு - நீராட்டுதற்கு, 1
ஆடகம் குளித்தல் - கனகாபி டேகம், 92
ஆடகவாடை - பீதாம்பரம், 4
ஆடவர் - புருஷர், 30
ஆண்டையார் - அங்குளார், 97
ஆணை - கட்டளை, 2,16,30
ஆததாயி - மகா பாதகம் செய்தவன், 120
ஆதனம் - இருக்கை, 39
ஆந்திர கவிதா பிதா மகன்-ஒரு பட்டப் பெயர், 91
ஆந்திரம் - தெலுங்கு, 47
ஆப்பு - பூமியிலறையும் மரத் துண்டு, 78
ஆமுக்த மால்யதா - சூடிக்கொடுத்தாள் வரலாறு, 87, 97
ஆய்தல் - ஆராய்தல், 67
ஆரியம் - சம்ஸ்கிருதம், 52, 109
ஆரியர் - அந்தணர், 2
ஆவத்து - ஆபத்து, 63
ஆவி - உயிர். 14
ஆற்றல் - வல்லமை, 48
ஆனந்த நிதி - ஒரு பெருந் தானம், 143

இ

இக்கேரி - ஒரு நாடு, 45
இசை - கீர்த்தி 3; சங்கீதம், 4
இடைந்தவர் - பின் வாங்கியவர் 4, 75
இந்திர குரு - பிரகஸ்பதி, 7
இம்மை - இப்பிறப்பு, 182, 183
இமயக்கோடு - இமயமலை, 3
இமையவருலகம் - தேவருலகு, 134
இயக்குதல் - நடத்துதல், 184
இயம்புதி - சொல்லுவாய், 12
இயற்றிய - இயற்ற, 63
இரணியம் - பொன், 94
இரத்தின தேனு - ஒரு வகைத் தானம், 95
இரவலர் - யாசகர், 57
இராசக் கிரீடை - கண்ணனது தத்துவம் விளக்கிய திருவிளை பாடல், 142 [12
இராசமாதேவி - பட்ட மகிஷி,
இரிந்தது - ஓடியது, 107
இருத்த - இருக்கச்செய்ய, 166
இருந்தலை - பெருந்தலை, 189
இருநகர் - பெரிய நகரம், 24
இருநிலம் - பெரிய பூமி, 77
இரும்படை - பெரும்படை, 78
இலங்க - விளங்க, 50
இலச்சினை - முத்திரை, 22
இலாங்கூலியம் - சிம்மாத்திரிக் கருகிலோடும் ஆறு, 82
இவ்வுழி - இவ்விடம், 48, 168
இவண் - இவ்விடம், 8, 11
இவருதல் - ஏறுதல், 187
இழவு - நஷ்டம், 153
இளவல் - தம்பி, 80, 150
இறப்பு - இறந்த காலம், 26
இறுத்த - உடைத்த, 43
இறை - வரி, 25, 89; அரசன், 31; கடவுள், 6, 9; தலைவன் 11 [16
இறைஞ்சுவல் - வணங்குவேன்,
இறைமகன் - அரசன், 5, 28
இறைமை - தலைமை, 6, 129
இன்னே - இப்பொழுதே, 59
இனைந்திடும் - வருந்தும், 11
இனைந்து - வருந்தி, 56

ஈ

ஈட்டா - சம்பாதியாத, 8, 103
ஈண்டிய - கூடிய, 58
ஈத்து - கொடுத்து, 172

உ

உகம் - யுகம், 11
உகவேன் - விரும்பேன், 13
உஞற்றுவம் - செய்வோம், 66
உடற்றல் - போர் செய்தல், 107
உடு - நட்சத்திரம், 49
உடைந்தேம் - தோற்றேம், 181
உய்க்கும் - செலுத்தும், 189

உயர் புலவர் - திருவள்ளுவர், 13
உரனிடை - மார்பில், 61
உரனுதவும் செல்வி - மகா சக்தி, 9
உருத்திரன் - சிவன், 19
உழப்பு - முயற்சி, 8
உழவாது - முயலாமல், 8
உளன் - மனம், 164
உறுகடன் - பெருங்கடமை, 188
உறுதி - நன்மை, 8
உறுவன - பொருந்துவன, 16
உறையுள் - இருப்பிடம், 9

ஊ

ஊக்கி - உற்சாகப்படுத்தி, 37
ஊதியம் - பயன், 121
ஊழி - யுகம், 1

எ

எங்கை - என் தங்கை, 183
எங்கோ - எம்மரசன், 1
எஞ்சி - மிகுந்து, 32
எதிர்வு - எதிர் காலம், 26
எந்தையார் - என் தந்தையார், 6
எமர் - என் காதலர், 12
எய்யார் - அறியார், 23
எய்யீர் - அறியீர், 17
எய்யேன் - அறியேன், 90
எழில் - அழகு, 39

ஏ

ஏத்துதும் - துதிப்போம், 48
ஏந்தல் - அரசன், 44
ஏழையர் - அறிவிலார், 107
ஏற்றம் - உயர்வு, 6

ஐ

ஐம்பொற்சிலை - பஞ்சலோகங் களாற்செய்த சிலை, 96
ஐவர் - பஞ்ச பாண்டவர், 18

ஒ

ஒரியார் - ஒட்டிரர், 26, 65
ஒருமையும் - ஒரு காலமும், 147
ஒளிர்தர - விளங்க, 62
ஒற்ற - ஒற்றுப் பார்க்க, 70
ஒறுத்த - தண்டித்த, 123
ஒன்றிய - பொருந்திய, 13

ஓ

ஓதுதிர் - சொல்லுமின், 59, 77
ஓருமின் - ஆராயுங்கள், 70
ஓவியம் - சித்திரம், 60

க

கசடர் - கீழ் மக்கள், 134
கட்கம் - கத்தி, 186
கட்டியங்காரன் - சச்சந்தனின் துன்மந்திரி, 164
கடகம் - ஒரு நகரம் (Cuttack) 65; கங்கணம், 96
கடலிடைப் பிறந்த கன்னி - இலக்குமி, 18
கடன் - கடமை, 41
கடி - காவல், 171
கதித்த - எழுந்த, 79
கதிர் - கிரணம், 26
கதிரவன் - சூரியன், 89
கதை - பொய்ம்மொழி, 79
கயம் - யானை, 147
கயற்கணி - மீனாட்சி, 97
கரந்தனன் - மறைந்தனன், 62
கரப்பது - ஒளிப்பது, 82
கரிகள் - யானைகள், 46
கருட - போர் முழக்கம், 188
கருணை வள்ளல் - கடவுள், 75
கருநடம் - கன்னட பாஷை, 52
கலங்கரை விளக்கம் - தீபஸ்தம்பம் (Light-house), 11
கலம் - கப்பல், 8, 9
கலாம் - கலகம், 135
கலிமா - குதிரை, 31
கலினமா - குதிரை, 171
கலுழ்ந்த - அழுத, 78
கலுழ - அழ, 89
கலையுருச் செல்வி - கலைமகள், 9
கவல் - துன்பம், 172
கவல் செயல் - வருந்துகின்ற செய்கை, 60
கவறு - சூது, 77
கவின் - அழகு, 51

கவின்ற - அழகு பெற்ற, 42, [12
கழப்பு - சோம்பல், 8
கழல் - திருவடி, 6, 81
கழறுதல் - சொல்லுதல், 15
கழை - மூங்கில், 115
களர் - சேற்று நிலம், 37
களவு - களவொழுக்கம் (the secret intercourse of lovers),
களிறு - ஆண் யானை, 58
கற்ப காலம் - பிரமனுயுள், 108
கன்னிப்போர் - முதற்போர், 36
கனகம் - பொன், 92
கனலி - நெருப்பு, 78, 106

கா

காதகர் - கொலையாளர், 121
காதற்கிழத்தியர் - ஆசைக்குரிய பெண்டிர், 13
காமப்பரத்தையர் - இச்சைக் குரிய வேசியர், 13
கார்த்திறம் - மேக வல்லமை, 57
கால் - வண்டி, 7, 9
காவலன் - அரசன், 24
காளை - குமாரன், 13

கி

கிழமை - உரிமை, 146

கு

குட கடல் - மேற்கடல், 32
குட திசை - மேற்கு, 20
குடில் - குடிசை, 49
குண்டுகள் வீசும் கொடும் படை - பழைய பீரங்கி வகைகள், 106
குண கடல் - கீழ்க்கடல், 32
குண திசை - கிழக்கு, 20
குப்பை - குவியல், 9
குமரி - கன்னியாகுமரி நதி, 3
குயிற்றிய - பதித்த, 72
குரிசில் - பெருமையிற் சிறந்தோன், 57, 84
குருவரர் - ஆசாரியர், 6
குலம் தந்த பெருந்தனம் - அருமந்த மகள், 84
குலவுதல் - விளங்குதல், 8
குவை - குவியல், 91
குழவி - குழந்தை, 125
குழவியர் - குழந்தைகள், 30
குழிவாய்ப்படை - பீரங்கி, 187
குழு - கூட்டம், 24
குழுமினர் - கூடினர், 5

செ

செழுபுனல் - நிறைந்த நீர், 3

கே

கேசவன் - திருமால், 25
கேட்டி - கேட்பாயாக, 13
கேள்வன் - கணவன். 27

கை

கையறவு - நஷ்டம், 8
கையுறை - கைப்பொருள், 115

கொ

கொட்டம் - வலிமை, 135
கொடை - தருமம், 83
கொள் கொம்பு - படர் கொடி பற்றுக்கோடாகக்கொள்ளும் கொம்பு, 11

கோ

கோகனம் - திருக்கோகர்ணம் என்னும் ஸ்தலம், 97
கோட்டகம் - மலையிடம், 70
கோட்டம் - தீய குணம், 171
கோடி - புதுத்துணி, 103
கோதிலா - குற்றமில்லாத, 172
கோது - குற்றம், 87, 172
கோதை - ஆண்டாள், 18
கோமகன் - அரசன், 9 [16
கோமளவல்லி - அழகுக்கொடி,
கோமுறை - அரச நீதி, 20
கோல்-செங்கோல், 166, [160
கோலம் - அழகு, 75; வேஷம்,
கோவை - கோவா (Goa), 8, 28
கோழைகள் - திரம் இல்லாதவர்கள், 107
கோளரி - சிங்கம், 118
கோறல் - கொல்லுதல், 174

ச

சங்கம மரபு - விசய நகர முதல் அரச வமிசம், 5
சங்கர குருவரர் - சங்கராசாரியார், 2
சத்த சாகர தானம்-ஒரு வகைத் தானம், 95
சத மடங்கு - நூறு பங்கு, 5
சதிச்செயல் - கொலைக்கொடுஞ் செயல், 136
சந்து பேசுதல் - சமாதானம் பேசுதல், 184
சம்பு நடை - உரையும் செய்யுளும் கலந்த நடை, 141
சமர் - போர், 29
சமரவினை-போர்த்தொழில், 165
சருவ சம்மதம் - எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது, 162
சல்லியம் - முள், பகை, 133

சா

சாகரம் - கடல், 90
சாசனம் - தானப்பத்திரிகை, 57
சாளுவ மரபு-விசய நகர இரண்டாம் அரச பரம்பரை, 6

சி

சிங்க சயிலம் - சிம்மாசலம், 81
சிருங்க கிரி - மைசூரிலுள்ள சங்கர மடத்துக் குரு பீடம், 2
சிவிகை - பல்லக்கு, 186
சிற்பம் - சிலையுரு, 60
சிறார் - சிறுவர், 13

சு

சுடுபடை - பீரங்கி, 184 [71
சுதன்மை - இந்திரன் மண்டபம்,
சுவணம் - பொன், 164 [143
சுவண மேரு - ஒரு மகாதானம்,

சூ

சூக்தி நைபுணி ஞான சிந்தாமணி - ஒரு நூல், 87
சூழ்ச்சி - தந்திரம், 18
சூளுரை - சபதம், 28

செ

செகுக்கவும் - அழிக்கவும், 181
செடியிடைக் கிடந்த சிறுமி - ஆண்டாள், 18
செந்நீர்-இரத்தம், 38, 39, 181
செந்நெறி-ஒழுங்கான வழி, 180
செப்புவ - சொல்வனவற்றை, 3
செம்மல் - சிறப்புடையோன், 4
செம்மலர்ச்செல்வி-இலக்குமி, 9
செம்மலர்த்திரு - இலக்குமி, 20
செய் - நன்செய் நிலம், 97
செலவு - போக்கு வரவு, 56
செவ்வி - தன்மை, 13
செவ்விய - சிறந்த, 155

சே

சேடன் - ஆதிசேஷன், 19
சேது - இராமேச்சுரம், 172
சேய் - பிள்ளை, 109
சேய்மை - தூரம், 48
சேரிப் பரத்தையர் - நகர்ப்புறத்துள்ள தாசிகள், 13

சொ

சொல்லிய - சொல்ல, 116
சொற்றார் - சொன்னார், 38
சொன்னம் - பொன், 33

ஞா

ஞாட்பு - போர், 23, 26, 44
ஞாதியர் - தாயாதியரும் பிறரும், 23
ஞாயிறு - சூரியன், 49
ஞாலம் - பூமி, 57
ஞான்று - நாள், 143

த

தகர்த்தனர் -இடித்தனர், 179
தகவே -கிரமப்படியே, 31, 173
தகையுற - அழகு பொருந்த, 10
தம்பதிகள் - மணமக்கள், 100
தமனியம் - தங்கம், 24
தமிழ் மறை - நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 140
தராபதி - அரசன், 2, 12

தழங்குக - ஒலிக்க, 60
தழைக்க - ஓங்க, 50
தளபதி - சேனைபதி, 23
தளி - கோவில், 67
தனம் - செல்வம், 84
தனயன் - மகன், 8
தனித்துணை - ஒப்பற்ற உதவி, 8
தனி மறை - ஆரிய வேதம், 140
தனு - வில், 43

தா

தாள் - பாதம், 74

தி

திங்கள் - மாதம், 117
திசாமுகம் - திக்குப் பக்கம், 35
திண்ணம் - உண்மை, 177
திண்மை - உறுதி, 36
திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் - சிவபெருமான், 9
திரு - செல்வம், 7, 9
திருச்சிற்றம்பலம் - பொற்சபை, 97
திருத்தளி - ஆலயம், 52
திருமகள் - இலக்குமி, 42
திருமலை - திருப்பதி, 64
திருமுகம் - நிருபம், ஓலை, 2
திருவடியரசு - திருவாங்கூர் ராஜ்யம், 14, 144
திறை - கப்பம், 9

தீ

தீபாராதனை - விளக்காற் செய்யும் பூசை விசேடம், 10
தீர்த்தம் - நன்னீர், 3

து

துச்சில் - உரிமையில்லாது புகுந்துள்ள இடம், 164
துய்க்கும் - அனுபவிக்கும், 12
துருவினும் - தேடினாலும், 178
துருவுவது - தேடுவது, 157
துலாபுருட தானம் - ஒரு வகைத் தானம், 97
துலையிடை - தராசில், 95
துளக்கற - கலக்கமற, 58
துறப்பல் - நீக்குவேன், 15

தூ

தூங்கும் - தொங்கும், 96
தூணம் - தூண், 57, 84

தெ

தெள்ளிதின் - தெளிவாக, 187
தெள்ளியோர் - அறிஞர், 53
தென்புலம் - தென்னாடு, 73; யமலோகம், 79
தென்றிசையுலகு - யமபுரம், 7
தென்னவர் - பாண்டியர், 1

தே

தேசுறு முடி - ஒளி பொருந்திய கிரீடம், 4
தேவதாயம் - தேவாலயத்துக்கு விடப்பட்ட பூமி, 51, 64

தொ

தொகுதி - கூட்டம், 125
தொடையல் - மாலை, 88

தோ

தோன்றல் - பெருமையிற் சிறந்தவன், 57

ந

நச்சினார்க்கினியன் - விரும்பியவர்க்கு இனியவன், 21
நஞ்சு - விஷம், 6
நமர் - நம்மவர், 66, 189
நயப்பாராயின் - விரும்புவாராைல், 15
நயம்-அழகு, 74; விருப்பம், 77
நரபதி - அரசன், 2, 15
நராதிபர் சிகாமணி - அரசர் தலைவர், 43
நரோத்தமர் - மனிதருட் சிறந்தவர், 164
நல்க - கொடுக்க, 41
நவ நிசி - நவராத்திரி, 94, 149
நவிலுதல் - சொல்லுதல், 3
நளிர் கடல் - பெருங்கடல், 3
நன்கனம் - நன்ருக, 28
நன்னர் - நன்ருக, 14, 164

நா

நாடுதும் - ஆராய்வோம், 32
நாமகள் - சரசுவதி, 52
நால்வடக் கோவை - தொங்கும் வடங்களையுடைய மாலை, 95
நாவலம்பொன் - 'சாம்பூநதம்' என்னும் தங்கம், 9, 51
நாவளம்-வாக்கு வன்மை, 36
நான்மறை மாக்கோவை - வேதம், 88
நான்முகப் பகவன் - பிரமன், 9
நான்முகன் தந்தை - திருமால், [20

நி

நிணம் - கொழுப்பு, 27
நிதியறை - நவமணியறை, 126, 131
நிருபர் - அரசர், 11, 44
நிலவுக - ஒளி விடுக, 4
நிவேதனம் - நைவேத்தியம், 96
நிறுவிய-நிலைபெறச்செய்த, 142
நின்றிடம் - நின்ற இடம் 124

நு

நுந்தை - உன் தந்தை, 42
நுந்நலம் - உமது நன்மை, 15
நுவன்று - சொல்லி, 32

நெ

நெடியோன் - திருமால், 5
நெருப்பிடைத்தோன்றிமிர்ந்த அணங்கு - திரௌபதி, 18
நெல்லை-திருநெல்வேலி, 97,165
நெறி - வழி, 45, 62

நே

நேடி - தேடி, 174
நேயர் - அன்பர், 11

ப

பக்கல் - பக்கம், 16, 110 [8,57
பகைப்புலம் - பகைவர் நாடு,
பசுமணி - மரகதம், 96
படர்தல் - செல்லுதல், 78, 172
படவீடு - துணிக் கூடாரம் (Tent), 78
படனம் - படித்தலும் பிரசங்கித்தலும், 24
படுத்தனர் - கொன்றார், 102
படை - சேனை, 8
படைஞர் - வீரர், 37 [108
பதாதியர் - காலாட்படைகள்,
பம்பிய - பரவிய, 171
பயோததி - (பயஸ்+உததி) பாற்கடல், 142
பரகதி - மோட்சம், 176 [8
பரங்கியர் - போர்த்துகேசியர்,
பரம்பொருள் - கடவுள், 8
பரமன் - கடவுள், 142
பரவர் - செம்படவர், 172
பரிசற - நன்றி கெட, 188
பரிணயம் - திருமணம், 141
பரித்த - தாங்கிய, 37
பரிப்பர் - சுமப்பர், 11
பரிமா - குதிரை, 8, 31
பரை - பார்வதி, 97
பழமது - புளித்த கள், 134
பழிச்சி - புகழ்ந்து, 45
பளகறும் - (பளகு + அறும்) குற்றமற்ற, 25

பா

பாகவதம் - கண்ணன் கதை,
பாங்கி - தோழி, 50 [142
பாண்டில் - வண்டி, 186
பாதிரியார்-கிறித்தவ சாமியார்,
பார்த்திவர் - அரசர், 73, [31
பாரகம் - பூமி, 5
பால சோகம் - குழந்தையை இழந்த துயர், 122
பாலனம் - காத்தல், 57
பாற்கடல்ரவப் பாயல் கொள் பரமன் - திருமால், 9
பாற்பட - வகைப்பட, 53
பான்மை - தன்மை, 53

பி

பிடர் - கழுத்து, 188
பிரணவப் பொருளாப் பிறங்கிய மூர்த்தி - விநாயகக் கடவுள், 9

பிரபன்ன அமுதம் - அடியவர் வரலாறாகிய அமுதம், 22
பிரம தாயம் - பிராமணர்க்கு விடப்பட்ட நிலம், 54
பிரான் - தலைவன், 9
பிழம்பு - தொகுதி, 45
பிறக்கம் - விளக்கம், 23
பிறங்குதல் - விளங்குதல், 9
பிறழ்வரே - மாறுபடுவரோ, 133
பின்னை - இலக்குமி, 22 [26
பின்னை காதலன் - கிருஷ்ணன்,

## பீ

பீடு சால்-பெருமை மிகுந்த, 26
பீழை - துன்பம், 69, 101

## பு

புக்கர் - விஜயநகர அரசு நாட்டிய இரு சகோதரரில் ஒருவர், 9
புகுந்தது - நேரிட்டது, 67
புடவி - பூமி, 5
புடைக்கும் - பூரிக்கும், 66
புதுநூலகப்பொருள் - புதுநூலிலுள்ள பொருள், 86
புதைய - மறைய, 97
புரக்கும் - காக்கும், 5
புரக்கென - காக்க என்று, 5
புரவலர் - அரசர், 9 [54
புரவுப் பணி-காக்கும் தொழில்,
புரிவு - விருப்பம், 89
புல்லியர் - அற்பர், 132
புல்லியோன் - இழிந்தவன், 114
புலம் பெயர் மாக்கள் - அயல் நாட்டார்கள், 9
புலமை - அறிவு, 53 [85
புலவர் புனைந்த மலர் - கவிதை,
புறக்கொடை - தோல்வி, 69
புறந்தர - தோல்வியடைய, 67
புறம் - முதுகு, 20
புன்மை - இழிவு, 33
புனல் - நீர், 1

## பூ

பூட்சி - கடப்பாடு, 5
பூபதி - அரசன், 3 [154
பூவணை - பூ நிறைந்த ஆதனம்,
பூவை - பெண்ணணங்கு, 63
பூழி - புழுதி, 78

## பெ

பெட்பொடு - விருப்போடு, 40
பெருந்தகை - பெருந்தன்மை உடையவன், 1
பெருமிதம் - களிப்பு, 60; கர்வம், 184

## பே

பேணாது - பாதுகாவாமல், 8
பேதுற்றிடுவேன் - வருந்துவேன், 100
பேழை - பெட்டி, 82, 141
பேறு - செல்வம், 12, 100

## பை

பைந்தமிழ்ப் பின் செலும் பச்சைக்கொண்டல் - திருமால், 140
பையல் - இழிவுக்குறிப்பு, 134
பையுள் - துன்பம், 24

## பொ

பொதிந்திட - மறைத்துவைக்க,
பொதிந்து - முடிந்து,109 [183
பொது மகள் - தாசி, 17
பொதுளிய - செறிந்த, 87 [166
பொருந்துவது - ஒழுங்காவது,
பொருநர் - போர் வீரர், 22
பொருநை - தாமிரவருணிநதி, 1
பொருபடை - போர் செய்யும் சேனை, 29
பொரும - வருந்த, 17
பொருவிலர் - சமானமில்லாதவர், 39
பொருவுவன் - ஒத்திருப்பன், 44
பொலிக - விளங்குக, 4
பொற்பு - அழகு, 4
பொறை - சுமை, 489

பொன் மணிக்கலம் - மாணிக்க மழுத்திய பொற்கலம், 134
பொன்ற - இறக்க, 37
பொன்னுடு - தேவருலகம், 90
பொன்னி - காவிரி நதி, 1,140
பொன்னே - இலக்குமி போன்ற வளே, 17

போ

போகேல் - போகாதே, 157
போதி - போவாயாக, 109
போதும் - போவோம், 44, 137

ம

மகப்பேறு - புத்திரச்செல்வம்
மகபதி - இந்திரன், 84 [13
மகவெனுஞ் செல்வம் - புத்திரப் பேறு, 13 [நதி, 65
மகாநதி-கஜபதி நாட்டிற்பாயும்
மகார் - மக்கள், 6, 83, 121
மகிதலம் - பூமி, 90, 143
மகிபதி - அரசன், 162
மகீசுர புரி - மைசூர், 54
மகீதரம் - மலை, 54 [163
மங்கள குலத்தினர் - நாவிதர்,
மண் மகள் - பூமி தேவி, 3, 30
மண்ணுட்பிறந்த மங்கை-சீதை,
மணந்தனை - கலந்தாய், 10 [18
மதலை - குழந்தை, 6, 119
மதாணி - மார்பிலணியும் பதக்கம், 96
மதி - மாதம், 11, புத்தி, 11
மது - கள், 134
மந்தண நிலயம் - இரகசிய ஆலோசனை சபை, 67
மயலுகின்றனை - மயங்குகின்ருய், 13
மயிற்பரி உகைக்கும் வள்ளற் குருவரன் - முருகப்பிரான், 9
மரகதம் - பச்சைக்கல், 95
மரபு - குலம், 3, 55
மரு - தவனம், பச்சிலை, 11
மருகன் - மருமகன், 62
மருங்கு - பக்கம், 86,
மருட்கை - மயக்கம், 143
மருத்துவர் - வைத்தியர், 119
மலையிடைப் பிறந்த மங்கை - பார்வதி, 18
மறக்குணம்-வீரத்தன்மை, 183
மறம் - பாவம், 59 ; கொலை 108; கோபம், 159
மறவர் - வீரர், 5, 63
மறுகி - வருந்தி, 57, 177
மறுகுகின்றனர் - வருந்துகின்றனர், 67
மறுவலும்-மறுபடியும், 65, 185
மறை - இரகசியம், 11, 12, 15; வேதம் 39
மறை மொழி - இர்கசிய வார்த்தை, 67
மன் - அரசன், 12
மன்னிய - நிலை பெற்ற, 4
மனுச்சரித்திரம், 91

மா

மாசு - குற்றம், 138
மாண் - மாட்சிமைப்பட்ட, 11
மாதுலன் - மாமன், 67, 135
மாவாழுரத்தினன்-ஸ்ரீநிவாசன், திருவாழ் மார்பன், 64
மாந்தர் - மனிதர், 36, 63
மாந்தரு - மாமரம், 10
மாலிகை - மாலை, 51
மாழ்குவனே - மயங்குவனே, 11
மாற்றலர் - பகைவர், 154
மாற்ருர் - பகைவர், 181
மானவர் - மனு மரபினர், 91
மானுபரணர் - மானத்தையே அணியாக உடையவர், 133

மி

மிக்கது - உயர்ந்தது, 2
மிகை - மிகுதி, 78
மிகை செய்வார் - பாவியர், 162
மிடல் - வலிமை, 32, 61

மு

முக்கணன் - சிவபெருமான், 131
முகந்துளன் - அளந்து தந்துள்ளேன், 146

முகமன் - முன்னின்று புகழும் மொழி, 165
முகில் - மேகம், 3
முகை - மலரும் பருவத்துள்ள அரும்பு, 10
முடிசூட்டு-மகுடாபிஷேகம், 2
முந்தை - முன்பு, 42, 112
மும்மடி - மூன்று பங்கு, 146
அரண் - வலிமை, 111
முள்ளணை - முட்படுக்கை, 154
முன்னவர் - தமையனார் (வீர நரசிம்மர்), 6

மூ

மூதறிவாளர் - பேரறிவுடையவர், 56
மூர்க்கர் - ஒழுங்கில்லாத அதிகாரிகள், 89

மெ

மெய் - உடல், 39

மே

மேதக - மேன்மையாக, 9
மேதகு - மேன்மையுள்ள, 162
மேதினி - பூமி, 8, 90
மேதையர் - அறிஞர், 95
மேவலம் - பொருந்தோம், 62

மோ

மோகரா - தங்க நாணயம், 72, 95

ய

யமுனைத் துறைவர் - வைணவ ஆசாரியர் (ஆளவந்தார்), 89

வ

வகுக்கப்பெற்றன - செய்யப் பெற்றன, 96
வங்கம் - கப்பல், 7
வடுகு - தெலுங்கு, 5
வணக்கிய-வணங்கச் செய்ய, 61
வணிகம் - வியாபாரம், 7
வதிதர - வாழ, 98
வம்பு - பொது மக்கள் பேசும் புதுமொழி (Rumour), 153
வம்மின் - வாருங்கள், 17
வரன்முறை - வழக்கப்படி, 155; வரலாற்று முறை, 158
வருதும் - வருவோம், 137
வருமா - வருவதுபோல, 58
வருவ - வருபவை, 19
வரை-மலை, 56,61; அளவு, 125
வழங்குதி - சொல்லுக, 12
வழாது - தவறாமல், 47
வழு - குற்றம், 184
வழுத்தி - துதித்து, 48
வழுதி - பாண்டியன், 53
வள்ளல் - வரையாது கொடுப்பவன், 57
வளர்தல் - பள்ளி கொள்ளுதல், [20
வளர்வன் - பள்ளி கொள்ளுவன், 21
வளர்வுறீஇ - வளர்ச்சி அடைந்து, 9
வற்சரம் - வருடம், 165
வறிதே - வீணே, 8
வன்பு - வலிமை, 39

வா

வாய்ப்பு - பொருத்தம், 33
வாய் வெரீஇ - நடுங்கி, 78
வாரணாசி - காசி நகரம், 2
வானோர் - தேவர், 134

வி

விசய புரம்-பீஜபூர், 28
விதானம்-மேற்கட்டி (Canopy), 187
விஞ்சினர் - மீறினர், 47
விஞ்சையிர்-வித்தையுடையீர், 7
விண்டு - விஷ்ணு, 71
விண்டு சித்தர் - பெரியாழ்வார், 88
விபினம் - காடு, 89
விமலன் - கடவுள், 21
வியன் பெரு - மிகவும் பெரிய, 5
விரவினர் - கலந்தனர், 172
விருந்தை மாவனம் - பிருந்தாவனம், 142

விரூபம் - இயற்கைக்கு மாறு பட்ட உருவம், 5
விரூபாக்கன் - நெற்றிக் கண் உள்ள சிவபிரான், 5; விசய நகராண்ட மன்னருள் ஒரு வன், 23
விலங்கு - மிருகம், 8
விழவு - திருவிழா, 94 [141
விழுக்குடி - சிறந்த குடும்பம்,
விழுப்புண் - போரில் மார்பிற் படும் புண், 39, 61
விழுப்பொருள் - மேலான பொருள், 5 [146
விழைகிலேன் - விரும்பிலேன்,
விழையா - விரும்பாத, 6
விழைவு - விருப்பம், 128
விளம்புதி - சொல்லுக, 11
வினுகொண்டம் - பெனு கொண்டா, 26

வீ

வீட - அழிய, 186
வீமை - பீமா நதி, 174
வீரதை - வீரர் குணம், 74
வீழ்ச்சி - தோல்வி, 185
வீறு-பெருமை, 37

வெ

வெண்கலச் சிற்பம் - வெண் கலச்சிலை, 185
வெண்பொன் - வெள்ளி, 96
வெம்பி - வாடி, 8
வெற்றித் தூணம் - விஜய ஸ்தம்பம், 57, 84
வெற்றி நகர் - விசய நகர், 58

வே

வேங்கடகிரி-திருப்பதி மலை, 21
வேட்ட - மணந்த, 99
வேட்டவா-விரும்பியவாறு, 143
வேத்து மரபு-அரச வமிசம், 26
வேர்த்து – அச்சத்தால் உடலில் வேர்வை தோன்றி, 138 [70
வேழப்படை - யானைச் சேனை,
வேறல் - வெல்லுதல், 62